சிவமயம்.



தமிழ்ச் சத்திரியகுல விளக்க வினாவிடை.

இந்நூல்

மதுரை ஜில்லா பழனித்தாலூகா

கவுசலசேரபுரமென்கிற

கஸ்பா

பழனியில்

வசிக்கும்

தமிழ்ச் சத்திரிய குலத்திலுதித்த

காரியப்பநாடாரவர்கள் குமாரர்

கண்ணாயிரநாடாரால்

இயற்றப்பட்டதை

மேற்படியூரிலிருக்கும்

அ. பெருமாள் நாடாரவர்கள் குமாரர்

அரசகுமார நாடாரால்

பரிசோதிக்கப்பட்டு,

மேற்படியார்களால் பிரசுரஞ்செய்யப்பட்டு,

சென்னை:

சின்னையநாடார் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சுபகிருது௵ வைகாசி௴.

1902௵ ஜூன்௴.

GOD SAVE OUR EMPEROR

Edward VII.

This Book, in virtue of its value, was dedicated
to our emperor

EDWARD VII

with the best compliments, sincere and loving wishes

OF

Ar. P. ARASAKUMARA NADAR

AND

K. KANNAYIRA NADAR

to the Kshatriyas or

Nadars or Santars of Southern India

(to whom this book is specially intended for)

FOR THEIR FURTHER ENLIGHTENMENT

AND

MELIORATION.

MDCCCCII

சிவமயம்.



தமிழ்ச் சத்திரியகுல விளக்க வினாவிடை.

பாயிரம்.

பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை, *அருளில்லார்க் கவ்வுலகமில்லை என்னும் முதுமொழிப்படி உலகத்தில் சகல மானிடரும் பொருளைச்சம்பாதித்து அதினால் சுகத்தையும் மேன்மையையும் அடைய முயற்சிக்கிறதெப்படியோ அப்படியே குலமேன்மையைக் காத்துக்கொள்வதினால் சுகத்தையும் மேன்மையையும் அடைய முயற்சிக்கிறார்கள் என்பது எவரும் அறிந்த உண்மை.

யூரோப்பியனாகிய இங்கிலிஷ் குலத்தவனொருவன் தன்னைப்போல் நடை உடை பாவனையுள்ள வேறொருவனைக்கண்டால் அவனை நோக்கி, நீ யூரோப்பியனா? இங்கிலிஷ் குலத்தவனா? அல்லது யூரேஷியனா? என்று கேட்டு, அவன் விபரம் தனக்குத் தெரிந்தபின் தன்னால் கேட்கப்பட்ட அந்த மனிதனோடே போஜன விஷயத்திலாவது, விவாக விஷயத்திலாவது சம்பந்தப்படுகிறான். தன்னால் கேட்கப்பட்டவன் தன் குலத்தைச்சேர்ந்தவனல்லாதிருந்தால் அவனோடே தான் இணங்கப் பிரியப்படுகிறதில்லை. அதினால் இந்து தேசத்துக்குட் புகுந்த யூரோப்பியருடைய தன்மை இன்னதென்று தெரிகிறதல்லவா?

---

* அருள் என்பது மானிடன் ஒருவன் மற்றொரு மானிடன்மேல் பாராட்டும் தயவையல்ல, கடவுள்மானிர்மேல் வைக்கும் ஒப்பற்ற கருணையைக் குறித்தது.

இந்து தேசத்திலே அதி பூர்வகாலமுதல் குலாசாரம் உண்டாகி நிலைபெற்று வந்திருக்கிறது. இந்துதேசத்திலுண்டான அநேக பாஷைகளின் பிரிவுப்படிக்கு அநேக பெருங்கூட்டங்களான மானிடர் ஒருவரிலிருந் தொருவர் பேதப்பட்டு நிற்கிறார்கள்.

அவர்களுக்குள்ளே இவ்வுலகமாகிய பூமிப்பொருள் பாத்தியப்படிக்கு அரசனானவன் தலைவனாகவும் மேன்மை பெற்றவனாகவும் இருக்கிறான். அவ்வுலகமாகிய பரலோகப் பொருட் பாத்தியப்படிக்கு குருவானவன் தலைவனாகவும் மேன்மை பெற்றவனாகவும் இருக்கிறான். இந்த இரண்டு வகையைச்சேர்ந்த கூட்டத்தாருக்கு மேன்மையும் சுகமும் உண டாயிருக்கிறது. இந்த இரண்டு வகையைச் சேர்ந்தவரின் அபிப்பிராயத்தின்படி ஆதியிலே இந்த இந்து தேசத்திலே குலப்பிரிவுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

முன் சொல்லியபடி பாஷைப்பிரிவுகளினாலும் தொழிற்பிரிவுகளினாலும் வேறுபலகாரணங்களினாலும் குலப்பிரிவுகள் உண்டாயின. ஒவ்வொருபாஷையிலும் அந்தப்பாஷையைப் பேசக்கூடிய அரசனும் அந்தப்பாஷையில் கடவுளை வணங்கப் போதிக்கும் குருவும் அவசியமல்லவா? சமஸ்கிருதப்பாஷையைப் பேசக்கூடிய அரசாட்சியாரும், மராட்டியப்பாஷையைப் பேசக்கூடிய குருமாரும், கன்னடப்பாஷையைப் பேசக்கூடிய வர்த்தகரும், தெலுங்குப்பாஷையைப் பேசக்கூடிய தொழிலாளிகளும் ஒரு கூட்டமாக இருந்தால் எப்படி காரியங்களைச்செய்து முடிக்கக்கூடும்? பலபாஷைகளைப் பேசுவோர் ஒரே கூட்டத்துக்குள் ஐக்கியமாய்ச் சேர்ந்து வேலைசெய்ய ஒருவருடைய பாஷையை மற்றொருவர் படித்துக்கொள்ளும்படி வெகுகாலம் பின்னிட்டு அந்தப்படி படித்துக்கொண்டல்லவா ஐக்கியப்படவேண்டும். ஆகையால் அந்த அந்தப் பாஷையைப்பேசுகிறவர்களே ஒன்றுசேர்ந்திருக்கவேண்டியது அவசியம்.

அந்தப்படிக்கு மராட்டியப்பாஷைக் குலப்பாஷையாகப் பேசுவோர் மராட்டிய அரசர், மராட்டியகுருமார், மராட்டிய வர்த்தகர், மராட்டியத் தொழிலாளிகள் என்னும் முக்கியமான நாலு பிரிவுள்ளவர்களானார்கள்.

அந்த அந்தப்பாஷையில் குலப்பிரிவுகளும், அவைகளுக்குரிய தொழில்களும் அரசர்களாலும் குருக்களாலும் ஏற்படுத்தப்பட்டன. அந்தப்படி பிரிவினை செய்யப்பட்டபோது குருக்கள், அல்லது பார்ப்பார் முதலாவது பிரிவாகவும், அரசர் இரண்டாவது பிரிவாகவும், வர்த்தகர் மூன்றாவது பிரிவாகவும், பலவகைத் தொழிலாளிகள் நாலாவது பிரிவாகவும், கலப்புச்சாதிகள் வேறே பிரிவுகளாகவும் வகுக்கப்பட்டார்கள்.

அந்தப்படி மாராட்டியப் பாஷைக்காரர் மராட்டியருக்குள், அல்லது மராட்டியப் பார்ப்பார், அல்லது மராட்டியப் பிராமணர் எனவும், மராட்டிய அரசர், அல்லது மராட்டியச் சத்திரியர் எனவும், மராட்டிய வைசியர் எனவும், மராட்டியத் தொழிலாளிகள், அல்லது மராட்டியச் சூத்திரர் எனவும், மராட்டிய கலப்புச் சாதிகள், அல்லது மராட்டிய சங்கரசாதிகள் எனவுமானார்கள். அந்தப்படியே கன்னடப் பாஷைக்காரரும், தெலுங்க, அல்லது வடுகப் பாஷைக்காரரும், தமிழ்ப்பாஷைக்காரரும் முக்கியமான ஐந்து பிரிவுள்ளவர்களானார்கள்.

காலஞ் செல்லச்செல்ல கலப்புச் சாதிகளும் மிகுந்த திரளான கூட்டமாயின. ஆதலால் இந்த இந்துதேச முழுவதிலுமுள்ள ஜனங்களிலே எத்தனையோ இலட்சமான ஜாதிகளுண்டாயிருக்கின்றன.

இந்த இந்து தேசத்திலே வியாபார முகாந்தரமாய்ப் புகுந்த இங்கிலீஷ் குலத்தவர்க்கு சன்னம் சன்னமாய் நகரங்கள், நாடுகள் கிடைத்தபடியால் அந்த இங்கிலீஷர் இந்துக்களுக்குள்ளே செல்வாக்குடையவர்களைக்கொண்டு தங்களுடைய ராஜ்ய காரியங்களை நடத்தி வருகிறார்கள்.

பார்ப்பாராகிய பிராமணர் ஏற்றல் தொழிலைச் செய்யக் கூடியவர்களானபடியாலும், யுத்த வீரத்துவம் காட்ட அவர்களுக்கு உரிமையில்லாதபடியாலும் இங்கிலிஷ் துரைத்தனத்தை அடுத்துப் பிழைத்து வருகிறார்கள்.

1871-ம் வருஷத்தில் சென்னை இராஜதானியில் எந்த எந்தச்சாதியார் இருக்கிறார்கள் என்றும், அந்த அந்தச் சாதியார் தங்கள் தங்கள் குலத்தைப் பற்றிய ஆதி பூர்வ விவரத்தைத் தெரிவிக்கவேண்டும் என்றும், அந்தப்படி தெரிவியாதவர்கள் தங்கள் தங்கள் குலமேன்மையை இழந்துபோவார்கள் என்றும் இங்கிலிஷ் கவர்ண்மெண்டார் உத்தரவு பிறப்பித்தார்கள்.

முற்கூறிய காரணத்தாலும், யூரோப்பியரான கிறிஸ்து மதக்குருமாரில் சிலர் சூத்திரருடைய வஞ்சனையான சோதனைக்குட்பட்டு தமிழ்ச் சத்திரியர்க்குச்செய்த துன்பத்தினாலும் அவர்களுக்குசூத்திரராலும், மற்ற சங்கரசாதிகளாலும் நேரிட்ட துன்பத்தினாலும் தமிழ்ச் சத்திரியர் தங்கள் பூர்வகுல எதார்த்த ஸ்திதியைக்குறித்து நூல்கள் எழுத அவசியமாயிற்று.

இதுவரையில் தமிழ்ச் சத்திரிய கல்விமான்களாலே,

1. சாதி யேற்பாட்டுக் கோரிக்கை.
2. சான்றோர் மரபு.
3. சான்றோர் குலமாலை என்னும் அரசகுலமாலை.
4. சான்றோர் மரபுகாத்தல்.

5. சான்றோர் குலப் பூர்வோத்திரம்.
6. சான்றோர் குலதீபம்.
7. தமிழ்ச் சத்திரியர்.
8. பாண்டியகுல விளக்கம்.
9. பிஷப் கால்வேலும், திருநெல்வேலிச் சான்றோரும்.
10. தூத்துக்குடி விஞ்ஞாபன கண்டனம்.
11. சத்திரியப் பிரசண்ட மாருதப் பவனுசனம்.
12. சான்றோர் சத்திரியர்.
* 13. சூரிய, சந்திர பாரம்பரைச் சரித்திரம்.
14. சண்டபானு.
* 15. க்ஷத்திரியகுல விளக்கம்.

முதலான நூல்கள் இயற்றப்பட்டிருக்கின்றன மேற்படி நூல்களிலுள்ள முக்கியமான விஷயங்களை தமிழ்ச்சத்திரிய குலத்தவர் அறியும்படி வினுவிடையாக இயற்றி, தமிழ்ச் சத்திரிய குலவிளக்க வினுவிடை என்னும் பேர் அமைத்தோம்.

இந்நூலுக்கு ஆதாரங்களாக பல காவியங்களிலிருந்தும், புராணங்களிலிருந்தும் இன்னும் பற்பல நூல்களிலிருந்தும் நியாயங்கள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

அவைகளில் முக்கியமானவையாவன :—

1. அதிவீரராமபாண்டியன் இயற்றிய காசிகாண்டம்.
2. அரிச்சந்திர புராணம்.
3. அருணுசல புராணம்.
4. அலாயுத நிகண்டு.
5. ஆத்திச்சூடி.
6. ஏனுதிநாதநாயனுர் புராணம்.
7. கம்பராமாயணம்.
8. குலோத்துங்கன் கோவை.
9. குறள்.
10. கூர்மபுராணம்.
11. சமஸ்கிருத நிகண்டாகிய அமரகோசம்.
12. சிதம்பரபுராணம்.
13. சீவகசிந்தாமணி.
14. சேந்தன் திவாகரம்.
15. சைவசமயவிளக்க வினுவிடை.

நம்மால் பார்வையிடப்படாத நூல்களை * இவ்வித அடையாளத்தால் குறித்தோம்.

16. தஞ்சைவாணன் கோவை.
17. டாக்டர் உயின்ஸ்லோ (Dr. Winslow) இங்கிலீஷ் அகராதி.
18. டேவிட் சிங்லேயர் (David Singlair M. A.) இந்தேச சரித்திரம்.
19. திருக்கழுக்குன்றப் புராணம்.
20. திருப்புவயல் குமரேசர் சதகம்.
21. திருமூலர்.
22. திருவாதவூரர் புராணம்.
23. திவாகரம்.
24. தென்னிந்தியாப் பிரபந்தம்.
25. நளவெண்பா.
26. நாலடியார்.
27. நிகண்டு.
28 நைடதம்.
29. பஞ்சபட்சி சாஸ்திரம்.
30. பழனிஸ்தலபுராணம்.
31. பாகவதம்.
32. பெருந்தேவனார் பாரதம்.
33. பெஸ்கி சதுர அகராதி.
34. மதுரைச்சில்லா விருத்தாந்தம்.
35. மநுநூல்.
36 மூதுரை.
37. யாழ்ப்பாணம் அகராதி.
38. லிங்கபுராணம்.
39. வெற்றிவேற்கை.
40. ஜாதி.
41. ஜாதிநூல்.

இன்னும் பற்பல பத்திரிகைகளிலும் நூல்களிலும் ஆதாரங்கள் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன.

தமிழ்ச்சத்திரியகுலத்தவர் புதைந்துகிடந்த தங்கள் குலப்பூர்வோத்திரங்களை ஆராயும்போது சூத்திரரால் வஞ்சகமாய்ச் சொல்லப்பட்ட காரியங்களையும் உண்மை என்று நம்பி ஒப்பினதுமுண்டு. அப்படி ஒப்பினவர்கள் பின் ஆராய்ச்சியினால் சூத்திரரால் சொல்லப்பட்டவைகள் வஞ்சனையால் சொல்லப்பட்டவைகள் என்று அறியும்போது, தாங்கள் ஆதியில்கொண்ட கருத்தையே சாதிக்கவேண்டுமென்ற வீணான பிடிவாதத்

தைவிட்டு, உண்மையை அங்கீகரித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

பிறகுல்ததவரைத் தூஷிக்கவேண்டுமென்று இந்நூல் இயற்றியவர் நோக்கம் கொள்ளவில்லை. பூர்வநூல்களிலுள்ளபடி சங்கதிகளைச் சொல்வது இந்நூலாசிரியருடைய நோக்கம் என்பதை யாவரும் அறிந்துகொள்ளும்படி விரும்புகிறோம். ஆதலால் பொறாமைகொள்ளாமல் சகல சங்கதிகளையும் எதார்த்தம் என்னும் தராசில் வைத்து நிறுத்து உண்மையைத் தெரிந்துகொள்வது புத்திமான்களின் கடமை.

சுபகிருது வருஷம்
சித்திரை மீ 1உ } ☞ அர. பெ. அரசகுமாரநாடார்.

பாயிரம் முற்றிற்று.

சிவமயம்.



தமிழ்ச் சத்திரியகுல விளக்க வினாவிடை.

பொருளடக்கம்.

இல.	சங்கதிகள்.	பக்கம்.
.	பாயிரம், பொருளடக்கம்...	i
1	மனிதகுலத்தோர் யாவரும் ஒரேதந்தை தாயரிடத்திலிருந்து உற்பத்தியானவர்களா? அல்லது வெவ்வேறு தந்தை தாயாரிடத்திலிருந்து உற்பத்தியானவர்களா?	1
2	மனிதர்கள் வெவ்வேறான பலபாஷைகளைப்பேசுகிற வெவ்வேறானஜாதிகளாயிருக்கிறார்களே அதற்குக்காரணம் என்ன?	1
3	ஆதியில் உண்டான பாஷைகள் மாத்திரம் இப்போதும் நிலைத்திருக்கின்றனவா? அல்லது பிற்காலத்திலும் புதப்பாஷைகள் உண்டாயினவா?	1

இல	சங்கதிகள்.	பக்கம்.
4	சில பாஷைகள் செத்துப்போயின என்பதற்கு ஆதாரமென்ன?	1
5	தமிழர் தங்கள் சொந்தப்பாஷையோடே சமஸ்கிருதத்தையும் படித்து விருத்திபண்ணிவந்தார்கள் என்பதற்து ஆதாரமென்ன?	1
6	பெருங்கூட்டத்தாராகிய அந்த அந்தப் பாஷைக்காரருக்குள்ளும் குலப்பிரிவுகளுண்டானதற்குக் காரணம் என்ன? அவர்கள் நாலுபிரிவுகளானதற்குக் காரணம என்ன? ...	2
7	அந்த நாலு பிரிவானவர்களும் அந்தப்பிரிவிலேயே இருக்கவேண்டும் என்பதற்குக் காரணம் என்ன?	2
8	குலக்கிரமம் யாரால் ஏற்படுத்தப்பட்டது?	3
9	குலக்கிரமம் ஏற்படுத்தினவர்களுக்கு தமிழில் என்ன பெயர்? சமஸ்கிருதத்தில் என்னபெயர்?	3
10	அந்த அந்தக்குலத்தவர் தம் தம் குலநிலை தவறாமல் அவரவர் குலத்திலேயே நிலைத்திருக்கும்படி செய்யவேண்டியது அரசனுடைய கடமை என்பதற்கு ஆதாரமென்ன? ...	4
11	குலக்கிரமம் இலக்கிய இலக்கண நூல்களில் குறிப்பு குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறதோ? அல்லது அதைப்பற்றிச் சொல்லிய அட்டவணையும் உண்டோ?	4
	தமிழ்ப்பிராமணர்.	
12	முதலாவது குலத்தவர் யார்?	11
13	பிராமணர் குலங்களில் முதலாவது நிற்கிறதற்குக்காரணம் என்ன?	11
14	காலாகாலங்களில் பிராமணர், அதாவது பார்ப்பாரல்லாத	

தொ.	சங்கதிகள்.	பக்கம்.
	பிறகுலங்களிலுள்ள தெய்வபக்தரான யோக்கியர்கள் பார்ப்பனக்குலத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்களா?	12
15	பிறகுலங்களில் கலந்துபோன பார்ப்பார் தங்கள் பூர்வகுலமாகிய பார்ப்பனக்குலத்தில் மறுபடியும் சேர்த்துக்கொள்ளப்படுவார்களா?	12
16	பார்ப்பனக்குலத்தவர் யாவரும் ஒரே பாஷையைக் குலப்பாஷையாகப் பேசுகிறார்களா?	12
17	சமஸ்கிருதமானது பார்ப்பனக் குலத்தவர்க்குமாத்திரம் சொந்தமான பாஷை என்று சொல்லக்கூடாதா?	13
18	தமிழ்ப்பாஷையிலுள்ள சகல சாஸ்திரங்களிலும், புராணங்களிலும், மற்ற எந்த நூல்களிலும் பார்ப்பனகுலத்தவர்க்கு **பிராமணர்** என்னும் பெயர் சொல்லப்படவில்லையே. அப்படியிருக்க, இந்தத் தமிழ்நாட்டில் தற்கால சாதாரண வழக்கத்தில் முன்சொல்லிய பார்ப்பார் முதலான பெயர்களோடு பிராமணன் என்னும் பெயரும் வழங்கப்பட்டு வருகிறதற்குக் காரணம் என்ன?	14
19	பார்ப்பனக்குலத்தவர் பலபாஷைகளைப் பேசுகிறவர்களாயிருந்தாலும் தங்களுக்குள்ளே கலந்துகொள்ளுகிறார்களா?	14
20	பார்ப்பனக்குலத்தவர்களுக்கு உபநயனம் அவசியமோ?	14
21	உபநயனப் பாத்தியமுள்ள வேறே குலத்தவருமுண்டோ?	15
22	பார்ப்பன குலத்தவர்க்குரிய தலைப்பட்டப்பெயர் என்ன?	15
23	**அந்தணர்** என்னும் பெயர் பார்ப்பனக்குலத்தவர்க்குமாத்திரம் வழங்கப்படுமோ?	15
24	பார்ப்பனக்குலத்தவர்பேரில் இரண்டாவது குலத்தவரான அரசர் குலத்தவர் தற்காலத்தில் குறைகூறுகிற காரியமென்ன?	16

வினா.	சங்கதிகள்.	பக்கம்.
	தமிழ்ச் சத்திரியர்.	
25	இரண்டாவது குலத்தவர் யார்?	16
26	சத்திரியன், அரசன், நாடான், நாடன், என்னும் பதங்களின் மூலம் என்ன?	16
27	தமிழ்நூல்களில் அரசருக்குச் சத்திரியர் என்று சொல்லப்படவில்லையே. அப்படியிருக்க, தமிழ் அரசருக்கு தமிழ்ச் சத்திரியர் என்று சொல்வது எப்படி?	17
28	இந்துதேசத்தை முன் அரசாட்சி செய்து வந்தவர்களும் தற்காலம் அரசுசெய்கிறவர்களுமான எக்குல அரசர்களும் சத்திரியர் என்று சொல்லப்படுவார்களா?	18
29	சூரிய வம்ச சத்திரியர் உற்பத்தி எப்படி?	18
30	சந்திர வம்ச சத்திரியர் உற்பத்தி எப்படி?	19
31	சேரன், சோழன், பாண்டியன் என்னும் மூவரும் சந்திர குல அரசர்தாம் என்பதற்கு ஆதாரம் என்ன?	19
32	சேரன், சோழன், பாண்டியன் என்னும் மூவரும் வடநாட்டைவிட்டுத் தென்திசைநோக்கி வந்ததற்குக்காரணம் என்ன?	21
33	வடநாட்டுச் சத்திரியரான அரசர் தென்னுட்டுக்கு வரவில்லை என்றும், தென்னுட்டில் சூத்திரரோ ராஜ்யத்தை உண்டு பண்ணி ஆண்டுவந்தார்கள் என்றும் பகைவர் சொல்லத் துணிகிறுர்களே அது சரியா?	22
34	பாண்டியன் சூத்திரனல்ல அவன் சந்திரகுலத்தவன் என்பதற்கு தெளிவான நூல் சாட்சிகள் என்ன?	25
35	சதுர்த்தன் வெள்ளாளன்தான் என்பதற்குஆதாரம் என்ன?	29
36	சேர, சோழ, பாண்டியர் பாஷை விஷயமாகவும் சிறப்புப் பொருந்தியவர்கள் என்பதற்கு ஆதாரம் என்ன? ...	29

இல.	சங்கதிகள்.	பக்கம்.
37	சேர, சோழ, பாண்டியரின் பூர்வராஜதானிகள் எவை ?	30
38	தமிழ் அரசகுலத்தவர்க்குரிய பெயர்கள் முன் குலக்கிரம அட்டவணையில் சொல்லப்பட்டிருக்கின்றனவே. அவைகளால் அவர்கள் தமிழைப் பிரபலப்படுத்திவந்தார்கள் என்பதை எப்படி அறியலாம் ? தமிழ்ச்சங்கங்கள் எங்கே ஸ்தாபிக்கப்பட்டன ?	30
39	குலக்கிரம அட்டவணையில் அறிவுடையோர்க்குச் சொல்லிய பத்துப்பெயர்களில் முதலாவது நிற்கின்ற சான்றேர் என்னும் பதத்துக்கு மூலம் என்ன? அப்பெயர் தமிழ்ச்சத்திரியர் குலத்தவர்க்குரிய குலப்பட்டப்பெயர் என்பதற்கு ஆதாரங்கள் என்ன ?	40
40	சான்றவர், சான்றேர், என்னும் இரண்டு பதங்களும் ஒரே அர்த்தமுள்ள பதங்கள்தான், ஆனல் சான்றர் என்னும் பதம் அந்த சான்றவர், சான்ருேர் என்னும் பதங்களுடன் சேர்ந்ததல்ல என்று எதிரிகள் சொல்லுகிருர்களே, அது சரியல்ல என்பதற்கு நியாயம் என்ன?	44
41	சான்றர், சான்றவர், சான்றேர், என்பது பார்ப்பனகுலத்தவர்க்குரியதேயல்ல என்றும், அரசகுலத்தவர்க்கே உரிய பெயர் என்பதற்கும் ஆதாரமான நூல் சாட்சிகள் என்ன ?...	46
42	குலக்கிரம அட்டவணையில் சான்றேர் என்பதுடன் ஒரே பொருளில் வந்திருக்கிற பெயர்கள் சத்திரியகுலத்தவர்க்கு வழங்கும் என்பதற்கு ஆதாரம் என்ன ?	65
43	தமிழ்ச் சத்திரியர்க்குரிய குலப்பட்டப்பெயர்கள் எவை ?	70
44	நாடு அல்லது பூமியானது அரசருக்குச் சொந்தம் என்பது எப்படி ?	71
45	நாடான் முதலான குலப்பட்டப்பெயர்கள் சத்திரியகுலத்தவர்க்கு உண்டு என்பதற்கு நூல் சாட்சிகள் உண்டோ ? ...	72
46	கம்பர்சொல்லிய திருவெண்ணெய் நல்லூர் சடையன் அல்லது சடையப்பன் சிவன் தான் என்பதற்கு நியாயம் என்ன?	86

கே.	சங்கதிகள்.	பக்கம்.
47	தமிழ்நாட்டிலுள்ள குலவிசாரணை செய்யும்போது கவனிக்கவேண்டிய காரியம் என்ன?	87
48	முன் சொல்லியபடி குலவிசாரணை செய்கையில் நீக்கப்பட வேண்டிய ஜாதிகள் எவை?	88
49	தமிழல்லாத பிறபாஷைகளைப் பேசுவோரைக்காணும்போது, தமிழ்ச் சத்திரியர் செய்யவேண்டியதென்ன? ...	89
50	சத்திரியராகிய அரசகுலத்தவர் முற்றிலும் அழிந்து, அதாவது இல்லாமற் போய்விட்டார்கள் என்று சத்துருக்கள் சொல்லுகிறார்களே, அந்த அவர்களுடைய அபிப்பிராயத்தை மறுக்க நாம் காட்டும் நியாயம் என்ன?	89
51	தமிழ் அரசகுலத்தவர் அழிந்துபோகவில்லை என்றால் இப்போது தமிழ்நாட்டிலிருக்கிற அரசகுலத்தவர் யார்? ...	91
52	சான்றார், சான்றவர், சான்றோர் என்னும் பெயர்களைக் குலப்பெயர்களாகத் தரித்துக்கொண்டிருக்கிற வேறே எந்தக் குலத்தவராவது உண்டா?	94
53	தமிழ் அரசாட்சி ஒழிந்துபோனதற்கும், அந்நிய அரசர் தமிழ்நாட்டைக்கைப்பற்றிக்கொண்டதற்கும் விபரம் என்ன?	95
54	அரசாட்சியை இழந்துபோன தமிழ்ச் சத்திரியர்க்கு அரசன் என்றர்த்தமுள்ள நாடான் என்னும் பட்டப்பெயர் தற்காலத்திலும் ஏற்குமா?	103
55	குலத்தொழிற் கிரமம் இலக்கிய இலக்கண நூல்களில் பல இடங்களிலும் குறிப்புக் குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறதோ? அல்லது அதைப்பற்றிய அட்டவணையும் உண்டோ?	103
56	அந்தணர், அரசர், வணிகர் ஆகிய மூன்று குலத்தவர்க்குமுரிய பொதுத்தொழில்கள் எவை?	105
57	செட்டிகளுக்கும், சூத்திரருக்கும் உரிய பொதுத்தொழில்கள் எவை?	106
58	அந்தணர்க்கே உரிய தொழில்கள் எவை?	106

வி.	சங்கதிகள்.	பக்கம்.
59	அரசருக்கே உரிய தொழில்கள் எவை?	106
60	வைசியருக்கே உரிய தொழில்கள் எவை?	106
61	சூத்திரர்க்கே உரிய தொழில்கள் எவை?	107
62	மேலே சொல்லிய நாலு குலத்தவர்களில் ஒவ்வொரு குலத்தவர்க்கும் நாட்டில் சிறப்பென்று விளங்கிய தொழில் எது?	107
63	முன் 41-ம் விடையின் 31-வது இலக்கத்தின் கீழும், 51-ம் விடையின் 8-வது இலக்கத்தின்கீழும் ஏனாதிநாதநாயனார் என்று சொல்லப்பட்டவருடைய சரித்திரச்சுருக்கம் என்ன?	107
64	ஏனாதிநாதநாயனார் ஈழகுலச்சான்றார் என்று சொல்லப்பட்டிருக்கிறாரே, அந்த ஈழன் என்பவன் யார்? ...	108
65	ஏனாதிநாதநாயனாருடைய சரித்திரத்தால் அவருடைய குலத்தவரான சான்றார், சான்றவர், சான்றோர் ஆகிய தமிழ்ச் சத்திரியர் பூர்வகாலத்தில் அரசர்க்கே உரிய படைபயிற்றல் தொழிலை, அதாவது போர்த்தொழிலைச் செய்து வந்தவர்கள் என்பதை ரூபிப்பதெப்படி?	115
66	தமிழ்ச் சத்திரியராகிய சான்றார், சான்றவர், சான்றோருக்குத் தனித்த ஒரு குலநூல் அல்லது குலப்புராணம் உண்டோ? பண்டாரங்களின் வஞ்சனை எப்படி?	118
67	சூத்திரர் அநேகங்கட்டுக்கதைகளை உண்டாக்கியிருக்கிறார்கள் என்பதற்கு கம்பர் விஷயமாய்ச்சொல்லக்கூடியதென்ன?	120
68	பாண்டியர்க்கு உபநயனம் உண்டென்பதற்கு அத்தாட்சி என்ன?	121
69	சான்றார், சான்றவர், சான்றோர் ஆகிய தமிழ்ச்சத்திரியர்க்குள்ளே குலப்பிரிவுகள் உண்டோ?	122
70	சான்றார், சான்றவர், சான்றோர் ஆகிய தமிழ்ச் சத்திரியர் அறிவில் குறைந்தவர்களல்ல என்பதற்கு அத்தாட்சி என்ன?	123
71	சான்றார், சான்றவர், சான்றோர் குலமேன்மையைக் குறி	

வினா	சங்கதிகள்.	பக்கம்.
	த்து பிஷப் கால்வேல் (Bishop Caldwell) என்னும் அத்தியட்சராகிய குருவின் சாட்சி என்ன?	123
72	இல்லற ஒழுக்க விஷயமாய் சான்றார், சான்றவர், சான்றோராகிய தமிழ்ச் சத்திரியரின் நடக்கை என்ன? ...	124
73	சான்றார், சான்றவர், சான்றோர் ஆகிய தமிழ்ச் சத்திரியரின் சாதாரண குலாசாரம் என்ன?	125
74	சான்றார், சான்றவர், சான்றோர், ஆகிய தமிழ்ச் சத்திரியருடைய பூர்வ பிதாக்கள் அரசாட்சி செய்து வந்தவர்கள் என்பதற்கு அடையாளமாகிய தங்கக்காசு விபரம் என்ன?	126
75	சான்றார், சான்றவர், சான்றோர் ஆகிய தமிழ்ச் சத்திரியர் காளியை விசேஷித்து வணங்கி வருகிறதற்குக் காரணம் என்ன?	128
76	சான்றார் என்னும் பதம் சாணார் என மருஉ ஆகமாட்டாது என்பதற்கு நியாயம் என்ன?	130
	தமிழ் வைசியர்.	
77	மூன்றாவது குலத்தவர் யார்?	132
78	வைசியர்க்குப் பூர்வ நூல்களில் வழங்கப்பட்ட வேறே பேர்கள் எவை?...	132
79	வைசியர், செட்டிகள் என்னும்பதங்களுக்குமூலமென்ன?	133
80	செட்டிகள், அதாவது வைசியருடைய தொழில் என்ன?	133
81	வைசிய குலத்தைக் குறித்துச் சந்தேகம் உண்டோ? ...	133
82	அந்நிய அரசாட்சியால் தமிழ் வைசியர்க்குத் துன்பமுண்டோ?	133

இல.	சங்கதிகள்.	பக்கம்.
83	சூத்திரர் வைசியரின் ஸ்தானத்தை அபகரிக்கச் செய்தவகை எப்படி?	133
84	வைசியர்க்குரிய எட்டுவகை இயற்குணங்கள் எவை? ...	134
85	தமிழ் வைசியரை விசேஷித்துக் காட்டும்படி அவர்களுக்கு எப்போதும் வழங்கப்பட்டுவருகிற பட்டப்பெயர் என்ன?	135
86	நகரத்துச் செட்டிகளின் குலப்பிரிவுகள் எவை? ...	135
87	நகரத்துச் செட்டிகளின் கோத்திரம் என்ன? ...	135
88	நகரத்துச் செட்டிகளுக்கு உபநயனம் உண்டோ? ...	136
89	நகரத்துச் செட்டிகளில் யாராவது தங்களுக்குப் பிள்ளைப்பட்டம் உண்டென்று சொல்லுகிறார்களா? ...	136
90	நகரத்துச் செட்டிகள் சூத்திரர்க்கே சிறப்பான துயிலுவம், காருகவினை, முதல் மூவர்க்கேவல் செய்தல் என்னும் தொழில்களைச் செய்கிறார்களா?	136
91	திருவாதிரைப்பண்டிகை விஷயமாய் நகரத்துச் செட்டிகளைக்குறித்த சங்கதி என்ன?	136

தமிழ்ச் சூத்திரர்.

இல.	சங்கதிகள்.	பக்கம்.
92	நாலாவது குலத்தவர் யார்?	136
93	தமிழ்ச் சூத்திரர்க்குப் பூர்வ நூல்களில் வழங்கப்பட்ட வேறே பேர்களும் உண்டோ?	136
94	சூத்திரர் என்னும் பதத்துக்கு மூலம் என்ன? ...	136
95	சூத்திரர் உற்பத்தி என்ன?	137
96	வெள்ளாளர், சூத்திரகுலத்தவர் என்பதற்கு நூல் சாட்சிகள் எவை?	138
97	சூத்திரராகிய வெள்ளாளரின் தொழில்கள் எவை? ...	144
98	வெள்ளாளரின் குலப்பட்டப்பெயர்கள் எவை? ...	144

இல.	சங்கதிகள்.	பக்கம்.
99	சைவர் என்பது என்ன? அது ஒருகுலத்தவர்க்குப்பெயரா?	145
100	பண்டாரங்கள் யார்?	148
101	சூத்திரராகிய வெள்ளாளர் முதலானவர்கள் கல்வி கற்றுக் கொண்டால் அவர்கள் உயர்ந்தகுலமாவார்களா? ...	148
102	தவசிப்பிள்ளைகள் யார்?	150
103	மநுநூலில்முதல் மூன்றுகுலத்தவர்க்கும்சூத்திரர்க்குமுள்ள தாரதம்மியத்தைக்குறித்துச் சொல்லியிருக்கிறதென்ன?	150
104	"வெள்ளாளரில் அநேகர் குருக்களாயிருக்கிறார்கள்" என்று வெள்ளாளர் இயல்பு நூலாசிரியர் மேற்படி நூல் 11-ம், 12-ம் பக்கங்களில் சொல்லுகிறாரே அது சரியா? ...	151
105	தாசிகளைப்பற்றி என்ன சொல்லலாம்?	151
106	வெள்ளாளரைப் பூவைசியர் என்று கிறிஸ்தவர்கள் அச்சிட்டுப் பிரபலப்படுத்தி வருகிற "சாதி" என்னும் துண்டுப் புஸ்தகத்தில்சொல்லியிருக்கிறதே அதற்குமுகாந்தரம்என்ன?	152
107	அநுலோமர், பிரதிலோமர், அந்தராளர், விராத்தியர் என்பவர்கள் யார்?	152
108	முன் 78-வது விடையில் சொல்லிய மூன்றாவது குலத்தவரான வைசியராகிய செட்டிகளைத்தவிர சங்கரசாதிகளாகிய அநுலோமர், பிரதிலோமர், அந்தராளர், விராத்தியர் என்ற சாதிகளிலும் செட்டி என்னும் பட்டப்பெயருடையவர்களும் உண்டோ?	154
109	கள்விலேனர் என்பவர்கள் யார்?	156
110	மீன்விலேனர் என்பவர்கள் யார்?	158
111	பாலைநிலமாக்கள் யார்?	160
112	சங்கர சாதிகளில் சிலர் பூணூல் தரித்து வருகிறார்களே, அதற்குக் காரணம் என்ன?	163

பொருளடக்கம்

முற்றிற்று.

தமிழ்ச் சத்திரியகுல விளக்க

வினாவிடை.

---:o:---

1. வினா.—மனித குலத்தோர் யாவரும் ஒரே தந்தை தாயரிடத்தி லிருந்து உற்பத்தியானவர்களா? அல்லது வெவ்வேறு தந்தை தாயரி டத்திலிருந்து உற்பத்தியானவர்களா?

விடை.—மனிதரெல்லோரும் ஆதியிலே ஒரே தந்தை தாயரிடத்தி லிருந்து உற்பத்தியானவர்களே.

2. வினா.—அப்படியிருக்க மனிதர்கள் வெவ்வேறான பல பாஷை களைப் பேசுகிற வெவ்வேறான ஜாதிகளாய் இருக்கிறார்களே, அதற்குக் காரணமென்ன?

விடை.—மனிதர் கடவுளின் சித்தத்துக்கு விரோதமாய் நடந்து அவரை மதியாததினால் அவர்கள் பலபல பாஷைகளைப் பேசுகிற வெவ் வேறே ஜாதிகளாகும்படி கடவுளே பிரிவினைகளை உண்டாக்கினார். ஆகை யால் மனிதருக்குள்ளே வெவ்வேறே பாஷைக்காரரும், வெவ்வேறே ஜா திக்காரரும் உண்டானார்கள்.

3. வினா.—ஆதியில் உண்டான பாஷைகள் மாத்திரம் இப்போது நிலைத்திருக்கின்றனவா? அல்லது பிற்காலத்திலும் புதுப்பாஷைகள் உண் டாயினவா?

விடை.—மனிதர் பெருகி ஒருவரை ஒருவர் கீழ்ப்படுத்தினபோது பின்னும் வெவ்வேறு பாஷைகளும் உண்டாயின.

4. வினா.—சில பாஷைகள் செத்துப்போயின என்பதற்கு ஆதாரம் என்ன?

விடை.—சில பாஷைகள் பிற்காலத்தில் முழுவதும் ஒழிந்துபோயின என்று சொல்லலாம். சில பாஷைகள் எழுத்தில் நிலைத்தும் பேசப்படா மல் செத்துப்போயின, சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு அதாவது வடுகு, கன்னடம், மராட்டி முதலான பாஷைகளில் சமஸ்கிருதமானது பேசப் படாமல் செத்துப்போயிற்று.

5. வினா.—தமிழர் தங்கள் சொந்த பாஷையோடே சமஸ்கிருதத் தையும் படித்து விருத்திபண்ணி வந்தார்கள் என்பதற்கு ஆதாரமென்ன?

விடை.—நைடதம், சுயம்வரப்படலம்.

7-ம் பாடல்.

"சிற்பநூல் கழியக்கற்ருர் சித்திரித்தென்னவாய்ந்த
பொற்புறுநெடிய வேற்கட் பூங்கொடி வதுவைவேட்டுப்
பற்பல தேயவேந்தர் தொகுதலில் பாடை தேர்வான்
அற்புடனெவரும் தேவபாடையிலறைவர் மாதோ."

இக்கவியில், பற்பலதேச அரசரும் தமயந்தியின் கலியாணத்தை விரும்பி வந்திருந்தபோது அவர்கள் தேவபாஷையென்று சொல்லப் பட்ட சமஸ்கிருதத்தில் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள் என்று சொல்லியிருக்கிறது. சுயம்வரத்துக்குத் தமிழ் அரசரும் வந்திருந்தார்கள்.

தமிழில் நூல் இயற்றிய சேந்தன், கம்பர் முதலானவர்கள் சமஸ்கிருதத்தில் மிகவும் வல்லவர்களாயிருந்தார்கள்.

சமஸ்கிருதத்திற்கு சிவனும், தமிழுக்கு சிவனும், அவருடைய மகனுகிய சுப்பிரமணியரும் மூல கர்த்தாக்களாய் இருந்தார்கள் என்று சொல்லப்படுகிறது.

6. விஞ.—பெருங்கூட்டத்தாராகிய அந்த அந்தப் பாஷைக்காரருக்குள்ளும் குலப்பிரிவு உண்டானதற்குக் காரணமென்ன?

விடை.—தொழிலே முதற்காரணமாம். மனிதர் நடக்கைகளில் பேதமுள்ளவர்களானபடியால் உயிரையும், பொருளையும், மரியாதையையும் காப்பாற்றிக்கொள்ளும்படி செங்கோல்பிடித்துப் பட்டயம் ஏந்தி துட்ட நிக்கிரகமும், சிட்ட பரிபாலனமும் செய்து ஜனங்களைப் பாதுகாத்து வந்தவர்களும், வர்த்தகம் செய்து ஜனங்களுக்கு வேண்டிய நல்ல பொருட்களைக் கொடுத்து ஜீவனம் செய்துவந்தவர்களும், யுத்தகாலத்தில் பிடிக்கப்பட்டு மற்ற ஜனங்களுக்குத் தாழ்மையாக மதிக்கப்பட்டதிஞல் முன் சொல்லப்பட்ட ஜனங்களுக்கு வேண்டிய சகல வகையான தொழில்களையும் செய்து பூமியையும் பயிரிட்டுவந்தவர்களும், உலகப்பொருளைச் சம்பாதிப்பதிலும் கடவுளை முக்கியமாய்த் தொழுது, அவ்விதமான தொழுகைக்கு மற்றவர்களையும் ஏவிப் போதித்துவந்த வகையால் ஜீவனம் பண்ணினவர்களுமாகிய நால்வகைத் தொழில்களால் அந்தந்தப் பாஷைக்காரருக்குள்ளும் நாலு குலத்தவர் உண்டாஞர்கள்.

7. விஞ.—அந்த நாலு பிரிவானவர்களும் அந்தந்தப் பிரிவிலேயே இருக்கவேண்டுமென்பதற்குக் காரணமென்ன?

விடை.—அந்த நால்வகைக் கூட்டத்தாரும் தாங்கள் முன் செய்து வந்த தொழில்களை விட்டு வெவ்வேறு தொழில்களைச் செய்வதிஞல்,

யுத்தம்பண்ணி ஜனங்களைப் பாதுகாத்து வருபவர்களுக்கு வருமானக்குறைவு நேரிடாதபடிக்கு அந்த நாலு பிரிவானவர்களும் அந்தந்தப் பிரிவிலேயே இருக்கவேண்டியதற்காக அந்தப் பிரிவுகள் செய்யப்பட்டன.

8. வினு.—குலக்கிரமம் யாரால் ஏற்படுத்தப்பட்டது?

விடை.—யுத்தம்பண்ணி ஜனங்களைப் பாதுகாத்து வந்தவர்களால் குலக்கிரமம் ஏற்படுத்தப்பட்டது.

9. வினு.—குலக்கிரமம் ஏற்படுத்தினவர்களுக்கு தமிழில் என்ன பெயர்? சமஸ்கிருதத்தில் என்ன பெயர்?

விடை.—குலக்கிரமம் ஏற்படுத்தினவர்க்ளுக்குத் தமிழில் அரசன் நாடான், நாடன் முதலான பெயர்களும், சமஸ்கிருதத்தில் க்ஷத்திரியன் என்றும் பெயர்.

10. வினு.—அந்த அந்தக்குலத்தவர் தம்தம் குலநிலை தவருமல் அவரவர் குலத்திலேயே நிலைத்திருக்கும்படி செய்யவேண்டியது அரசனுடைய கடமை என்பதற்கு ஆதாரமென்ன?

விடை.—காவேரிக் கரையிலுள்ள அம்பன் என்னும் சிறு நாடாண்ட அரசனும், சமஸ்கிருதம், தமிழ் என்ற இருபாஷைகளில் வல்லவனுமான பாண்டியனுகிய சேந்தன் பாடிய திவாகரம், 12-வது தொகுதி,

92-வது சூத்திரம்:—

"அறுவகை உலகநடையின் பெயர்."

"அறநிலை அறமும் மறநிலை யறமும்,
அறநிலைப் பொருளும் மறநிலைப் பொருளும்,
அறநிலையின்பமும் மறநிலையின்பமும்,
அறுவகைத்தே உலகினடையே."

மேற்படி சூத்திரத்தில் சொல்லியபடி பூர்வ ஏற்பாட்டு உலக நடையாகிய இராஜரீக முறை ஆரும். அவை வருமாறு:—

(1) அற நிலையறம், (2) அற நிலைப்பொருள்,
(3) மற நிலையறம், (4) மற நிலைப்பொருள்,
(5) அற நிலையின்பம், (6) மற நிலையின்பம்.

இவற்றுள் அற நிலையறம் வருமாறு:—

மேற்படி 12-வது தொகுதி 93-வது சூத்திரம்;
"அறநிலையறத்தின் வகை."

"வருண காப்பிற் பிறழா நெறி நிலை
பெருவற் பொருளாற் பேணும்போற்றி,
அறநிலையற மென்றறைந்தனர் புலவர்."

இச்சூத்திரத்தில் அறநிலையறமானது நாடாளும் வேந்தனானவன் தன் நாட்டில் வாழ்கின்ற பிரஜைகள் விதிக்கப்பட்ட அந்த அந்த குலத்திற்குரிய தொழில் வரம்புகள் கடந்து நடவாதபடிக்குப் பாதுகாப்பது கடமை என்று சொல்லியிருக்கிறது.

இதினுல் பூர்வகாலத்தில் ஒரு குலத்துக்குரிய குலப்பெயரையும் மற்றொரு குலத்தவர் தரித்துக்கொண்டால் அவர்கள் அரசரால் கொரேமான தெண்டனை அடைவார்களென்று அறிகிறோம்.

மேற்காட்டிய சூத்திரத்தை இங்கிலீஷ் குலவித்துவானுகிய உயின்ஸ்லோ பண்டிதர் (Dr. Winslow) தமது அகராதியில், "அறநிலையறம்" என்னும் தொடர் பதத்துக்குத் தாற்பரியமாக "அறநிலையறம் is one of the six அரசியல்—The duty of a King is, to preserve his subjects from breaking the rules of the respective casts" என்று எழுதியிருக்கிருர்.

இதற்குத் தாற்பரியமாவது:—அறநிலையறமானது ஆறு அரசியலில் ஒன்று—அது உயர்ந்த ஜாதிகளின் மேன்மையைக்குறித்த விதிகளை மற்றவர்கள் மீருதபடி தன் பிரஜைகளைக் காப்பது ஒரு அரசனுடைய கடமை என்பதாம்.

11. வினு.—குலக்கிரமம் இலக்கிய இலக்கண நூல்களில் குறிப்புக் குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறதோ? அல்லது அதைப்பற்றிச் சொல்லிய அட்டவணையும் உண்டோ?

விடை.—குலக்கிரமம் அநேக இலக்கிய இலக்கண நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. சேந்தன் திவாகரம், மக்கட்பெயர்த் தொகுதியில் அட்டவணையாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அட்டவணை வருமாறு:—

1-வது சூத்திரம், "அருந்தவர் பெயர்."

"துறவோர், ஐயர், மாதவர், முனிவர்,
அறவோர், நீத்தோர், அறிஞர், உயர்ந்தோர்,
தாபதர், மெய்யர், தவத்தர், தபோதனர்,
முனைவர், இருடிகள், படிவர், பண்ணவர்,

யோகிகள், கடிந்தோர், பெரியோருறுவரென்
ருகிய அந்தணர் அருந்தவர் பெயரே."

2-வது சூத்திரம், "சைவமதத்தவப் பாலோர் பெயர்"

"மாவிதியரும் காளா முகரும்,
பாசு பதரும் சைவதவப்பாலோர்."

3-வது சூத்திரம் "நாராயண சமயத்தோர் பெயர்"

"நாராயண சமயத்தோர் பாகவதரே."

4-வது சூத்திரம், "சமணர் பெயர்."

"சாவகர், அருகர், சமணராகும்."

5-வது சூத்திரம், "புத்தர் பெயர்."

"புத்தர், சாக்கியர், தேரர், பௌத்தர்,
வைத்த சீவகருமத் தவத்தோரே."

6-வது சூத்திரம், "சமண முனிவர் பெயர்."

"சாரணர், சமண முனிவராகும்."

7-வது சூத்திரம், "சடைமுடியோர் பெயர்."

"தாபதர் சடை முடியோர்."

8-வது சூத்திரம், "பார்ப்பார் பெயர்."

"ஐயர், வேதியர், இருபிறப்பாளர்,
மெய்யர், மிக்கவர், மறையோர், பூசுரர்,
அந்தணர், நூலோர், அறு தொழிலாளர்,
செந்தீ வளர்ப்போர், உயர்ந்தோர், ஆய்ந்தோர்,
ஆதி வருணர், வேதபாரகர்,
விப்பிரர், தொழுகுலத்தோர், வேள்வியாளர்,
முப்புரிநூலோர், முனிவர் என்றிவை
தப்பில் பார்ப்பார் தம் பெயராகும்."

9-வது சூத்திரம், "நூலுரைப்போர் பெயர்."

"கணக்காயர், நூலுரைப்போர்."

10-வது சூத்திரம், "கலைவல்லோர் பெயர்."

"கவிஞர், கலைவல்லோர்."

11-வது சூத்திரம், "அறிவுடையோர் பெயர்."

"சான்றோர், மிக்கோர், நல்லவர், மேலவர்,
ஆய்ந்தோர், உயர்ந்தோர், ஆரியர், உலகென
ஆய்ந்த ஆன்றோர் அறிவுடையோரே."

12-வது சூத்திரம், "புலவர் பெயர்."

"கவிஞர், கலைஞர், கற்றவர், மேதையர்,
சவையே', சங்க முதுவோர், மூத்தோர்,
அவையே அறிஞர் புதரே புலவர்."

13-வது சூத்திரம், "மிக வல்லோர் பெயர்."

"விபுதர், நிபுணர், குசலர், மிக வல்லோர்."

14-வது சூத்திரம், "மூத்தோர் பெயர்."

"அடிகளத்தனையனுசான், குரவன்,
சாமிகோமான், பெருமான், உரவோன்,
ஈசன், இறைவன், தலைவன்,
விரவு பதி நாதன் மூத்தோன் பெயரே."

15-வது சூத்திரம், "பெருமையிற் சிறந்தோன் பெயர்."

"அண்ணலும் குரிசிலும் ஏந்தலும் தோன்றலும்
செம்மலும் பெருமையிற் சிறந்தோன் பெயரே."

16-வது சூத்திரம், "எப்பொருட்கும் இறைவன் பெயர்."

"நாதன் நாயகன், அதிபன் காந்தன்,
பதிகோன் ஈசன், செம்மல் இறையே,
தலைவன் மன்னன், பிரானே கொழுனன்,
அரசனுதி எனப்பதினைந்தும்
உரை செயெப் பொருட்கும் இறைவன் மேற்றே."

17-வது சூத்திரம், "உயர்ந்தோர் பெயர்"

"உலகம் எள்பது உயர்ந்தோர் மாட்டே"

18-வது சூத்திரம், "திரண்டோர் பெயர்"

"சங்கமும் குழுவும் கூட்டமும் கணமும்,
தங்கிய தொகுதியும் சவையும் அவையும்,
இங்கிவை திரண்டோர் யாவர்க்கும் உரிய."

19-வது சூத்திரம், "அரசன் பெயர்."

"புரவலன், கொற்றவன், பெருமான், காவலன்,
அரையன், ஏந்தல், கோவே, குரிசில்,
தலைவன், மன்னவன், வேந்தன், முதல்வன்,
இறைவன், அண்ணல் எனப்பதினெட்டும்,
அரசன் தொல் பெயராகுமென்ப."

20-வது சூத்திரம், "குருகுலத்தரசர் பெயர்."

"பரதர், கௌரதர், குரு குலத்தரசர்."

21-வது சூத்திரம், "கோச்சேரன் பெயர்."

"பூழியன், உதியன், கொங்கன், பொறையன்,
வானவன், குட்டுவன், வானவரம்பன்,
வில்லவன், குடநாடன், வஞ்சிவேந்தன்,
கொல்லிச் சிலம்பன், கோதை, கேரளன்,
போந்தின் கண்ணிக்கோன், பொருனைத்துறைவன்,
சேரலன், மலயமான், கோச் சேரன் பெயரே."

22-வது சூத்திரம், "கோச்சோழன் பெயர்."

"சென்னி வளவன், கிள்ளி செம்பியன்,
பொன்னித் துறைவன், புலிக்கொடியோன், புரவலன்,
நேரிய னார்த்தரார்க் கோனேரிறை யபயன்,
நேரிவெற்பன், கோழி வேந்தன்,
சூரியன், புனனாடன், கோச்சோழன், பெயரே."

23-வது சூத்திரம், "கோப்பாண்டியன் பெயர்."

"செழியன், தமிழ்நாடன், கூடற்கோ, தென்னவன்,
வழுதி மீனவன், பஞ்சவன், மாறன்,

கௌரியன், வேம்பின் கண்ணிக்கோ கைதவன்,
பொதிய பொருப்பன், புனல் வையைத்துறைவன்,
குமரிச் சேர்ப்பன், கோப் பாண்டியனே."

24-வது சூத்திரம், "சளுக்குவேந்தர் பெயர்."

"வேள் புலவரசர் சளுக்குவேந்தர்."

25-வது சூத்திரம், "குறுநில வேந்தர் பெயர்."

"வேளிரும், புரோசரும், குறுநில வேந்தர்."

26-வது சூத்திரம், "மந்திரிக்கிழவர் பெயர்."

"முதுவர், குரவர், மூத்தோர், முன்னோர்,
உழையோர், சூழ்வோர், நூல் வல்லோரே,
அமைச்சர், தேர்ச்சித் துணைவ ரென்றுங்,
கிசைத்த மந்திரிக் கிழவர்க் கெய்தும்."

27-வது சூத்திரம், "நட்பாளர் பெயர்."

"இனப்பெயர், தன்னட்பாளர்க் கெய்தும்."

28-வது சூத்திரம், "மந்திரி தந்திரிக்குப் பெயர்."

"ஏனாதி காவிதியாமாத்திய ரெனும் பெயர்,
ஆனமந்திரி தந்திரிக் கெய்தும்."

29-வது சூத்திரம், "கருமத்தலைவர் பெயர்."

"வள்ளுவன், சாக்கை, எனும்பெயர் மன்னர்க்,
குள்படு கருமத் தலைவர்க் கென்றும்."

30-வது சூத்திரம், "போர்த்தலைவர் பெயர்."

"பெரும்போர்த்தலைவர் பொருநரெனப்படும்."

31-வது சூத்திரம், "பரிவாரத்தின் பெயர்."

"பரியாளம் என்பது பரிவார மாகும்."

32-வது சூத்திரம், "செட்டிகள் பெயர்."

"இப்பர்பரதர், வைசியர், கவிப்பர்,
எட்டிய ரிளங்கோக்க ளேர்த்தொழிலர், பசுக்காவலர்,

ஒப்பினாய்கர், வினைஞர், வணிகரென்
றத்தகு சிரேட்டிகள், செட்டிகள் பெயரே."

33-வது சூத்திரம், "காராளர் பெயர்."

"வினைஞர், சூத்திரர், பின்னவர், சதுர்த்தர்,
வளமையர், வேளாளர், மண்மகள் புதல்வர்,
வார்த்தைத் தொழிலோர், வண்களமர், உழவர்,
சீர்த்த ஏரின் வாழ்னர், காராளர்."

மேலே காட்டிய அட்டவணையில் பார்ப்பார், அறிவுடையோர் அல்லது சான்றோர், செட்டிகள் அல்லது வைசியர், சூத்திரராகிய காராளர் அல்லது வேளாளர் என்னும் நாலு குலமும் கிரமமாக சொல்லப்பட்டிருக்கிறதை அறிந்துகொள்ளலாம்.

இதனடியில் பிற நூல்களில் சில கவிகள் மாத்திரம் எடுத்துக்கூறுவோம். அவைகள் வருமாறு :—

சூடாமணி நிகண்டு, மக்கட்பெயர்த் தொகுதி, 27-வது சூத்திரம்.

"இந்தமுக் குலத்துளார்க்கே ஏவல்பூண்டொழுகுகின்ற,
வெந்திரலாளர்தாமே விதித்த சூத்திரரென்றாகும்."

இச்சூத்திரத்தில் முன் மூன்று குலத்தைக் குறித்து நூலாசிரியன் சொல்லியதாகவும், இப்போது அவர்களுக்கு ஏவல் செய்யும் சூத்திர குலத்தைக் குறித்துச் சொன்னதாகவும் கூறுகிறார். ஆகையால் நாலு குலக்கிரமம் உண்டென்று விளங்குகிறது.

இச்சூத்திரத்தின் முதல் இரண்டடிகள் எட்டுப் பிரதிகளில் உள்ளபடி ஆறுமுக நாவலர் அச்சிட்ட புஸ்தகத்தில் உண்டு. மற்றவர்கள் அச்சிட்ட புஸ்தகங்களிலே அவைகள் பிசகாய் இருக்கின்றன.

மேற்படி நிகண்டு 12-வது தொகுதி.

46-வது சூத்திரம். சூ வேளாளர் தொழில்.

"வசிய மூவகையுளார்க்கு வருத்தமுத்தொழில்களான
பசுவோம்பல், பொருளையீட்டல், பாரிலேர்த் தொழிலைச்
செய்தல்,
இசையவேதியருக்கேவல், குயிலுவத் தொழிலியற்றல்,
அசைவில்காருகவினைகளாக்கல், சூத்திரருக்காறே."

இச்சூத்திரத்தில் மூன்றாவது குலத்தவரான வைசியரின் மூன்று தொழில்களோடு குயிலுவம், காருகவினை, ஏவல் செய்தலாகிய மூன்று தொழில்களும் சூத்திரர்க்கு உண்டு என்று காட்டி அந்தச் சூத்திரர் வேளாளரோ என்று தலைப்பிலே சுட்டிச் சொல்லியிருக்கிறார்.

பாகவதம், மைத்திரேயர் விதுரர்க்கு தத்துவம் உரைத்த அத்தியாயம்.
20-வது கவி;

"முன்னூறு முகத்தில் **முந்நூலர்** வந்தனர்,
மன்னவர் வாகுவில் வந்து மன்னினார்,
பொன்னூறு **வணிகர்** பூந்தொடையிற் போந்தனர்,
பின்னவர் தாளினில் பின்னர்த் தோன்றினார்."

இக்கவியில், முந்நூலர், அதாவது பார்ப்பார், மன்னவர், வணிகர், பின்னவர், அல்லது வேளாளர் என்னும் நாலு குலமும் கிரமமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஜாதி நூல், மனு உற்பத்தி.

"அன்னவூர்தி முகத்தினில் **அந்தணர்**,
துன்னு தோளில் சுடர் முடி **மன்னவர்**,
நன்னயம் பெறும் ஊருவில் **நாய்கர்** தாள்
தன்னில் **சூத்திரர்** தாம் உதித்தாரரோ."

இக்கவியில், அந்தணர் அல்லது பார்ப்பார், மன்னவர் அல்லது அரசர், நாய்கர் அல்லது செட்டிகள், சூத்திரர் அல்லது வேளாளர் என்னும் நாலு குலமும் கிரமமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

கூர்ம புராணம், வருணாசிரமமுறைத்த அத்தியாயம்.

11-வது செய்யுள்;

"**வேதியர்** முகத்தில் **வேந்தர்** விறல் கெழுதுணைத் தோள் வெற்பில்
தீதறு **வணிகர்** செம்பொற் குங்கினில் **சதுர்த்தர்** செய்ய
பாதபங்கயத்தில் ஈன்றான் பதுமன் முன் படைத்த மூவர்
ஓதிய மகங்களியாவு மாற்றுதற்குரியராவார்."

இச்செய்யுளில், வேதியராகிய பார்ப்பார், வேந்தராகிய அரசர், வணிகராகிய செட்டிகள், சதுர்த்தராகிய வேளாளர் என்னும் நாலு குலமும் கிரமமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

குறிப்பு.

முகமானது மனுஷ ரூபத்தில் மேன்மை பொருந்தியதாக இருக்கிறதுபோல் பார்ப்பார் மேன்மை பொருந்தியவர்கள் என்றும், மனிதனுக்குப் பெலன் தோளில் இருக்கிறதுபோல் அரசர் புஜபல பராக்கிரமம் உள்ளவர்கள் என்றும், தொடைகளானவை முகம் அடங்கிய தலையையும், தோட்கள் அடங்கிய உடலையும் தாங்குகின்றனபோல் பார்ப்பார்க்கும், அரசர்க்கும் வைசியர் தங்கள் வியாபாரத்தால் மிகவும் உதவியாயிருக்கிறதையும், பாதங்களானவை முந்தின பங்குகளாகிய உடலின் சகல அவயவங்களையும் தாங்குகிற ஆதாரம்போல் சூத்திரர் முதல் மூன்று குலத்தவர்க்கும் சகல ஊழியமும் செய்து வருகிறதையும் குறிக்கும்படி மனிதர் பிரமாவின் முகத்திலும், தோளிலும், தொடையிலும், பாதங்களிலும் உற்பத்தியானர்கள் என்று புராணிகர் கூறினர்.

இலக்கிய இலக்கண நூல்களிலிருந்து பின்னும் அநேக ஆதாரங்களை இனிமேலும் சொல்வோம். ஆகையால் அவைகளை இவ்விடம் சொல்லாமல் விடுகிறோம்.

இப்போது முன் சொல்லிய நாலு குலங்களில் தமிழ்ப் பார்ப்பாராகிய தமிழ் பிராமண குலத்தைக் குறித்துச் சுருக்கமாகச் சொல்லுகிறோம்.

தமிழ்ப் பிராமணர்.

---

12. வினு.—முதலாவது குலத்தவர் யார்?

விடை.—சேந்தன் திவாகரத்தில் நாம் முன் எடுத்துக் காட்டின குலக்கிரம அட்டவணைப்படிக்கும், மற்ற நூல்களிலிருந்து நாம் எடுத்துச் சொன்னதும் இனிமேல் சொல்வதுமான ஆதாரங்களின்படிக்கும் தமிழ்ப் பார்ப்பாராகிய தமிழ்ப் **பிராமணர் முதற் குலத்தவர்** ஆவார்.

13. வினு.—பிராமணர் குலங்களில் முதலாவது நிற்கிறதற்குக் காரணம் என்ன?

விடை.—சகல மானிடர்க்கும் வேண்டிய சகல நன்மைகளும் கடவுளின் கையில் இருக்கிறதினுல் அக்கடவுளை ஆராதிப்பது முக்கியமான

முதற்காரியமே. அக்கடவுளைப்பற்றிப் போதிக்கிறவர்கள் குலங்களில் முதலாவது நிற்கவேண்டியது நியாயமாமே.

14. வினா.—காலா காலங்களில் பார்ப்பார், அதாவது பிராமணரல்லாத பிற குலங்களிலுள்ள தெய்வபக்தரான யோக்கியர்களும் பார்ப்பன குலத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்களா?

விடை.—பார்ப்பாரல்லாத பிற குலங்களிலுள்ள தெய்வபக்தரான யோக்கியரானவர்கள் பார்ப்பனக் குலத்தில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

15. வினா.—பிற குலங்களில் கலந்துபோன பார்ப்பார் தங்கள் பூர்வ குலமாகிய பார்ப்பனக் குலத்தில் மறுபடியும் சேர்த்துக்கொள்ளப்படுவார்களா?

விடை.—பிற குலங்களில் பார்ப்பார் கலந்து அவர்களால் சந்ததி, அதாவது பிள்ளைகள் பிறந்தால் அந்தப் பிள்ளைகள் அநுலோமர், அல்லது பிரதிலோமர் என்னும் பேரால் சொல்லப்பட்டு சூத்திர குலத்தைப் பார்க்கிலும் தாழ்ந்த குலமாக மதிக்கப்படுவார்களே அல்லாமல் பிராமண குலமாகிய பார்ப்பார் குலத்தில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

குறள் 14-ம் அதிகாரம்.

4-வது கவி;

"மறப்பினு மோத்துக்கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக்கெடும்."

இக்குறளில் பார்ப்பனக்குலத்தவன் வேதத்தை மறந்துபோனாலும் மறுபடியும அதைப்படித்துக் கொள்ளலாம். பிற குலத்தில் கலந்து போய்விட்டால் அவன் குலங்கெட்டவனாவான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சத்திரியரும், வைசியரும் பிற ஜாதிகளில் கலந்துபோனால் பார்ப்பாருக்குச் சொல்லியது போலவே தங்கள் தங்கள் பூர்வ குலங்களில் சேர்த்துக்கொள்ளப்படாமல் முன் சொல்லியபடி சங்கர ஜாதிகளாக மதிக்கப்படுவார்கள்.

16. வினா.—பார்ப்பனக் குலத்தவர் யாவரும் ஒரே பாஷையைக் குலப்பாஷையாகப் பேசுகிறார்களா?

விடை.—கவர்ன்மெண்டு கணக்குகள் முதலானவற்றில் தமிழ்ப் பிராமணர், வடுக அல்லது தெலுங்கப் பிராமணர், கன்னடப் பிராமணர்

மராட்டியப் பிராமணர் முதலான வகுப்புகள் ஏற்பட்டிருக்கிறதையும், வழக்கத்திலும் அந்தபபடியே பார்ப்பார் சொல்லப்படுகிறதையும், பார்ப்பார் தாங்களும் தங்களை அப்படியே சொல்லிக்கொள்ளுகிறதையும் யாவரும் அறிந்த விஷயம். அல்லாமலும், பார்ப்பார் தனித்த ஒரு பாஷைக்காரராக இருக்கக்கூடாது என்னும் விபரத்தை இந்நூலின் பாயிரத்தில் சொல்லியிருக்கிறோம்.

ஆகையால், பார்ப்பார் யாவரும் ஒரே பாஷையைக் குலப்பாஷையாகப் பேசுகிறவர்களல்ல, அவர்கள் மற்றக் குலத்தவரைப் போலவே வெவ்வேறே பாஷையைக் குலப் பாஷையாகப் பேசுகிறவர்களாம்.

17. வினா.—சமஸ்கிருதமானது பார்ப்பனக் குலத்தவர்க்கு மாத்திரம் சொந்தமான பாஷை என்று சொல்லக்கூடாதா?

விடை.—சமஸ்கிருதமானது பார்ப்பனக் குலத்தவர்க்குச் சொந்தமான பாஷையல்ல என்னும் விபரத்தை 5-வது வினாவிற்கு விடை சொல்லிய இடத்தில் விபரித்தோம். சமஸ்கிருதமானது பார்ப்பனக் குலத்தவர்க்குச் சொந்தமான பாஷையாக இருந்தால் அவர்கள் தங்களை வெவ்வேறு பாஷைக்காரராகக் காட்டவேண்டியதில்லையே. பார்ப்பனக்குலப் புருஷராவது,ஸ்திரிகளாவது சமஸ்கிருதப் பாஷையை தங்கள் வீடுகளில் குலப்பாஷையாக பேசுகிறதில்லையே. ஆகையால் சமஸ்கிருதமானது அவர்களுக்குச் சொந்தமான பாஷையல்ல.

சமஸ்கிருதமானது பாாப்பனக் குலத்தவர்க்குச் சொந்தமான பாஷையாகஇருந்ததென்றும், பிற குலத்தவர்க்கு பார்ப்பார் சமஸ்கிருதத்தைப் படிப்பியாததினால் அது செத்த பாஷை (Dead language) ஆகப் போயிற்று என்றும் சிலர் சொல்லத் துணிவது பிசகு. பிற குலத்தவர்கள் பார்ப்பனக் குலத்தாருடைய வீடுகளில் அதிகச் சாவகாசம் பண்ணுதபடிக்கும், பார்ப்பனப் புருஷர் சமஸ்கிருத வேத சுலோகங்களை தங்கள் வீடுகளில் சொல்லும்போது வேதத்தைக் காதினால் கேட்பதற்கு பாத்தியமில்லாதவர்கள் என்று சொல்லப்பட்ட சூத்திரர் முதலான ஜாதிகள் தங்கள் காதுகளினால் வேதத் தொனியைக் கேட்காமலிருக்கும்படிக்கும், அக்ராரம் என்று சொல்லப்பட்ட தனித்த வீடுகளிலே பார்ப்பார் எப்போதும் வாசம் பண்ணுகிறவர்களாயிருக்கிறார்கள். அது விஷயம் சகல குலத்தவர்க்கும் தெரிந்த காரியம். அப்படியிருக்க, அவர்களுடைய வீட்டார் சமஸ்கிருதம் பேசத் தடையென்ன? யாதோர் தடையுமில்லையே. ஆதலால் சமஸ்கிருதமானது பார்ப்பனக் குலத்தவருடைய சொந்தப் பாஷையென்று எவராவது சொல்வாரானால் அது மதியீனமே.

18. வினா.—தமிழ்ப் பாஷையிலுள்ள சகல சாஸ்திரங்களிலும், மற்ற எந்த நூல்களிலும் பார்ப்பனக் குலத்தவர்க்கு பிராமணர் என்னும் பெயர் சொல்லப்படவில்லையே. அப்படியிருக்க, இந்தத் தமிழ் நாட்டில் தற்கால சாதாரண வழக்கத்தில் முன் நாம் சொல்லிய பார்ப்பார் முதலான பெயர்களோடே பிராமணர் என்னும் பெயர் வழங்கப்பட்டு வருகிறதற்குக் காரணம் என்ன?

விடை.—வடுகராகிய தெலுங்க அரசர் கிறிஸ்தாண்டு 1400-ல் இந்தத்தமிழ் நாட்டை தங்கள் வசமாக்கிக் கொண்டபோது வடுகப் பார்ப்பாரையும் தங்களோடே கூட்டிக்கொண்டு வந்தார்கள். தெலுங்கு, அல்லது வடுகப் பாஷையிலும் பார்ப்பனவாரிலு அதாவது பார்ப்பார் என்று சொல்லப்பட்டிருந்தும் சமஸ்கிருதத்திலுள்ளபடி பிராமணர் என்று சொல்லும் வழக்கம் ஆரம்பித்தது. ஆகையால் தமிழராலும் தமிழ்ப் பிராமணர் என்று சொல்லும் வழக்கம் உண்டாயிற்று.

19. வினா.—பார்ப்பனக் குலத்தவர் பல பாஷைகளைப் பேசுகிறவர்களாக இருந்தாலும் தங்களுக்குள்ளே கலந்து கொள்ளுகிறார்களா?

விடை.—பார்ப்பனக் குலத்தவர்களில் பாஷை வித்தியாசத்தினால் பிரிக்கப்பட்டவர்களும், வேறு காரணங்களால் பிரிக்கப்பட்டவர்களுமான அநேக வகை பார்ப்பனக் குலத்தவர் உண்டு. அவர்கள் ஒருவருக்கொருவர் போஜன விஷயத்திலாவது, கலியாண விஷயத்திலாவது கலந்து கொள்ளுகிறதில்லை. மராட்டியப் பாஷையைக் குலப்பாஷையாகப் பேசுகிற பார்ப்பனக் குடும்பத்தார் தமிழ்ப் பாஷையை குலப் பாஷையாகப் பேசுகிற பார்ப்பார்க்குள்ளே எப்படி கூடிக் குலாவக்கூடும்? அது கூடாத காரியமல்லவா? ஆதலால் பார்ப்பனக் குலத்தவர் தனித்தனியான குலத்தவர்களாக நிலைத்திருக்கிறார்கள்.

20. வினா.—பார்ப்பனக்குலத்தவர்க்கு உபநயனம் அவசியமோ?

விடை.—உபநயனம் என்பதற்குப் பூணூல் என்றும், பூணூல் சடங்கு என்றும் அர்த்தம். உபநயனம் என்னப்பட்ட பதத்துக்கு மூக்குக் கண்ணாடி, துணைக்கண் என்றும் அர்த்தம். கண் பெலனற்றவன் மூக்குக் கண்ணாடி, அல்லது துணைக்கண் இல்லாவிட்டால் வாசிக்க, அல்லது ஒரு பொருளை நுட்பமாய்ப் பார்க்க அறியமாட்டான். அதுபோல உபநயனமாகிய பூணூல் இல்லாதவன் வேதமாகிய பொருளை அறியமாட்டான், அறியவுங்கூடாது. ஆதலால் பார்ப்பனக் குலத்தவர் அகத்தியமாய் பூணூல் தரித்திருக்கவேண்டும். பார்ப்பனக் குலத்தவன் பூணூல் தரித்துக்கொள்ளாவிட்டால் அவன் வேதத்தை ஓதக்கூடாது. அதின் தொனியைக் காதால் கேட்கவும் கூடாது. ஆகையால் துணைக் கண்ணுடையோராகிய குருக்கள் குலத்தவர்க்குத் தமிழில் பார்ப்பார் (Seers) என்னும் பெயர் ஒரு சிறப்புப் பெயராயிற்று,

21. வினு.—உபநயன பாத்தியமுள்ள வேறே குலத்தவரும் உண்டோ?

விடை.—உண்டு. அரசரும் வைசியராகிய செட்டிகளும் அகத்தியமாய் உபநயனம் தரித்தவர்களாயிருக்கவேண்டும். உபநயனம் தரிக்கும் முன் பார்ப்பார், அரசர், செட்டிகளாகிய மூவரும் சூத்திரர்கள் என்று மதிக்கப்படுவார்கள், உபநயனம் தரித்துக் கொள்ளாவிட்டால் மேலே சொல்லப்பட்ட மூன்று குலத்தவரும் வேதம் ஓதவும், அதைக் காதால் கேட்கவும் பாத்தியமுடையவர்களல்ல.

22. வினு.—பார்ப்பனக் குலத்தவர்க்குரிய தலைப்பட்டப்பெயர் என்ன?

விடை.—முன் சொல்லிய குலக்கிரம அட்டவணையில் பார்ப்பனக் குலத்தவர்க்குரிய பெயர்களைக் கவனித்தால் 8-வது சூத்திரத்தின் தலைப்பில் நிற்கிறது ஐயர் என்னும் பெயராம். ஐ என்னும் பதத்திற்கு "கடவுள்" என்றும், "குரு" என்றும் அர்த்தமாம். பரலோகப் பொருள் கடவுளுடைய கையிலிருக்கிறது. அது சகல மனிதருக்கும் அவசியமான பொருள். அப்பொருளைப் பெற்றுக்கொள்ளும்படி மனிதர் அக்கடவுளை, வணங்கவேண்டியது அவசியம். அக்கடவுளைப்பற்றிப் போதிக்கவேண்டிய குருவுக்கு ஐ+அன், அதாவது கடவுளைச் சார்ந்தவன் ஐயன் என்று ஒருமையிலும், ஐயர் எனப் பன்மையிலும் அரசர் பெயரிட்டு, அக்கடவுளை அக்குருக்கள் மூலமாக எப்போதும் ஞாபகம் பண்ணும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று விளங்குகிறது.

அன்றியும் தகப்பனுக்கு இங்கிலீஷ் பாஷையில் (Father) பாதெர் என்றும், லத்தின் பாஷையில் (Pater) பாத்தெர் என்றும், போர்த்துக்கீஸ் பாஷையில் (Padre) பாத்ரி என்றும் சொல்லப்பட்ட வார்த்தைகள் மேலே சொல்லப்பட்ட பாஷைகளில் குருவுக்குப் பெயர்களாகச் சொல்லப்படுகிறது. அதுபோலவே தமிழிலும் தகப்பனுக்குச் சொல்லப்பட்ட ஐயன் என்னும் வார்த்தை குருவுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

23. வினு.—அந்தணர் என்னும் பெயர் பார்ப்பனக் குலத்தவர்க் மாத்திரம் வழங்கப்படுமோ?

விடை.—அந்தணர் என்னும் பெயருக்கு "அருகன், கடவுள், பிரமன், பார்ப்பார்" என்று அர்த்தம். ஆகையால் அந்தணர் முதலாவது கருத்தில் கடவுளுக்கும் இரண்டாவது கருத்தில் குருக் பார்ப்பனக் குலத்தவர்க்கும் பெயராம்.

அந்தணர் என்னும் பதத்துக்கு "அந்தத்தை அணவுவோர்

வேதாந்தத்தை *அணவுவோர்" என்று நச்சினர்க்கினியார் உரைசெய்திருக்கிறார்.

24. வினா.—பார்ப்பனக் குலத்தவர் பேரில் இரண்டாவது குலத்தவரான அரசர் குலத்தவர் தற்காலத்தில் குறை கூறுகிற காரியம் என்ன?

விடை.—இராஜாங்கம் உண்டானபின் கடவுளை வணங்கும்படி இராஜாங்கத்துக்குத் தலைவனாகிய அரசனால் குருக்களாகிய பார்ப்பார் ஏற்படுத்தப்பட்டு, அந்தப் பார்ப்பாரை சுகப்படுத்தும்படிக்குச் சட்டங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அந்த அரசனாலேயே பார்ப்பாருக்குப் பிழைப்புக்காக வேண்டிய நிலம் முதலான பொருள் எல்லாம் கொடுக்கப்படுகின்றன. அரசருக்கு குருக்களாகிய பார்ப்பார் ஒன்றும் கொடுக்கிறதில்லை. தமிழ் அரசராகிய தமிழ்ச் சத்திரியர் பார்ப்பனக் குலத்தவரை அந்தப்படி கனமாய் நடத்தியிருக்க, தமிழ் அரசு ஒழிந்தபின் தமிழ் அரசைக் கைகொண்ட இங்கிலீஷ் குலத்தவர் தமிழ்ச் சத்திரியர் இன்னாரென்று அறியாமல் மயங்குகிறபொழுது "இந்தக்குலத்தவர்தாம் தமிழ்ச் சத்திரியர்" என்று பார்ப்பனக் குலத்தவர் சுட்டிக் காட்டாமல் தங்கள் காரியத்தை மாத்திரம் பார்த்துக்கொள்ளுகிறதினால் தமிழ் சத்திரிய குலத்தவர் பார்ப்பனக் குலத்தவர்மேல் தற்காலத்தில் குறை கூறுகிறார்கள்.

இதுவரைக்கும் தமிழ்ப் பார்ப்பனக்குலத்தவராகிய தமிழ்ப் பிராமணரைக் குறித்துச் சொன்னோம். இனிமேல் தமிழ்ச் சத்திரியரைக் குறித்துச் சொல்லுவோம். ஆகையால் தமிழ்ச் சத்திரியர் கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

தமிழ்ச் சத்திரியர்.

25. வினா.—இரண்டாவது குலத்தவர் யார்?

விடை.—சேந்தன் திவாகரத்தில் நாம் முன் எடுத்துக் காட்டின லக்கிரம அட்டவணைப்படிக்கும், மற்ற நூல்களிலிருந்து நாம் எடுத்து ..டியதும் இனிமேல் காட்டுவதுமான ஆதாரங்களின் படிக்கும் சத்தி.. இரண்டாவது குலத்தவராம்.

..6. வினா.—சத்திரியன், அரசன், நாடான், நாடன், என்னும் பதங் ..ிலம் என்ன?

..ணவுதல் என்பதற்கு கிட்டல், சார்தல் என்றர்த்தம்.

விடை.—சத்திரியன் (க்ஷத்திரியன்) என்னும் பதமானது சமஸ்கிருதத்திலுள்ள சேத்திரம் (க்ஷேத்திரம்) என்னும் பதத்திலிருந்து பிறந்தது. சேத்திரம் (க்ஷேத்திரம்) என்னும் பதத்துக்கு நாடு என்று அர்த்தம். குருச்சேத்திரம் (குருக்ஷேத்திரம்) என்பதற்கு குரு நாடு என்று அர்த்தம். சேத்திரக்கணிதம் என்பதற்கு பூமிக்கணிதம் என்று அர்த்தம்.

சேத்திரம் (க்ஷேத்திரம்) என்பது சத்திரம் (க்ஷத்திரம்) என்றாகி சேத்திரத்தையுடையவன் சத்திரியன் (க்ஷத்திரியன்) என்று சொல்லப்படுகிறான். ஆகையால் சமஸ்கிருதத்தின்படி சத்திரியனானவன் நிலத்துக்குடையவன் எனத் தெளிவாய் விளங்குகிறது.

தமிழில் அரசு என்னும் பதத்திற்கு (1) இராசாங்கம் என்றும், (2) நாடு என்றும் அர்த்தம். ஆகையால் அரசன் என்பதற்கு இராசாங்கத்தையுடையவன், நாட்டையுடையவன் என்று அர்த்தம்.

நாடு என்பதற்கு (1) பூமி என்றும், (2) தேயம் என்றும், (3) மண்டலம் என்றும் அர்த்தம். *நாடான், அல்லது *நாடன் என்பதற்குப் பூமியையுடையவன், தேசத்தையுடையவன், நாட்டையுடையவன், மண்டலத்தையுடையவன், அரசையுடையவன் என்று அர்த்தம்.

ஆகவே சத்திரியன், அரசன், நாடான், அல்லது நாடன் என்னும் பதங்கள் ஒரே அர்த்தமுள்ளவைகளாம்.

சத்திரியன், நாடான், நாடன் என்னும் பதங்களின் மூலம் இன்னது என்பதை முன் விபரத்தால் தெளிவாய் அறிந்துகொள்ளலாம்.

27. வினா.—தமிழ் நூல்களில் அரசருக்கு சத்திரியர் என்று சொல்லப்படவில்லையே. அப்படியிருக்க, தமிழ் அரசருக்கு தமிழ்ச் சத்திரியர் என்று சொல்வது எப்படி?

விடை.—முன் 18-ம் வினாவுக்குச் சொல்லிய விடையில் கூறியது போல் தமிழ் நூல்களில் தமிழ்ப் பார்ப்பனக் குலத்தவர்க்கு பிராமணர் என்று சொல்லப்படாதிருந்தும் அவர்கள் பிராமணரென்று கவர்ண்மெண்டு கணக்குகளிலும் வழக்கத்திலும் சொல்லப்படுகிறபடியே தமி அரசரும், அவர்களுடைய குலத்தவரும் தமிழ்ச் சத்திரியர் என்று செ ல்லப்படுவது நியாயமே.

* "பகவன்," "பகவான்" என்னும் பதங்கள் அன், ஆன் என்னும் விகு பெற்றும் பொருளில் ஒன்றாக இருக்கிறதுபோலவே "நாடன்," "நாட னும் பதங்களும் அன், ஆன் என்னும் விகுதிகளைப் பெற்றும் பொரு கவே இருக்கிறது.

28. வினா.—இந்து தேசத்தை முன் அரசாட்சி செய்தவர்களும், தற்காலத்தில் அரசாட்சி செய்கிறவர்களுமான எக்குல அரசர்களும் சத்திரியர் என்று சொல்லப்படுவார்களா?

விடை.—பூர்வகாலத்தில் எவர்கள் சூரிய சந்திரகுல அரசராகப் பிறந்தார்களோ அவர்களும், அவர்களுடைய வம்சத்தாருமே சத்திரியர் என்று சொல்லப்படுவார்கள். மேல் சொல்லிய இரண்டு குலத்திலும் பிறவாமல் வஞ்சனையினாலேயாவது புஜபல பராக்கிரமத்தினாலேயாவது இந்துதேசத்திலுள்ள ஒரு நாட்டை அல்லது ஒரு மண்டலத்தைக் கைப்பிடித்து ஆண்ட பிற குலத்தவரான அரசர்கள் சத்திரியராக மாட்டார்கள். மகமதிய அரச கூட்டத்தாரும், இங்கிலீஷ் அரச கூட்டத்தாரும், தமிழ் நாட்டின் சில பாகங்களைப் பிடித்து ஆண்ட வடுகராகிய தெலுங்க அரச கூட்டத்தாரும், தற்காலத்தில் ஜமீன்தார்கள் என்றும் அரசர்கள் என்றும் சொல்லப்படுகிற மற்றவர்களும் சத்திரியராக மாட்டார்கள்.

29. வினா.—சூரிய வம்ச சத்திரியர் உற்பத்தி எப்படி?

விடை.—நாம் முன் சொல்லியபடி ஓரே பாஷையும் ஓரே கூட்டமுமாயிருந்த மானிடர் சிதறிப் போகும்படி கடவுள் செய்தபோது சில கூட்டத்தாரானவர்கள் சந்திரன் என்று அர்த்தமுள்ள இந்து என்று பிற்காலத்தில் பேர்கொண்ட வனத்திற்குள் புகுந்தார்கள். இப்படிப் புகுந்தவர்களாகிய மனிதரை அவர்களுக்குப்பின் அங்கே புகுந்த கூட்டத்தார் துரத்தினார்கள். அப்படித் துரத்தப்பட்டவர்கள் மலைகளிலே போய் வாசம் பண்ணினார்கள். பின் புகுந்த கூட்டத்தார் பெலன் கொண்டார்கள்.

அவர்களில் பிரமாவுக்கு அநேக குமாரரும் அநேக குமாரத்திகளும் உற்பத்தியானார்கள். அவர்களில் மரீசி, அத்திரி என்னும் இருவர் முக்கியமானவர்கள்.

மரீசிக்கு காசிபர் முதலான அநேக குமாரரும் குமாரத்திகளும் உற்பத்தியானார்கள்.

காசிபருக்கு சூரியன் முதலான அநேக குமாரரும் குமாரத்திகளும் உற்பத்தியானார்கள். இந்தச் சூரியன் என்பவனாலே அவனுடைய வம்சத்தாருக்கு சூரியகுலச் சத்திரியர் என்று பேருண்டாயிற்று.

அந்தச் சூரியனுக்கு * எமன் என்றும் வைவசுவதமநு என்றும் கீர்த் ...ள்ள இரண்டு குமாரரும், பின்னும் பல குமாரரும், குமாரத்திகளும் ...த்தியானார்கள்.

---

* இவ்விடத்தில் எமன் என்பது புராண முதலான நூல்களில் சொல்லப்பட்ட மரண தூதனைக் குறிக்கிறதில்லை.

வைவசுவதமநுவுக்கு இரணியவன்மன், இட்சுவாகு, ஈழன் முதலான குமாரரும், குமாரத்திகளும் உற்பத்தியானார்கள்.

இட்சுவாகுக்கு குத்தன், தண்டகன் முதலான குமாரரும், குமாரத்திகளும் உற்பத்தியானார்கள்.

குத்தனுடைய வம்சத்தில் மாந்தாதா என்பவன் உற்பத்தியானான். மாந்தாதாவுக்கு அம்பரீடன், புருகுச்சனன், முசுகுந்தன் முதலானவர்கள் உற்பத்தியானார்கள்.

புருகுச்சனன் வம்சத்தில் உற்பத்தியான அரசர்களின் பெயர்களைப் பற்றிய விபரத்தை பல புராணங்களிலும் காணலாம்.

30. வினா.—சந்திர வம்ச சத்திரியர் உற்பத்தி எப்படி?

விடை.—முன் சொல்லிய அத்திரி என்பவனுக்கு சந்திரன் முதலான குமாரரும் குமாரத்திகளும் உற்பத்தியானார்கள். இந்தச் சந்திரனாலே அவனுடைய வம்சத்தாருக்கு சந்திரகுலச் சத்திரியர் எனப் பெயர் உண்டாயிற்று.

சந்திரனுக்கு புதன் முதலான குமாரரும் குமாரத்திகளும் உற்பத்தியானார்கள்.

புதனுக்கு புரூரவன் முதலான குமாரரும் குமாரத்திகளும் உற்பத்தியானார்கள்.

புரூரவனுக்கு ஆயுசு முதலான குமாரரும் குமாரத்திகளும் உற்பத்தியானார்கள்.

ஆயுசுவுக்கு நகுஷன் முதலான குமாரரும் குமாரத்திகளும் உற்பத்தியானார்கள்.

நகுஷனுக்கு யயாதி முதலான குமாரரும் குமாரத்திகளும் உற்பத்தியானார்கள்.

யயாதிக்கு துருவசு, புரு, எது அல்லது யது முதலான குமாரரும் குமாரத்திகளும் உற்பத்தியானார்கள். மற்ற விபரங்களை பல புராணங்களால் அறியலாம்.

31. வினா.—சேரன், சோழன், பாண்டியன் என்னும் மூவரும் சந்திரகுல அரசர்தாம் என்பதற்கு ஆதாரம் என்ன?

விடை.—சேந்தன் திவாகரத்திலிருந்து நாம் முன் எடுத்துக்காட்டிய 20-வது சூத்திரத்தில்;

"குரு குலத்தரசர் பெயர்."

"பரதர், கௌரதர், குரு குலத்தரசர்"

என்று சொன்னவுடன் கோச் சேரன் பெயரும், கோச் சோழன் பெயரும, கோப் பாண்டியன் பெயரும் சொல்லப்பட்டிருக்கிறது.

மேலே சொல்லிய சூத்திரத்தைக் கவனிப்பதினால் பூர்வ பாண்டியன் வம்சத்தில் வெகு காலத்துக்குப்பின் இருந்தவனான சேந்தன் சந்திர வம் சத்தில் தன் காலத்தில் பிரபலம் பெற்றவர்களாய் வட நாட்டில் ஆண்டு கொண்டிருந்தவர்களான குரு குலத்தரசர் சந்திர வம்சத்தாரல்லவா? தன் பூர்வ பிதாக்களாகிய சேர, சோழ, பாண்டியரும் அந்த வம்சம் என் றும் அந்தப்படியே தன் வம்சமும் இருக்கிறதென்றும் காட்டும்படிக்கு குருகுலத்தரசர் பெயரையும், சேர, சோழ, பாண்டியர் பெயரையும் சுட்டிச் சொல்லியதால் அவர்கள் சந்திர குலத்தவர் என்பதை சேந்தன் தெளிவாய்க் காட்டியிருக்கிறான் என்று விளங்குகிறது.

மேற்படி குலக்கிரம அட்டவணையில், 22-வது சூத்திரத்தில் சொல் லியபடி சோழனுக்குச் சூரியன் என்றும் பெயர். ஆகையால் சோழ வம்ச அரசர்களை சூரிய வம்ச அரசர் என்று நூல்களில் சொல்லியிருக் கிறது. அல்லாமலும் சோழ மன்னர் பாண்டியரோடே விவாக சம்மந் தப்பட்டபடியே பூர்வ சூரிய மன்னரோடும் விவாக சம்மந்தப்பட்டபடி யால், சோழ மன்னரை சூரியகுல மன்னர் என்றும் சொல்லியிருக்கிறது. சேர, சோழ, பாண்டியர் தங்களுக்குள்ளே விவாக சம்மந்தமாய்க் கலந்து கொண்டபடியே சூரிய குல அரசரோடும் கலந்துகொண்டபடியால் அவர்களைச் சூரியகுல மன்னர் என்றும் சொல்லியிருக்கிறது. முக்கிய பட்சம் நாம் முன் சொன்னதுபோல் சோழ பாண்டியர் விவாக சம்பந் தங்கொண்டார்கள் என்பதற்கு நாம் நூலாதாரங்களை எடுத்துச் சொன் னால் இந்நூல் விரியும். ஆதலால் கூறாமல் விட்டோம்.

பழனி ஸ்தலபுராணம்.

கவுசல சேரன் சருக்கம்.

2-வது கவி.

"கற்றவர்க்கொரு துணை கவிக்கிருநிதிக் கடவுள்
பற்றலர்க்கரிமா வடைந்தவர்க்கருட் பரவை
மற்றை நீணிலங்குளிரப் புறவருமதிக்குலவன்
கொற்ற வெண்குடைக் கோமளங்குசத்துவசவரசன்."

இதின் தாற்பரியமாவது,

"கல்வி கற்றபேர்க்கு ஒரு துணையாகவும், இரவலர் தாரித்திரத்திற்கு சங்குநிதி பதுமநிதியுடைய குபேரனைப் போலவும், சத்துருவுக்குச் சிங்கத்தைப்போலவும், நம்பினேன் என்றவர்க்குக் கிருபாசமுத்திரம் போலவும், அப்பால் பூலோகத்துக்குக் குளிர்ச்சி பொருந்த வருகின்ற சந்திர குலத்தில் உற்பவித்தவன், வெற்றிபடைத்த வெள்ளைக்குடையாதிபன், இப்படி பிரஸ்தாபம் பெற்ற ராசாதி ராசனான அங்குசத்துவச அரசன்" என்றவாறு.

3-வது கவி.

"இழைத்த மாதவத்துதித்த சேயின்ப மனப்பூரிக்
குழைத்த நெஞ்சினன் ஞானநூற் கேள்வியன் கொண்மூ
தழைத்தசெங்கையன்றடவுவாட்படையினன்றரளக்
கழைத்தடஞ்சிலைக் காமவேள் கவுசலனென்போன்.",

இதின் தாற்பரியம்,

"அந்த அங்குசத்துவச அரசனானவன் செய்கின்ற மகா தவத்தினாலே உற்பவித்த புத்திரனானவனின்பமுமன்புமூற்றுப்போல குழைத்த மனதுடையவன், ஞான நூலின் கேள்வியுள்ளவன், சத்த மேகம்போல தழைத்திருக்கின்ற செங்கையுள்ளவன், சத்துருவின் முடியை தடவப்பட்ட பிரகாச ஆயுதமுள்ளவன், முத்து விளையானின்ற கருப்பு வில்லைப் பிடித்த மன்மதனுக்கு நிகரான கவுசல சேரன் என்பவன் என்றவாறு."

மேலே சொல்லப்பட்ட இரண்டு கவிகளிலும், தாற்பரிய உரைகளிலும் சேரனைச் சந்திரகுல அரசனென்று சொல்லியிருக்கிறது.

பாண்டியன் சந்திரகுல அரசன் என்பதை இதன் பின்னால் விபரமாய்த் தெரிவிப்போம். ஆகையால் இவ்விடம் சொல்லாமல் விடுகிறோம்.

32. வினா.—சேரன், சோழன், பாண்டியன் என்னும் மூவரும் வடநாட்டை விட்டுத் தென் திசைநோக்கி வந்ததற்குக் காரணம் என்ன?

விடை.—அரசர் தங்கள் நாடுகளை அரசாளும்படி தங்கள் குமாரருக்கு அவைகளைப் பிரித்துவிடுகிற முறைப்படி யயாதியின் மகனாகிய துருவசு என்பவன் "தென்னந்திக்கினில் தேன்றெனத் துருவசுவர்" என்று கூர்மபுராணத்தில் கூறிய செய்யுட்படி தென்தேசத்துக்கு அரசனாக நியமிக்கப்பட்டான். இந்தத் துருவசுவுக்கு தேன்னவன் என்னும் பெயர் கொடுக்கப்பட்டது. துருவசுவின் வம்சத்தில் வந்த பாண்டியனுக்கு முன் குலக்கிரம அட்டவணையில் சொல்லியபடி தேன்னவன்

என்னும் பெயர் நூல்களில் விசேஷித்து வழங்கிற்று. அந்தப்படியே சேர, சோழ, பாண்டியர் அரசாட்சியில் தங்களுக்குக் கிடைத்த பாகத்தி னிமித்தம் தென்னுட்டிற்கு வரும்படி நேரிட்டது.

கவனிப்பு. பிற்காலங்களில் அடிக்கடி சேரன், சோழன், பாண்டியன் என்று நூல்களில் சொல்லப்படும் போதெல்லாம் ஆதிசேரன், சோழன், பாண்டியன் என்று எண்ணுமல் அவர்களுடைய வம்சத்தில் வந்த அரசர் என்று அறியவேண்டியது.

33. வினு.—வடநாட்டுச் சத்திரியரான அரசர் தென்னுட்டிற்கு வரவில்லையென்றும், தென்னுட்டில் சூத்திரரே ராஜ்யத்தை உண்டு பண்ணி ஆண்டுவந்தார்கள் என்றும் பகைவர் சொல்லத் துணிகிருர்களே அது சரியா?

விடை.—வடநாட்டுச் சத்திரியகுல அரசர் தென்னுட்டிற்கு வர வில்லையென்றும், சூத்திரரே தென்னுட்டில் ராஜ்யம் உண்டுபண்ணி ஆண்டுவந்தார்கள் என்றும் பகைவர் சொல்லத்துணிகிறது முழுவதும் பிசகாம். அப்படிச் சொல்லுகிறதுண்டேயானுல் அது சூத்திருடைய துர்ப்போதனையாம்.

மதுரைச்சில்லாவிருத்தாந்தம் என்னும் நூல் இயற்றியவர் மேற்படி நூலின் 2-ம் பக்கம், 26-ம் வரி முதல்,

"வேளாண்மை செய்த பாண்டியன் என்கிற ஒரு வெள்ளாளன் குடியேறினவர்களுக்கெல்லாம் தன்னைத் தலைவனுக ஏற்படுத்திக்கொண் டான். பின்னுல் மதுரையில் கிளம்பிய பாண்டிய வம்சத்துக்கு அவனே மூலம் என்று நினைக்கலாம்" என்று சொல்லுகிருர்.

அந்தப்படி மேற்படி நூலாசிரியர் சொல்லியது பிசகாம். அவர் அந் தப்படி சொல்லியது பிசகு என்பதற்கு அவரோ முதலாவது சாட்சியாம். அந்த அவருடைய சாட்சியமாவது:—

மேற்படி நூல், 9-வது பக்கம் 30-வது வரி முதல்,

"பாண்டிய அரசரைப்போல் தென் இந்தியாவில் வித்தை அப்பியா சம் செய்வித்தவர்களில்லை. சந்திர வம்சத்தாராகிய இவர்கள் பிடித்து வந்தது மீனக்கொடி" என்பதே

மேற்படி நூலாசிரியர் சொல்லிய இந்தச் சாட்சி வாக்குமூலத்தில் **பாண்டியர் சந்திர வம்சத்தார்** என்று சொல்லுகிருர். அவருடைய முன் வாக்குமூலத்தில் **பாண்டியன் சூத்திரனுகிய வேள்ளாளன்** என்கிருர்.

ஆகையால் மேற்படி நூலாசிரியர் தாம் சொல்லியதென்னவென்று அறியாமல் உளறுகிறார். **பாண்டியர் சூத்திரரல்ல என்பதையும் பாண்டியர் சந்திரகுல அரசர் என்பதையும் இனிமேல் ரூபிப்போம்.**

அரிச்சந்திர புராணம், விவாக காண்டம்.
218-வது, 219-வது, 220-வது கவிகள்.

வருமாறு:—

"அதிபார தன்பார அதிரூப மலர்மானை அனையாயிவன்
நதிபாய உயர்போதி னறையாய நிறைபாதசிறைவாவியில்
மதியாமல் வலைபீறி வெடிபோன பருவாளை வளைபூக மேல்
குதிபாய மடல்கீறி விழுதேறல்கரைசாடு குடநாடனே."

219-வது கவி.

"இருணாறு நஞ்சொத்த விழியாய் துவண்டெய்த்த இடையாயிவன்
சுருணாக பந்தத்தி னிபல்பாமருஞ்சித்ர தொடியேவியே
முராணர மன்றிட்ட மகவா நெடுங்கொற்றமுடிசாடினேன்
சராணர விந்தத்து மகரால யந்துய்த்த தமிழ்மாறனே."

220-வது கவி.

"மலிவாச மலர்பூசி யளிபாடு கனையோதி மயிலே இவன்
ஒலியேறு திரைமோது முவராழி யுலகேழு முடனாகவே
வலியோர்க ளெளியோரை நலியாம லனைசாதமணிவாயிலான்
புலியேறு வடமேரு கிரிமீதி லிடிமீளி புனனாடனே."

மேலே சொல்லிய கவிகளில், அரிச்சந்திரன், சந்திரமதியாகிய இருவருடைய கலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருந்த அரசர்களில் குடநாடனாகிய சேரன், மாறனாகிய பாண்டியன், புனல் நாடனாகிய சோழன் என்னும் மூன்று அரசரின் மேன்மையைத் தாதிகளில் ஒருத்தி புகழ்ந்து சந்திரமதிக்குச் சொல்லியதைக் காட்டியிருக்கிறது.

ஆகையால் பூர்வத்திலேயே அம்மூவரும் புகழ்பெற்ற அரசராயிருந்தார்கள் என்பது தெளிவாயிருக்கிறது.

ராமருடைய தகப்பனாகிய தசரதன் ஆனவன் புத்திரன் வேண்டுமென்று யாகஞ் செய்தகாலத்தில் அந்த யாகத்துக்கு சேர, சோழ, பாண்டியர் ஆகிய தென்னாட்டு அரசர்களும் வந்திருந்தார்கள் என்று வான்மீகி ராமாயணம், பாலகாண்டம், 13-வது சருக்கத்தில் சொல்லியிருக்கிறது. அப்படியிருக்க, ராமர் பிறந்து, சீதையைத் தேடி தெற்கே வரும்போது பாண்டியன் எனப் பேர்பெற்ற ஒரு சூத்திரன் ராமனை வணங்கித் தென் தேசத்தைப் பெற்றுக்கொண்டு அரசாண்டதாக சிலர் சொல்லத் துணிந்தது மிகவும் பிசகாம்.

இதன்றியும் ராமருக்குப் பின் அநேக தலைமுறைகளாக அயோத்தியாபுரியை சூரியகுலத் தரசர்களும், அஸ்தினாபுரியை சந்திரகுலத்தரசர்களும் ஆண்டார்களென்று கூர்மம் முதலான பதினென் புராணங்களும், இராமாயணம், பாரதம் முதலான இதிகாசங்களும். இக்குலப் பிரிவில் உதித்த அரசர்கள் திருவாரூர், திரிசிரபுரம், காஞ்சிபுரம், சிதம்பரம், மதுரை முதலான நாடுகளை ஆண்டார்கள் என்று திருவிளையாடற்புராணம் முதலான நூற்களும் கூறுகின்றன.

ஆகையால் வட நாட்டரசர் தென்னாட்டுக்கு வந்து ராஜ்யத்தை உண்டுபண்ணி ஆண்டார்கள் என்பதும், சூத்திரர் தென்னாட்டில் ராஜ்யத்தை உண்டுபண்ணவில்லையென்பதும் உண்மையாம்.

மேலும் சிதம்பர புராணம் என்னும்கோயிற்புராணம், இரணியவன்மச் சருக்கம்.

106-வது செய்யுள்.

"ஆகினீ முனிவனோடு மாண்டணைந்தாச மௌலி
நாகமா விரதந்தானை நவமணி நிதியுளிட்ட
போகமார் பொருளமைச்சர் பேதையா பொருந்தக் கொண்டு
வேகமாய் வருவாய் என்று வியாக்கிரபாதன் கூறி."

இச்செய்யுளில்,

(சூரியன் எனபவனுக்கு வைவசுவதமநு பிறந்தான் என்றும், வைவசுவதமநுவுக்கு இரணியவன்மன் பிறந்தான் என்றும் முன் சொல்லியிருக்கிறோம். அந்த இரணியவன்மன் வம்சத்தில், அந்தப் பெயரையுடைய இரணியவன்மன் ஒருவன் தன் வியாதி நீங்கத் தென்னாட்டில் வந்து நதிகளில் ஸ்நானஞ்செய்து, தவம்புரிந்துகொண்டிருந்து சுகத்தை அடைந்தான். அந்தப்படி சுகத்தை அடைந்த காலத்தில் அவ்விடம் இருந்த) வியாக்கிரபாதரிஷி இரணியவன்மனைப் பார்த்து உனக்கு வடதேசத்

துக்குச் சென்று அரசியற்றப் பிரியமில்லாவிட்டாலும் இத்தென்னுடாகிய சிதம்பரத்தை அரசியற்றும்படி வடதேசத்திலிருந்து உன் அரசியற்குரிய பொருட்களெல்லாம் அழைப்பித்து, அரசியற்றிவா எனக் கூறியபடி இரணியவன்மன் வட நாட்டிலிருந்து அரசுக்கு வேண்டிய மந்திரி, புரோகிதர், சேனுபதிகள், தூதர், சாரணர் என்னும் ஐங்கூட்டத்தையும், படை, குடி, பொருள், அமைச்சு, நட்பு என்னும் ஐம்பொருளையும் அழைப்பித்து காட்டை அழித்து, நாட்டையுண்டாக்கி சிதம்பரம் என்னும் ஆலயத்தை கட்டுவித்து, சிதம்பரம் முதலான நாட்டை ஆண்டுவந்தான். பிறகு இரணியவன்மன் வம்சத்தில் உற்பத்தியானவர்கள் அதை ஆண்டுவந்தார்கள் என்று சொல்லியிருக்கிறது.

ஆகவே வடநாட்டரசனுகிய இரணியவன்மன் தென்னுட்டிற்கு வந்து சிதம்பரம் முதலான நாடுகளை ஆண்டான் என்பது தெளிவாயிருக்கிறது.

அல்லாமலும் இட்சுவாகுவின் இளைய மகனுகிய தண்டகன் என்பவன் வடநாட்டிலிருந்து தென்திசைக்கு வந்து, காட்டை அழித்து, நாடுகளை உண்டாக்கி அரசாட்சி செய்தான் என்று இராமாயணம், உத்திரகாண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவன் காட்டை அழித்து, நாட்டை உண்டாக்கின இடத்துக்கு தண்டகாரணியம் என்று பெயர்.

ஆகவே வட நாட்டரசன் தென்னுட்டில் தண்டகாரணியத்தை அரசாண்டான்.

ஆகையால் வட நாட்டரசர் தென்னுட்டுக்கு வந்து ராஜ்யத்தை உண்டுபண்ணி ஆண்டார்கள். சூத்திரர் தென்னுட்டில் ராஜ்யத்தை உண்டுபண்ணவுமில்லை, ஆளவுமில்லை என்பதுநிச்சயம்.

34. வினு.—பாண்டியன் சூத்திரனல்ல அவன் சந்திரகுலத்தவன் என்பதற்குத் தெளிவான நூற்சாட்சிகள் எவை?

விடை.—அருணுசலப் புராணம், வச்சிராங்கத பாண்டியன் சருக்கம்.

12-வது 13-வது கவிகள்.

"துங்கவாம்பரி மீது மன்றேன்றலு
மங்கை வேழமகன்றகன் றேடின
திங்களின் குலச் செல்வனென்றஞ்சியே
யெங்குமோடும் இருட்கணமென்னவே."

இதன் பொருள்.

சந்திர வம்சத்தில் பிறந்த அரசன் தாவுகின்ற சிறந்த குதிரையின் மீதேறினமாத்திரத்தில் சந்திரனைக் கண்ட இருட்கூட்டம் போல துதிக்கையுடைய யானைக் கூட்டங்கள் அஞ்சியோடின,

13-வது கவி.

"வீறுமம்புலியின்குல மேன்மையுடையான்
வீறுமம்புலியின் குலம் வீட்டினான்
ஆறிலொன்று கடமை கொண்டாள்பவன்
ஆறிலொன்று கடமை கொன்றனரோ."

இதன் பொருள்.

பெருமை பொருந்திய அம்புலி என்னும் பெயருடைய சந்திரகுலத்தில் பிறந்த மேன்மையினாலே இறுமாப்படைந்த அழகிய புலிகளைக் கொன்றான். ஆறிலொரு கடமை வாங்கிக்கொண்டு ஆள்கிறவன் மார்க்கத்தில் நேரிட்ட கடம்பை மிருகங்களைக் கொன்றான்.

மேற்படி இரண்டு கவிகளிலும் திங்களின் குலச் செல்வன், அம்புலியின் குல மேன்மையான் என்றும், தாற்பரிய உரைகளில் சந்திரவம்சத்தில் பிறந்த அரசன் என்றும், வச்சிராங்கத பாண்டியனைக் குறித்துச் சொல்லியிருக்கிறது.

ஆகையினாலே பாண்டியன் சந்திர வம்சத்தில் பிறந்த அரசன் என்பது தெளிவாய் விளங்குகிறது.

திருவாதவூரர் புராணம்,

மந்திரிச் சருக்கம்,

25-வது கவி.

"மேரு வனிதைய ரெங்கணும் வீசிய கவரியசைந்தெழ
மாதவ முனிவர்களந்தணர் மாசறு கவிஞர் செறிந்திட
ஏதமின் மதிகுல விக்கவனோர் செழுமண முடியின்றிர
ளாதவன் மிசையெழ வந்தரியாசன மதனிலிருந்தான்."

இதன் பொருள்.

மேன்மையுடைய மங்கையர்கள் வீசுகின்ற சாமரைகள் எங்கும் அசையவும், மகத்தாகிய தவஞ்செய்கின்ற முனிவர்களும், பார்ப்பார்களும், குற்றமற்ற வித்வ ஜனங்களும் நெருங்கவும், பழுதில்லாத சந்திர குலத்திலே வந்த அரிமர்த்தன பாண்டிய ராஜனானவன் அழகு பொருந்திய மணிகள் பதித்த கிரீடமாகிய சூரியன் சிரசிலே உதயமாகும்படி வந்து சிங்காசனத்திலே எழுந்தருளியிருந்தான்.

மேற்சொல்லிய கவியிலும் தாற்பரிய உரையிலும் அரிமர்த்தன பாண்டியன் சந்திர குலத்தில் தோன்றிய அரசன் என்று சொல்லியிருக்கிறது.

37-வது கவி.

" மங்கல தினத்திநெடு மாளிகை யகன்றே
துங்கமணி யக்கைமணி சொக்கரை வணங்கி,
அங்கு விடை பெற்று மறை அந்தணரின் மிக்கார்
திங்கள் மரபிற்குரிசில் கோயிலுழை சென்றார்."

இதன் பொருள்.

இந்தப் பிரகாரம் இவைகளெல்லாம் தம்மைச் சூழும்படி சுபமான நெடிய திருமாளிகை விட்டு நீங்கி, உயர்ச்சி பொருந்திய சங்குமணி யணிந்த சொக்கநாதனைத் தொழுது அனுப்புவித்துக்கொண்டு வேதப் பார்ப்பாரில் மிகுந்த மாணிக்கவாசகர் சந்திர வம்சத்தில் தோன்றிய பாண்டியன் ராஜன் இருக்கும் அரண்மனைக்குப் போனார்.

மேற்சொல்லிய கவியிலும் தாற்பரிய உரையிலும் பாண்டியன் சந்திரகுல அரசன் என்று சொல்லியிருக்கிறது.

மேற்படி புராணம், திருப்பெருந்துறைச்சருக்கம்,

101-வது கவி, 1-வது அடி.

" தொன் மதிக்குலத்துமன்னன் துயர் செய்வா
னென்றே சற்றே."

மேற்படி கவியில் பாண்டியன் பழமையான சந்திர குலத்திலுள்ள மன்னன் என்று சொல்லியிருக்கிறது.

மேற்படி புராணம் குதிரையிட்ட சருக்கம். 8-வது கவி,

2-வது அடி.

" திங்களேனும் தன் மரபு விளங்கவென்றும்."

மேற்படி கவியில், பாண்டியன் சந்திரகுல அரசன் என்று சொல்லியிருக்கிறது.

மேற்படி புராணம், மண் சுமந்த சருக்கம்,

9-வது கவி, 1-வது அடி,

"கலை மதிக்குலத்து மன்னன் கன்ன நன்னுடன்."

மேற்படி கவியில், பாண்டியன் சந்திர குல அரசன் என்று சொல்லி யிருக்கிறது.

திருவிளையாடற் புராணம், உக்கிர குமாரனுக்கு வேல் வளை செண்டு கொடுத்த படலம், 48-வது கவி.

“இரவிதன் மருமான் சோமசேகரன் என்போன் **திங்கள் மரபினை** விளக்க வந்த சுந்தரமாறமைந்த
னுரவு நீர் ஞாலந்தாங்கு முக்கிர வருமற்கின்றென்
குரவலர்க் கோதை மாதைக் கொடுத்தனன் என நீர் வார்த்தான்.”

மேற்படி கவியில், சந்திர குலத்தை விளக்க வந்த சுந்தர பாண்டியன் என்று சொல்லியிருக்கிறது.

மேலே கூறிய கவிகளையெல்லாம் திரட்டிப் பார்வையிடுவதினுல் சேர, சோழ, பாண்டிய அரசர் வட நாட்டிலிருந்து வந்த சந்திர சூரிய அரச குலத்தவர் என்பது திட்டமாய் விளங்குகிறது.

பாண்டியன் சூத்திரனல்ல என்பதற்கு பின்னும் ஒரு திருஷ்டாந்தம் காட்டுவோம்.

அதி வீரராம பாண்டியன் இயற்றிய காசி காண்டம், சிவசன் மாவை யமன் எதிர்கொண்ட அத்தியாயம், 44-வது கவி.

“நெடிய கந்தரமறைக்கிழவர் நேமியரசர்
படியில் வாழ் வணிகர் முன்னம் வெருவாது பழிகடர்ந்
தடிகணீட்டிய சதுர்த்தனை அதோமுக மெனும்
கொடிய பாழ் நரகினிட்டுடல் குறைத்திடுதியால்.”

இதன் பொருள்.

அந்தணர், அரசர், வணிகர் ஆகிய இவர்கள் சமுகத்தில் சதுர்த்தன் என்னப்பட்ட சூத்திரனுனவன் அச்சமற்றவனுய் நீட்டியகாலை முடக்கா திருப்பானேயானுல், அப்படிப்பட்ட பாவியைப்பிடித்து அதோகதியாகிய கொடிய பாழ் நரகத்தில் தள்ளுங்கள், அவனுடைய உடலைத் துண்டு துண் டாக நறுக்கிக் குறுக்குங்கள் என்பதாம்.

இதில் மறைக்கிழவர் நேமி அரசர், படியில் வாழ்வணிகர் சதுர்த்தன் என நாலுகுலமும் கிரமமாக வந்திருக்கிறது. அவர்களில் நாலாவது குலத் தவனுகிய **வேள்ளாளன்.** சதுர்த்தன் எனப்பட்டிருக்கிறுன் அவன்

முந்தின மூன்று குலத்தவர் முன்பாக கால் நீட்டியிருக்கக்கூடாது அரசன் கட்டளையை மீறி தன் காலை நீட்டியிருந்தால் அவனுக்கு மரணதெண்டனை நேரிடும் என்று பாண்டியன் சொல்லுகிருன். பாண்டியன் வெள்ளாளனுகிய சூத்திரனுக இருந்தால் வெள்ளாளர் மேல் அப்படி சாபங் கூறமாட்டானே.

ஆகையால் வெள்ளாளன் சதுர்த்தனுகிய சூத்திரன். பாண்டியனே தமிழ்ச் சூத்திரனல்ல, தமிழ்ச் சத்திரியன்.

அப்படியிருக்க, சேலத்தில் பிரசுரம் செய்யப்படுகிற **தக்ஷணதீபம்** என்றும் பத்திரிகையின், 1901ளு பிப்ரவரி மாதம் 23வ ப்பத்திரிகை, பக்கம் 4, கலம் 2-ல், S. V. (எஸ். வி.) என்று கையொப்பமிட்டுத் தமிழ்ச்சத்திரிய குலத்தவரைத் தூஷித் தெழுதியிருக்கிறவர் "அரசருக்கும் வேளாளருக்குமே உரித்ததிகம்" என்றும், "பாண்டியர்க்கு முடிதரித்தல் ...... வேளாளராகிய தங்கள்வழக்கம்" என்றும் சொல்லுகிருர். சதுர்த்தனுகிய வெள்ளாளனைப்பிடித்து உடலைக் குறுக்குங்கள் என்று பாண்டியன் சொல்லுகிற பொழுதும், வெள்ளாளனைத் துண்டு துண்டாய் நறுக்குகிற பொழுதும், பாண்டியன் பேரில் எஸ். வி. என்பவர் இந்நூலில் சூத்திரராகிய வெள்ளாளரைப்பற்றிச் சொல்லிய காரியங்களை ஆராய்வாரேயானுல் அவர் பெருமையாய்ப் பேசமாட்டார். இதன் பின்னுல் வெள்ளாளரின் நிலமையைக்குறித்து விபரமாய் இந்நூலில் நாம் சொல்வதால் அவர் மேற்படி பத்திரிகையில் தூஷித்த சங்கதிகளுக்கு மறுப்பெழுதாமல் விடுகிறோம்.

35. வினு.—**சதுர்த்தன் வேள்ளாளன்** தான் என்பதற்கு நூல் சாட்சி என்ன?

விடை.—முன் திவாகரத்திலிருந்து காட்டிய குலக்கிரம அட்டவணையில் 33-வது சூத்திரத்தில் வெள்ளாளர்க்கு பன்னிரண்டு பேர்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளில் **சதுர்த்தர்** என்பதும் ஒரு பெயர் ஆதலால் சதுர்த்தர் வெள்ளாளரே. அன்றியும் நாலாவது குலத்தவராகிய சூத்திரர் என்பதை இதன் பின்னுல் அநேக நூல் சாட்சிகளால் ரூபிப்போம்.

36. வினு.—சேர, சோழ, பாண்டியர் தமிழ்ப்பாஷை விஷயமாகவும் சிறப்புப்பொருந்தியவர்கள் என்பதற்கு ஆதாரம் என்ன?

விடை.—சேர, சோழ, பாண்டியர் தமிழ்பாஷை விஷயமாகவும் மேன்மை பெற்றவர்கள். அவர்களுக்கு **தமிழ் நாட்டு மூவேந்தர்** எனப் பட்டப்பெயர் உண்டு. அவர்கள் கல்வியில் தேர்ந்தவர்களும், அதைப்

பிரபலப் படுத்தினவர்களுமாயிருந்த காரணத்தால் அவர்களுக்கு அறிவுடையோர் என்றும் பட்டப்பெயர் உண்டு; விபரம் பின்வரும்.

37. வினா.—சேர, சோழ, பாண்டியரின் பூர்வ இராஜதானிகள் எவை?

விடை.—சேரனுக்குக் கருவூரும், சோழனுக்கு இப்போது திருச்சிராப்பள்ளியின் நேர் பாகமாய் இருக்கிற உறையூர், திரிசிரபுரம், திருவாரூர் முதலான பதிகளும், பாண்டியனுக்கு இப்போது திருநெல்வேலியைச் சேர்ந்திருக்கிற கொற்கை நகரமானது முதலாவது இராஜதானியும், இப்போது மதுரை ஜில்லாவில் சேர்ந்திருக்கிற மணலூர் இரண்டாவது இராஜதானியும், கடைசியாக மதுரையும் ராஜதானிகளாக இருந்தன.

மணலூர் என்பது சமஸ்கிருதத்தில் கலியாணபுரம் என்றும் தமிழில் (மனம்+ஊர்) மணவூர் என்றும் சொல்லப்பட்டது மணவூர் என்பது வழக்கத்தில் கெட்டு மணலூர் என்றாயிற்று.

ஆதி மதுரையானது திருநெல்வேலி ஜில்லாவிலிருக்கிற கன்னியாகுமரிக்கும் தெற்கே இருந்ததாகவும், அது பின்னால் சமுத்திரத்தினால் அழிந்து போனதாகவும் சொல்லப்படுகிறது.

38. வினா.—தமிழ் அரசர் குலத்தவர்க்குரிய பெயர்கள் முன் குலக்கிரம அட்டவணையில் சொல்லப்பட்டிருக்கின்றனவே, அவைகளால் அவர்கள் தமிழைப் பிரபலப்படுத்தி வந்தார்கள் என்பதை எப்படி அறியலாம்? தமிழ்ச்சங்கங்கள் எங்கே ஸ்தாபிக்கப்பட்டன?

விடை.—தமிழ் அரசர் குலத்தவர்க்குரிய பெயர்கள் முன் குலக்கிரம அட்டவணையில் சொலலப்பட்டிருக்கின்றன. அவைகளை இங்ஙனம் மறுபடியும் எடுத்துக் கூறுவோம்.

அறிவுடையோர் பெயர்

"சான்றோர், மிக்கோர், நல்லவர், மேலவர்,
ஆய்ந்தோர், உயர்ந்தோர், ஆரியர், உலகென
ஆய்ந்த ஆன்றோர் அறிவுடையோரே."

இச்சூத்திரத்தில் நூலாசிரியன் தன் வழக்கப்படி அறிவுடையோர் பெயர் என்றும் முதலாவது காட்டியிருக்கிறான். ஆகையால் அறிவுடையோர் என்னும் பெயர் தமிழ்ச் சத்திரியருக்கு எப்படி உரிமையானது என்று கவனிக்கவேண்டியது.

அறிவுடையோர் என்னும் பெயர் அறி என்னும் வினை முதல்டியாய் அறிவு என்னும் தொழிற்பெயரினின்று பிறந்த பலர்பால் பெயராம். அன்,

ஆன், ஓன் என்னும் ஆண்பால் ஒருமை விகுதிகளைச் சேர்ப்பதினால் அறிவுடையன், அறிவுடையான், அறிவுடையோன் என்றும், அர், ஆர், ஓர் என்னும் பலர்பால் பன்மை விகுதிகளைச் சேர்ப்பதினால் அறிவுடையர், அறிவுடையார், அறிவுடையோர் எனவும் ஆகின்றன.

தமிழ் அரசரானவர்கள் சந்திரவம்சத்தவராக, சந்திரனுடைய மகனாகிய புதன் என்பவனுடைய வம்சத்தவராகையால் புதனுக்குச் சொல்லப்பட்ட அறிஞன் அறிவன் என்னும் பெயரால் அறிவுடையோர் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அன்றியும் வடக்கில் திருவேங்கடம் முதல் தெற்கில் கன்னியாகுமரி பரியந்தம் பூர்வத்தில் தமிழ்ப்பாஷை வழங்கிவந்தபடியால் அந்த நாட்டுக்குத் "தமிழ்நாடு" என்று பெயர் உண்டாயிற்று. இந்தத் தமிழ் நாட்டில் ஒரு குலப்பிரிவாராகத் தமிழ்ப்பாஷை ஒன்றையே குலப்பாஷையாகவுடைய சேர, சோழ, பாண்டியர்கள் செங்கோல் செலுத்தி வந்தமையால் அந்த மூன்று கிளைப்பிரிவார்களும் நாம் முன் சொல்லியபடி தமிழ்நாட்டு மூவேந்தர் என்னப்பட்டார்கள். ஆயினும் அந்த மூன்று கிளைப்பிரிவார்களில் பாண்டியர்கள் அகஸ்தியர் இடத்தில் நூல் கற்றுணர்ந்த தொல்காப்பியனார், பனம்பாரனார் முதலான பன்னிரண்டு ரிஷிகளைக்கொண்டும் ஆதியில் தமிழை வளர்த்து வந்தனர். தமிழ் ஆதிக்கல்விச்சங்கம் ஆனது இப்போது திருநெல்வேலி ஜில்லாவிலிருக்கிற பொதிகைமலையில்இருந்தது அக்காலத்தில் சுப்பிரமணியருடைய கோயில் திருநெல்வேலி ஜில்லாவில் கீழ்க்கடல் ஓரத்தில் திருச்செந்தூரில் இருந்தது, இப்போதும் இருக்கிறது. அந்தக்கோயில் தலைமுறை தலைமுறையாய் ஆதித்தநாடார் என்னும் ஓர் பிரபு வம்ச பரம்பரையிலுள்ளவர்கள் வசமிருந்து வருகிறது. அது புண்ணிய யாத்திரை ஸ்தலங்களில் ஒன்றாயிருக்கிறது. அது சுப்பிரமணியருடைய ஆறு படைவீடுகளில் ஒன்று என்று பெயர்.

கம்பராமாயணம், கிஷ்கிந்தாகாண்டம்,
நாடவிட்டபடலம், 30-வது கவி,

"தென்றமிழ் நாட்டகன் பொதியிற்றிரு முனிவன்
தமிழ்ச்சங்கம் சேருகிற்பீர்
என்றுமவனுறை விடமாம் ஆதலாலம் மலையை நீர்
இடத்திட்டேகி
பொன்றிணிந்த புனல்பெருகும் பொருநை எனும்
திருநதியின் பொழியநாகக்
கன்றுவளர் தடஞ்சாரல் மயேந்திரமாம்
கடலும் காண்பீர்

இதில், ராமர் தம் நாயகி சீதையிருக்கும் இடம் அறிந்துவர அனுமானை அனுப்புகிறபோது, அனுமான்போய் தேடிப்பார்க்கவேண்டிய பற்பல நாடுகளுக்குக் குறிப்பு அடையாளம் சொல்லிக்கொண்டு வருகையில் தென்பாண்டி நாட்டுக்கு அடையாளம் கூறியிருக்கிறது. ராமர் அனுமானையும், அவனோடேகூடப் போனவர்களையும் பார்த்து, கவியில் கூறியதைச்சொல்லுகிறார்.

அதாவது

தமிழ் நாட்டின் தென்பாகமாகிய தென்பாண்டி நாட்டில் இருக்கிற பொதிகை மலையில் திருமுனிவனான அகஸ்தியனும், அவன் முன்னிலையில் கூடி தமிழை விருத்திசெய்து வருகின்ற கல்விச்சங்கத்தாரும் இருக்கின்றனர். அவ்விடத்தில் என் நாயகி இருக்கமாட்டாள். ஆனதினால் நீங்கள் அம்மலையை இடதுபுறமாக விட்டு ஐம்பொன்களில் ஒன்றாகிய தாம்பிரம் கலந்த ஜலமானது எக்காலமும் ஓடிக்கொண்டிருக்கின்ற பொருநை எனப் பெயற்பெற்ற தாம்பிரவர்ணி நதியைக்கடந்து போகும்போது யானைகள் வாழ்கின்ற வனமலைப்பக்கத்தை யுடைய மயேந்திரம் மலையையும், தென் சமுத்திரத்தையும் பார்ப்பீர்கள் என்று சொல்லுகிறார்.

இதனால், தமிழ்ச்சங்கமானது ராமர் காலத்தில் பொதிகைமலையில் இருந்ததாக விளங்குகிறது. பிற்காலத்தில் மேற்படி சங்கமானது கொற்கையில் ஸ்தாபிக்கப்பட்டது. கடைசிச் சங்கமானது மதுரையில் ஸ்தாபிக்கப்பட்டது. அச்சங்கத்தினால் மதுரைநாட்டுக்குச் செந்தமிழ் நாடு, அதாவது இலகுவான தமிழ்நாடு (Country of easy Tamil) என்றும், அதைச்சூழ்ந்த பன்னிரண்டு நாடுகளும் கொடுந்தமிழ் நாடுகள், அதாவது உயர்ந்ததமிழ்நாடுகள் (Countries of high Tamil) என்றும் பெயர்கள் உண்டாயின.

பாண்டியர் தமிழை மிகவும் விருத்தி பண்ணினபடியால் அவர்களுக்கு விசேஷித்தவிதமாக தமிழ்நாடான், தமிழ்நாடன், தமிழ்ப்பாண்டியன் எனப்பெயர்கள் உண்டாயின.

திருவாதவூரார் புராணம், மந்திரிச்சருக்கம்,

3-வது கவி,

"பற்றிலர்பெற்ற சிவன்கழல் பற்றினனாக் கலைவண்டமிழ்
உற்றமலைக்கிறைவன்றனையொக்க மதித்தருள் கொண்டலை
விற்றுவச நெடும்படைமிக்க புவிக்கொடியன்படை
மற்றுமுள கொற்றவர் தம்படை தர்க்கமுமுற் கொடெழுந்தான்"

இதில்,

"ஒரு பொருளிலும் பற்றில்லாதவராயும், சிவனுடைய அடியில் பற்றுள்ளவராயும் இருக்கின்றவரை, வண்மை பொருந்திய தமிழ் விளங்கியிருந்த அந்தப் பொதியமலைக்கு அரசனாகிய பாண்டியனுக்குச் சமானமாக மதிக்கத்தக்க கிருபா மேகமாகிய மாணிக்க வாசகரை விற்கொடி படைத்த சேரமானுடைய நெடிய சேனைகளும், மிகுந்த புலிக்கொடி படைத்த சோழனுடைய சேனைகளும் சூழ்ந்து புறப்பட்டன" என்று சொல்லியிருக்கிறது.

12-வது கவி,

"உழைக்கரனுக் கன்பாகி யுண்மையறிந் துலகமெல்லாம்
பிழைக்க வருட்கவிபாடும் பெரியவர்தம் செயலெல்லாம்
தழைத்தகலத் **தமிழ்மாறன்** றக்கோர் களுரைப்பவறிந்
தழைத்துரிமைத்த நல்கியகலா நண்பாயினான்."

இதன் பொருள்.

மானேந்திய கையினையுடைய சிவனுக்கு அன்பராகிய மெய்ப்பொருளறிந்து உலகமெல்லாம் பிழைக்கும்படி திருவாசகம் பாடிய (மாணிக்க வாசகருடைய) செய்கை எல்லாம் தழைத்திருக்கின்றன. **தமிழை வளர்க்கும் பாண்டியன்** ஆனவன் பெரியோர்கள் சொல்லக் கேள்விப்பட்டு அவரை அழைப்பித்து, தனக்குரியவராக்கி அவருக்கு நீங்காத சிநேகிதனானான் என்பதாம்.

38வது கவி, 1வது அடி,

"சென்று **தமிழ்மா**றனருள் பெற்றெழில் சிறக்கும்."

குதிரையிட்ட சருக்கம், 59வது கவி,

4வது அடி,

"முத்தமிழ் பொருநை **நாடான்** முன்பு சென்றருகின்
றார்."

இவைகளில்,

சொல்லப்பட்டிருக்கிறவைகளைக் கவனிக்கிறதினால் பாண்டியர் தமிழை விருத்தி பண்ணி வந்தார்கள் என்றறியலாம். கல்வியானது உபதேசப் போங்காகப் பேசுமிடத்து யாவருக்கும் பொதுவான பொருளாயினும், அப்பொருள் அரசனுக்கே சொந்தமான பொருளாம். அரசனு

டைய உத்திரவில்லாமல் கல்விப் பொருளை எவர்களும் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளப் பாத்தியமில்லை. அதினாலே கல்வியானது அரண்மனைப் பொக்கிஷத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர், கல்வி, அதாவது அவ்வரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல்; அவையாவன, அறநூலும், நீதிநூலும், தேர், யானை, குதிரை, படைக்கலம் என்னப்பட்ட இவற்றின் நூல் முதலானவையாம். அவ்வரசன் அறிவுடையவனாக இருந்தால் அவன் தன்னுயிர்க்கே அன்றி மன்னுயிர்க்கும் பயன் படுதல் குறித்து இது அரசியலுள் வைக்கப்பட்டது. ஆயினும் யாவர்க்கும் அது உறுதியைத்தருவதாகிய சிறப்புடைமையினாலே பொதுப்படச் சொல்லுகின்றார் என்று சொல்லியிருக்கிறார். ("Learning, that is the king's learning of the arts, he ought to learn; they are ethics, jurisprudence, and the arts, of managing chariot soldiers, elephant soldiers, and foot soldiers. This section is placed as a sub-division of the chapter on the qualities of the king, because the king when he is learned, will be useful to all man kind as well as to himself. But the subject is treated in general terms as it has the excellence of king profitable to all men.")

நாலடியார் என்னும் நூலுக்கு பதுமனார் என்பவரால் உரை செய்யப்பட்டது. அதிலும் கல்வியானது அரசியலிலேயே வைக்கப்பட்டிருக்கிறது. மதுரைச் சங்கத்துக்குச் சேர்ந்த பதினெட்டு நூல்களில் ஒன்றாகிய பழமொழி என்னும் நூலுக்கு சுப்பிராய செட்டியார் என்பவரால் உரை எழுதப்பட்டிருக்கிறது.அவரும் கல்வியை அரசியலுக்குள்ளேயே வைத்திருக்கிறார். பார்ப்பனக் குலமானது கடவுளுக்கு மனிதர் செய்ய வேண்டிய கடமைகளைப் போதிக்கிற குலமாதலினால் கல்வியானது அரசரால் பார்ப்பனக்குலத்தவர்குக் கொடுக்கப்பட்டது. ஆகையால் திவாகர நூலாசிரியரால் பார்ப்பாருக்குக் கல்வி கொடுக்கப்பட்டதைக் காட்டியிருக்கிறார்.

குலக்கிரம அட்டவணையில் 11வது சூத்திரத்தில் சொல்லிய பெயர்கள் பார்ப்பனக் குலத்தவர்க்குரியதென்று சில மூடரும், அப்பெயர்கள் சகல குலத்தவர்க்கும் பொதுவாகச் சொல்லப்பட்டது என்று பகைவரும் சொல்லுகிறார்கள்.

மேற்படி குலக்கிரம அட்டவணை அடங்கிய 1வது சூத்திர முதல் 33வது சூத்திரம் வரையில் நிற்கின்ற 33 சூத்திரங்களும் நாலு பெரும் பிரிவுகளாக நிற்கின்றன. அவை வருமாறு :—

I. 1-வது சூத்திரம் முதல் 8-வது சூத்திரம் வரையில் நிற்கின்ற 8 சூத்திரங்களும் பார்ப்பனக்குலத்தவர்கள் பெயர்களுக்கும், அக்குலத்துச் சார்பினுதித்த அருந்தவர்கள், தபோதனர்கள், முனிவர்கள் பெயர்களுக்கும், அந்த அந்த மதப்பெரியோர்களுடைய பெயர்களுக்கும் வருகின்ற ஒருபொருட் சொற்களை உரைக்கின்றன.

II. 9வது சூத்திரம் முதல் 31வது சூத்திரம் வரையில் நிற்கின்ற 23 சூத்திரங்களும் அரசர் குலத்தவர்கள் பெயர்களுக்கும், அக்குலச்சார்பினுதித்த கலைவல்லோர், புலவர் பெயர்களுக்கும், அக்குலத்தவர்கள் பெற்றிருந்த கௌரவப்பட்டப் பெயர்களுக்கும், அரச குலப் பெரியோர்களுடைய பெயர்களுக்கும், குறுநிலவேந்தர் பெயர்களுக்கும், மந்திரிக் கிழவர், நட்பாளர், போர்த்தலைவர் முதலானவர்கள் பெயர்களுக்கும் வருகின்ற ஒரு பொருட் சொற்களைக் கூறுகின்றன.

III. 32வது சூத்திரம் செட்டி குலத்தவர் பெயர்களுக்கு வருகிற ஒரு பொருட் சொற்களைக் கூறுகின்றது.

IV. 33வது சூத்திரம் காராளர் எனவும் சூத்திரர் எனவும் பெயர்களுடைய வேளாளர்க்கு வருகின்ற ஒருபொருட் சொற்களை கூறுகின்றது

இவற்றுள்,

முதலாவது, பார்ப்பனக் குலத்தவர்க்குரிய 1வது சூத்திரம் முதல் 8வது சூத்திரம் வரைக்கும் கவனித்தால், 1வது சூத்திரமானது பார்ப்பனக் குலத்தவர்க்குள் வேதசாஸ்திர அறிவுகளோடே தவநிலையில் வைராக்கியமுற்று மிகுசிறப்புற்றோங்கிய அந்தணர்களுக்கு வருகின்ற பெயர்களைக் கூறுகின்றது. அறிவில் மேன்மை பெற்றதினால் அவர்களுக்கு அறிஞர், உயர்ந்தோர், பெரியோர் எனவும், தபோமுயற்சியில் மேன்மை பெற்றதினால் அவர்களுக்குத்துறவோர், ஐயர், மாதவர், முனிவர், தபோதனர், முனைவர், இருடிகள், படிவர், பண்ணவர், யோகிகள், கடிந்தோர், அந்தணர், அருந்தவர் எனவும் பெயர்கள் வந்திருக்கின்றன.

2வது சூத்திரம் முதல் 7வது சூத்திரம் வரையில் பார்ப்பனக் குலத்தவருள் சைவமதத் தவப்பாலோர், நாராயண மதத்தவப்பாலோர், சமண மதத்தவப்பாலோர், புத்த மதத் தவப்பாலோர், சமண முனிவர்கள், சடைமுடியோர் ஆகியவர்களுக்கு வருகின்ற பெயர்களைக் கூறுகின்றன.

8வது சூத்திரமானது பார்ப்பனக் குலத்தவர்களுக்கு வருகிறபெயர்களைக் கூறுகின்றது. வேதசாஸ்திர அறிவில் மேன்மை பெற்றதால் அவர்களுக்கு வேதியர், மிக்கவர், மறையோர், நூலோர், உயர்ந்தோர், ஆய்ந்

தோர், வேதபாரகர் எனவும், குலத்தில் மேன்மை பெற்றதினால் அவர்களுக்கு ஐயர், இருபிறப்பாளர், மெய்யர், பூசுரர், அந்தணர், அறுதொழிலாளர், செந்தீவளர்ப்போர், ஆதிவருணர், விப்பிரர், தொழுகுலத்தோர், வேள்வியாளர், முப்புரி நூலோர், முனிவர் எனவும் பெயர்கள் வந்திருக்கின்றன.

இரண்டாவது, 9வது சூத்திரம் முதல் 31வது சூத்திரம் வரைக்கும் சொல்லியவைகள் அரசர் குலத்தவர்க்குரியது என்றும், அவைகள் பார்ப்பாருக்குரியதல்லவென்றும் அறியும்படி பார்ப்பனக் குலத்தவருக்குச் சொல்லிய பெயர்களையும், அரச குலத்தவருக்குச் சொல்லிய பெயர்களையும் சமரசப்படுத்திப்பார்ப்போமாக.

எப்படியெனில்,

பார்ப்பனக்குலத்தவர்க்கு		-அறிஞர்.	—அரச குலத்தவர்க்கு		-அறிவுடையோர்.
,,	,,	-அந்தணர் —	,,	,,	-நல்லவர்.
,,	,,	-ஆய்ந்தோர் —	,,	,,	-ஆய்ந்தோர்.
,,	,,	-மிக்கவர் —	,,	,,	-மிக்கவர்.
,,	,,	-உயர்ந்தோர் —	,,	,,	-உயர்ந்தோர்.
,,	,,	-பெரியோர் —	,,	,,	சான்றோர், ஆன்றோர், ஆரியர், உலகு.
,,	,,	-மறையோர் — வேதியர், வேதபாதகர்.	,,	,,	-கலைவல்லோர்.
,,	,,	நூலோர் —	,,	,,	நூலுணைப்போர்.

எனவும் சமரசப்பட்டு வந்திருக்கிறதினால் 9-வது, 10-வது, 11-வது சூத்திரங்கள் அரசகுலத்தவர்க்கும், 1-வது முதல் 8-வது வரையிலுமுள்ள சூத்திரங்கள் பார்ப்பன குலத்தவர்க்கும் சுட்டிவந்திருக்கின்றன என்பது தெளிவாயிருக்கிறது.

சேந்தன் நான்கு ஜாதியின் வகுப்பைக் கூறவந்தவிடத்து பார்ப்பாருக்கும் அரசருக்கும் மத்தியில், பகைவர் சொல்லத் துணிகிறதுபோல், பொதுப்பெயரைக் கூறுவாரா? அந்த 11-வது சூத்திரத்திலுள்ள பெயர்கள் பொதுப் பெயர்களேயானால் அச்சூத்திரத்தைப் பார்ப்பாருக்கும் அரசருக்கும் மத்தியில் வைக்கமாட்டாரே. ஆகையால் அந்த 11-வது சூத்திரம் பார்ப்பனக்குலத்தைச் சேர்ந்ததாக இருக்கவேண்டும் அல்லது அரசகுலத்தைச்சேர்ந்ததாக இருக்கவேண்டும். பார்ப்பனக்குலத்தவர்க்குரியதேயானால் அதை 1-வது முதல் 8-வது சூத்திரம் வரையில் சொல்லியாயிற்றே, ஆகையால் 11-வது சூத்திரம் அரசகுலத்தவர்க்கே உரியது என்பதை இலேசாய் அறிந்துகொள்ளலாம்.

செட்டிகுலத்தவர்க்குச் சொல்லிய 32-வது சூத்திரத்தில் கல்வியைக்குறித்து ஒரு பெயராவதுசொல்லவே இல்லே.

33-வது சூத்திரமானது சூத்திரராகிய வெள்ளாளரைக் குறித்தது. அதிலும் கல்வியைக்குறித்து ஒரு பெயராவது செல்லவே இல்லே.

அன்றியும், வேதசாஸ்திர அறிவு பார்ப்பனக்குலத்தவர்க்கு மிகுதியும் அவசியமானபடியால், அவர்களுக்கு **பார்ப்பார்** (Seers) என்ற பெயர் மிகவம் சிறப்பாயிற்று. கண்ணுள்ளவர்களான சகல குலத்தவரும் பார்ப்பாராஞலும் அவர்களே எல்லாம் பார்ப்பார் என்கலாமா? அப்பெயர்கள் பிற குலத்தவர்களுக்கு ஏற்காதே. அதுபோலவே கல்வி அறிவுடையவர்கள் அறிவுடையோராஞலும் அவர்களே எல்லாம் அறிவுடையோர் என்கலாமா? கூடாதே. அரச குலத்தவர்க்கோ அறிவுடையோர் என்பது சிறப்புப்பெயராகி குலப் பட்டப்பெயராயிற்று. இதிஞல் தமிழ்நாட்டிற்கு **அறிவன் தேயம்** எனவும், தமிழ்ப்பாஷைக்கு **அறிவன்பாஷை** எனவும் பெயராயிற்று.

தொல்காப்பியம், பொருளதிகாரம்,

புறத்திணையல், 20-வது சூத்திரம்.

“ அறுவகைப்பட்ட **பார்ப்பன** பக்கமும்
ஐவகைமரபின் **அரசர்** பக்கமும்,
இருமூன்றுமரபின் **ஏஞேர்** பக்கமும்
மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியிஞற்றிய **அறிவன்தேயமும்.** ”

இக்சூத்திரத்தில், தமிழ்தேசத்துக்கு அறிவன்தேயம் எனப்பெயர் வந்திருக்கிறது.

திருமூலர், மூதற்றந்திரம்,

இராசதோடம், 1-வது கவி.

“ கல்லா அரசனும் காயினும் நேரொக்கும்
கல்லா அரசனில் காலன் மிக நல்லவன்;
கல்லா அரசன் அறமோரான் கொல்லென்பான்
நல்லாரைக் காலன் நணுகிலனே. ”

இதன் பொருள்.

கல்லா அரசன் யமனுக்குச் சமானமானவன். கல்லா அரசனிலும்

யமன் நல்லவன். கல்லா அரசன் தருமம் ஓரான், கொல் என்பான்; நல்லவனைக்காலன் கிட்டமாட்டான் என்பதாம்.

2-வது கவியின் பொருள்.

நாடாளும் மன்னனானவன் நாடோறும் தன்நாட்டில் தவநெறிவிளங்கும் பொருட்டு கண்பார்த்து வருவதுமன்றி தவநெறியில் நடந்து வரவேண்டும் என்பதாம்.

3-வது கவியின் பொருள்.

தவவேடம் பூண்டவர்கள் தவவேடக் கிரமப்படி நில்லாவிட்டால் தவவேடம் பூண்டதினுல் பயனென்ன? மெய்வேட நெறியில் நிற்கும்படி அரசன் செய்வானேயானுல் அது மேலாகும் என்பதாம்.

முன் சொன்ன செய்யுட்களாலும் தாற்பரிய உரையினுலும் அரசன் கல்வி அறிவுடையவனுக இருக்கவேண்டும் என்றும், ஆகையால் தமிழ் அரசர் அறிவுடையோர் எனப் பெயருடையவர்களா யிருந்தார்கள் என்றும் அறியலாம்.

மூதுரை, 30-வது கவி.

"சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவனை
யாந்தனையும் காப்பார் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்குமதனையும் குளிர் நிழலைத்தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்."

இதன் பொருள்.

மரத்தை ஒருவன் வெட்டினுலும், அந்தமரம் கீழேவிழும்வரைக்கும் குளிர்ந்த நிழலைத்தந்து தன்னை வெட்டுகிறவனுக்கு உபகாரம் செய்கிறதைப்போல குடிகள் தீமைசெய்தபோதிலும், அரசர் தாம் சாகும்பரியந்தம் நன்மையையே செய்து அவர்களைக் காப்பாற்றுவார்கள் என்பதாம்.

அரசரல்லாத பேர்கள் கல்வியைமாத்திரமுடையவர்களாயிருக்கிற விஷயத்தில் குடிகளைக் காப்பதற்குத் தகுதியுள்ளவர்களாவார்களா? காக்கும் தகுதி அவர்களுக்கில்லையே. ஆகையால் அறிவுடையோர் அரசகுலத்தவரோ.

வடுக அரசர் தமிழ் அரசை ஒழித்து, தமிழ்நாட்டை ஆண்டபொழுது 72 பாளையப்பட்டுகளை நியமித்தார்கள். அந்தப் பாளையப்பட்டு அதிபதிகள் எல்லாரும் கல்வியற்ற மகாகொடியர். அவர்களுக்கு விரோதமாக பிரஜைகளில் ஒருவன் நடப்பானேயானுல் அந்தப்பிரஜையைப்பற்றி விசார

லை இல்லை; கிள்ளர்க்குக்கொடுப்பதே அந்த பாளையப்பட்டு அதிபதிகளின் வேலை. "ஆக்கு" என்பது வடுகபாஷையில் "இல்லை" என்றர்த்தம். அவ்வரசன் தான்வைத்திருந்த ஓர் அடையாளத்தால் வெற்றிலையில் கிள்ளி கொலைகாரன்கையில் கொடுத்திடுவான். மேற்படி கொலைகாரன் அந்த இலையை குற்றஞ்செய்தவனின் இனத்தாரிடத்தில் காட்டுவான். அவர்கள் யாதோர் பதிலும் சொல்லாமல் குற்றவாளியைக் கொலைகாரன்கையில் ஒப்புவிப்பார்கள். உடனே கொலைகாரன் அவனை வெட்டி, அல்லது வேறே வகையாய் கொன்றுபோடுவான்.

மேற்படி காரியங்களினுல், அரசருக்குக் கல்வி வேண்டியதில்லை என்று வடுகர் காலத்தில் பிரஜைகள் தீர்மானித்தபடி தமிழ்ச்சூத்திரர் செய்துவிட்டு, கல்வியுள்ளவர்களை அறிவுடையோர் என்றும், எவர்கள் கல்வியுடையவர்களாயிருந்தார்களோ அவர்கள் எக்குலத்தவர்களாயிருந்தாலும் அவர்களை அறிவுடையோர் என்று சொல்லும்படியாகவும் பழக்கஞ்செய்தார்கள். பூர்வத்திலிருந்தபடியே வடுகர் பாண்டிய நாட்டைப் பிடித்த காலத்திலும் தமிழ்ப் பாஷைக்கு அறிவன்பாஷை என்று பேர் இருந்தது. ஆகையால் வடுகர் தமிழை அறவம் என்று பேர் சொன்னுர்கள்.

ஓர் வடுகச்சுலோகம்,

"தெனுகு தேட்ட, கன்னடம் கஸ்தூரி,
அறவம் அத்துவானம், மராட்டி மன்னு, துரக தூளி."

இதன் பொருள்.

தெலுங்கு தெளிவு, கன்னடம் கஸ்தூரிக்கு ஒப்பு, தமிழ் அத்துவானக்காடு, மராட்டிப்பாஷை மண்ணுக்கு ஒப்பு, துலுக்கப்பாஷை தூசிக்கு ஒப்பு என்பதாம்.

மேற்படி சுலோகத்தில் தமிழ்ப்பாஷையானது அறவம் என்னப்பட்டிருக்கிறது.

துலுக்கர் தமிழ் நாட்டுக்கு வந்தபோது தமிழுக்கு அறிவி என்று சொன்னுர்கள். அந்தப்படியே இப்போதும் சொல்லிவருகிருர்கள்.

தமிழ் நாட்டுக்கடுத்த தேசப்பகுதியிலுள்ள அந்நியரைக் குறித்துத் தமிழ் அரசகுலத்தவர் சொல்லிவந்த,

தமிழ்ச்சுலோகம்.

"வடுகர், அறிவாளர், வான்கருடர்,
சுடுகாடு, பேய், எருமை என்றிவையாறும்
குருகார் அறிவுடையோர்."

இதன் பொருள்.

வடுக ராசாங்கத்தார் சுடுகாட்டிற்கும், அரிவாள ராசாங்கத்தார் பேய்க்கும், கன்னட ராசாங்கத்தார் எருமைக்கும் சமானமானவர்கள். ஆகையால் அறிவுடையோர் என்னப்பட்ட தமிழ் ராசாங்கத்தார் மேற்படியார்களைச் சேரமாட்டார்கள் என்பதாம்.

மதுரைச் சில்லா விருத்தாந்தம்,

19-ம் பக்கம், 23-ம் வரிமுதல்,

"மைசூர் சேனையானது மதுரை வட்டகையிலுள்ளவர்களை உயிரோடேபிடித்து, அவர்களுடைய மூக்குகளை அறுத்து பைகளுக்குள்ளே போட்டுக்கட்டி, மைசூர் இராசாவுக்கு அனுப்பினதை......ராசன் பார்த்துச் சந்துஷ்டி அடைந்தான். நாயக்கருடைய படை மைசூருக்குப்போய், முதலாவது ராசனுடைய மூக்கை அறுத்து மூளியாக்கி, பிறகு வேறே கொடுமைகளையும் நடப்பித்து, மதுரைக்குத் திரும்பினது. இதற்கு மூக்கு வேட்டைச்சண்டை (War of noses) என்று பேர்" என்று சொல்லியிருக்கிறது.

மேற்படி சங்கதிகளால் மற்ற ராசாங்க அரசர் எவ்விதமான அறிவுடையவர்களாயிருந்தார்கள்? அவர்கள் மனிதனைப் பட்சிக்கும் புலிகளைப் போல மாத்திரம் இருந்தார்கள், அல்லவா? என்றும், தமிழ் அரசரோ அறிவுடையோராய் இருந்தார்கள் என்றும் அறியலாம்.

39. வினா.—குலக்கிரம அட்டவணையில் அறிவுடையோர்க்குச்சொல்லிய பத்துப்பெயர்களில் முதலாவது நிற்கின்ற சான்றோர் என்னும் பதத்துக்கு மூலம் என்ன? அந்தப் பெயர் தமிழ்ச் சத்திரியர் குலத்தவர்க்குரிய குலப்பட்டப் பெயர் என்பதற்கு ஆதாரங்கள் என்ன?

விடை.—சான்றோர் என்னும் பதத்துக்கு இரண்டு மூலம் உண்டு. அவைகளில்,

முதலாவது மூலமாவது,

நிகண்டு, தெய்வப் பெயர்த்தொகுதி,

54வது சூத்திரம்.

"தரணி செங்கதிரோன் சண்டன் தபனனே ஒளியே
சான்றோன்."

திவாகரம், தெய்வப் பெயர்த்தொகுதி,

54வது சூத்திரம், கடைசிபகுதி,

"சான்ருேன் அறியே தபனன் என்றிவை மான்றவர
ருக்கற் கனர்தம் பெயரே."

சமஸ்கிருத நிகண்டாகிய அமரகோசம்,

வ்யோம வர்க்கையில், 103வது சுலோகம்,

"கர்மசாக்ஷி ஜெகச்சட்சு, ரம்ஸ மாலீத்திரா யூதனு."

அலாயுத நிகண்டில்,

"கர்ம சாக்ஷித் சாக்ஷிணகாঃ
துவாதசாதமঃ திவாகரঃ."

திவாகரம், 12வது தொகுதி,

157வது சூத்திரம்.

"லோகப் பிரகாசன், லோக சாட்சி."

மேலே பூர்வ நூல்களிலிருந்து எடுத்துக்காட்டிய சூத்திரங்களிலும், சுலோகங்களிலும் சூரியனுக்குத் தமிழில் சான்றோர் என்றும், சமஸ்கிருதத்தில் சாக்ஷி என்றும் பெயர்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

சாக்ஷி என்னும் சமஸ்கிருத மொழிக்கு சான்று என்பது சுத்தாங்கமான தமிழ்ப்பதமாம்.

வேத சிந்தாந்தப்படிக்கும், புராண சிந்தாந்தப்படிக்கும், சூரியன் சகல மனுஷருடைய செய்கைகளையும் அறிந்த சாட்சி என்பதினுலே சூரியனுக்கு லோக சாட்சி, கர்ம சாட்சி என்று சமஸ்கிருதத்தில் பேராயிற்று.

சான்று என்பதோடே சூரியன் என்பது ஆண்பால் பெயர் என்னும் சித்தாந்தப்படிக்கு ஆண்பால் பெயர்க்குரிய அன், ஆன், ஒன் என்றும் விகுதிகள் சேர சான்றவன், சான்றன், சான்றேன் என்ருயிற்று. நாம் முன் சொல்லியபடி காசிபர் தன் குமாரனுக்குச் சூரியன் என்று பெயரிட்டதினுல் அந்தச்சூரியனுடைய வம்சத்தார்க்கும் சூரியனுக்குரிய பெயர்ப்படி ஒருமையில் சான்றன், சான்றவன், சான்றேன் என்றும் பன்மையில் சான்றர், சான்றவர், சான்றேர் என்றும் பெயராயிற்று. பின்னுல் அந்தச் சூரிய வம்சத்தாரும், சந்திர வம்சத்தாரும், விவாக சம்பந்தப்பட்டபடி

யால் சந்திர வம்சத்தாருக்கும் ஒருமையில் சான்றவன், சான்ருன், சான்ருேன் எனவும், பன்மையில் சான்றவர், சான்ருர், சான்ருேர் எனவும் பெயராயிற்று.

சான்ருேர் என்னும் பதத்துக்கு

இரண்டாவது மூலமாவது,

சால் என்னும் பகுதியிலிருந்து பிறந்த தன்மை நிகழ்கால வினைமுற்று சாலுகிறேன் என்பது. இறந்தகால வினைமுற்று சான்றேன் என்பது. ஆண்பால் படர்க்கை நிகழ்கால வினைமுற்று சாலுகிறன் என்பது. ஆண்பால் படர்க்கை இறந்தகால வினைமுற்று சான்றன் என்பது. ஆண்பால் வினையாலணையும் ஒருமைப் பெயர்கள் சான்றவன், சான்றன், சான்றேன் என்பவைகள். பலர்பால் பெயர்கள் சான்றவர், சான்றர், சான்றேர் என்பவைகள்.

சாலல், அல்லது சாலுதல் என்பதற்கு (1) நிறைதல், To be full என்றும், (2) பெருமையுடைமை, To be noble, dignified, excellent என்றும், தமிழ்—இங்கிலீஷ் நூலாசிரியர்கள் அர்த்தம் பண்ணியிருக்கிருர்கள்.

மேற் சொல்லிய அர்த்தப்பிரகாரம் சான்ருன், சான்றவன், சான்ருேன் என்பதற்கு, Great man, பெரியோன் என்றும், Noble man; மேன்மகன் என்றும் தாற்பரியமாம்.

சால்பு என்னும் பதத்திற்கு (1) மேன்மை, (2) பண்பு, (3) ஊக்கம், (4) மாட்சிமை, (5) கல்வி என்று அர்த்தம். இந்த ஐந்து குணங்களும் பொருந்திய குணத்துக்குச் சால்பு என்று பெயர்.

சால்பு என்னும் பதத்திற்கு முன் சொன்னபடி ஐந்து லட்சணங்களும் உண்டாம். ஆதலால் சால்புடையவனுகிய சான்ருன், சான்றவன், சான்ருேன் என்பதற்கு,

(1) மேன்மையுடையவன், மேலோன், மேன்மகன், அரசகுலத்தவன், சத்திரியன், Great man, Noble man, என்பது பொருளாம்.

(2) பண்புடையவன், சிறந்த நற்குணங்களை உடையவன் என்பதாம்

(3) ஊக்கமுடையவன், புஜபல பராக்கிரமமுடையவன் என்பதாம்.

(4) மாட்சிமையுடையவன், வாக்குமாருமல் கொடுக்கும் கொடையுடையவன் என்பது பொருளாம்.

(5) கல்வியையுடையவன், அறிவுடையோன் என்பது பொருளாம்.

மேற் சொன்ன பஞ்சலட்சணங்களும் அரசகுலத்தவனுகிய சத்திரியனுக்கு அகத்தியம் இருக்கவேண்டியவைகளாம். இக்காரணத்தால் பாண்டியனுக்கு **பஞ்சவன்** என்று பெயர் வந்திருக்கலாம்.

ஆனதால் சான்ருன், சான்றவன், சான்ருேன் என்பதற்கு குல மேன்மைகள், நற்குணங்கள், புஜபல பராக்கிரமங்கள், வரையாதளிக்கும் நன்கொடைகள், வேதசாஸ்திரம், இதிகாசம், தர்மசாஸ்திரம் முதலான அறிவுகள் பொருந்தியவன் என்பது பொருளாம்.

இந்தக் குணங்கள் அரசகுலத்தவராகிய சத்திரியர்களுக்கு இன்றியமையாத (அவசியம் வேண்டிய) குணங்கள் என்பதற்கு அநேக நூற் சாட்சிகள் உண்டு. அவைகளில் ஒன்று மாத்திரம் எடுத்துச் சொல்வோம்.

பாரதவெண்பா, உத்தியோகப்பருவம்,
4வது கவி,

"வண்மையாற் கல்வியால் மாபலத்தா லாள்வினையால்
உண்மையாற் பாராளுரிமையால்—திண்மையால்
தேர் வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்ருேனே
டேர் வேந்த ரேற்பா ரெதிர்."

இந்தக் கவியில்,

(1) வண்மை இதற்கு ஈகை என்றும்,
(2) கல்வி ,, வேதசாஸ்திர கலைக்கியான அறிவு என்றும்,
(3) மாபலம் ,, புஜபல பராக்கிரமங்கள் என்றும்,
(4) ஆள்வினை ,, எடுத்தது முடிக்கும் திறம் என்றும்,
(5) உண்மை ,, சத்திய வாக்கு என்றும்,
(6) பாராளுரிமை ,, நாடாளும் பாத்தியம் என்றும்,
(7) திண்மை ,, திடத்த மனம் என்றும் அர்த்தமாம்.

சத்திரியகுலத்தவர்க்கு இருக்கவேண்டிய மேலே சொன்ன ஐந்து லட்சணங்களில் இந்த ஏழு லட்சணங்களும் அமைந்திருக்கின்றன.

இந்த மன்னர் குலத்தவர்கள் தங்களுடைய சுய அரசாட்சியின் காலத்தில் இத்தன்மையுடையவர்களாய் இருந்தார்கள் என்பது நிச்சயம்.

சால் என்னும் வினையை மூலமாகக்கொண்டு பிறந்து வழங்கி வருகிற பதங்கள் எல்லாம் குல மேன்மையை உணர்த்திய பெயர்களாக வந்திருக்கின்றன எப்படியெனில்,

சாலி என்பதற்கு உயர் குலத்தானியம், அதாவது நெல் என்றும்,

சாலிகை என்பதற்கு உயர்குல அணி, அதாவது போர்க்கவசம் என்றும்,

சாலூகம் என்பதற்கு உயர் குலக்காய், அதாவது சாதிக்காய் என்றும்,

சாலேகம் என்பதற்கு உயர்குல விருட்சம், அதாவது சந்தனவிருட்சம் என்றும்,

சாலேயம் என்பதற்கு உயர்குலநிலம், அதாவது மருத நிலம், நெல் விளை நிலம் என்றும் அர்த்தமாம்.

அவை போலவே சான்றன், சான்றவன், சான்றேன் என்பதற்கு உயர்குல மானிடன், அதாவது சத்திய குலத்தவன் என்பது பொருளாம்.

ஆகையால் சான்றர், சான்றவர், சான்றேர் என்பது அரசகுலத்தவர்க்குப் பெயராயிற்று.

மேலே காட்டிய விபரப்படி இரண்டு மூலங்களினுல் சூரிய சந்திர குலத்தவர்க்கு சான்ருர், சான்றவர், சான்ருேர் என்பது குலப் பெயராயிற்று.

40. வினு.—சான்றவர், சான்றேர் என்னும் இரண்டு பதங்களும் ஒரே அர்த்தமுள்ள பதங்கள்தான். ஆனுல் சான்றர் என்னும் பதமானது அந்த சான்றவர், சான்றேர் என்னும் பதங்களுடன் சேர்ந்ததல்ல என்று பகைவர் சொல்லுகிருர்களே, அது சரியல்ல என்பதற்கு நியாயம் என்ன ?

விடை.—சான்றர் என்னும் பதமானது சான்றவர், சான்ருேர் என்னும் பதங்களுடன் ஒரே பொருட்கொண்ட பதந்தான் என்பதை விபரிப்போம்.

குலக்கிரம அட்டவணை 11வது சூத்திரத்தில், சான்ருேர் என்னும் பதத்துடன் சேர்ந்த பதங்கள் மிகோர், நல்லவர், மேலவர், ஆய்ந்தோர், உயர்ந்தோர், ஆரியர், உலகு, ஆன்ருேர், அறிவுடையோர் என்பவைகளே. இப்பத்துப்பேர்களையும் எடுத்து விரித்துப்பார்த்தால் அது தெளிவாகும்.

எப்படியெனில்,

(2) மிக்கோர். திவாகர நூலாசிரியர் மிக்கார், மிக்கவர், மிக்கோர் என்று மூன்று ரூபங்கொண்ட பதங்களில் ஓர் விகுதிபெற்ற மிக்கோர் என்னும் பதத்தை மாத்திரம் சூத்திரத்தில் சொல்லியிருக்கிறதினுல் மிக்கார், மிக்கவர் என்னும் ஆர், அர் விகுதிபெற்ற பதங்கள் அந்த ஓர் விகுதி பெற்ற மிக்கோர் என்னும் பதத்துடன் ஒரே பொருட் கொண்டதல்ல

என்று எவன் சொல்லத்துணிவான்? ஒருவரும் சொல்லத்துணியமாட்டார்கள்.

(3) **நல்லவர்.** திவாகர நூலாசிரியர் நல்வர், நல்லார், நல்லோர் என்று மூன்று ரூபங்கொண்ட பதங்களில் அர் விகுதிபெற்ற நல்லவர் என்னும் பதத்தை மாத்திரம் சூத்திரத்தில் சொல்லியிருக்கிறதினுல் நல்லார், நல்லோர் என்னும் ஆர், ஓர் என்னும் விகுதிகள் பெற்ற பதங்கள் அந்த அர் விகுதிபெற்ற நல்லவர் என்னும் பதத்துடன் ஒரே பொருட்கொண்டதல்ல வென்று எவன் சொல்லத்துனிவான்? ஒருவரும் சொல்லத்துணியமாட்டார்கள்.

(4) **மேலவர்.** திவாகர நூலாசிரியர் மேலார், மேல்வர், மேலோர் என்று மூன்று ரூபங்கொண்ட பதங்களில் அர் விகுதிபெற்ற மேலவர் என்னும் பதத்தை மாத்திரம் சூத்திரத்தில் சொல்லியிருக்கிறதினுல் மேலார், மேலோர் என்னும் ஆர், ஓர் என்னும் விகுதிகள் பெற்ற மேல்லார், மேலோர் என்னும் பதங்கள் அந்த அர் விகுதிபெற்ற மேலவர் என்னும் பதத்துடன் ஒரே பொருட்கொண்டதல்ல என்று எவன் சொல்லத்துணிவான்? முழுமகனே சொல்லத்துணிவான்.

(5) **ஆய்ந்தோர்.** ஆய்ந்தவர், ஆய்ந்தார், ஆய்ந்தோர் என்று மூன்று ரூபங்கொண்ட பதங்களில் ஆய்ந்தோர் என்னும் பதத்தை மாத்திரம் திவாகர நூலாசிரியர் சூத்திரத்தில் சொல்லியிருக்கிறதினுல் ஆய்ந்தவர், ஆய்ந்தார் என்னும் பதங்கள் ஆய்ந்தோர் என்னும் பதத்துடன் ஒரே பொருட்கொண்டதல்ல என்று யார் சொல்லத்துணிவான்? மதியீனனே சொல்லத்துணிவான்.

(6) **உயர்ந்தோர்.** உயர்ந்தவர், உயர்ந்தார், உயர்ந்தோர் என்று மூன்று ரூபங்கொண்ட பதங்களில் உயர்ந்தோர் என்னும் பதத்தை மாத்திரம் நூலாசிரியர் சூத்திரத்தில் சொல்லியிருக்கிறதினுல் உயர்ந்தார், உயர்ந்தவர் என்னும் பதங்கள் உயர்ந்தோர் என்னும் பதத்துடன் ஒரே பொருட்கொண்டதல்ல என்று எவன் சொல்லத்துணிவான்? மூடனே சொல்லத்துணிவான்?

(7) **ஆரியர்.** ஆரியார், ஆரியர், ஆரியோர் என்று மூன்று ரூபங்கொண்ட பதங்களில் நூலாசிரியர் சூத்திரத்தில் ஆரியர் என்றும் பதத்தை மாத்திரம் சொல்லியிருக்கிறதினுல் ஆரியார், ஆரியோர் என்றும் பதங்கள் ஆரியர் என்னும் பதத்துடன் ஒரே பொருட்கொண்டதல்ல என்று எவன் சொல்லத்துணிவான்? அறிவில்லானே சொல்லத்துணிவான்.

(8) **உலகு.** உலகு, உலகர், உலகார், உலகோர் என்று நாலு ரூபங்கொண்ட பதங்களில் உலகு என்றும் பதத்தை மாத்திரம் நூலாசிரியர்

சூத்திரத்தில் சொல்லியிருக்கிறதினுல் உலகர், உலகார், உலகோர் என்னும் பதங்கள் உலகு என்னும் பதத்துடன் ஒரே பொருட்கொண்டதல்ல என்று எவன் சொல்லத்துணிவான் ? புத்தியீனனே சொல்லத்துணிவான்.

(9) ஆன்றேர். ஆன்றவர், ஆன்ருர், ஆன்ரேர் என மூன்று ரூபங் கொண்ட பதங்களில் ஆன்ரேர் என்னும் பதத்தை மாத்திரம் நூலாசிரியர் சூத்திரத்தில் சொல்லியிருக்கிறதினுல் ஆன்றவர், ஆன்ருர் என்னும் பதங்கள் ஆன்ருர் என்னும் பதத்துடன் ஒரே பொருட்கொண்டதல்ல என்று எவன் சொல்லத்துணிவான் ? மடையனே சொல்லத்துணிவான்.

(10) அறிவுடையோர். அறிவுடையர், அறிவுடையார், அறிவுடையோர் என மூன்று ரூபங்கொண்ட பதங்களில் அறிவுடையோர் என்னும் பதத்தை மாத்திரம் நூலாசிரியர் சூத்திரத்தில் சொல்லியிருக்கிறதினுல் அறிவுடையர், அறிவுடையார் என்னும் பதங்கள் அறிவுடையோர் என்னும் பதத்துடன் ஒரே பொருட்கொண்டதல்ல என்று எவன் சொல்லத் துணிவான் ? கல்வி அறிவற்ற கசடனே சொல்லத்துணிவான்.

மேற் சொல்லிய ஒன்பது வார்த்தைகளுக்கும் கிரீடம்போல் முதலாவது நிற்கின்ற சான்றேர் என்னும் பதத்தைக் குறித்து முன் சொல்லியபடி சொல்லிக்காட்டுவோம்.

(1) சான்றேர். திவாகர நூலாசிரியர் சான்றவர், சான்ருர், சான்ரேர் என மூன்று ரூபங்கொண்ட பதங்களில் ஓர் விகுதிபெற்ற சான்ரேர் என்னும் பதத்தை மாத்திரம் சூத்திரத்தில் சொல்லியிருக்கிறதினுல் அந்த ஓர் விகுதிபெற்ற சான்ரேர் என்னும் பதத்தோடு சான்றவர், சான்ருர் என்னும் பதங்கள் ஒரே பொருட்கொண்டதல்ல என்று எவன் சொல்லத்துணிவான் ? பொருமை கொண்ட பகைவனே சொல்லத்துணிவான், எதார்த்த சிந்தையுள்ள புத்திமான் சொல்லத்துணியமாட்டான்.

மேற் காட்டிய நியாயங்களை திரட்டிப்பார்வையிடுவதினுல் சான்றர் என்னும் பதம் சான்றவர், சான்ரேர் என்னும் பதங்களுடன் ஒரே பொருட்கொண்ட பதந்தான் என்பது தெளிவாம்.

41. வினு.—சான்றர், சான்றவர், சான்றேர் என்னும் பதங்கள் பார்ப்பனக்குலத்துக்குரியவையல்ல என்றும், அரச குலத்தவர்க்கே உரியது என்றும் சொல்ல ஆதாரமான நூற்ராட்சிகள் என்ன ?

விடை.—குலக்கிரம அட்டவணையின்படி,

முதலாவது,

சான்றேர் என்னும் பெயர் அரசகுலப் பெயர் என்பதை திருஷ்டாந்தப்படுத்துவோம்.

(1) நாலடியார் பொருட்பால், நல்லினம் சேர்தல்,

9-வது கவி.

"நில நலத்தானந்திய நெல்லேபோல் தத்தம்
குல நலத்தாலாகுவர் சான்றோர்—கலநலத்தை
தீவளி சென்று சிதைத்தாங்கு சான்றாண்மை
தீயினஞ்சேரக் கெடும்."

இச்செய்யுளில்,

மருத நிலத்தினால் நெல் சிறந்து விளங்குகின்ற பிரகாரம் உயர்ந்த **தலப்பிறப்பினால் சான்றோர்** சிறந்து விளங்குவார்கள் என்றுசொல்லியிருக்கிறது.

பகைவர் சொல்லுகிறபடி சான்றோர் என்பது எக்குலத்திலாவது பிறந்த கல்விமான் எனப் பொருட்படுமோனால், சண்டாள குலத்தவன் ஒருவன் கல்வியுடையவனாக இருந்தால், அவன் பிறந்த குலம் மேன்மை பொருந்திய குலம் என்றும், ஆகையால் அவன் மேன்மையுள்ளவன் என்றும் சொல்லலாமோ? அப்படிச் சொல்லக்கூடாதே. நில நலத்தினால் நெல். அதுபோல் குல நலத்தினால் சான்றோர். ஆகையினால் சான்றோர் என்பது குலமேன்மையையுடைய சத்திரிய குலத்தையே குறித்தது.

(2) தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல்,

5-வது சூத்திரம்.

"**அந்தணர்** திறத்தும் **சான்றோர்** தேத்தும்
அந்தமிற் சிறப்பிற் **பிறர் பிறர்** திறத்தினும்."

இச்சூத்திரத்தில்,

அந்தணர் குலம் எனவும், சான்றோர் குலம் எனவும், பிறர் பிறர் குலம் எனவும் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆனபடியினாலே தொல்காப்பியர் நாளையிலே அரச குலத்தவர்க்கு சான்றோர் எனப்பெயர் வழங்கினது தெளிவாய் விளங்குகிறது.

(3) தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல்,

20-வது சூத்திரம்.

"அறுவகைப்பட்ட **பார்ப்பன** பக்கமும்,
ஐவகை மரபின் **அரசர்** பக்கமும்,
இரு மூன்று மரபின் **ஏனோர்** பக்கமும்."

21-வது சூத்திரம்.

"துகட்டபு சிறப்பிற் சான்றோர் பக்கமும்
கட்டி னீத்த காலினானும்."

மேற்படி சூத்திரங்களில், 21-வது சூத்திரத்தில் சான்றோர் பக்கமும் என்பதற்கு 20-வது சூத்திரத்தில் "அரசர் பக்கமும்" என்று வருகிறதி னாலும், பார்ப்பன பக்கம், அரசர் பக்கம், ஏனோர் பக்கம் என்பதற்கு ஒத்திருக்கிறதினாலும் சான்றோர் பக்கமானது அரசர் பக்கமாம். முன் கற்பியல் 5-வது சூத்திரத்தில் "அந்தணர், சான்றோர், பிறர் பிறர் என்பதும், பார்ப்பன பக்கம், அரசர் பக்கம், ஏனோர், அதாவது பிறர் பிறர் பக்கம் என்பதும் பார்ப்பன குலத்தையும், சத்திரிய குலத்தையும், மற்ற மற்ற குலங்களையும் விளங்கச் செய்திருக்கிறது.

ஆகையால் சான்றோர் சத்திரியரே.

(4) கம்ப ராமாயணம், உயுத்த காண்டம், திருவபிஷேகப்படலம்,

35-வது கவி, அதாவது பாளையங்கோட்டை சி.எம். எஸ்.(C. M. S.)

புஸ்தகசாலையிலுள்ள ஏட்டுப் பிரதியின் 194-ம்

பக்கத்திலிருக்கிற 15-ம் கவி,

"அந்தர், வணிகர், வேளாண் மரபினர், ஆலிநாட்டுச்
சந்தணி புயத்து வள்ளற் சங்கரனனைய சான்றோர்
உய்ந்தனமடியேம் என்னும் உவகையருவரி நாண
வந்தனர் ராமன் கோயில் மங்கலத்துரிமை மாக்கள்."

இக்கவியில்,

ராமருடைய பட்டாபிஷேகக் கோலம் காணும்படி வந்தவர்கள் அந்தணரும், வணிகரும், வேளாண்மரபினரும், சந்தணிபுயத்து வள்ளல் சங்கரனனைய சான்றோரும் என்று சொல்லியிருக்கிறது.

அந்தணர் என்பது முதலாவது குலமாகிய பார்ப்பன குலத்தையும், வணிகர் என்பது மூன்றாவது குலமாகிய செட்டி குலத்தையும், வேளாண் மரபினர் என்பது நாலாவது குலமாகிய சூத்திர குலத்தையும், சான்றோர் என்றது இரண்டாவது குலமாகிய சத்திரிய குலத்தையும் குறித்தது.

கம்பர் தொல்காப்பிய நூற்பிரகாரம் அரசர்குலத்தவர்களுக்கு சான்றோர்குலத்தவர்களென எழுதிவைத்திருக்கிறது தெளிவாய் இருக்கிறது.

முன் தொல்காப்பியத்தில் அந்தணர், சான்றோர், பிறர் பிறர் என்றும், பார்ப்பன பக்கம், அரசர் பக்கம், ஏனோர் பக்கம் என்றும், மறுபடியும் 21-வது சூத்திரத்தில் சான்றோர் பக்கமும் என்றும், கம்பர் அந்தணர், சான்றோர், வணிகர், வேளாண் மரபினர் என்றும் சொல்லியிருக்கிறதைக் கவனிப்பதினால் ஜி. பி. சவுந்திரநாயகம் பிள்ளை, செந்திநாத ஐயர், முதலான குதர்க்க சிகாமணிகளுக்குத் தெளிவாய் விளங்குமே சான்றோர்குலம் சத்திரியகுலம் என்று.

குறுக்குவினா. (Cross question).—கம்பராமாயணத்திலிருந்து எடுத்துக்காட்டிய கவியில் சான்றோர் என்னும் பதம் நாலு குலங்களில் கடைசியாய் வரவேண்டியதென்ன ?

விடை.—“ சந்தணிபுயத்துவள்ளற் சங்கரனனைய ” என்னும் அடைவாசகம் சான்றோர் குலத்தவர்களுக்குச் சிறப்பாகக் கூறப்பட்டு நெடுவாசகமாயிருந்தபடியால் அந்தப்படி சொல்லப்பட்டது. சான்றோர் என்னும் பதத்தை எந்த இடத்தில் வைத்தாலும் பொருள் மாறாது. அது இரண்டாவது குலம் என்பது மாறமாட்டாது. அந்தப்படி சொல்வதில் பிசகில்லை என்பதற்கு ஆதாரமாக அதுபோல் கவி ஒன்றை மேற்கோளாக எடுத்துக்காட்டுவோம்.

பஞ்சபட்சி சாஸ்திரம்,

7-ம் அதிகாரம், 3-வது கவி.

“ வல்லூறு **பார்ப்பான்** வள்ராந்தை தான் **வணிகன்**,
செல்லாரும் காகம் செகத்**தரசன்**—நல்லாய் கேள்
கோழியாம் **வேளாளன்** கூறுமயில் **சண்டாளன்**
ஆழியாம் நூலாய்ந்தரி.”

மேற்படி கவியில், 1-வது பார்ப்பான், 2-வது வணிகன், 3-வது அரசன், 4-வது வேளாளன், 5-வது சண்டாளன் என்று சொல்லியிருக்கிறது. கம்பராமாயணத்தில் சான்றோர் என்பதை 4-வது இடத்தில் வைத்திருந்தது. பஞ்சபட்சி சாஸ்திரத்திலோ 3-வது வைத்திருக்கிறது அரசனை எங்கே வைத்தாலும் அவனுடைய இரண்டாவது இடம் மாறாது என்பது கருத்தாம். இடமாறுதலினால் குல மாறுதல் உண்டாகமாட்டாது.

4-வது கவி.

“ பொன் **மறையோனும்** வலியான் போராந்தை
வேந்தனும்

துன்னு மொழிக்காகம் துலே **வணிகன்**—மன்னும்
உலகத்தோன் கோழியே ஒழுங்கால் மஞ்ஞை
இழிகுலத்தோன் என்றே இசை."

இக்கவியில், 1-வது மறையோனாகிய பார்ப்பான், 2-வது வேந்தனாகிய அரசன், 3-வது வணிகன், 4-வது உலகத்தோனாகிய வெள்ளாளன் 5-வது இழிகுலத்தோனாகிய சண்டாளன் ஆக ஐந்து குலமும் அதினதின் பூர்வ இடங்களில் வந்த விதம் அறிந்துகொள்ளலாம்.

ஆகையால் சான்றோர் சத்திரியரே.

(5) பாரதம், பீஷ்ம பருவம், முதற் போர்ச்சருக்கம்,
30-வது செய்யுள்.

" மறிந்து தாழ்வன வாசிகள் மாமத வேழம்
தறிந்து வீழ்வன தேர் நிறைத்தகர்வன **சான்றோர்**
எறிந்த வேலினும் வாளினும் கணையினு மிளைஞர்
துறந்த வாக்கை யெத்தனை கோடியார் சொல்வார்."

இச்செய்யுளில், **சான்றோர்** எறிந்த வேலினும் என்று சொல்லியதற்கு சான்றோராகிய சத்திரியர் விடுத்த வேலாயுதத்தினாலும் என்பது பொருளாம். இதில் சொல்லிய சான்றோர் என்பது சூத்திரரில், அல்லது சண்டாளரில் கல்வி கற்றவர்கள் என்று அர்த்தம் என்றால் சரியாகுமா? அவர்கள் வேலாயுதங்களை எறிந்தார்களா? இல்லையே.

ஆகையால் சான்றோர் என்றது அரசகுலத்தவரையே குறித்தது.

(6) கம்ப ராமாயணம், உயுத்த காண்டம், பிரமாஸ்திரப் படலம்,
211-வது கவி.

" **சான்றோர் மாதைத்** தக்க அரக்கன் சிறை தட்ட
வான்றோர் சொல்லு நல்லற மன்னன் வசமானால்
மூன்றாய் நின்ற பேருலகொன்றாய் முடியாவேற்
றோன்றோவோ என் வல்வினின் வீரத்தொழிலம்மா."

இக்கவியில், சீதைக்கு "சான்றோர் மாது என்று பெயர் வந்திருக்கிறது. அதற்கு அரசகுலப் பெண், சத்திரியகுலப் பெண் என்றர்த்தம்.

சான்றோர் மாது என்பதை எக்குலத்தவரானாலும் அவர்களில் கல்வி அறிவுடையவர்கள் யாரோ அவர்களுக்கு மாது என்று அர்த்தம் பண்ணினால் பொருந்துமா? பொருந்தாதே.

ஆகையால் சான்றோர் என்றது சத்திரிய குலத்தவரையே குறித்தது.

(7) பொய்யாமொழிப்புலவர் பாடிய தஞ்சை வாணன் கோவை, வரைதல், 366-ம் பாடல்.

"சென்றோன் மீண்டு வந்து அந்தணரையும் சான்றோரையும் முன்னிட்டு வரைந்து கொண்டுழிக் கண்டோர் மகிழ்ந்து கூறல்."

"சேலார் புனல் வையைசூழ் தஞ்சைவாணன் றென்மா மறையினம் பின்
வேலானெனப் பிறர் வேட்டவர் யார் மணம் வெண்டுகிலின்
பாவாரமளியும் பாற்கடலானது பங்கயக்கண்
மாவாயிவனிவ னுந்திருவாயினன் மா தருமே."

இதில், அரசன் குருக்களாகிய அந்தணரையும், பந்துக்களாகிய சான்றோரையும் வைத்துக் கலியாணம் செய்துகொண்டான் என்று சொல்லியிருக்கிறது.

இவ்விடத்தில் சான்றோர் என்றது கல்வியுடையவர்களான சண்டாள குலத்தவரையாவது, சூத்திர குலத்தவரையாவது குறிக்குமென்று யார் சொல்லக்கூடும்? அந்தப் பூர்வ காலத்தில் இழிகுலத்தவராகிய சண்டாளரைப் பார்ப்பனக் குலத்தவரோடே சமமாக வைத்துக் கலியாணம் நடத்துவார்களா? நடத்தமாட்டார்களே.

ஆகையால் சான்றோர் என்றது சத்திரிய குலத்தவரையே குறித்தது.

(8) ஒட்டக்கூத்தன் பாடிய குலோத்துங்கன் கோவை வரவியல், 417-ம் பாடல்.

"சான்றோருமந்தணரும் புறஞ்சூழத்தமனியப்பூ
ணீன்றோர் கொடுப்ப வெரிகரியா யிதழ் தாதகி வாய்
தேன்றோயலங்கா லுரந்தைக் குலோத்துங்கன் சென்னி வெற்பின்
வான்றோய் புகழ் மன்னன் முன்னீரின் மணந்தனனே."

இதிலும் முன் சொல்லியதுபோல் அரசன் கலியாணத்தில் சான்றோர், அந்தணர் என்ற இரண்டு ஜாதியாரும் இருந்தார்கள் என்று சொல்லியிருக்கிறது.

இதில், சான்ருேர் என்றதைக் கல்வி கற்ற சூத்திரர் என்றும், கல்வி கற்ற சண்டாளர் என்றும் அர்த்தம் பண்ணினுல் பொருந்துமா? பொருந்தாதே.

ஆகையால், சான்ருேர் என்றது சத்திரிய குலத்தவரையே குறித்தது.

(9) பஞ்ச காவியத்தில் ஒன்ருகிய சீவகசிந்தாமணி, நாமகளிலம்பம்,

361-வது கவி.

"கூற்றமஞ்சும் கொன்றுனை வெஃனிளையானு
மாற்ற மஞ்சுமன்னிய கற்பின் மடவாளும்
போற்றித்தந்த புண்ணியர் கூடிப் புகழோனைச்
சீற்றத்துப்பிற் சீவகனென்றே பெயரிட்டார்."

இந்தக்கவிக்கு நச்சினுர்க்கினியார் உரை, "இளையானும், மடவாளும் விரும்பிக்கொண்டுவந்த **பார்ப்பார், சான்றோர்** உள்ளிட்டோரும் கூடி சீற்றத்துப்பிற்புகழோனை சீவகனென்றே பெயரிட்டாரென்க" என்பதே.

இதில், **புண்ணியர்** என்று கவியில் வந்திருக்கிறதற்கு பார்ப்பார், சான்ருேர், உள்ளிட்டார் என்று நச்சினுர்க்கினியார் வியாக்கியானம் செய்திருக்கிருர். இதற்கு இங்கிலீஷில் கருத்தெழுதியவர் பண்டிதர் (Dr. Bower) புண்ணியர் என்பது அருகசமயத்தார் என்றும், இந்த இடத்தில் சீவகனுடைய இனத்தார்க்கும் பார்ப்பார்க்கும் இந்தப் பெயர் வந்திருக்கிறதென்றும் சொல்லுகிருர். இவ்விதமாக சத்திரியனுன சீவகனுக்கு இனத்தார் **சான்றோர்** என்ற **ஜாதியார்** என்பது தெளிவாய்த் தோன்றுகிறது.

இவ்விடத்தில் சான்ருேர் என்றது கல்வி கற்ற சண்டாளரோயானுல் ராஜ குழந்தைக்குப் பேரிட அவர்களும் பார்ப்பாரோடே இருக்கத் தகுமா? தகாதே.

ஆகையால் சான்ருேர் என்பது சத்திரிய குலத்தவரையே குறித்தது.

(10) வெற்றிவேற்கை, 60-வது சூத்திரம்.

"சான்ருேரில்லாத் தொல்பதி இருத்தலின்
தேன்றேர் குறவர்தேயம் நன்றே."

இதன் பொருள். **அரசர்கள்** இல்லாத பூர்வ நகரங்களில் குடியிருப்பதிலும் குறிஞ்சிநாடாகிய மலைநாட்டுக் காட்டுத்தேன் உண்டு பிழைக்கிற வேடர்களோடே குடியிருப்பது நலம்" என்பதாம்.

இந்தச் சூத்திரம் இங்கிலீஷ் பாஷையில் தேய்லர் (Taylor) ஆசிரியரால் இதனடியில் கண்டிருக்கிறபடி மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

"Rather than dwell in an ancient country without **Rulers**, it is far better to live in the woods among wild people who feed honey." W. Taylor's Oriental Manuscripts Vol. II. Appendix.

இதில் **சான்றோர்** (Rulers) என்பதற்கு **அரசர்** என்பது பொருளாம். இந்தச் சூத்திரத்தில் வந்திருக்கிற சான்றோர் என்னும் பெயருக்கு எக்குலத்தவராயினும் கல்வியையுடையவர்கள் எனக் கருத்தமைத்து "அறிவுடையோர்" எனப் பொருள் உரைத்தால் பொருத்தமிராது. பஞ்சபட்சி சாஸ்திரத்திலிருந்து நாம் முன் எடுத்துச் சொல்லியபடி இழிகுலத்தவன், அல்லது சண்டாள குலத்தவன் கல்வியையுடையவனாய் இருக்கும் விஷயத்தில் அரசகுலத்தவனாகிய ஒருவனை அந்தச் சண்டாள குலத்தவனிடம் போய் வாசம்பண்ணு என்று பூர்வ அரசர்கள் சொல்லியிருப்பார்களா? சொல்லவேமாட்டார்கள்.

ஆனதால் இந்த 60-ம் சூத்திரத்திற்கு உரை எழுதியிருக்கிற தமிழ் உரை ஆசிரியர்கள் சான்றோர் என்பதற்கு **அறிவுடைய ராஜாக்கள்** என்று விபரித்திருக்கிறார்கள்.

ஆகையால் சான்றோர் என்றது அரச குலத்தவராகிய சத்திரிய குலத்தவரையே குறித்தது.

(11) ஆத்திச்சூடி.

"**சான்றோ**ரினத்திரு."

இதன் பொருள்.

அரச குலத்தவருடைய இனத்தைச் சார்ந்திரு என்பதாம்.

சான்றோர் என்றது கல்வியையுடையவர் என்று அர்த்தம் பண்ணினால், அல்லது எக்குலத்தவராயினும் கல்வியையுடையவர் என்றால் மனு சாஸ்திர விதிப்படி சண்டாளன் ஊருக்கு வெளியே குடியிருக்கவேண்டியவனாகையால் அந்தச் சண்டாளனுடைய சேரியில் போய் குடியிரு என்று அரசன் உத்திரவு கொடுத்ததுபோலாகுமல்லவா? அந்தப் பூர்வ காலத்தில் அரசன் அப்படிச் சொல்லுவானா? மேல் குலத்தோர் அப்படி சொல்லுவார்களா? சொல்லவேமாட்டார்கள்.

ஆகையால் சான்றோர் என்றது சத்திரிய குலத்தவரையே குறித்தது.

(12) நாலடியார், பொருட்பால், 16-வது அதிகாரம், மேன்மக்கள், 1-வது கவி.

" அங்கண் விசும்பினகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோருமொப்பர்மற்—றிங்கள்
மறுவாற்றும் சான்றோரஃதாற்றார் தெருமந்து
தேய்வார் ஒரு மாசுறின்."

இதில், சந்திரனைச் சான்றோருக்கொப்பிட்டுப் பேசலாம் என்றாலும் இரண்டிற்கும் ஒரு பேதமுண்டு எனவும், தன் உடலிலிருக்கின்ற களங்கச் சந்திரன் பொறுத்துக்கொள்ளுமாயினும் சான்றோர் தங்களுக்கு ஒரு மானவீனம் நேரிடுங்காலத்தில் பொறுக்கமாட்டார்கள் எனவும் சொல்லியிருக்கிறது.

கவியில், சான்றோர் என வந்திருக்கிறது. அதிகாரத்தில் மேன் மக்களைக் குறிக்கும் எனக்காட்டியிருக்கிறது. கீழ்மக்கள் ஆனவர்கள் கல்வியையுடையவர்களாயிருந்தால் மேன்மக்கள் என்று அந்தப் பூர்வகாலத்தில் சொல்லப்படுவார்களா? சொல்லப்படவேமாட்டார்கள். அரசருக்கு மான ஈனம் நேரிட்டால் உடனே ஆயுதம் எடுத்துப் போர்செய்து எதிரியைக் கொல்லுவார்கள், அல்லது தாங்களே அந்தப் போரில் சாவார்கள். அப்படிப்பட்ட தன்மை கல்வியைக் கற்றுக்கொண்ட சண்டாள குலத்தவனுக்கு உண்டா? அவன் படையைத் திரட்டிப் போருக்குப் போவானா? போகமாட்டானே.

ஆகையால் சான்றோர் என்றது மானமுள்ள ஜாதியாகிய சத்திரிய குலத்தவர்களையே குறித்தது.

குறள் என்னும் நூலிலுள்ள பொருட்பால் ஆனது அரசருக்கு அரசியலாகிய நீதிநூலைப் போதிக்கிறதாக இருக்கிறது. ஆகையால் மேற்படி பொருட்பாலிலுள்ள சான்றோர் என்னும் பெயரானது அரசகுல கௌரவப் பட்டப் பெயராக அதில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

(13) குறள் 99-வது அதிகாரம், சான்றாண்மை, 2-வது கவி.

" குணநலம் சான்றோர் நலனே பிறநல
மென்னலத்துள்ளதுஉமன்று."

இதில், ஒருவன் உயர்ந்த குலத்தில் பிறந்தவனாயிருந்தபோதிலும் அவனுக்கு இருக்கவேண்டிய இலட்சணங்கள் இல்லாவிட்டால் அவன் சான்றேன் என்னும் கௌரவப் பட்டத்துக்குத் தகுந்தவனல்ல என்று சொல்லியிருக்கிறது.

ஆகையால் சான்ருேர் என்றது சால்புத்தன்மையுள்ள சத்திரிய குலத்தவரையே குறித்தது.

(14) குறள், 12-ம் அதிகாரம், நடுவு நிலைமை, 8-ம் கவி.

"சமம் செய்து சீர்தூக்கும் கோல்போலமைந் தொருபாற்
கோடாமை **சான்ருேர்**க்கணி."

இதற்கு உரை எழுதிய பரிமேலழகர் "இவ்வதிகாரம் 10-ம் கவியின் கீழ், இதில் **சான்றோர்** என்றது அவையத்தாரையும், 10-ம் கவி வணிகரையும் நோக்கின. அவ்விரு திறத்தாருக்கும் நடுவு நிலைமை வேருகச் சிறந்தமையின்" என்று சொல்லியிருக்கிருர்.

ஆகையால் சான்ருேர் என்றது, பிரஜைகளுக்கு நீதி செலுத்தும் சத்திரிய குலத்தவரையே குறித்தது.

(15) குறள், 99-ம் அதிகாரம், 5-வது கவி.

"ஆற்றுவாராற்றல் பணிதலது **சான்ருேர்**
மாற்ருரை மாற்றும் படை."

இதில் **சான்றோர்** எதிரிகளை உபாயத்தால் இணக்கி வெல்லும் வல்லமையுடையவர்கள் எனச் சொல்லியிருக்கிறது.

படை என்றதினுல் சான்ருேர் என்றது அரசியலையுடைய சத்திரிய குலத்தவரையே குறித்தது.

(16) நாலடியார், 10-ம் அதிகாரம், ஈகை, 10-வது கவி.

"கடிப்பிடுங்கண் முரசம் காதத்தோர் கேட்ப
ரிடித்து முழங்கிய தோர் யோசனையோர் கேட்ப
ரடுக்கிய மூவுலகம் கேட்குமே **சான்ருேர்**
கொடுத்தாரெனப்படுஞ் சொல்."

இதன் பொருள். "(தமிழ் நாடு ஆளுகின்ற பாண்டியா!) உன் நாட்டில் கடிப்பாகிய குறுந்தடியால் அடிக்கின்ற பேரிகைச் சத்தம் காதவழி தூரத்திலுள்ளவர்களுக்குக் கேட்கும், இடித்து முழங்குகின்ற மேகக்கர்ச்சிதம் ஒரு யோசனை தூரத்திலுள்ளவர்களுக்குக் கேட்கும். சான்ருேர் ஆகிய உன் குலத்தரசர்கள் கொடுக்கும் கொடையோ சுவர்க்க, மத்திய பாதலம் என்னும் மூன்று லோகத்திலும் உள்ளவர்களுக்குக் கேட்கும் என்பதாம்.

அரசர்களுக்குரிய ஆறு தொழில்களில் மேம்பாடான தொழிலானது ஈகையாம். ஆதலால் சான்றோர் கொடுத்தார் என்பது அரசர்க்குரிய ஈகைத் தொழிலைக் குறிக்கின்றது. கொடை கொடுப்பதற்குரியவர்கள் அரசர்கள். முரசச் சத்தமும், இடி முழக்கமும் பிற குலத்தவர்கள் கொடுக்கும் கொடைக்குச் சமமாகும். மூவுலகமும் அறிந்து புகழத்தக்க கொடையோ அரசர் கொடுக்கும் கொடையாம்.

தொல்காப்பிய, திவாகர நூற்களின் பிரகாரம் இவ்விடத்தில் அரசர் சான்றோர் என்று சொல்லப்பட்டிருக்கிறார்கள்.

ஆகையால் சான்றோர் என்றது ஈகைத் தன்மையுள்ள சத்திரிய குலத்தவரையே குறித்தது.

(17) திருக்கழுக்குன்ற புராணம், நாட்டுப் படலம், 18-வது கவி.

"கொய்தளவு குத்த மெல்லென் கொழுமலர் குப்பை நாப்பண்
பெய்தன கவரிப்பாலும் பிரசமுப்பழத்தின் சேறு
மொய்தரத் தொண்டைநாட்டு முது குடிப்பிறந்த சான்றோர்
எய்திப விருந்தை யூட்டு மில்லெனப் பொழிந்த சோலை."

இக்கவியில், தொண்டைநாட்டு முதுக்குடிப் பிறந்த சான்றோர் எனக் கூறியது பூர்வ காலத்திலே தொண்டை நாட்டில் குடியேறிய பண்டைச் சான்றோராகிய சத்திரிய குலத்தவரைக் குறித்தது.

சண்டாள குலத்தவன் ஒருவன் கல்வியையுடையவனாக இருக்கிற பட்சத்தில் அவனைச் சான்றோன் என்றும், முதுக்குடிப் பிறந்தவன் என்றும் சொல்லலாமா? சொல்லலாகாதே. குடிப்பிறப்பு, அதாவது மேன் மக்கள் குடிப்பிறப்பு அவனுக்கேது?

ஆகையால் சான்றோர் என்றது சத்திரிய குலத்தவரையே குறித்தது.

குறுக்குவினா. (Cross question)—சான்றோர் என்னும் கௌரவப்பட்டப்பெயரானது கல்விகற்றவர்களான எக்குலத்தவர்களுக்கும் சொல்லப் படலாகாதா?

விடை.—சத்திரிய குலத்தவர்க்கு சான்றோர் என்னும் கௌரவப் பட்டம் சொந்தமேயன்றி பிற குலத்தவர்கள் கல்வி கற்றவர்களானாலும் சான்றோர் என்னும் கௌரவப்பட்டம் கிடையாது.

குறள், 7-ம் அதிகாரம், புதல்வரைப் பெறுதல், 7-வது, 9-வது கவிகள்.

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தியிருக்கச் செயல்."

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்டதாய்."

வெற்றிவேற்கை.

"கல்லா வொருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதராகும்மே."

மேலே சொல்லிய மூன்று செய்யுட்களையும் கவனித்தால், நெல்லானது பதராக இருக்குமானால் அது தானியங்களில் உயர்குலத் தானியமாக இருந்தும் மேன்மையில்லாததுபோல், ஒருவன் கல்வியில்லாதவனாக இருந்தால் அவன் குலத்தில் உயர்குலமான சத்திரியனாயிருந்தாலும் அவனுக்கு மேன்மை இல்லை. ஆகையால் ஒருவனைச் சத்திரியகுல மேன்மைகளில் விசேஷித்ததான கல்வியுடையவனாக்குவதும், அக்கல்வியால் அவன் சத்திரிய குலத்தவரான கல்விமான்கள் அடங்கிய சபையில் முந்தியிருக்கச் செய்வதும், அவனை ஈன்றோனாகிய தகப்பனின் கடமை. அந்தப்படி அவன் மேன்மையடைந்திருக்கிறதைக் காதால் கேட்கும் ஈன்றோளாகிய அவனுடைய தாயானவள் தன் மகன் தன் குல மேன்மையை அடைந்திருக்கிறதினால் அவன் அவனைப் பெற்ற காலத்தில் தான் அடைந்த சந்தோஷத்திலும் மிகுதியான சந்தோஷத்தை அடைவாள் என்று சொல்லியிருக்கிறதை அறியலாம்.

தானியங்களில் எல்லாம் உயர்ந்த ஜாதியானது நெல். மானிடரில் எல்லாம் உயர்ந்த ஜாதியானவன் சத்திரியன். நெல்லிடத்தில் அரிசியாகிய மணியில்லாவிட்டால் அந்த நெல்லுக்குரிய மேன்மை குறைவாம். அது போல் சத்திரியனிடத்தில் கல்வி இல்லாவிட்டால் அவனுக்குரிய மேன்மை குறைவாம். நெல்லிடத்தில் தானியமணி இருக்கவேண்டியது எவ்வளவு அவசியமோ, அப்படியே சத்திரியனிடத்தில் கல்வி அவசியம்.

ஆகையால் சான்றோர் என்றது அரசகுலப் பெயர். பிற குலத்தவர்க்கு சான்றோர் என்னும் பெயர் ஏற்காது.

கல்வியானது சூத்திரர் முதலான கீழான ஜாதிகளுக்குப் பூர்வ காலத்தில் ஏற்றதல்ல என்பதை முன் விபரித்திருக்கிறோம்.

குறளிலிருந்து மேற்காட்டிய செய்யுட்களில் தந்தை, தாய் என்றது சத்திரியகுலத் தகப்பனும் சத்திரியகுலத் தாயுமேயல்லாமல் வேறோ ஜாதிகளல்ல.

ஆகையால் சான்றோர் என்றது அரசகுலத்தவராகிய சத்திரியரே.

இரண்டாவது,

சான்றவர் என்னும் பெயர் அரசகுலப் பெயர் என்பதை திருஷ்டாந்தப்படுத்துவோம்.

(18) கம்பராமாயாணம், உயுத்தகாண்டம், வருணனை வழிவேண்டுபடலம்.

25-வது கவி.

"மொய்த்த மீன் குல முதலற முருங்கின மொழியிற்
பொய்த்த **சான்றவன் குலமென** ஒருகணை எறிய
வுய்த்த கூம்புடை நெடுங்கல மோடுவ கடுப்பத்
தைத்தவம் பொடுந்திரிந்தன சாலமீன் சாலம்."

இக்கவியில், ராமர் சமுத்திரத்தின்மேல் கோபங்கொண்டு அம்புப் பிரயோகஞ்செய்ய மிகு விஸ்தாரமாகத் தமிழ் நாடெங்கும் பெருகித் தழைத்திருந்த அரசர் குலத்தவர்களாகிய சான்றவர் குலத்தவர்களுக் கொப்பாக மகா விலாசம் பொருந்திய சமுத்திரமெங்கும் மிகு திரளாகப் பெருகித் தழைத்திருந்த மீன் குலங்களெல்லாம் சொல்வாக்கு மாறிய சான்றவர் குலமாகிய சத்திரிய குலமானது எவ்வாறு நிலைகுலைந்தழியுமோ அவ்வாறு மேற்படி சமுத்திரத்திலுள்ள மீன்சாலங்களனைத்தும் நிலைதடுமாறி அழிந்துபோயின என்று சொல்லியிருக்கிறது.

மேற்படி செய்யுளால் சான்றவர் குலமானது சொல்வாக்குத் தவறாத சத்திரிய குலம் எனவும், சான்றவர் என்னும் பெயர் குலப் பெயர் எனவும் இந்நூலாசிரியராகிய கம்பருடைய காலத்தில் சத்திரிய குலத்தவர்களாகிய சான்றவர் குலத்தவர்கள் தமிழ் நாடுகளில் மிகு விஸ்தாரமாகப் பெருகி இருந்தார்களெனவும் மிகவும் தெளிவாய்த் துலங்குகிறது.

ஆகையால் சான்றவர் குலம் என்றது சத்திரிய குலத்தவரையே குறித்தது.

(19) குறள், பொருட்பால், 99-வது அதிகாரம், 10-வது கவி.

"**சான்றவர்** சான்றாண்மை குன்றி னிலந்தான்
தாங்காது மன்னோ பொறை."

இதில், பூமி பாரந்தாங்கிய சான்றவர்க்குச் சான்றாண்மையாகிய லட்சணங்குறைந்தால் அப்பூமியானது தன்சுமையைத் தாங்கமாட்டாது என்று சொல்லியிருக்கிறது.

சான்றாண்மை என்பதற்கு "மேன்மை, பண்பு, ஊக்கம், மாட்சிமை, வல்லமை, மெய்மை, உரம், நிதானம்" என்னும் தன்மைகள் பொருந்தியது என்பதாம். பூமியானது தன்மேல் பொறுத்த சுமையைத் தாங்குகிறதுபோல் அரசர் தங்கள்மேல் பொறுத்த அரசாட்சியாகிய பாரத்தைப் பொறுக்கவேண்டும். அரசர் அப்படித் தாங்காவிட்டால் பிரஜைகள் பொறுப்பார்களா? பொறுக்கமாட்டார்கள். ஆகையால் "அரசரே! பூமியைக் கவனித்துப் பொறுமையாய்க் குடிகளைக் காத்துவாருங்கள்" என்று அரசருக்குப் புத்தி சொல்லியிருக்கிறது. கல்வியையுடைய ஒரு சூத்திரன், அலலது சண்டாள குலத்தவன் யாரைப் பொறுத்துத் தாங்குவான்? அவன் தாங்காவிட்டால் குடிகள் அழிந்து போவார்களா?

ஆகையால் சான்றவர் என்றது சத்திரிய குலத்தவரையே குறித்தது.

(20) நாலடியார், பொருட்பால், 16-வது

அதிகாரம், மேன்மக்கள், 4-வது கவி.

"செல்வுழிக்கண்ணொரு நாட்காணினுஞ் சான்றவர்
தொல்வழிக் கேண்மையிற் றோன்ற புரிந்தியாப்பர்
நல்வரை நாட சில நாளடிப்படின்
கல்வரையும் உண்டாம் நெறி."

இதில், மலைகளையுடைய அரசனே, நீ வனவேட்டைக்காகப்போகின்ற காலங்களில் மானிடர் கால்டிகள் மலையின் மேல்படவே அம்மலையின் மேல் வழியுண்டாகப் பார்த்ததில்லையா? அதுபோல் உன் குலத்தவராகிய சான்றவர்கள் முகப்பழக்கமில்லாதவர்களையும் கண்ணுற்ற மாத்திரத்தில் அவர்களைத் தொல்வழிச் சிநேகிதர்போல் மதித்து, அவர்களுக்கு நட்புப் பாராட்டி வருதல் அறிவாயே. அதுபோல் நீயும் செய் என்று சொல்லியிருக்கிறது.

ஆகையால் சான்றவர் என்றது சத்திரிய குலத்தவரையே குறித்தது.

(21) கம்பராமாயணம், அயோத்தியா காண்டம்,

கிளைகண்டு நீங்குபடலம்,

137-வது கவி.

"ஈன்றவர் முதலிய எண்ணில் சுற்றமும்

சான்றவர் குருவொடு தவத்துளோர்களும்
வான்றருசேனையும் மற்றும் சுற்றுற
மூன்றுநூல் கிடந்ததோள் முனியும் போயினான்.

இதில், தாய்மார் முதலான எண்ணிறந்த சுற்றத்தாரோடும், அரசர் கூட்டத்தோடும், அந்தணர் முதலான முனிவர்களோடும், சேனைகளோடும், மற்றுமுண்டாகிய குடிசனங்களோடும், வசிஷ்டனோடும் பரதன் புறப்பட்டுப்போனான் என்று சொல்லியிருக்கிறது.

ஆகையால் சான்றவர் என்றது சத்திரிய குலத்தவர்களையே குறித்தது.

மேற்படி கவியில் சான்றவர் என்றதை கல்விகற்றிருந்த சண்டாளகுலத்தவனையும், சூத்திரனையுமென்று அர்த்தம் பண்ணினால் பொருந்துமா? பொருந்தாதே.

(22) மேற்படி ராமாயணம், உத்தரகாண்டம்,

சீதை வனம்புகு படலம்,

27-வது கவி.

"விழிபெரும்பசலை பூத்தது மேனி வெளுத்தது மெல்லியல் முன்கை
தழுவியசரிகள் சரிந்தன கெற்பம் தரித்தது சான்றவர்க்கெல்லாம்
மொழிவனகபோல முலைகள்பால் பாய அவை முகங்கறுத்தனவாக
எழுதரும் சீதைக் கிவ்வகையாய இலக்கணம் பலவுமுண்டாக"

இதில், சீதைக்குக் கெற்பம் உண்டானது என்று காட்டும் அடையாளங்களைச் சொல்லியிருக்கிறது.

அப்படிச்சொல்லியதில் சான்றவர்க்கெல்லாம் கெர்பமுண்டானால் எப்படி அடையாளங்கள் காணப்படுமோ, அதுபோல சீதைக்கும் காணப்பட்டது என்று சொல்லியிருக்கிறது. சான்றவர் என்றதை கல்வியையுடையவர்களுக்கெல்லாம் என்று அர்த்தம்பண்ணினால் பொருந்துமா? பொருந்தாதே,

ஆகையால் சான்றவர் என்றது சத்திரிய குலத்தவனையே குறித்தது

(23) சூடாமணி நிகண்டு, மக்கட்பெயர்த்தொகுதி,

7-வது செய்யுள், 1-வது அடி.

"சான்றவர் மிக்கோர் நல்லோர் தகுதியோர் மேலோ ராய்ந்தோர்."

மேற்படி செய்யுள் அடியில், சான்றவர் என்னும் பதமானது நாம் முன் காட்டியிருக்கிற குலக்கிரம அட்டவணையில் திவாகர நூலாசிரியர் **சான்றோர்** என்று சொல்லியிருக்கிறதையே குறித்த பிரதிபதமாம் (மக்கட்பெயர்த்தொகுதி, 11-வது சூத்திரம் காண்க).

ஆகையால் சான்றவர் என்றது சத்திரிய குலத்தவரையே குறித்தது.

மூன்றாவது,

சான்றோர் என்னும் பெயர் அரசகுலப்பெயர் என்பதை திருஷ்டாந்தப் படுத்துவோம்.

(24) காகனார் அருளிச்செய்த நான்மணிக் கடிகை,

98-வது கவி.

"வடுச் சொனயமிலார் வாய்த்தோன்றும் கற்றார்வாய்ச்
சாயினும் தோன்றா கரப்புச்சொல்——தீய
பரப்புச்சொற் **சான்றார்** வாய்த் தோன்றா கரப்புச்சொல்
கீழ்கள்வாய்த் தோன்றிவிடும்."

இதில் சான்றார் வாயில் கரப்புச்சொல் தோன்றாது என்றும் கீழ் மக்கள் வாயில் கரப்புச்சொல் தோன்றும் என்றும் சொல்லியிருக்கிறது.

கீழ்மக்கள் என்பதற்கு யாழ்ப்பாணம் அகராதியில் **சண்டாளர்** என்று அர்த்தம் பண்ணியிருக்கிறது. மேற்படி அகராதியில் சொல்லியபடி சண்டாளர் பார்ப்பனத்தியிடத்தில் சூத்திரனுக்குக் களவில் பிறந்தவர்களாம். முன் பஞ்ச பட்சி சாஸ்திரத்தில் சண்டாளர்க்கு இழிகுலத்தோர் என்று சொல்லியிருக்கிறதையும் எடுத்துக்காட்டினோம். ஆதலால் கீழ்கள், அதாவது கீழ்மக்கள் இழிகுலத்தாரானபடியால் **சான்றார் உயர்ந்த சாதியார்** என்பது தானாய் விளங்குமே. அப்படியிருக்க சேலம் தக்ஷண தீபம் என்னும் பத்திரிகையில் S. V. (எஸ். வி) என்று கையொப்பமிட்டவர் உளறுகிறாரே அது என்னத்தினாலே? அது பித்த மயக்கமாகிய பொறாமை கொண்டபடியினாலேயே.

மேற் சொல்லிய நியாயங்களால் சான்றூர் என்பது சான்றோர், சான்றவர் என்னும் பதங்களுடன் ஒரே பொருட் கொண்ட பதமாக மாத்திரமல்ல, உயர்ந்த சாதிப்பெயர் என்பதும் தெளிவாய் விளங்கு கின்றது.

ஆகையால் சான்றூர் என்பது சத்திரிய குலத்தவரையே குறித்தது.

(25) பதினென் கீழ்க்கணக்குகளில் ஒன்றாகிய

சிறு பஞ்ச மூலம், 204-வது கவி.

"தான் பிறந்த இல் நினைந்து தன்னைக் கடைப்பிடித்து
தான் பிறரால் கருதற்பாடுணர்ந்து—தான் பிறரால்
சாகவென வேண்டாதான் **சான்றூரா** லெந்நாளும்
ஆகவென வாழ்தனன்று,"

இதில், எவனுகிலும் ஒருவன் ஆக்கினை பெருமலிருந்து வாழ விரும் பினுல் அவன் சான்றூராகிய அரசகுலத்தவரால் ஒப்பத்தக்க விதமாய் நடந்து கொள்ளவேண்டும் என்னு சொல்லியிருக்கிறது.

மேற்படி கவியில் "தான் பிறந்த இல் நினைந்து" என்று சொல்லியிருக் கிறதினுல் ஆக்கினை பெருமலிருந்து வாழ விரும்புகிறவன் தான் பிறந்த வீட்டை, அதாவது குலத்தை நினைத்து, அதாவது தான் அரசனுல் ஆளப் படுகிற குலத்தில் பிறந்தவனல்லவா என்பதை நினைக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. அன்றியும் அப்படி நினைக்கவேண்டியவன் சான்றூருக் குப் பிரியமுள்ளவனுக நடக்கவேண்டும் என்பதையும் நினைக்கவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறது. ஆனபடியால் சான்றூர் உயர்ந்த குலத்தவர் என்று அவன் அறிந்து கொண்டவன் என்று சொல்லியிருக்கிறது. அல்லா மலும் அந்தப்படி சான்றூரை மதித்து நடப்பது தன் ஜீவனுக்கு ஆதரவு, அதாவது சான்றூரால் ஆக்கினையடையமாட்டான் என்பதையும் அவன் தெரிந்திருக்கவேண்டியவன் என்று சொல்லியிருக்கிறது.

ஆகையால் சான்றூர் என்றது உயர்ந்த குல்த்தவராகிய சத்திரிய குலத்தவரையே குறித்தது.

(26) திரிகடுகம், 82-வது கவி,

"**சான்றூருட் சான்றூ**னெனப்படுத லெஞ்ஞான்றும்
தோய்ந்தாருட் டோய்ந்தானெனப் படுதல்—பாய்ந்தெழுந்து
கொள்ளாருட் கொள்ளாத கூறுமையிம்மூன்றும்
நல்லாள் வழங்கு நெறி,"

இதில், சான்ருண்மை நிறைந்த அரசகுலத்தாருக்குள் நிச்சயமாகவே சான்ருண்மை நிறைந்தவன் என்று ஒப்புக்கொள்ளும்படி நடந்துக்கொள்ளுதல் அம்மேன்மக்களுடைய கருத்து என்று சொல்லியிருக்கிறது.

அன்றியும், மேற்படி செய்யுளில் ஒருவன் அரசகுலத்தவனுக இருப்பதுமாத்திரம் போதாது, அரசகுலத்தவர்களுக்குரிய லட்சணங்கள் பொருந்தியவனுகவும் இருக்கவேண்டும் என்று காட்டியிருக்கிறது.

ஆகையால் சான்ருர் என்றது சத்தியகுலத்தவரையே குறித்தது.

(27) தொல்காப்பியம், 9-வது குற்றியலுகரப்

புணரியல் 20-வது சூத்திரம்.

"அல்லது கிளப்பினெல்லா மொழியும்
சொல்லிய பண்பினியற்றை யாகும்."

இந்தச் சூத்திரத்திற்கு உரை எழுதிய இளம்பூரணர் "ஐ என்னும் சாரியைபெற்றுவரும் அல்வழி முடிபுக்கு உதாரணம் :—பண்டைச்சான்றர், மற்றையானை, அன்றைத்தினம்" என்று சொல்லியிருக்கிருர்.

மேற்படி உரையில் "பண்டைச்சான்ருர்" என்றதை முன் 41-ம் வினவிற்குச் சொல்லிய விடையில் (17) இலக்கத்தின்கீழ் "முதுகுடிப் பிறந்த சான்றோர்" என்று சொல்லியதோடே ஒப்பிட்டுப்பார்த்தால் சான்ருர் பூர்வமுதலுள்ள சத்திரியரென தொல்காப்பியப் பிரகாரம் சரியாய் விளங்கும்.

ஆகையால் சான்ருர் என்றது சத்திரிய குலத்தவரையே குறித்தது.

(28) யாழ்ப்பாணம் அகராதியில் "சான்றர் ஓர் சாதியார்" என்று சொல்லியிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் நாளதும் அப்படியே வழங்கி வருகிறது. சான்ருர் என்னும் பதமானது சான்றவர், சான்ரேர் என்னும் பதங்களுடன் ஒரே பொருட்கொண்டதென முன் தெளிவாய்க் காட்டியிருக்கிரேம்.

ஆகையால் சான்ருர் என்றது சத்திரியகுலத்தவரையே குறித்தது.

(29) மதிராஸ் கல்விச்சங்கத்தைச் சேர்ந்த

வேலாயுத முதலியார் பெரிய புராணம்

என்ற நூலில்,

"சான்றர் தலம்" என்று சொல்லியிருக்கிறது.

சான்றார் என்னும் பதமானது சான்றவர், சான்றோர் என்னும் பதங்களுடன் ஒரே பொருட்கொண்ட பதம் என்று முன் தெளிவாய் விளங்கக் காட்டியிருக்கிறோம்.

(30) தமிழ்—இங்கிலிஷ் அகராதி எழுதிய உயின்ஸ்லோ பண்டிதர் (Dr. Winslow),

மேற்படி அகராதியில் சான்றார் என்னும் பதத்துக்கு அடியில் "சான்றார்" என்னும் பதம் "சான்றோர்" என்னும் பதம்போல் அறிவுடையோரைக் குறித்தது என்கிறார்.

சான்றார், சான்றோர் என்னும் பதங்கள் சத்திரியகுலத்தவரைக் குறித்தது என்று முன் தெளிவாய்க் காட்டியிருக்கிறோம்.

(31) பெரிய புராணத்திலுள்ள ஏனாதிநாதநாயனார் புராணம்,

உ-வது கவி.

"வேழக்கரும்பினொடு மென்கரும்பு தண்வயலிற்
றாழக்கதிர் சாலி தானோங்கும் தன்மையதாய்
வாழக் குடிதழைத்து மன்னியவப் பொற்பதியில்
ஈழக்குலச் சான்றாரேனாதிநாதனார்."

இதில், ஏனாதிநாத நாயனார் சான்றார் குலத்தில் உதித்தவர் என்று சொல்லியிருக்கிறது. பெரியபுராணவசனத்திலும் இந்த நாயனார் சான்றார் குலத்தில் அவதரித்தவர் என்று சொல்லியிருக்கிறது. ஆறுமுகநாவலரால் அச்சிடப்பட்டிருக்கிற பெரியபுராண வசனத்தில் ஏனாதிநாத நாயனார் "சான்றாரத்திருமேனி" என்று சொல்லியிருக்கிறது. திருமேனி என்பதற்கு மேன்மையுள்ள சரீரம், அல்லது மேன்மையுள்ள குலத்தவர் என்பது பொருளாம்.

பெரியபுராணத்தில் சான்றார் எனச்சொல்லியிருக்கிறதற்கு ராட்லர் (Rotler) எழுதிய அகராதியில ஈழக்குலச்சான்றோன் அறுபத்து மூவரிலொருவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் சான்றார் என்பதும், சான்றோர் என்பதும் ஒரே பொருள் எனக்காட்டியிருக்கிறது. அவர் அப்படிச் சொல்லியதற்கு ஏட்டுப்பிரதிகள் ஆதாரம் முன் சொல்லியபடி, யாழ்ப்பாணம் அகராதியில் "சான்றார் ஓர் சாதியார்" என்று மாத்திரம் அர்த்தம் கொடுத்திருக்கிறது. அன்றியும் மேற்படி அகராதியில் "ஈழக்குலச் சான்றான்" என்று சொல்லியிருக்கிறது. ஆனபடியால் சான்றோன் என்னும் பதமும், சான்றான் என்னும் பதமும் ஒரே பொருள் கொண்டதாக சான்றார் குலத்தைக்குறிக்கிறது. முன் சான்றவர், சான்

ஞேர் சான்ஞர் என்னும் மூன்று ரூபமான பதங்களும் ஒரே பொருட் கொண்டது என்று திருஷ்டாந்தப்படுத்தியிருக்கிறோம்.

ஆகையால் சான்ஞர் என்றது சத்திரியகுலத்தவனையே குறித்தது.

இதுவரையில் நாம் காட்டிய நியாயங்களால் சான்றேர், சான்றவர் சான்றர் என்னும் மூன்று பதங்களும் ஒரே பொருட்கொண்ட பதங்கள் என்றும், அவைகள் பார்ப்பனக்குலத்தவர்க்கு உரித்தானதேயல்ல என்றும் அப்பெயர்களையுடையவர்கள் சத்திரிய குலத்தவர்களே என்றும் திருஷ்டாந்தப்படுத்தியிருக்கிறோம்.

42. வினு.—குலக்கிரம அட்டவணையில் சான்றேர் என்பதுடன் ஒரே பொருளில் வந்திருக்கிற பெயர்கள் சத்திரிய குலத்தவர்க்கு வழங்கும் என்பதற்கு ஆதாரம் என்ன?

விடை.—முன் சொல்லியபடி சான்ஞேர் என்னும் பெயருடன் ஒரே பொருட்கொண்ட பெயர்கள் "மிக்கோர், நல்லவர், மேலவர், ஆய்ந்தோர், உயர்ந்தோர், ஆரியர், உலகு, ஆன்ஞேர், அறிவுடையோர்" என்பவைகளாம்.

அவைகளில் "அறிவுடையோர்" என்பதற்கு முன்னே விபரம் சொல்லியிருக்கிறோம். இப்போது மற்றவைகளுக்கு சுருக்கமாக நூலாதாரங்களைச் சொல்லுவோம்.

(2) மிக்கோர், மிக்கவர், மிக்சார்.

மிக்கோர்=Great men, Noble men=மேன்மக்கள்.

சான்ஞேர் என்னும் சத்திரியகுல கௌரவப்பட்டப் பெயர் பார்ப்பனக் குலத்தவர்க்கு ஏற்காதிருந்தும் மிக்கோரென்னும் பெயர் அவர்களுக்கும் ஏற்கும். ஆகையால் 8-வது குலக்கிரம அட்டவணைச் சூத்திரத்தில், பார்ப்பனக் குலத்தவர்க்கு மிக்கவர் என்னும் பெயர் வந்திருக்கிறது. அரசகுலத்தவர் குலத்தாலும், குணத்தாலும், கொடையாலும், புஜபலத்தாலும், அறிவாலும், மிக்கவர் ஆகின்றனர்.

அரிச்சந்திர புராணம், விவாககாண்டம்,
247-வது கவி.

"வஞ்சி வழங்கிய மாலை யணிந்தோன்
செஞ் சுடரின்முக நின்றொளி செய்ய
வெஞ்சுடர் முன் சசியாமென மிக்கோர்
கஞ்சமுகங்கள் கரிந்தன வன்றே."

இதில், சந்திரமதியின் கையிலிருந்து வந்த பூமாலையையணிந்த அரிச்சந்திரனுடைய முகமானது சூரியகாந்திபோல் பிரகாசிக்க மற்ற அரசர்களுடைய தாமரை போன்ற முகங்கள் சூரியவொளிமுன் சந்திரன் எப்படி ஒளி மங்கியிருக்குமோ அப்படியிருந்தது எனச்சொல்லியிருக்கிறது.

மிக்கோர் என்று கவியில் சொல்லியிருக்கிறதற்கு தாற்பரியவுரையில் அரசர்கள் என்று சொல்லியிருக்கிறதை அறிந்துகொள்ளலாம்.

ஆகையால் மிக்கோர் என்னும் பதம் சான்றோர் என்னும் பெயருடன் ஒரு பொருட்கொண்ட பதமாம்.

(3) நல்லவர்.

நல்லவர்=Excellent men, Great men, Noble men=மேன்மக்கள்.

இதுவும் சான்றோர் என்னும் கௌரவப்பட்டப் பெயருடன் ஒரு பொருட்கொண்ட பதமாம். சான்றோர் என்னும் பெயர் பார்ப்பனக்குலத்தவர்க்கு ஏற்காதிருந்தும் நல்லவர் என்னும் பெயர் அவர்களுக்கும் ஏற்கும்.

கம்பராமாயணம், பாலகாண்டம்,

கார்முகப்படலம், 32-து கவி.

"தோகையரின்னன சொல்லி நல்லோர்
ஓகை விளம்பிடவும் பருவப்ப
மாகமடங்கலும் மால்விடையும் பொன்
நாக முநாக முநாண நடந்தான்."

இதில், மணமங்கல வில்லை நாணேற்றுதற்கு ராமர் எழுந்து நடந்து போகிறதைக்கண்ட ஜனங்கள் எல்லாரும் பற்பலவிதமாகப் பேசிப்புகழ்ந்தனர் எனவும், அதைக்கேட்டு ராஜ சபையார் எல்லாரும் களிப்படைந்தனர் எனவும் சொல்லியிருக்கின்றது.

இங்ஙனம், "நல்லோர்" எனப் பெயர் பெற்றிருக்கிறவர்கள் ராஜ சபையிலிருந்த அரசகுலப் பெரியோர்களாகிய சான்றோராம்.

ஆகையால் நல்லவர் என்னும் பதம் சான்றோர் என்னும் பெயருடன் ஒரு பொருட்கொண்ட பெயர் என்பது தெளிவாம்.

(4) மேலவர்.

மேலவர்=Noble men=மேன்மக்கள்.

மேலவர் என்னும் பெயர் மேன்மை என்னும் பண்புச் சொல்லி

லிருந்து பிறந்த பலர்பாற் பெயராம். மேலவர் என்பதற்கு மேன்மையுடையோர், மகத்துவமுடையோர், மேன்மக்கள், அரச குலத்தவர் என்பது பொருளாம்.

கல்வியையுடைய எந்தக் குலத்தவர்க்கும் மேலோர், மேன்மக்கள் என்னும் பெயர்கள் ஏற்கவேமாட்டாது. பூர்வ குலமேன்மையையுடையவர்களுக்கு மாத்திரம் பூர்வ ஏற்பாட்டில் அப்பெயர்கள் ஏற்கும்.

நாலடியார், 16-வது அதிகாரத்தில்;

"மேன்மக்கள்" என வந்திருக்கின்ற பெயர் அரசர் குலத்தவர்களுக்கே உரிய சிறந்த பூர்வப் பட்டப்பெயர் என அறிந்துகொள்ளலாம்.

மூதுரை, 4-வது கவி.

"அட்டாலும் பால் சுவையிற் குன்றாதளவல்ல
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்—கெட்டாலும்
மேன்மக்கள் **மேன்மக்களே** சங்கு சுட்டாலும்
தான் மிக்க வெண்மை தரும்."

இதில், "சங்கு சுட்டாலும் தான் மிக்க வெண்மை தரும்", "கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே" எனச் சொல்லியிருக்கிறது. அதற்கு வெண்மைபொருந்திய சங்கை நீற்றவே அதின் நிறங்குன்றாது. பின்னும் அதிக வெண்மை நிறமாக விளங்கும். அதுபோல சத்திரிய குலத்வர்களாகிய மேன்மக்கள் தரித்திரமடைந்து பெலன் கெட்டுப் போன போதிலும் சத்திரிய குலத்துக்குரிய மேம்பாடான கருமங்களில் குன்றார்கள். "கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே=The Noble will be Noble still though they be reduced to poverty." மேற்படி கவியில் வந்திருக்கிற மேன்மக்கள் என்பது அரச குலத்தவர்களைக் குறித்த சான்றோர் என்னும் பெயருடன் ஒரு பொருட்கொண்ட பதமாம்.

ஆத்திச்சூடி, 94-வது கவி.

"**மேன்மக்கள்** சொற்கேள்."

இதற்கு, அரசர் குலத்தவர்களாகிய துரைத்தனத்தார் கட்டளைக்கு இணங்க நடந்துவா என்பது பொருளாம்.

முன் சிறுபஞ்சமூலம் என்னும் நூலிலிருந்து எடுத்துக் காட்டிய கவியையும் இதனோடே ஒத்திட்டுப்பார்க்கவேண்டியது.

குறள், 98-ம் அதிகாரம், 3-வது கவி.

"மேலிருந்து மேலல்லர் மேலல்லார் கீழிருந்தும்

கிழல்லார் கிழல்லவர்."

இதில், கயவராகிய கீழ்மக்கள் மேன்மக்களுடைய தானத்துக்கு வந்தபோதிலும் மேன்மக்களாகமாட்டார்கள். மேன்மக்கள் கை கெட்டுப்போய் கீழ் மக்களுடைய தானத்திலிருந்தபோதிலும் கீழ் மக்களாகாமல் மேன்மக்களாகவே விளங்குவார்கள் என்று சொல்லியிருக்கிறது.

ஆகையால் மேலவர் எனப் பெயர்பெற்ற மேன்மக்கள் அரசர் குலத்தவர்களாய் சான்றோர் என்னும் கௌரவப் பட்டப் பெயர் பெற்றவர்களாவார்கள் எனத் தெளிவாய் விளங்குகிறது.

(5) ஆய்ந்தோர்.

சான்றோர் என்னும் பெயர் பார்ப்பனக்குலத்தவர்க்கு ஏற்காதிருந்தும் ஆய்ந்தோர் என்னும் பெயர் அவர்களுக்கும் ஏற்கும். ஆய்ந்தோர் என்னும் பெயர் சான்றோர் என்னும் பெயருடன் ஒரு பொருட்கொண்டதற்கு உதாரணங்கள் வருமிடங்களிற் கண்டுகொள்க.

(6) உயர்ந்தோர்.

உயர்ந்தோர் என்னும் பெயர் பார்ப்பனக் குலத்தவர்க்கும் அரசகுலத்தவர்க்கும் ஏற்கும். உயர்ந்தோர் என்னும் பெயர் சான்றோர் என்னும் பெயருடன் ஒரு பொருட்கொண்டதற்கு உதாரணங்கள் வருமிடங்களிற் கண்டுகொள்க.

(7) ஆரியர்.

ஆரியர் என்னும் பெயருக்கு உற்பத்தி நாலு வகைப்படும்.

(1) ஆரியம் என்பது இமயமலைக்கும் விந்தியமலைக்கும் இடையிலுள்ள நாடாம். அந்த நாடு ஆரியவர்த்தம் எனவும் சொல்லப்பட்டது பார்ப்பனக்குலத்தவரும் அரச குலத்தவரும் அந்த ஆரிய நாட்டில் முதலாவது வாசம் பண்ணினவர்களானபடியால் அவர்களுக்கு **ஆரியர்** என்று பெயர்.

(2) ஆரியம் என்பது சமஸ்கிருதப் பாஷைக்கு ஒரு பெயராம். பார்ப்பனக்குலத்தவரும், அரசகுலத்தவரும் சமஸ்கிருதப் பாஷையில் பாண்டித்தியமுடையவராயிருந்தபடியால் அவர்களுக்கு **ஆரியர்** என்று பெயர்.

(3) "ஆரி" என்பதற்கு "மேன்மை" என்றர்த்தம். பார்ப்பனக்குலத்தவரும், அரசகுலத்தவரும் மேன்மை பொருந்தியவர்களானபடியால் அவர்களுக்கு **ஆரியர்** என்று பெயர்.

(4) "ஆரி" என்பதற்கு "மாலை" என்றர்த்தம். (யாழ்ப்பாணம் அனுபந்த அகராதியில் காண்க). ஆரி என்னும் பதத்திலிருந்து உற்பத்தியான பதம் ஆரியர் என்பதாம். பார்ப்பனக் குலத்தவர்க்கு மாலை என்று பொருளுள்ள ஆரியர் என்னும் பெயர் நூல்களில் வரவேமாட்டாது. ஏனெனில் பார்ப்பனக் குலத்தவர்க்கு மாலை உரிமை கிடையாது. சத்திரிய குலத்தவர்கள் மாலை தரிக்கவேண்டியவர்கள். இதற்கு நாம் நூலாதாரம் காட்டவேண்டியதில்லை. எவர்களும் இதை அறிவார்கள். மாலை தரித்த காரணத்தாலும் சத்திரியருக்கு **ஆரியர்** என்று பெயர். சோழனுக்கு ஆத்திமாலையும், சேரனுக்கு பனைமாலையும், பாண்டியனுக்கு வேப்பமாலையும் உண்டு என்பதை யாவரும் அறிவார்கள். ஆரியர் என்பது சான்றோர் என்ற பெயருடன் ஒரு பொருட்சொண்டதாம்.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், வனம்புகு படலம், 1-வது கவியிலும், ஆரணியகாண்டம், மாரீசன் வதைப்படலம் 229-வது கவியிலும், அந்தப்படி அநேக கவிகளிலும் ஆரியன் என்று சொல்லப்பட்டிருக்கிறதை அறிந்துகொள்ளலாம்.

(8) உலகு.

உலகு என்பது இடவாகு பெயர்.

உலகு = உயர்ந்தோர், மேன்மக்கள், அரசகுலத்தோர்.

திவாகரம், மக்கட்பெயர்த் தொகுதி, 17-வது சூத்திரம்.

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே."

உலகு என்பதும், உலகம் என்பதும், ஒரே பொருளுள்ளதாம். உலகம், அல்லது உலகு என்பதற்கு உயர்ந்தோர், நாடு, பூமி என்றர்த்தம். உயர்ந்தோராகிய அரசகுலத்தவரே பூமிக்குச் சொந்தமானவர்கள் என்றும், பூமியில் மிகவும் உயர்ந்தவர்கள் என்றும் காட்டுகிறதற்காக 11-வது சூத்திரத்தில், உலகு என்று அரசகுலத்தவர்க்குச் சொல்லிய நூலாசிரியர் உலகம், என்று பின்னும் விசேஷித்து 17-வது சூத்திரத்தில் சொல்லுகிறார்.

கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், நகர்நீங்கு படலம், 44-வது கவியிலும், 50, 53-வது கவிகளிலும், குறள், 47-வது அதிகாரம், 10-வது கவியிலும், 67-வது அதிகாரம், 10-வது கவியிலும் காண்க.

(9) ஆன்றோர்.

ஆன்றோர் = சான்றோர், நிறைந்தோர் = Great men, Noble men.

கம்பராமாயணம், கைகேசி சூழ்வினைப்படலம், 8-வது கவி, அயோத்தியா காண்டம், நகர்நீங்குபடலம், 138-வது கவி, மேற்படி காண்டம் குகப்படலம், 5-வது கவி முதலானவை காண்க,

புத்தியையுடைய ஒருவன் சான்றோர் என்னும் பதத்துடன் ஒரு பொருட்கொண்டதும், மேலே நாம் எடுத்து காட்டியதுமான பதங்களையும், அவைகளைக்குறித்து நாம் காட்டிய விவரங்களையும் கவனித்துணர்வானேயானால் சான்றோர், சான்றவர், சான்றார் என்னும் குலத்தவர் சத்திரிய குலத்தவர் என்பதைத் திட்டமாய் அறிந்துகொள்வான்.

43. வினா.—தமிழ்ச்சத்திரியர்க்குரியகுலப்பட்டப்பெயர்கள் எவை?

விடை.—தமிழ்ச் சத்திரியர்க்குரிய குலப்பட்டப் பெயர்கள் நாடான், நாடன், நாட்டான், நாட்டாள்வான், நாடாள்வான், நாடுடையான் என ஒருமையிலும், நாடார், நாடர், நாட்டார், நாட்டார்கள், நாடாள்வார், நாட்டாள்வார், நாடுடையார் எனப்பன்மையிலும், நாடாய்ச்சி, நாடாட்சி, எனப் பெண்பால் ஒருமையிலும், நாடாய்ச்சிமார், நாடாட்சிமார், எனப்பெண்பால் பன்மையிலும் வழங்கப்படுவனவாம்.

முன் 26-ம் வினாவுக்குக்கூறிய விடையில் மேலே சொல்லிய குலப்பட்டப்பெயர்களின் பொருளை ஒருவாறு விவரித்திருக்கிறோம்.

ஆரியவர்த்தநாட்டில் பூமியால் என்பது அரசகுலத்தவர்க்குக் குலபட்டப் பெயராக வழங்குகிறதுபோலவே தமிழ் நாட்டில் பூமியாஸ் என்பதற்குச்சரியான நாடான், நாடன் முதலான பட்டப்பெயர்கள் வழங்குகின்றன.

அரசு, அதாவது பூமிக்குக் கடவுள் அதிபதியானபடியால் கடவுளுக்கு அரசன் (A king, God) என்று பெயர். அரசன் ஆனவன் தனக்கு கடவுளால் கொடுக்கப்பட்ட பாத்தியப்படிக்கு பூமிக்கு அதிபதியானதினால் அரசனுக்கு நாடான், அல்லது நாடன் (Lord) என்று பெயர்

அரசன் நாட்டுக்குத்தலைவனாக இருக்கிறதுபோல அவனுடைய மனைவி நாட்டுக்குத்தலைவியாக இருக்கிறதினால் அவளுக்கு அரசி, நாடாய்ச்சி (A queen, a Lady) என்று பெயர்.

நாடாய்ச்சி என்னும் பதமானது நாடு எனவும், * ஆய்ச்சி எனவும் இரண்டு வார்த்தைகள் ஒன்றுசேர்ந்த பகுபதமாம். அன், ஆன் என்பவை ஆண்பாலைக்குறிக்கும் விகுதிகளாகச் சேர்க்கப்பட்டு நாடான், நாடன்

---

* ஆய்ச்சி—தாய். அரசன் மனைவி பிறர்க்குத் தாய். (யாழ்ப்பாணம் அகராதியில் தாய் என்னும் பதம் காண்க.)

என வழங்குகிறதுபோல ஆய்ச்சி என்பது தலைவி, அல்லது மாது (அல்லது அரசனானவன் எவ்விதம் பூமிக்குத் தகப்பன்போல் இருக்கிறானோ அவ்விதமாக அவனுடைய மனைவியானவள் பூமிக்குத்தாயாக இருக்கிறாள்) என்று பொருள் கொடுக்கும்படி விகுதியாகச்சேர்க்கப்பட்டு நாடாய்ச்சி என வழங்கப்படுகிறது. (நாடான் = A king, a lord) *நாடாய்ச்சி = A queen, a lady.)

அன்றியும் அரசாணி என்னும் பதமானது அரசு எனவும் ஆணி எனவும் இரண்டு வார்த்தைகள் ஒன்று சேர்ந்த பகுபதமாம். அரசு என்பதற்கு நாடு என்றும், ஆணி என்பதற்கு முதன்மை, மேன்மை என்றும் அர்த்தம். அரசாணி என்பதற்கு நாட்டுக்கு முதன்மையானவள், நாட்டு மேன்மையைப் பொருந்தியவள் அதாவது அரசி, இராசாத்தி (Queen) என்றர்த்தம். அதுபோலவே நாடாட்சிஎன்னும் பதமானது நாடு எனவும் ஆட்சி எனவும் இரண்டு வார்த்தைகள் ஒன்றுசேர்ந்த பகுபதமாம். நாடு என்பதற்கு "பூமி" என்றும், ஆட்சி என்பதற்கு "உரிமை" என்றும், "ஆளுகை" என்றும் அர்த்தமாம். நாடாட்சி என்பதற்கு நாட்டுரிமைக்காரி, நாட்டாளுகையுடையவள் அரசி, இராசாத்தி என்றர்த்தம்.

ஆகவே அரசன், அரசி; நாடான், நாடன், நாடாய்ச்சி; அரசர், நாடார், நாடார்கள், நாடார்கள்மார், நாடர், நாட்டார், நாடாய்ச்சிமார், நாடாட்சிமார்.

44. வினு.—நாடு அல்லது பூமியானது அரசருக்குச் சொந்தம் என்பது எப்படி?

விடை.—பார்ப்பனக் குலத்தவனாவது, வைசிய குலத்தவனாவது, சூத்திர குலத்தவனாவது, சங்கர குலத்தவனாவது ஒரு பூமியை எத்தனை லட்சம் ரூபாய்க்குக் கிரயத்தில் வாங்கியிருந்தபோதிலும், அரசனானவன் மேற்படி நிலத்தை அனுபவிக்கிறவனைப்பார்த்து "இந்த நிலத்தை நீ விட்டுவிட்டுப்போ" என்று சொன்னால் நிலத்தை அனுபவிக்கிறவன் அந்தப்படி அந்த நிலத்தை அரசனுக்கு விட்டுவிடவேண்டும். நிலத்தைப்பயிரிட்டு அதில் தங்களுக்கு வரவேண்டிய பாகத்தை மாத்திரம் பிரஜைகள் எடுத்துக்கொள்வதற்கும், மேற்படி பூமியானது ஏற்றமனையானால், அதைப் பிரஜைகள் வீடுகள் அனுபவிக்கவும் பாத்தியமுண்டு. ஆகிலும் அதற்கும் வரி, அல்லது தீர்வையை அரசனுக்குச் செலுத்தவேண்டியது. மேற்படி நிலத்தை அரசன் தனக்குப்பிரியமான யாருக்காவது விடவும், அரசனை

* ஆய்ச்சி—தாய், அரசன் மனைவி பிறர்க்குத்தாய். (யாழ்ப்பாணம் அகராதியில் தாய் என்னும் பதம் காண்க.)

எதிர்க்கிறவனை அரசன் கொன்றுபோடவும் அரசனுக்குப் பாத்தியமுண்டு. இவ்விபரம் யாவருக்கும் தெரிந்த விஷயம். இதினாலேயே நாம் முன்சொன்னபடி ஆரியவர்த்த நாட்டில் ராஜனுக்கு பூமியால் என்றும், தமிழில் அரசன், அதாவது பூமியையுடையவன், நாடான், கோமான், பார்த்திவன் எனவும் பெயர்கள் உண்டாயின.

45. வினா.—நாடான் முதலான குலப்பட்டப் பெயர்கள் சத்திரிய குலத்தவர்க்கு உண்டு என்பதற்கு நூல் சாட்சிகள் உண்டோ?

விடை.—நாடான் முதலான குலப்பட்டப் பெயர்கள் சத்திரிய குலத்தவர்க்கு உண்டு.

முதலாவது,

நாடான் என்னும் பெயர் அரசகுலப் பட்டப்பெயர் என்பதை திருஷ்டாந்தப்படுத்துவோம்.

(1) நளவெண்பா, 25-வது கவி.

" வான்றோய நீண்டுயர்ந்த மாடக்கொடி நுடங்க
தான்றோன்று மற்றித்தடம் பதிதான்—வான்றோன்றி
வில்விளக்கே பூக்கும் விதற்ப **நாடானு**டைய
நல்விளக்கே எங்கணகர். "

இதன்பொருள், நளன் தமயந்தியை விவாகஞ்செய்துகொண்டு தன் நாடு வரும்போது விதற்ப அரசன் மகளாகிய மணவாட்டியைப்பார்த்து, மாளிகைமேல் கொடிச்சீலை அசைந்தாடும்படியாகத் தோன்றுகிற நகர் தான் எங்களுடையது என்று சொன்னான் என்பதாம்.

கவியில் நாடான் என வந்ததற்கு அரசன் என்று உரையில் சொல்லியிருக்கிறது.

ஆகையால் நாடான் என்பது அரசன் என்னும் பெயருடன் ஒரு பொருளில் வந்து, தமிழ்ச்சத்திரியகுலப் பட்டப்பெயராக வழங்கியிருக்கிறது என்று அறியலாம்.

(2) அருணாசலப் புராணம், வச்சிராங்கத பாண்டியன் சருக்கம், 40-வது கவி.

" வேழமும் பரியும் தேரும் வீரரும் சுவடுநாடி
சூழ மந்திரிகளோடும் சூழ்ந்தனர் துயரந்தீர்ந்தான்
தாழையின் கமுகின் காடும் தவழவான் கதிரைத்தீண்டும்

வாழையும் கரும்பின் சாற்றின் வளர்ந்திடும் வையை
நாடான்."

இதன்பொருள். "யானையும் குதிரையும் தேரும் காலாட்களும் அடி பற்றிக்கொண்டு மந்திரிகளுடனே ராசாவைச் சுற்றிக்கொண்டார்கள். அப்போது விசனம் நீங்கினான் தென்னமரங்களும், சமுகு வனமும், சந்திரனைத்தழுவும் வாழைமரங்களும் கரும்பின் சாற்றினால் வளர்ந்திடும் பாண்டிய நாட்டுக்கரசனாகிய வச்சிராங்கத பாண்டியன்" என்பதாம்.

கவியில் நாடான் என வந்ததற்கு உரையாசிரியர் **நாட்டுக்கரசன்** என்று அர்த்தம் எழுதியிருக்கிறார்.

ஆகையால் நாடான் என்பது அரசன் என்னும் பெயருடன் ஒரே பொருளில் வந்து தமிழ்ச் சத்திரியகுலப் பட்டப்பெயராக வழங்கியிருக்கிறதென அறியலாம்.

(3) திருவாதவூரர் புராணம், குதிரையிட்ட சருக்கம், 59-வது கவி.

"சித்தருக்கன்பு பூண்ட சித்தரு முறுவ லெய்தி
நித்திலத் தொளிபோல் மின்னு நீறெனுஞ் சாந்து பூசி
பத்தருக்கேவல் செய்வார் பதமலர் முடியிற் சூட்டி [றார்.
முத்தமிழ் பொருநை **நாடான்** முன்பு சென்றருகினின்

இதன் பொருள். "சித்துவித்தை காட்டிய கடவுளிடத்தில் அன்பு வைத்த சித்தத்தையுடைய திருவாதவூரரும் புன்சிரிப்புக்கொண்டு, முத்துப் பிரகாசத்தைப்போல் பிரகாசியாநின்ற திருமேனியில் திருநீராகிய சந்தனத்தைப் பூசி அடியவர்க்கேவல் செய்வாராகில் கடவுளுடைய பாதாரவிந்தங்களை சிரமேல் வைத்துக்கொண்டு, இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் வளர்க்கின்ற பொருநை நாடனாகிய பாண்டியராஜன் முன்னேபோய் பக்கத்தில் நின்றார்" என்பதாகும்.

கவியில், நாடான் என வந்ததற்கு உரையாசிரியர்நாடனாகிய பாண்டிய ராஜன் என்று எழுதியிருக்கிறார்.

ஆகையால் நாடான் என்பது அரசன் என்னும் பெயருடன் ஒருபொருளில் வந்து தமிழ்ச்சத்திரியகுலப் பட்டப்பெயராக வழங்கியிருக்கிறது என அறியலாம்.

(4) வீரகுமார நாடகம், 8-ம் பக்கம்.

"கதிர்மதி தவழுஞ் சோலைக் கடிமல ரெடுத்த தேனும்
நதியெனப் பெருகி யோடி நாடிடும் விசய **நாடான்**

அதிபதி மகுடதாரி அரசர்கள் புகழுந்தீர
துதிபெரும் வீர சூர துரந்தரன் கொலுவந்தானே ."

இக்கவியில், வீரசூரமகாராஜனுக்கு விசையநாடான் என்று பெயர் சொல்லப்பட்டிருக்கிறது. விசையநாடான் என்பதற்கு விசைய அரசன், அதாவது விசைய நகரத்தரசன் என்பது பொருளாம்.

முன் களவெண்பாவிலிருந்து எடுத்துக்காட்டியபடி விதற்பம் என்னும் நாட்டரசனுக்கு "விதற்பநாடான" என்று சொல்லப்பட்டதுபோல் இவ்விடம்விசையம் என்னும் நாட்டரசனுக்கு"விசையநாடான்" என்னும் பெயர் பட்டப்பெயராக வந்திருக்கிறது.

ஆகையால் நாடான் என்பது அரசன் என்னும் பெயருடன் ஒரு பொருளில் வந்து தமிழ்ச் சத்திரியகுலப் பட்டப்பெயராக வழங்கியிருக்கிறது என அறியலாம்.

(5) பழனி ஸ்தலப்புராணம், 10-வது கவுசலசேரன்
அர்ச்சித்த சருக்கம், 9-வது கவி.

" தடித்த பொற்பொது முதலநீர் நாட்டுள நகரும்
வடித்த முத்தமிழ் மதுரையும் குமரியும் பிறவும்
கொடித்த டஞ்சிலைக் கோதை நாட்டினி லெழுபதியும்
கடித்திகழ்ந்தமென் மலரினுல் கைகுவித் திறைஞ்சி "

இதன்பொருள். எதிர்நடனம் புரிந்த சிதம்பர முதலாய காவிரி நாட்டுக்குள்ளுண்டாகிய சிவாலய நகரங்களும், தெள்ளிமைப்பட்ட இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழை வளர்த்த, மதுரையும், கன்னியாகுமரிமுதலான தலங்களும் விசாலமான விற்கொடியையுடைய சேரனுடான் கொங்குநாட்டினிலெழுசிவாலயங்களும் வாசம் செம்மையும் மிருதுவும்போன்ற புட்பங்களால் அர்ச்சித்து இரண்டு செங்கையும் குவித்து நமஸ்காரஞ் செய்தருளினுன்" என்பதாம்.

உரையாசிரியர் சேரநாடான் என்றுசொல்லியதற்கு "சேர அரசன்" என்பது பொருளாம்.

ஆகையால் நாடான் என்பது அரசன் என்னும் பெயருடன் ஒருபொருளில் வந்து தமிழ்ச்சத்திரியகுலப்பட்டப்பெயராக வழங்கியிருக்கின்றது என அறியலாம்.

(6) "பச்சை நாடான் வாழை"

வாழைக்கு அரசன் பச்சை நிறத்தையுடைய வாழையாம், ஆதலால் அதற்கு பச்சைநாடான் வாழை என்று பெயர்.

இதில் நாடான் என்பது அரசன் எனப்பொருளாகிறது. தற்காலத்தில் பச்சைநாடான் என்னும் பெயர் மனுஷருக்குள் சிறப்புப்பெயராக வழங்கிவருகின்றது என்பது எல்லாருக்கும் தெரிந்தகாரியம். நாடான் என்னும் குலப்பட்டப்பெயர் பச்சை முதலான பண்புப்பெயர்களோடும், நாட்டுப்பெயர்களோடும், நதிப்பெயர்களோடும் வழங்கிவருகின்றன. உதாரணமாக: பச்சைநாடார், மதுரைநாடார், காவேரிநாடார், குட்டநாடார், பெருமாள்நாடார், வீரபத்திரநாடார், அரசகுமாரநாடார், மயிலேறும்பெருமாள்நாடார், கணபதிநாடார், மற்றுமன்ன.

இரண்டாவது,

நாடன் என்னும் பெயர் அரசகுலப்பட்டப்பெயர் என்று திருஷ்டாந்தப்படுத்துவோம்.

(7) பாரதவெண்பா, உத்தியோகப்பருவம், 10-வது கவி.

"அச்சஞ்சூழ் சாப மரசழிய வந்தவன்தன்
மச்சஞ்சூழ் **நாடன்** மகனோடும்—பிச்சஞ்சூழ்
மாச்சுற்றத் தேர்ச்சுற்ற மாயவன்றான் வந்தான்றன்
கோச்சுற்ற மத்தனையுங் கொண்டு."

இக்கவியில், "மச்சஞ்சூழ்நாடன் மகனோடும்" என்பதற்கு மச்சநாட்டைச்சூழ்ந்த நாடாளும் மன்னன் மகன் என்று அர்த்தஞ்சொல்லியிருக்கிறது

ஆகையால் நாடன் என்பது அரசன் என்னும் பெயருடன் ஒருபொருளில் வந்து தமிழ்ச்சத்திரியகுலப் பட்டப்பெயராக வழங்கியிருக்கிறது என அறியலாம்.

(8) பாரதம், ஆதிபருவம், வாரணவதச்சருக்கம், 64-வது கவி.

"மருவி நின்றருக்கன் மைந்தன் வான **நாடன்** மகனையா
மிருவருந் தனுக்கொள் போரி யற்றவம்மி னென்னலுங்

குருகுலந் தழைக்கவந்த குமரனன்பு கூரவே
யுருகிநன்றெனத் தழீஇ யுகந்துளந்தருக்கினான்"

இக்கவியில், அரசர்கள் கூடிய சபையில் அரசர் குமாரர்களுடைய வித்தைத்திறம் விளங்க பரிட்சித்து வருகிற காலத்தில், சூரியனுக்குக் குந்தி வயிற்றில் உதித்த கர்னனும், அர்ச்சுனனுமாக இரண்டுபேரும் தனுப்போர்செய்ய சம்மதித்தார்கள் என்று சொல்லியிருக்கின்றது.

இதில் அர்ச்சுனனுக்கு "வானநாடன்மகன்" எனப்பெயர்வந்திருக்கின்றது.வானநாடன்மகன் என்பதற்குசுரர்நாட்டுக்கதிபதியாகிய இந்திராஜனுடைய மகன் என்பது பொருளாம்.

ஆகையால் நாடன் என்பது அரசன் என்னும் பெயருடன் ஒரு பொருளில் வந்து தமிழ்ச்சத்திரியகுலப் பட்டப்பெயராக வழங்கி யிருக்கின்றது.

(9) திவாகரம், மக்கட்பெயர்த் தொகுதி,
21-வது சூத்திரம்.
"கோச்சேரன் பெயர்."

"வில்லவன் குடநாடன் வஞ்சிவேந்தன்."

இச்சூத்திரத்தில், குடநாடன், வஞ்சியாகிய கரூர் வேந்தன் என்று சொல்லியிருக்கிறது. இதில் சொல்லிய வேந்தன், அதாவது அரசன் என்பதும், நாடான் என்பதும் ஒரேபொருட்கொண்ட பதங்களாம், அதாவது குடநாட்டரசன், கருவூர் அரசன் என்பதாம்.

ஆகையால் நாடன் என்பது அரசன் என்னும் பெயருடன் ஒரு பொருளில் வந்து தமிழ்ச்சத்திரிய குலப் பட்டப்பெயராக வழங்கியிருக்கின்றது.

(10) மேற்படி தொகுதி, 22-வது சூத்திரம்,
கடைசிவரி.

"சூரியன் புனனாடன் கோச்சோழன் பெயரே"

இதில், சோழனுக்கு புனல் நாடன் எனப்பெயர் வந்திருக்கின்றது. புனல் என்பதற்கு நீர் என்றர்த்தம். புனல் நாடன் என்பதற்கு நீர் நிறைந்த நாட்டரசன் என்றர்த்தம்.

ஆகையால் நாடன் என்பது அரசன் என்னும் பெயருடன் ஒருபொருளில் வந்து தமிழ்ச்சத்திரியகுலப் பட்டப்பெயராக வழங்கியிருக்கின்றது.

(11) மேற்படி தொகுதி, 23-வது சூத்திரம்,

1-வது அடி.

"செழியன் தமிழ் **நாடன்** கூடற்கோ தென்னவன்."

இச்சூத்திரத்தில், பாண்டியனுக்கு தமிழ்நாடன், கூடற்கோ எனப்பெயர்கள் வந்திருக்கின்றன. இவைகளில் நாடன், கோ என்பன ஒருபொருட்கொண்ட பதங்களாம். இந்த இரண்டும் பாண்டியனுக்குப் பெயர்களாம். தமிழ் நாடன் என்பதற்கு தமிழ் அரசன் என்றும், கூடற்கோ என்பதற்கு மதுரை அரசன் என்றும் அர்த்தம்.

(12) கம்பராமாயணம், தனியன்கள்,

4-வது கவி.

"கம்ப**நாடன்**னுமை செவி சாற்றுபூங்
கொம்ப **நாடன்** கொளு நனி ராமப்பேர்
பம்ப நாடழைக்கும் கதைபாச் செய்த
கம்ப **நாடன்** கழல் தலையிற் கொள்வாம்."

இக்கவியில் கம்பருக்கு கம்பநாடன் எனப்பெயர் சொல்லியிருக்கிறது.

8-வது கவி.

"இம்பர் நாட்டிற் செல்வமெல்லாம் எய்தியரசாண்டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்காவோங்கு நீழலிருந்தாலும்
செம்பொன்மேரு வளையபுயத்திறல் சேரிராமன் திருக்கதையில்
கம்ப **நாடன்** கவிதையிற்போல் கற்றோர்க்கிதயங் களியாதே."

7-வது கவி.

"எண்ணிய சகாத்தமெண்ணூற் றேழின்மேல் **சடையன்** வாழ்வு

நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப **நாடன்**
பண்ணிய ராமகாதை பங்குனி அத்த நாளில்
கண்ணிய அரங்கர்முன்னே கவியரங் கேற்றினானே."

மேற்படி கவிகளில், சாலிவாகன சகாப்தம் 807-ம் வருஷத்தில் பங்குனி மாசத்து அத்த நட்சத்திரத்தில் கம்பர் தாம் செய்துமுடித்த ராமாயணக் காப்பியத்தை அரங்கேற்றினதாகச் சொல்லியிருக்கிறது. கம்பருக்கு கம்பநாடன் எனச்சொல்லியிருக்கிறது. அதற்குக் கம்பத்தரசன் எனப்பொருளாம்.

ஆகையால் நாடன் என்பது அரசன் என்னும் பெயருடன் ஒரு பொருளில் வந்து, தமிழ்ச்சத்திரியகுலப் பட்டப்பெயராக வழங்கியிருக்கிறது.

(13) திருவாதவூரர் புராணம், திருப்பெருந்
துறைச் சருக்கம், 84-வது கவி.

"சென்றவர் வையை **நாடன்** திகழ்சபை முன்னரெய்தி
வன்றிறன் மன்னபோற்றி மாமதுரேச போற்றி
யென்றுபின் வாதவூர ரெய்திய செய்தி யெல்லா
மொன்றிய கவற்சி கூருமுளத்துடனின்று சொல்வான்."

இதில், அரிமர்த்தனபாண்டியனுக்கு வையைநாடன், வன்றிறன் மன்னன் எனப்பெயர்கள் வந்திருக்கின்றன. முன் அருணாசலப்புராணம், வச்சிராங்கதபாண்டியன் சருக்கத்தில், வச்சிராங்கத பாண்டியனுக்கு வையைநாடான் எனப் பெயர் வந்திருக்கிறதைக் காட்டியிருக்கிறோம். ஆனதால் நாடான், நாடன், மன்னன் என்னும் பெயர்கள் அரசன் என்னும் பொருளுள்ள ஒரு பொருட் பெயர்களாம்.

(14) சாதக்சிந்தாமணி 2168-வது கவி,

நறைகமழ் கமலப் பொகுட்டில்வீற்றிருக்கும்
நான்முகக்கடவுடான் படைத்த
நிறைவுள மாந்தர் வினைப்பய னதனால்
நிலைபெறு யோகமஞ்சரியாந்
துறையென வழங்கும் வடமொழியதனை
தூயசெந்தமிழினாற் செய்தான்

திறைகொடா வழுதி திகழ்தொண்டை **நாடன்**
தில்லைநாயக மதிபதியே.

சாதகசிந்தாமணி என்னும் நூலை சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்துக்காவியமாக்கினவன் தில்லைநாயகபாண்டியராஜன், அவனுக்குத் திறைகொடாவழுதி. அதாவது ஒருவருக்கும் கப்பங் கட்டாமல் சுயாதீனமாயரசாண்டவனாகிய பாண்டியன் எனவும், புகழ்தொண்டைநாடன் எனவும்பெயர்கள் வந்திருக்கின்றன. தொண்டைநாடன் என்பதற்கு, தொண்டை அரசன், அல்லது தொண்டைமண்டல அரசன் எனப்பொருளாம்.

தொண்டைநாடன் என்பதற்கு, தொண்டையிலே வாசம் பண்ணுகிறவன்,தொண்டையிலே குடியிருக்கிறவன் என்றர்த்தமல்ல, தொன்டைக்கரசன் எனப்பொருளாம்.

ஆகையால்நாடன் என்பது அரசன் என்னும் பெயருடன் ஒருபொருளில் வந்து தமிழ்ச்சத்திரியகுலப் பட்டப்பெயராக வழங்கியிருக்கிறது.

(15) பாரதவெண்பா, உத்தியோகப்பருவம்,
88-ம் பாடல்.

"முன்போ திரவலருக்கீந்து முரசொலிப்ப
பின்போ **திலநாடன்** போயினபின்—கண்போதில்
மற்றளிக்கும் வில்லை மணிக்கவச குண்டலமும்
உற்றளிப்ப னென்றே யுகந்து."

இப்பாடலில், அநாடன் என்பதற்கு அந்நாடன், அதாவது அவ்வரசன் எனப்பொருளாம்.

இப்பாடலுக்கு முந்தின 87-ம் பாடல் இரண்டாவது அடியில் "அங்கர்கோமான்" என்று வந்ததற்கு இப்பாடலில் அநாடன் என்று வந்திருக்கிறது.

அநாடன்=அந்நாடன்=அவ்வரசன்.

ஆகையால் நாடன் என்பது அரசன் என்னும்பெயருடன் ஒருபொருளில் வந்து தமிழ்ச்சத்திரியகுலப்பட்டப்பெயராக வழங்கியிருக்கிறது.

(16) "நாடன் பருத்தி."

நாடன் பருத்தி என்பதற்கு அரசன் பருத்தி எனப்பொருளாம்.

பருத்திச்செடிகளில் அநேக வகைகள் உண்டு. நாடன் பருத்தி தவிர மற்றச்செடிகளெல்லாம் பயிர்செய்யப்பட்ட வருஷத்திலேயே அழிந்து போகக்கூடியது. நாடன் பருத்திச்செடியோ மற்றப்பருத்திச்செடிகளைப் போல் அழிந்துபோகாமல் நெடுங்காலமாக இருந்து பலன்கொடுக்கக்கூடியது. ஆதலால் பூக்களின் மேன்மையால் கொன்றைமரமானது இராஜ விருட்சம் என்று சொல்லப்படுகிறதுபோல் நாடன் பருத்தியானது பருத்திகளில் மேன்மையால் நாடன் பருத்தி, அதாவது அரசன்பருத்தி எனப்படுகிறது.

ஆகையால் நாடன் என்பது அரசன் என்னும் பெயருடன் ஒரு பொருளில் வந்து வழங்கியிருக்கிறது.

மூன்றாவது,

நாட்டான் என்னும் பெயர் அரசகுலப்பட்டப்பெயர்

என்பதைத் திருஷ்டாந்தப்படுத்துவோம்.

(17) நளவெண்பா, சுயம்வரகாண்டம், 149-ம் பாடல்.

"அங்கைநெடு வேற்கணாயிழைபாய் வாவியின் வாய்ச்
சங்கம் புடைபெயரத் தான்கலங்கிச்—செங்கமலப்
பூச்சிந்து நாட்டேறல் பொன்விளைக்கும் தண்பணைசூழ்
மாச்சீந்து நாட்டானிம் மன்."

இப்பாடலில், தமயந்தியின் சுயம்வரத்துக்கு வந்திருந்த அரசருடைய பெயர்களைத்தமயந்திக்குச்சொல்லிக்காட்டிய விபரத்தில் இவ்வரசன் சீந்துநாட்டரசன் என்று காட்டியதைக்குறிப்பித்திருக்கிறது. அதில் நாட்டான் என்று சொல்லியிருக்கிறதற்கு அரசன் என்பது பொருளாம்.

சீந்துநாட்டான்=சீந்துநாடான்=சீந்து அரசன், ஆகையால் நாட்டான் என்பது அரசன் என்னும் பெயருடன் ஒரு பொருளில் வந்துதமிழ்ச்சத்திரியகுலப் பட்டப்பெயராக வழங்கியிருக்கிறது.

(18) பாரதவெண்பா, பீஷ்மர் சருக்கம்.

51-வது கவி,

"நாடறிய நாட்டார் சபையகத்தே பாஞ்சாலி
நாடறியத் தூசுரிந்த நாசத்தால்—நாடறியத்
தன்னேவம் தீர்க்கத்தழைபூங் குழல் விரிந்த
பொன்னேயவ் வண்ணமகள்."

இதன்பொருள். "நாட்டிலுள்ளோர் எல்லாரும் அறியும்படி அரசர்களுடைய சபையிலே பஞ்சாலியினது துயிலுரிந்த கேட்டினால் யாவரும் அறியும்படி தனக்குண்டாகிய வருத்தத்தைப் போக்குகிறதற்குக் கூந்தலைத் தொங்கவிட்டவள் யாரென்றால் முன்விராட பட்டணத்தில் வண்ண மகளாயிருந்த துரோபதை" என்பதாம்.

நாட்டார் சபையகத்தே என்பதற்கு உரையாசிரியர் "அரசர்களுடைய சபையிலே" என்று அர்த்தம் கூறியிருக்கிறார். ஆனதால் நாட்டார் என்பது அரசர் எனப்பொருளாம் என்றது தெளிவாயிருக்கிறது.

ஆகையால் நாட்டார் என்பது நாடார், நாடர், அரசர் என்னும் பெயர்களுடன் ஒரு பொருளில்வந்து தமிழ்ச்சத்திரிய குலப்பட்டப் பெயராக வழங்கி யிருக்கிறது.

(19) பாரதவெண்பா, உத்தியோகப்பருவம்.

27-ம் பாடல்,

"இன்னாச் சொல்வந்து செவிசுடலும் வேர்த்தெழுந்து
மன்னாட்டவ னெனக்குமாறிலா—என்னைத்தான்
போர்க்களத்து விற்பிடியே னென்றாங்கிறுத்திட்டான்
கார்க்குமிலந் தானிடித்தாற் போன்று."

இப்பாடலில், மன்னாட்டவர்=மன் + நாட்டவர் = பாரம்பரையாய் நாடாளும் அரசர் என்று சொல்லியிருக்கிறது.

நாட்டான் என்னும் பெயர் பன்மையில் அர்விகுதி பெற்று நாட்டவர் என்று வந்திருக்கிறது.

ஆகையால் நாட்டவர் என்பது நாடார், நாடர், அரசர் என்னும் பெயர்களுடன் ஒரு பொருளில்வந்து, தமிழ்ச்சத்திரிய குலப்பட்டப் பெயராக வழங்கியிருக்கிறது.

நாலாவது.

நாடாள்வான், நாட்டாள்வான், நாடுடையான் என்னும் பெயர்கள் அரசகுலப்பட்டப் பெயர்கள் என்பதைத்

திருஷ்டாந்தப் படுத்துவோம்.

(20) கம்பராமாயணம், தனியன்கள்.

1-வது கவி,

"தராதலத்திலுள்ள தமிழ்க்குற்ற மெல்லாம்
அராவுமர மாயிற்றன்றே—இராவணன்மேல்
அம்புநாட்டாள் வானடி பணியுமாதித்தன்
கம்பநாட்டாள்வான்கவி."

இக்கவியில், கம்பநாடாருக்கு கம்ப நாட்டாள்வான் என்று சொல்லியிருக்கிறது. முன்மேற்படி தனியன்கள் 4-வது கவியில் கம்பநாட்டாள்வாருக்குக் கம்பநாடன் என்று சொல்லியிருக்கிறது. ஆனபடியால் கம்பநாடான், கம்பநாடன், கம்ப நாட்டாள்வான், கம்ப நாடாள்வான், கம்பத்தரசன் என்பன ஒருபொருளில் வந்தன.

ஆகையால் நாட்டாள்வான் என்பது நாடான், நாடன், அரசன் என்னும் பெயர்களுடன் ஒரு பொருளில் வந்து தமிழ்ச்சத்திரிய குலப்பட்டப் பெயராக வழங்கியிருக்கிறது.

2-வது கவி,

"வாழ்வார் திருவெண்ணெய் நல்லூர் சடையப்பன் வாழ்த்துபெற
தாழ்வாருயரப் புலவோரக விருள் தானகலப்
போழ்வார் கதிரினுதித்த தெய்வப்புலமை நாட்
டாழ்வார் பதத்தைச் சிந்திப்பவர்க்கியாது மரியதன்றே."

இக்கவியில், கம்பநாட்டாழ்வார் என்று மரியாதைப்பன்மையாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அன்றியும் கதிரினுதித்த கம்பநாட்டாழ்வார் என்றும் சொல்லியிருக்கிறது. சோழனுக்குக் குலக்கிரம அட்டவணை, 22-வது சூத்திரத்தில் சொல்லியபடி கதிர், அதாவது சூரியன் என்று பெயர். கம்பர் அந்த சோழன் வம்சத்தவராக இருந்ததினால் "கதிரினுதித்த கம்பநாட்டாழ்வார்" என்று அதாவது சூரியகுலத்தில் பிறந்த அரசன் என்று சொல்லப்பட்டிருக்கிறார்.

(ஆள்வார் என்பதிலுள்ள ளகரம் ழகரமாகமாறி ஆழ்வார் என்ருயிற்று. இதற்கு விதி வீரசோழியம் என்னும் நூல் காண்க.)

சோழன்=சூரியன்=கதிர் (=The Sun)

சோழக்குலத்தவர் கம்பர்=சூரியகுலத்தவர் கம்பர்=கதிர்க்குலத்தவர் கம்பர்.

இங்கிலிஷ் வித்துவானுகிய உயின்ஸ்லோ (Dr. Winslow) எழுதிய இங்கிலிஷ் அகராதியின் முகவுரையில் கம்பநாடாரின் உற்பத்திப் பூர்வோத்திரத்தை உரைத்திருக்கின்றனர். அதாவது "The imitation, not translation of the Ramayana, was composed by Kamban the son of a KING and not of the priestly tribe. His production, consisting 12016 stanzas, in six books, is considered by learned Tamulians as superior to the original" என்பதாம்.

இதற்குத் தமிழில் தாற்பரிய உரை.

"ராமாயணம் எழுதினவன் கம்பன். (வடமொழியில் வான்மீகி எழுதிய) ராமாயணத்தை இவன் தமிழில் மொழிபெயர்க்காமல் அதின் பொருளைத் தன் மனோரதப்படி விரித்தெழுதியிருக்கிறன். இவன் ஒரு அரசன் புத்திரன். இவன் புரோகிதர் குலத்தவனல்லன். இவன் எழுதிய தமிழ் ராமாயணம் ஆறுகாண்டம்; இது 12016 விருத்தங்கள் அடங்கிய பெருங் காப்பியம்" என்பதே.

இதனுல் கம்பநாடார் தமிழ் அரசகுலத்திலுதித்த தமிழ்ச் சத்திரியன் என்பது தெளிவாயிருக்கிறது.

கம்ப நாடாருடைய சற்சிலையானது ஸ்ரீரங்கம் பெரிய ஆலயத்திறுள்ளே இருக்கிறது. அந்தச் சிலையானது அரசர் குலத்தோற்றமுடையதாகச் செய்யப்பட்டிருக்கிறது. ஆனதால் கம்பநாடார் அரசகுலத்திலுதித்தவர் என்பது நன்ருய் விளங்குகிறது.

(21) பாரதம், ஆதிபருவம், வாரணுவதச் சருக்கம்.

84-வது கவி,

மறுகிற் பணிலந்தவழ் பழனவள நாடுடையானெதிர் வணங்கி
முறுகற்புரி வெங்கலைக்கோட்டு முனியேபோலு முனிவரனைந்
தறுகட் குருவின்றலை துமிக்கத்தகவோர் மகவுந்தனந் சயன்றே.

இக்கவியில், பாஞ்சால நாடுடையானுன யாகசேனன் என்பவன் அருச்சுனன் கையால் இரணகளத்தில் பிடிபட்டு அவமானப்பட்டபின்பு விடுதலைபெற்றுத் தன்னூடுபோய்ச் சேர்ந்தபிறகு, துரோணுச்சாரி தலைமை

அரிவதற்கு ஒரு புத்திரனும், அர்ச்சுனனை மணம்புரிவதற்கு ஒரு கன்னிகையும் பிறக்கும்படியாகத் தவம்புரிந்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதில், யாகசேனராசனுக்கு "பணிலந்தவழ்பழனவள நாடுடையான்" எனப் பெயர் வந்திருக்கிறது. நாடுடையான் என்பதற்கு நாடாள்வான் என்பது கருத்தாம்.

ஆனதால்

நாடுடையான்=நாடாள்வான், நாடான், நாடன், அரசன்.

கவனிப்பு. தேசம் என்னும் பதம் சமஸ்கிருதத்திற்கும் தமிழுக்கும் பொதுவான பதமாம். ஆனபடியால் பூர்வ நூல்களிலெல்லாம் "நாடு" என்னும் பதமே முக்கியமாய் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நூல்களிலெல்லாம் "அரசன்"என்னும் தமிழ்ச்சத்திரிய குலப்பட்டப்பெயர் வரவேண்டிய இடங்களில் பெரும்பாலும்,

நாடான், நாடன், நாடுடையான், நாட்டாள்வான், நாடாள்வான், ஆள்வான் என்னும் பெயர்கள் அரசன் என்னும் கருத்தில்வந்து வழங்கியிருக்கின்றன.

நைடதம், சுயம்வரப்படலம், 136-வது கவிமுதல், 162-வது கவிவரையிலுமுள்ள செய்யுட்களில், தமயந்தியிடத்தில் அங்கே வந்திருக்கிற அரசர் இன்னார்என்று தோழிமார்கள்,அல்லது தாதிமார்கள் சொன்னபாவனை காட்டியிருக்கிறது.

147-வது கவியின், 4-வது அடியில்,

"தடங்கடற்புலவு போக்குந்தண்டுறை மகத நாடன்"

என்று சொல்லியிருக்கிறது. மகத நாடன் என்பதற்கு மகத அரசன் என்று உரையாசிரியர் எழுதியிருக்கிறார்.

அந்தப்படியே ஒவ்வொருநாட்டு அரசனும் வந்திருக்கிறான் என்று குறித்திருக்கிறதில்.

137-வது கவியில், "அவந்தி நாடாளும் வேந்தன்" என்றும்,
138-வது கவியில், "கௌட நாட்டரசன்" என்றும்,
139-வது கவியில், "மதுரை மூதூர் மன்னன்" என்றும்,
141-வது கவியில், "காம்பிலிகாவல் வேந்தன்" என்றும்,
143-வது கவியில், "வாரணவாசி மன்னன்" என்றும்,
144-வது கவியில், "சிந்துவேந்து"என்றும்,
146-வது கவியில், "மச்சர்கோ" என்றும் காட்டியிருக்கிறது,

மேற்கூறிய கவிகளிலும், இவ்விடம் சொல்லப்படாத கவிகளிலும் நாடன் என்பதோடே நாடாளும் வேந்தன், நாட்டரசன், மன்னன், வேந்தன், வேந்து கோ என்பவை ஒரே பொருள்கொண்டு வந்திருக்கிறது தெளிவாய் விளங்குகிறது.

சான்றேன், சான்றவன், சான்றன் என்னும் கௌரவப்பட்டப் பெயர்கள் சங்கச்செய்யுட்களில் வழங்கி வந்திருக்கிற பிரகாரம் "நாடான், நாடன், நாடாள்வான், நாட்டாள்வான், நாடுடையான் முதலான குலப்பட்டப்பெயர்கள் மேற்படி நூல்களில் வந்திருக்கின்றன.

அன்றியும் நாடன் என்னும் பெயர் முக்கியபட்சம் நூல் வழக்கிலும், நாடான் என்னும் பெயர் உலக வழக்கிலும் வரும்.

நூல்களில் நாடான், நாடன் என்னும் பதங்களை விளி வேற்றுமையில் உபயோகப்படுத்தும்போது நாடா என்றும், நாட என்றும் வரும்.

(22) பாண்டி நாடன் சமுகத்தில் கம்பர் வீட்டுப் பெண்களில் ஒருத்தி பாடிய வெண்பா.

"தென்னவா மீனவா சீவிலி மாறு மதுரை
மன்னவா பாண்டி வள நாடா—முன்னஞ்
சுரும்புக்குத் தாரளித்த துய்ய தமிழ் நாடா
கரும்புக்கு வேம்பிலே கண்.'

(23) நள வெண்பா, கலிதொடர் காண்டம்

43-ம் பாடல்.

"நிறையில் கவருட னீ நினைந்தா யாகிற்
றிறையிற்கதிர் முத்தஞ் சிந்தும்—துறையிற்
கரும்பொடியா மள்ளர் கடாவடி நாடா
பொரும்படி யாதென்றுனிப் போது."

(24) நாலடியார், மெய்ம்மை.

3-வது கவி.

"காலாடு போழ்திற்கழி கிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவ ரேலா
விடரொருற்றக் காலீர்ங் குன்ற நாட
தொடர்புடையே மென்பார் சிலர்."

மேற்படி கவிகளில், அரசன் என்னும் பொருளுள்ள நாடான், நாடன் என்பவை நாடா, நாட என விளிவேற்றுமையில் கூறப்பட்டிருக்கிறது.

இதுபோல் நாலடியிலிருந்தும், நளவெண்பாவிலிருந்தும், மற்றநேக நூல்களிலிருந்தும் அநேக உதாரணங்களை எடுத்துக் காட்டக்கூடுமாயினும் இந்நூல் விரியுமாதலால் நிறுத்தினேம்.

அந்தப்படி நாடா, நாட, நாடனே, நாடானே என்று விளிவேற்றுமையில் கூறப்பட்டவைகளை இங்கிலிஷ் நூலாசிரியர்கள் மொழிபெயர்க்கும்போது O Lord ! O King ! O Prince ! என்று மொழி பெயர்த்திருக்கிறார்கள். அவைகளுக்கு ஆண்டவனே ! கர்த்தனே ! அரசனே ! பிரபுவே ! என்றர்த்தம்.

மேற் காட்டிய நியாயங்களினல் நாடான் முதலான பட்டப்பெயர்கள் தமிழ்ச் சத்திரியகுலத்தவர்களுக்கு உண்டென்பதை அறிந்துகொள்ளலாம்.

46. வினா.—கம்பர் சொல்லிய திருவெண்ணெய் நல்லூர் சடையன், அல்லது சடையப்பன் சிவன்தான் என்பதற்கு நியாயம் என்ன ?

விடை.—புலவர்கள் தங்களுக்குச் சுயம் பாட வரமளித்ததாக எண்ணிய தெய்வத்தைத் தங்கள் பாடல்களில் விசேஷித்துக் கூறும் வழக்கமுண்டு.

திருவெண்ணெய் நல்லூரில் ஒரு கோயிலுண்டு, அது சிவன் கோயில். அதில் கம்பர் சிவனைப் பூசித்தபடியால் கம்பருக்குச் சுயம்பாட சிவன் வரங்கொடுத்தார் என்று கம்பர் நம்பி ராமாயணத்தில் ஆயிரம் பாடலுக்கு ஒரு பாடல் சிவன்பேரில் பாடுவதாகப் பொருத்தனை பண்ணிக்கொண்டார் அந்தப்படி ராமாயணத்தில் சிவன்பேரை வைத்துப் பாடியிருக்கிறார். சிவனுக்குச் சடையன், சடையப்பன் (He who wore dishevelled hair) என்னும் பெயர்களுமுண்டு.

41-ம் வினவுக்கு விடை கூறிய இடத்தில் (4) இலக்கத்தின் கீழ் நாம் முன் காட்டியபடி, ராமாயணத்தில் "சந்தணிபுயத்து வள்ளல் சங்கரனனைய சான்றோர்" என்று சொல்லியிருக்கிறது. அதைச் சான்றோர் சத்திரியர் நூலாசிரியர் திருவாங்கூர் அபிமானிய பத்திரிகை வழியாக, அச்சுமூலமாக, அப்போது சத்திரியகுலத்தவர்க்கு எதிர் நின்ற சவுந்திர நாயகம் பிள்ளையும், மற்ற யாவரும் அறிய வெளிப்படுத்தியிருக்கிறார். மேற்படி நூல் 78-ம் பக்கம் காண்க. மற்றும் சில ஏட்டுப் பிரதிகளில் "சடையனே அனைய" என்று சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ்ச் சத்திரியர் என்னும் நூலில் சாமியேல் சற்குண நாடாரவர்கள், மேற்படி நூல் 6-ம் பக்கத்தில் சொல்லியிருக்கிறதைக் காண்க. சங்கரன் என்பது சிவனுக்கு ஒரு பெயர்.

நாம் முன் சொல்லியபடி, "சடையனே யனைய" என்பதும், "சங்கரனை யனைய" என்பதும் அந்த சிவனையே குறிக்கிறது. சடையன் என்பவன் ஒரு சூத்திரன் என்று சூத்திரரில் சிலர் எண்ணினது மிகவும் பிசகாம். ராமாயணத்தில் மேற்சொல்லிய கவியில், சான்றோனை சங்கரனுக்கு ஒப்பாக கம்பர் பேசியிருக்கிறார். அப்படியிருக்க, அந்த சான்றோனை ஒரு சூத்திரனுக்கு ஒப்பிட்டுப் பேசியிருக்கிறார் என்பது அந்த ஆதிகாலத்தில் பொருந்துமா? பொருந்தாதே. ஆகையால் சடையன் என்பது சிவன் தான்.

புலவர்கள் தாங்கள் சுயம்பாட வரம் பெற்றதாக உத்தேசித்த தெய்வத்தை நினைத்துப் பாடுவது வழக்கம் என்பதற்குத் திருஷ்டாந்தமாக ஒரு உதாரணமாத்திரம் சொல்வோம்.

எப்படியெனில்,

பிங்களனூ, குருபாத தாசரால் இயற்றப்பட்டு, சுப்பிராய தேசிகரது அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்ட திருப்புவயல் குமரேசர் சதகம், 1-ம் கவி,

கடைசி அடி,

"மயிலேறி விளையாடும் குகனேபுல் வயல் நீடும்
மலைமேவும் குமரேசனே."

இதுபோலவே மேற்படி நூலின் ஒவ்வொரு செய்யுளின் கடைசியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

மேற்காட்டிய நியாயங்களினால் சடையன், சடையோன், சடையப்பன் என்பது சிவன்தான் என்றறியலாம்.

கம்பர் ஏழையல்ல, அவர் அரசன் என்பதைப் பின்னும் சொல்வோம்.

47. வினு.—தமிழ் நாட்டிலுள்ள குல விசாரணை செய்யும்போது கவனிக்கவேண்டிய காரியம் என்ன?

விடை.—தமிழ்நாட்டிலுள்ள குல விசாரணை செய்யும்போது தமிழ் நாட்டில் புகுந்திருக்கிற அந்நிய பாஷைக்காரனை எல்லாம் நீக்கிப்போடவேண்டும். தமிழ்ப் பாஷையைக் குலப்பாஷையாகப் பேசுகிறவர்களை மாத்திரம் தனிமையாக நிறுத்தி, அவர்களுக்குள்ளே தமிழ்ப் பார்ப்பார், அதாவது தமிழ்ப் பிராமணர், தமிழ்ச் சத்திரியர், தமிழ் வைசியர், அதாவது தமிழ்ச் செட்டிகள், தமிழ்ச் சூத்திரர், தமிழ்ச் சங்கரஜாதிகள், அதாவது முன் சொன்ன நாலு ஜாதிகளிலுமிருந்து கலப்பான ஜாதிகள் யார் என்று கவனிக்கவேண்டும்.

சென்னபட்டணம் குடிமதிப்புக் கமிட்டிமார் 1871-ம் வருஷம் பெ புருவரி மாசத்தில் இந்த வகையைக் கவனியாமல் குலப்பிரிவுகளைக்கண்டு பிடிக்கப் பிரயாசப்பட்டதினால் மிகுந்த பிரயாசத்துக் குள்ளாகி, தாங்கள் கோறிய காரியத்தைச் சரியாய் முடிக்க ஏலாமற் போய்விட்டார்கள்.

48. வினா.—முன்சொல்லியபடி நீக்கப்படவேண்டிய சாதிகள் எவை?

விடை,—இந்தத் தமிழ் நாட்டில் புகுந்து வாசம் பண்ணுகிற அந்நிய ராகிய இங்கிலிஷரையும், அவர்களுடைய பாவனையாக இருக்கிற யூரே ஷியரையும், பிரான்சுக்காரரையும், போர்த்துக்கல்காரரையும், சுருங்கச் சொன்னால் யூரோப்பிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் வந்திருக்கிற சகல பாஷைக்காரரையும், அரபியரையும், அக்கினி வணக்கக் காரரான பூர்வ பார்சுக்காரரையும், அரபியப் பாஷையில் ஓர் பிரிவான பாஷையைப் பேசுகிறவர்களாகிய பார்சுக்காரரையும், சீனரையும், பர்மாக்காரரையும், சீயம் காரரையும், சோனகம் என்றும், தக்னி என்றும், உருடு என்றும், இந்துஸ்தானி என்றும் சொல்லப்பட்ட பாஷையைப் பேடுகிற பட்டாணி களான மகமதியரையும் மேற்படி பாஷையைத் தானேபேசுகிறவர்களான ரசபுத்திரரையும், தமிழ்ப் பாஷையைத தானே பேசுகிறவர்களாயிருந்தும் குல விஷயமாகத் தங்களை பிரத்தியேகப் படுத்திக்கொண்டு, நடையுடை பாவனைகளில் முழுவதும் பேதப்பட்டு சகல குலத்தோடும் கலந்துகொ ண்டு தங்களுக்குக் குலபேதம் வேண்டாம் என்று சொல்லியும் அந்தப்படி பாராட்டியும் வருகிற மகமதியராகிய லெப்பைகள் என்றும், மவுலாக்கள் என்றும் சொல்லப்பட்ட மகமதியரையும், சௌராட்டிரம் என்னும் எழுத் தில்லாத பாஷையைப் பேசுகிற பட்டுநூற்காரரையும், தெலுங்கு, அல்லது வடுகப்பாஷையை குலப்பாஷையாகப் பேசுகிற பிராமணரையும், ராசுக் கள் அல்லது ராசாக்கள் என்று சொல்லப்பட்டவர்களையும், கவரையர், கம்மவார், வேக்கிலவார், இல்லாவார், கொல்லவார், தொட்டியர், ரெட்டியர், எருமைக்காரர், குரும்பர், சலுப்பர், கோமுட்டிகள், காப்பிலியர், உப்பிலியர், சேணியர், டொம்பர்கள், பாயாண்டிகள், புலுவர், ஜங்கமாண்டிகள், வேத காரர் (Basket Makers) சக்கிலியர் முதலானவர்களையும், கன்னடப் பா ஷையைப் பேசுகிற பிராமணர், ராவுக்கள், செட்டிகள் சேடர் முதலான வர்களையும், மராட்டியப் பாஷையைப் பேசுகிற பிராமணர் முதலானவர் களையும், கன்னட டொம்பர்களையும், மலையாளப் பாஷையைக் குலப்பா ஷையாகப் பேசுகிறவர்களும், அதற்கு அடையாளமாக தங்கள் குடுமியை தங்கள் முகத்துக்கு நேரேயாவது ஒருபக்கமாவது போட்டுக்கொள்ளுகிற வர்களையும், இவ்விடம் சொல்லப்படாத மற்றும் ஜாதியாரையும் நீக்கிப் போட வேண்டியது.

49. வினா.—தமிழல்லாத பிறபாஷைகளைப் பேசுகிறவர்களை காணும் போது தமிழ்ச் சத்திரியர் செய்யவேண்டிய தென்ன ?

விடை.—தமிழல்லாத பிறபாஷையைப் பேசுவோரைத் தமிழ்ச் சத்திரியர் காணும்போது அந்த பிறபாஷைக்காரர் முன் நாம் சொல்லியபடி பிராமணனோ ? சத்திரியனோ ? வைசியனோ ? சூத்திரனோ ? சங்கரஜாதியானோ ? என்று கவனித்தறியவேண்டும். அப்படி அறிவது கூடாதிருந்தால் நாம் அறியாத மற்ற விஷயங்களில் அறியாத அந்தக்காரியத்தை எவ்விதம் நடத்துவோமோ அவ்விதமே நடத்தவேண்டும். தமிழ்ப் பாஷையைப் பார்க்கிலும் மற்றப் பாஷைகள் உயர்ந்த பாஷைகள் அல்ல. தமிழ்ச் சத்திரியனைப்பார்க்கிலும் மற்றப் பாஷைக்காரர் உயர்ந்தவர்களுமல்ல. தமிழ்ப் பார்ப்பனக் குலத்தவனைக்குறித்து 19-ம் வினாவுக்கு விடை கூறிய இடத்தில் சொல்லியிருக்கிறதையும், இந்நூலின் 55-ம் பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிற சுலோகத்தையும் கவனித்து நடக்கவேண்டும்.

தாசிகளையும், வேசிகளையும் அனுசரிப்பதும், மதுபானம் பண்ணுவதும், தமிழ்ப் பார்ப்பனக் குலத்தவரல்லாத அந்நியருடைய வீட்டில் புசிப்பதும், தன் குலத்திலேயே அல்லாமல் பிறகுலப்பிள்ளைகளைத் தத்துப் புத்திரராக எடுப்பதும் விலக்கப்படவேண்டும். மேற்சொல்லிய காரியங்களை தமிழ்ச் சத்திரியன் கவனித்து நடவாவிட்டால் தமிழ்ச் சத்திரியகுலம் கெட்டுப்போகும். தற்காலத்தில் இந்து நாட்டை ஆண்டுவருகிற இங்கிலிஷ் ஜனங்கள் ஜாதியை விட்டவர்களாகத் தோன்றினாலும் அவர்கள் இந்துக்களோடே விவாக சம்பந்தமாய் கலவாமலும், தங்கள் தேசத்தையும் தங்கள் குலத்தையும் நேசித்து, தங்களுக்குள்ளேயே விவாக சம்பந்தம் செய்து வருகிறதை தமிழ்ச் சத்திரியர் கவனித்து, அவ்விதமே நடந்துகொள்ள வேண்டியது.

50. வினா.—சத்திரியராகிய அரசகுலத்தவர் முற்றிலும் அழிந்து, அதாவது இல்லாமற் போய்விட்டார்கள் என்று சத்துருக்கள் சொல்லுகிறார்களே, அந்த அவர்களுடைய அபிப்பிராயத்தை மறுக்க நாம் காட்டும் நியாயங்கள் எவை ?

விடை.—தமிழ்ச் சூத்திரர் தங்களைப் பார்ப்பனக் குலத்தவர்க்குப் பக்கத்தில் நிறுத்திக்கொள்ளுகிறதினால் அநேக சலாக்கியங்களை அடைந்துகொள்ளும்படியாக சத்திரியர் அழிந்து போய்விட்டார்கள் என்றும், ஒருவகையாய் வைசியர் தாங்கள் என்றும், அல்லது வைசியரும் இல்லை என்றும், ஆகையால் பார்ப்பனக் குலத்தவர்க்குப் பின் தாங்களே உயர்ந்தஜாதியார் என்றும், ஆகையால் முதலாவது பிராமணர், இரண்டாவது வெள்

ளாளர் என்றும், மற்றும் ஜாதி எல்லாம் தங்களுக்குப் பின்னனவர்கள் என்றும் சொல்லி, அந்தப்படியே தாங்கள் எழுதிய நூல்களிலும் காட்டி வருகிறார்கள். யூரோப்பியரிடத்தில் தாங்கள் உயர்ந்த ஜாதி என்றும், மற்றவர்கள் தங்களுககுப் பின்னன தாழ்ந்த ஜாதிகள் என்றும் சொல்லி வருகிறார்கள். ஆகையால் அவர்களுடைய அபிப்பிராயங்களையும் பிரயத்தனங்களையும் அடிக்கும்படி சில நியாயங்களை இவ்விடம் காட்டுவோம்.

சூரிய வம்ச ராமருக்குப் பின்னல் குசலன், இலவன், நமன், பாநுசித்திரன், சதாயு முதலான அநேக அரச பரம்பரைகள் உற்பத்தியாகிக் கொண்டே வந்ததாசக் கூர்மம், இலிங்கம், ஆக்கினேயம் முதலான பதினெண் புராணங்களிலும் கூறப்பட்டிருக்கின்றது. ஆனல் விரோதிகள் சத்திரியகுலம் பரசுராமனல் முற்றும் அழிவுண்டது என்கின்றனர். இவ்விதமாய்ச் சொல்லுதல் புராணங்களை வாசியாமையினலேயல்ல, பொறாமையினலேயே சொல்லுகிறார்கள். சமதக்கினியின் புத்திரனகிய பரசுராமன் தன் தாய் சூரியகுல கார்த்த வீரியார்ச்சுனன் என்னும் ராஜன் ஆசாயத்தில் அதிசயமாய்ப் போனதைப் பார்த்த காரணத்தால் கொலை செய்யப்பட்ட பழிக்குப் பிரதி பழியாகச் சத்திரிய குலத்தை இருபத்தொரு தலைமுறை வரைக்கும் நாசஞ்செய்து, அந்தப்படி தசரதனையுங் கொல்லும்படி வர, தசரதனுடைய மனைவியாகிய கவுசலையிடத்தில் ராமர் பிறந்து, பரசுராமனைச் செயித்து, அவனைக் காட்டுக்கு ஓட்டிவிட்டுப் பின் ராவண சம்மாரம் செய்து, அஸ்வமேதம் செய்யும் காலத்தில் அநேக சூரிய குலத்து அரசர்களும், சந்திர குலத்து அரசர்களும் இருந்தார்கள் என்று வான்மீகிராமாயணத்திலும், கூர்மம் முதலான புராணங்களிலும், பாரதம் முதலான இதிகாசங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அல்லாமலும் சூரிய சந்திரகுலப் பிரிவுகளில் உற்பத்தியான அரசர்கள் திருவாரூர், திரிசிரபுரம், காஞ்சிபுரம், சிதம்பரம், மதுரை முதலான நாடுகளை ஆண்டதாகத் திருவிளையாடற்புராணம் முதலான நூல்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. சந்திரகுலத்திலுதித்த பீஷ்மரிடத்தில் பரசுராமன் எழுநாள் சண்டை செய்து அடிபட்டுத் தோல்வியடைந்து, இனிச் சத்திரிய குலத்தவரிடத்தில் தான் வருவதே இல்லை என்று சபதம் செய்துகொண்டோடிவிட்டான் என்று மகா பாரதத்திலும் சொல்லியிருக்கிறது.

அங்கிலேய வித்துவானகிய டேவிட் சிங்கிலேயர் என்னும் ஆசிரியர் (David Sinclair, M. A.) தாம் இயற்றிய இந்துதேச சரித்திரத்தில் (History of India) பின் வருமாறு எழுதியிருக்கிறார். அதாவது "The legend of Parasu Rama extirpating the whole race of the Kshatriyas twenty one times is evidently an exaggeration" என்பதே, இதின் தாற்பரியமாவது :-பரசுராமனல் சத்திரியர் முழுவதும் அழிவுண்

போனார்கள் என்பது உண்மைக்கும் மிஞ்சிய கட்டுக்கதை என்று நன்றாய் விளங்குகின்றது என்பதாம். (சண்டபாநு பக். 66, 67-காண்க.)

தமிழ்ப் பார்ப்பார், அதாவது தமிழ்ப் பிராமணர் இப்போதும் திரள் திரளாயிருக்கிறார்கள். தமிழ்ச் செட்டிகள், அதாவது தமிழ் வைசியர் இப்போதும் திரள் திரளாயிருக்கிறார்கள். தமிழ்ச் சூத்திரர், அதாவது வெள்ளாளர் இருக்கிறார்கள். அப்படியானால் இரண்டாவது குலமாகிய தமிழ் அரசர், அதாவது தமிழ்ச் சத்திரிய குலத்தவர் இல்லாமற் போய்விட்டார்கள் என்று எப்படிச் சொல்லலாம் ? கிறிஸ்தாண்டு 1400-ம் வருஷத்தில் மதுரை நகரத்தைக் கைப்பற்றி ஆண்ட வடுக அரசர் கிறிஸ்தாண்டு 1737-வருஷ வரையிலுமுள்ள 337-வருஷங்களாக மதுரையை ஆண்டார்கள். அந்த வடுக அரசனுடைய குலத்தார் தமிழ் நாடெங்கும் மிகுந்த பிரபலமாகப் பெருகியிருக்கிறார்கள். அப்படியிருக்க, இந்துதேசத்தில் அதி பூர்வ கால முதல் மதுரையை ஆண்டு மகாப் பிரபலமாயிருந்திருக்கிற தமிழ் அரசகுலத்தார், அதாவது பாண்டிய, சேர சோழ குலத்தார் அழிந்து போய்விட்டார்கள் என்று எப்படிச்சொல்லலாம்? தமிழ்ச் சத்திரியராகிய அரசகுலத்தாருக்குப் பகைவரான சூத்திரர் S. V. (எஸ். வி.) யைப்போலானவர்கள் எப்படி பொறாமை கொண்டு தூஷித்தாலும், அவர்கள் வார்த்தைகள் பொய்யானபடியால் அவைகள் சூரியன் முன் பனிபோல் செல்லாமல் ஒழிந்துபோகும். வடுகரின் அரசாட்சி ஒழிந்தும் வடுகர் பிரபலமாயிருக்கிறது போலவும், துலுக்கரின் அரசாட்சி ஒழிந்தும் துலுக்கர் பெருகி இருக்கிறது போலவும், தமிழ்ச் சத்திரியரும் தமிழ் நாடெங்கும் சமுத்திரத்தில் மச்சஜாதி பெருகியிருக்கிறதுபோல பெருகியிருக்கிறார்கள். பத்திரிகைகளில் தமிழ்ச் சத்திரியரைத் தூஷித்து எழுதினாலும் பூர்வ நூல்களிலுள்ள ஆதாரங்களை இனி அவர்கள் மாற்றக் கூடுமோ ? கூடாதே.

மேற்படி நியாயங்களைக் கவனித்தால் சத்திரியர் அழிந்துபோகவில்லை என்றும், தமிழ்ச் சத்திரியர் தமிழ் நாட்டில் பிரபலமாயிருக்கிறார்கள் என்றும் அந்நியர் இலகுவாய் அறிந்துகொள்ளலாம்.

51. வினா.—தமிழ் அரச குலத்தவர் அழிந்துபோகவில்லை என்றால் இப்போது தமிழ் நாட்டிலிருக்கிற தமிழ் அரசகுலத்தவர் யார் ?

விடை.—முன் தமிழ் நூல்களிலிருந்து எடுத்துக் காட்டிய திருஷ்டாந்தங்களின்படி நாடார், நாட்டார், நாடாழ்வார் என்று மிகுந்த சாதாரணமாய் சகல ஜனங்களாலும் அழைக்கப்பட்டு, நூல்களில் சொல்லிய சான்றார், சான்றவர், சான்றோர் என்றும், சாதாரணமாய் சகல ஜனங்களாலும்

சான்றார் என்றும் அழைக்கப்பட்டவர்களே தமிழ்நாடெங்கும் மிகுந்த திரளாக ராமாயணத்தில் சொல்லியிருக்கிறதுபோல பெருகியிருக்கிறவர்களே தமிழ்ச் சத்திரியராகிய அரசகுலத்தவராம்.

(1) வடுக அரசர் இந்தத் தமிழ் நாட்டைக் கைப்பற்றிய காலமுதல் இந்தச் சான்ருர், அல்லது சான்ருேராகிய தமிழ்ச் சத்திரியர்க்கு சான்றா வார்லு என்று பெயர் சொல்லி வந்திருக்கிருர்கள். வாடு என்பதற்கு வடுகு அல்லது தெலுங்குப் பாஷையில் அவன் என்றும், வார்லு என்பதற்கு வடுகுப் பாஷையில் அவர்கள் என்றும் அர்த்தம். அன்றியும் வாடு என்பது வடுகில் தமிழில் அன் ஆகிய ஆண்பால் விகுதிக்கும், வார்லு என்பது ஆர், கள் என்றும் பலர்பால் விகுதிகளுக்கும், வாரு என்பது வடுகில் பலர்பால் விகுதிக்கும் வழங்கப்படுகின்றன. அந்தப்படியே சான்றாவாடு என்பதைச் சான்றவன் என்பதற்கும், சான்றாவாரு என்பதைச் சான்றவர் என்பதற்கும், சான்றாவார்லு என்பதை சான்றவர்கள் என்பதற்கும் அந்த வடுகர் வழங்கி வந்திருக்கிருர்கள்.

ஆகையால் தமிழ் ராசாங்கத்துக்கு வேர்ப்புழுக்களான வடுகராலே தமிழ்ச் சத்திரியர்க்கு சான்றவர்கள் என்று சொல்லப்பட்டு வருகிறது, மேற்படி சான்றவர்கள் தமிழ்த் சத்திரியரெனத் தெளிவாய்க்காட்டுகிறது.

(2) முன் சான்ருர் என்னும் வார்த்தைக்கு நாம் நூலாதாரம் காட்டிய போது சான்ருர் ஓர் ஜாதியார் என்று சொல்லியிருக்கிறதைக் காட்டியிருக்கிருேம். அந்த யாழ்ப்பாணத்தில் தற்காலத்திலும் சான்ருேர் என்னும் தமிழ்ச் சத்திரியராகிய குலத்தவரை சான்றார் என்றே அழைக்கிருர்கள்.

ஆகையால் தமிழ்ச் சத்திரிய குலத்தவர் சாதாரணமாய் சான்ருர் என்று அழைக்கப்பட்டவர்களாக இப்போதும் இருக்கிருர்கள். அந்தச் சான்ருரே சான்றவரும், சான்ருேருமாம்.

அந்த சான்ருர் குலத்தவரை சான்றவர் என்று அவர்களுக்கு விரோதிகளாகிய வடுகர் அழைத்து வருகிறதை முன் விபரித்திருக்கிருேம். ஆகையால் சான்ருர் சான்றவராம், சான்றவர் சான்ருேராம்.

(3) தமிழ்ச் சத்திரியருக்கு நூல்களில் நாடான், நாட்டான் என ஒருமையிலும், நாடார், நாட்டார் எனப்பன்மையிலும் வந்திருக்கிறதைத் தமிழ் நூல்களிலிருந்து நாம் முன் விஸ்தாரமாய் எடுத்துக்காட்டி யிருக்கிருேம். அந்தப்படி நாடான், நாட்டான், நாடன், நாடார், நாடார்கள் எனக் குலப் பட்டப் பெயர்கள் பெற்றவர்கள் முன்சொல்லிய "சான்றாவார்லு" அதாவது சான்றவர், சான்ருர் என்பவர்களே.

ஆகையால், நாடான், நாடார் முதலான குலப்பட்டப் பெயர்கள் பெற்றவர்களாக நிலைத்திருக்கிறவர்களே சான்ருர், சான்றவர், சான்ருேராகிய தமிழ்ச் சத்திரியர்.

(4) பிஷப் கால்வேல் (Bishop Caldwell) என்பவர் நாடார் சான்ருர் குலத்தவர் என்று தம்முடைய நூல்களில் எழுதியிருக்கிருர்.
அன்றியும், மேற்படி பிஷப் நாடான் என்ருல் நாட்டுக்கதிபதி என்று எழுதியிருக்கிருர். அவர் இங்கிலிஷில் Nadans=lords of the soil அதாவது பூமிக்கதிபதி என்று எழுதியிருக்கிருர்.

(5) தோமாஸ் தர்ண்புல் எஸ்கொயர் (Thomas Turnbull Esq.)என்பவர் கிறிஸ்தாண்டு 1825-ம் வருஷத்தில் "அதிபூர்வமான காலத்தில் இப்பிரதேசம் (திருநெல்வேலி) பெரிய பாண்டிய ராட்சியத்தின் ஒருபாகமாயிருந்தது. அவ்விராட்சியத்துக்குப் பிரதான நகரம் மதுரை. அது நாடுகள் (Naads) என்று சொல்லப்பட்ட பல சிறு ராட்சியங்களாகப் பிரிக்கப்பட்டு சத்திரிய அரசராகிய மேன்மைபொருந்திய ஒரு குலத்தாரால் ஆளப்பட்டு வந்தது. அவர்களுக்கு மகா சக்கரவர்த்தி பாண்டிய ராஜா என்னும் பட்டப் பெயர் இருந்தது. அவர்கள் அரசாட்சி தன்னிஷ்ட ஏகாதிபத்தியமாய் இருந்தது. அவர்கள் எல்லாரும் ஒருவருக்கொருவர் உட்பட்டிராமல் பிரத்தியேகமான சுயாதீன அரசாய் இருந்ததுமன்றி புத்திர பவுத்திர பாரம்பரை வரிசைக்கிரமமாய்ப் பட்டம் அடைந்தும் வந்தார்கள்" என்று எழுதியிருக்கிருர்.

இதில் பாண்டிய ராட்சியம் பலநாடுகளாகப் பிரிக்கப்பட்டு, சத்திரிய குலத்தாரால் ஆளப்பட்டுவந்தது என்று சொல்லியிருக்கிறது. நாடு ஆண்டவர்க்கு நாடார் என்று பெயர் என்று சொல்லியிருக்கிறதையும் கவனித்தறியலாம்.

(6) மிஸ். எஸ். தக்கெர் அம்மாளால் எழுதப்பட்ட தென்னிந்தியப் பிரபந்தம், இரண்டாம் பங்கு,

35-ம் பக்கம்,

"ஒரு நாடான் தன் காணியாட்சியான நிலத்தில் ஒரு பாகத்தை அயலான் ஒருவனுக்கு விலைக்கு விற்றிருந்தபோதிலும் மேற்படி நிலத்தைக் கிரயத்துக்கு வாங்கினவன் மேற்படி நிலத்திற்கு ஆதிபூர்வ பாத்திய உரிமையுடைய மேற்படி நாடானுக்கு மனைவரிப்பணம் (மனைவப்பணம்=Quit-rent) கொடுத்து வருவது வழக்கம்." மெய்யாகவே இந்த வழக்கம் இங்கிலிஷ் நாட்டு மேன்மக்களுக்கிருக்கிற வழக்கம்போலிருக்கிறது. இன்னும் ஒரு வழக்கம் உண்டு, அதாவது சிடாய ஸ்தலங்களில் நில வழக்குகள் நேரி

ஒங்காலத்தில் மற்றவர்கள் எல்லாரும் எழுத்துப்பட்டயங்களாகிய சாசனங்களால் தங்களுக்குரிய மேற்படி நிலப் பாத்தியத்தை ருசுப்படுத்த வேண்டியதாயிருக்கிறது. மேற்படி வழக்குக்காரன் மேற்படி நிலத்தைத் தான் விலைக்கு வாங்கினதை தஸ்தவேசுகளால் ருசுப்படுத்தாமற் போகிறகாலத்தில், மேற்படி பூமிக்குரிய நாடான் எவனோ அவனுக்கே அது உரியதென்று தீர்ப்பாகின்றது'' என்று சொல்லியிருக்கிறது.

மேற்படி பிரபந்தத்தில், நாடான் பூர்வ பாத்தியஸ்தனென்றும், அவனுடைய பூமியை யாருக்கு விற்றாலும் தன் பூர்வ பாத்தியப்படிக்கு ஓர் வகையான (மனைவப்பணம் என்னும்) தீர்வையை வாங்கக்கூடியவனென்றும், பின்னும் மிகுந்த விபரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இது அந்நியருடைய சாட்சியாம்.

ஆகையால், நாடான் பூர்வ பாண்டிய அரசர்களின் குலத்தாருகிய தமிழ்ச் சத்திரியன் என்றும் அவன் அழிந்துபோகவில்லை, நிலைத்திருக்கிறான் என்பதும் தெளிவாயிருக்கிறது.

(7) திருநெல்வேலியில் பிரபலம் பெற்றிருந்த செந்திநாத ஐயர் சத்திரிய குலத்தவரை நாடார், நாடார்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் சான்றார் குலத்தவரே என்று ஒப்புக்கொண்டு எழுதியிருக்கிறார்.

ஆகையால் முன் பூர்வநூல்களிலிருந்து எடுத்துக்காட்டியபடி, தமிழ்ச் சத்திரியகுலப் பட்டப்பெயர்களாகிய நாடார் முதலான நாமங்களைத் தரித்துக்கொண்டிருக்கிறவர்கள் அழிந்துபோகவில்லை, நிலைத்திருக்கிறார்கள் என்றறியலாம்.

(8) 41-ம் வினுவிற்கு விடை கூறிய இடத்தில் (31) இலக்கத்தின் கீழ் ஏனாதிநாத நாயனார் சான்றார், சான்றோர் என்று ருசுப்படுத்திக் காட்டியிருக்கிறோம். "அந்த ஏனாதிநாத நாயனார் குலத்தவர் இப்போது நாடார் என்று குலப்பட்டப்பெயருடைய சான்றார் குலத்தவர்தாம்'' என்று நாம் முன் கூறிய செந்திநாதர் ஒப்புக்கொண்டு எழுதியிருக்கிறார். (செந்திநாதர் புத்தகம், 30-ம் பக்கம் காண்க.)

ஆகையால் நாம் முன் பூர்வநூல்களிலிருந்து எடுத்துக்காட்டிய நியாயங்களின்படி நாடார் முதலான சத்திரியகுலப் பட்டப்பெயர்களைத் தரித்துக்கொண்டிருக்கிறவர்கள் அழிந்துபோகவில்லை, நிலைத்திருக்கிறார்கள் என அறியலாம்.

52. வினு.—சான்றர், சான்றவர், சான்றோர் என்னும் பெயர்களை குலப்பெயர்களாகத் தரித்துக்கொண்டிருக்கிற வேறே எந்தக் குலத்தவராவது உண்டா ?

விடை.—சான்ருர், சான்றவர், சான்ரேர் என்னும் குலப்பெயர்களைத் தங்களுக்குரியதென்று சொல்லுகிற வேறே எந்தக்குலத்தவராவது இல்லை.

தமிழ்ப் பார்ப்பனக் குலத்தவரைப்பார்த்து, "நீங்கள் சான்ருரா" என்று கேட்டால் அவர்கள், "நாங்கள் சான்ருரல்ல" என்கிருர்கள். ஆகையால் அவர்கள் சான்றவருமல்ல, சான்ரேருமல்ல. நூல்களில் அவர்களுக்கு அப்பெயர்கள் சொல்லப்படவுமில்லை.

தமிழ்ச் செட்டிகுலத்தவரைப்பார்த்து, "நீங்கள் சான்ருரா" என்று கேட்டால் அவர்கள் "நாங்கள் சான்ருரல்ல" என்கிருர்கள். ஆகையால் அவர்கள் சான்றவருமல்ல, சான்ரேருமல்ல. நூல்களில் அவர்களுக்கு அப்பெயர்கள் சொல்லப்படவுமில்லை.

தமிழ்ச் சூத்திரராகிய வெள்ளாளர் முதலானவர்களைப்பார்த்து "நீங்கள் சான்ருரா?" என்று கேட்டால் "நாங்கள் சான்ருர் அல்ல" என்கிருர்கள். நூல்களில் அவர்களுக்கு அப்பெயர்கள் சொல்லப்படவுமில்லை. ஆகையால் அவர்கள் சான்றவருமல்ல, சான்ரேருமல்ல.

நாடார், நாடார்கள் ஆகியவர்களைப்பார்த்து, "நீங்கள் சான்ருரா?" என்று கேட்டால், "நாங்கள் சான்ருர் தாம்" என்கிருர்கள். ஆகையால் அவர்கள் சான்றவரும், சான்ரேருமாயிருக்கிருர்கள். பூர்வ நூல்களில் சான்ருர், சான்றவர், சான்ரேர் என்னும் பெயர்கள் அவர்களுக்கே சொல்லப்பட்டிருக்கின்றன என்று முன் திருஷ்டாந்தப்படுத்தியிருக்கிரேம்.

ஆகையால் சான்ருர், சான்றவர், சான்ரேர் குலத்தவர்களே தமிழ்ச் சத்திரியர்களாம்.

53. வினு.—தமிழ் அரசாட்சி ஒழிந்துபோனதற்கும், அந்நிய அரசர் தமிழ் நாட்டைக் கைப்பற்றிக் கொண்டதற்கும் விபரமென்ன?

விடை.—முந்தியே சோழனும் பாண்டியனும் கூடி, சேர அரசனைச் செயித்து, சேரநாட்டைத் தங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொண்டார்கள். மேற்படி சங்கதியோடே சேர ராட்சிய மகிமை ஒழிந்தது.

அநேக வருஷங்களுக்குப்பின் காஞ்சிபுரத்தில் ஆண்டுவந்த வீரசேகர சோழன் ஆனவன் சந்திரசேகர பாண்டியனைச் செயித்து, பாண்டியநாட்டைத் தன் கைவசப்படுத்திக்கொண்டான். அக்காலத்திலே இப்போது விசாகப்பட்டணம் ஜில்லாவில் சேர்ந்திருக்கிற விசயநகரத்தில் ஆண்டுகொண்டிருந்த வடுக வேந்தனை மேற்சொல்லிய சந்திரசேகர பாண்டியன் அண்டி, சோழ அரசன் தனக்குச்செய்த மோசத்தைத் தெரியப்படுத்தின

தினால் விசயநகர ராயன் என்ற முன் சொல்லிய வடுகவேந்தன் தன் சேனாதிபதிகளில் ஒருவனாகிய நாகம நாயக்கன் என்பவனைநோக்கி, "நீ மதுரைக்குப்போய், சோழனைச் செயித்து, சந்திரசேகர பாண்டியனுக்குப் பட்டம் கட்டிவா" என்று உத்தரவு கொடுத்தான். மேற்படி நாகம நாயக்கன் சேனையுடன் மதுரைக்குவந்து, சோழனைச் செயித்து, மதுரையைப் பாண்டியனுக்குக் கொடுத்திடாமல் தானே மதுரையை ஆண்டு கொண்டான்.

அவன் ஆளுங்காலத்தில் நாளுக்குநாள் தொட்டியரும், கம்பளத்தாரும், பட்டுநூற்காரரும், கோமுட்டிகளும் அதிகமாய் வந்து மதுரையில் குடியேறிக் கொண்டார்கள். ஆனதினால் பாண்டிய குலத்தவர்க்கு மனதில் கலக்கம் உண்டாகி உள்ளே பகையும், வெளியே பேச்சுமாயிருந்தார்கள். இப்படியிருக்கையில், சந்திரசேகர பாண்டியன் மறுபடியும் விசயநகரத்துக்குப்போய் வடுக வேந்தனிடத்தில் நாகம நாயக்கன் செய்த துரோகத்தை எல்லாம் சொன்னதினால் வடுக வேந்தனுடைய மனதில் வருத்தம் உண்டாகி தன் சேனாதிபதிகளைப்பார்த்து, "நாகம நாயக்கனுடைய தலையைக் கொண்டு வருபவன் யார்?" என்று கேட்க, மேற்படி நாகம நாயக்கனுடைய மகனாகிய விசுவநாத நாயக்கன், "நான்போய் என் தகப்பனை வென்று, பாண்டியனுக்குப் பட்டங்கட்டி, என் தகப்பனாகிய நாகம நாயக்கனைக் கொண்டுவந்து, தங்கள் சமுகத்தில் விடுகிறேன்" என்று சொல்லி மிகுந்த சேனையோடே மதுரைக்கு வந்து, தன் தகப்பனை வென்று, சந்திரசேகர பாண்டியனுக்குப் பட்டங்கட்டி, தன் தகப்பனாகிய நாகமநாயக்கனை விசயநகரத்து வடுக வேந்தனிடம் கொண்டுபோய் நிறுத்தினான். அதினால் வடுக வேந்தன் சந்தோஷித்து விசுவநாத நாயக்கனைப்பார்த்து, "சந்திரசேகர பாண்டியனுக்குப் பின் பாண்டிநாட்டை உனக்குத் தருவேன்" என்று உறுதிமொழி சொன்னான். சந்திரசேகர பாண்டியனுக்கு மறுபடியும் பட்டம் கிடைத்தவுடனே அவனுடைய குலத்தவர்க்கு மனக்களிப்புண்டாகி, மதுரையில் முன் வந்திருந்த வடுகக் குடிகளைத் துரத்திவிடும்படி ஆலோசனை செய்தும் அது பலிதமாகாமல் வடுகர்மேல் உள்ளே பகையும், வெளியே நட்புமாயிருக்க, இதை அறிந்த வடுகரும் அதுபோல் நட்புக்காட்டி வந்தார்கள்.

கிறிஸ்தாண்டு 1400-ம் வருஷம் சந்திரசேகர பாண்டியன் மரணமடைந்தான். உடனே விசுநாதநாயக்கன் மதுரையை ஆண்டுகொண்டான்.

அதன் பின்பு பாண்டிய குலத்தவரான நாடார்கள் நம்முடைய குலத்துக்குரிய பட்டம் போய்விட்டதே யென்று வடுகர்மேல் மிகு மனவருத்தமுள்ளவர்களா யிருந்தார்கள்.

காஞ்சிபுரத்திலே பிறந்து வளர்ந்து, விசயநகர வடுக வேந்தனுடைய தயவு பெற்று விளங்கிய சூத்திரனாகிய அரியநாயகமுதலி என்பவன் விசுவநாதநாயக்கனுடனே மதுரைக்கு அனுப்பப்பட்டான். அந்த அரிய நாயகம் என்பவன் பாண்டிய நாடார்கள்மேல் எரிச்சல்கொண்டு அவர்கள் வடுகர் மேல் பொறாமை கொண்ட விஷயங்களை மூட்டிவிட்டு, பாண்டிய நாட்டிலுள்ள சோட்டாடுகளை விசுவநாத நாயக்கனுக்குச்சொல்லி, நாயக்கன் மனதில் தான் நல்லவனென்றும், யுக்தியில் வல்லவனென்றும் காட்டி இணங்கி நடந்ததினால், தளகர்த்தன், பிரதானி என்னும் இரண்டு உத்தியோகங்களைப் பார்க்கும்படி நாயக்கன் உத்தரவு கொடுத்தான். அப்பால் நாயக்கன் அரிய நாயகத்தைப்பார்த்து, "தென்திசையில் பாண்டியகுலச் சிற்றரசர்களாகிய பஞ்சவழுதி நாடார்கள் அரசுசெய்து வருகிறபடியால் அவர்களிடம் நீ போய் பகுதிப்பணம் வாங்கிக்கொண்டுவா" என்று கட்டளையிட்டான். அப்படியே அரியநாயகம் சேனையோடே திருநெல்வேலிக்குப் போனான்.

அங்கே கொற்கை நகரத்திசையில் அரசுபுரிந்த பஞ்சவழுதி நாடார்களைக் கண்டு நாயக்கனுடைய உத்தரவை அரிய நாயகம் தெரிவித்தான். நாடார்கள் ஐந்துபேரும் கோபங்கொண்டு, "எங்கள் பூர்வவம்ச வங்கிய பாண்டியர் காலமுதல் சந்திரசேகர பாண்டியர் காலம் வரையில் நாங்கள் தன்னரசாயிருக்க, இப்போது வடுகன் எங்களிடத்தில் பகுதிப் பணம் வாங்கிவரச் சொன்னான் என்று நீ எங்களைக் கேட்க வந்தாயா ?" என்று சொல்ல, அரியநாயகம் தன் சேனைகளைக்கொண்டு அவர்களோடே போர் செய்தான். வழுதிநாடார்களும் போர் செய்ததில் அரியநாயகம் தோற்று மதுரைக்குத்திரும்பி, நடந்த சங்கதிகளைத்தெரிவித்து, நாயக்கன் மனதில் தீராப்பகையை மூளும்படி செய்தான். அப்போது மேற்படி நாடார்களை மிஞ்சவிடுவோமானால் நம்முடைய அரசாட்சியீனமாகும் என்று நாயக்கன் சொல்லி, சேனைகளைச் சேர்த்து, அந்த ஐந்துபேரோடே சண்டைசெய்தான். அந்தப்படி நடந்த சண்டையில் அநேகர் சாகிறதையும், தோல்வி அல்லது வெற்றி என்று தெரியாதிருக்கிறதையும் நாயக்கன் கண்டு, உபாயத்தால் ஐந்துபேரையும் கொல்லவேண்டுமென்று யோசித்து, "சண்டையில் அநேகர் சாகிறார்களேயல்லாமல் சண்டை முடிவாகிறதற்கு ஏதுவில்லையே, அது உங்களுக்கும் எனக்கும் வருத்தமாகத்தானே யிருக்கிறது. ஆகையால் சேனைகளில்லாமல் நீங்கள் ஐந்துபேர்களும் என்னோடே சண்டை செய்யுங்கள், நான் தோற்றால் நான் பாண்டிநாட்டை விட்டு ஓடிப்போகிறேன். நீங்கள் தோற்றால் உங்களுடைய நாடுகளை விட்டு ஓடிப்போங்கள்" என்று சொல்ல, வழுதிகள் ஐந்துபேரும் "ஒருவனோடே ஐந்துபேர் சண்டையிடுவது எங்கள் ராஜகுல தர்மமல்ல. ஆதலால் ஒருவனும் நீயுமாக சண்டை செய்யலாம். வெட்டுண்டு போனவன் எங்களுடையவனானால் நாங்கள் எல்லாரும் எங்கள் நாடுகளைவிட்டு ஓடிப்போகிறோம். நீ தோற்றால்

உன் சேனைகளோடே பாண்டிநாட்டை விட்டு ஓடிப்போ என்றார்கள். நாயக்கன் அதற்கிணங்க, அந்த வாக்கை ஒரு பட்டயத்தில் எழுதி, ஒரு தூணில் கட்டிப்போட்டு, அந்தப்படி சண்டை செய்ததில் அக்கிர பாண்டியன் நாயக்கனால் மாண்டான். உடனே நாலு பாண்டியரும் தங்கள் நாடுகளைவிட்டு காணமற் போய்விட்டார்கள்.

அதன்பின்பு அவர்களுடைய குலத்தவராகிய பாண்டியநாடார்கள் தாய்தகப்பனில்லாத பிள்ளைகளைப்போல் மனதில் ஏக்கங்கொண்டிருக்கும் காலத்தில் விசுவநாதநாயக்கனும் தன் மனதில் பாண்டியகுல நாடார்கள் மேல் கொண்ட வைராக்கியத்தை நிறைவேற்றத் துணிந்துகொண்டான். மேற்படி நாயக்கன் சண்டைசெய்த காலத்தில் தனக்கு உதவியாகநின்ற கம்பளத்தார், தொட்டியர், காப்பிலியர், மறவர் ஆகியவர்களுக்குப் பாளையப்பட்டாக அநேக கிராமங்களைக் கொடுத்து, மதுரைப்பட்டணத்து 72 கொத்தளங்களைக் காவல் செய்யும்படியாகவும், அவசியம் நேரிடுங்காலத்தில் படைகளோடே வரவும் கட்டளையிட்டான். மற்றக் கிராமங்களுக்கு வடுகப் பிராமணரையும், சுதேச வெள்ளாளரையும் மணியகாரராக்கி, பாண்டியகுல நாடார்களைத் துன்பப்படுத்தி, எளிய நிலைமையில் வரும்படியாகச் செய்து, இருப்பாணி கடாவினதுபோல் ஊருக்கூர் பாண்டியகுலத்தவரைப் பகைக்கும்படி உத்தரவுசெய்தான்.

நாலடியார், 37-வது அதிகாரம், 8-வது கவி.

"உடைப்பெருஞ் செல்வரும் சான்றோரும் கெட்டு
புடைப்பெண்டிர் மக்களும் கீழும் பெருகி
கடைக்காறலைக் கண்ணதாகிக் குடைக்காற்போல்
கீழ்மேலாய் நிற்கும் உலகு"

இக்கவியில், "செல்வர்களும் அரசகுலத்தாருமானவர்கள் வறுமைப்பட்டுப்போவார்கள், அவர்களுடைய வைப்பாட்டிப்பிள்ளைகள் மேலாவார்கள், குடையில் பூமியில் படும்படியான கீழ்ப்பக்கம் மேலே நிற்பதுபோல் உயர்ந்தோர் கீழும், கீழ்மக்கள் மேலுமாவார்கள்" என்றுசொல்லியிருக்கிறது.

அதுபோல், இதுமுதல் பாண்டிய நாட்டிலுள்ள சிவவிஷ்ணு கோயில்களுக்குத் தர்மகர்த்தாக்களாகவும், மணியகாரராகவும் வடுகப்புரோகிதர்களும், வெள்ளாளர்களும் புகுந்துகொண்டார்கள். இதுவுமல்லாமல் அரியநாயகம் தன் வம்சத்தாராகிய வெள்ளாளர்களில் 300 வீட்டுக்காரரை மதுரைக்கடுத்த சோழன்வந்தான் என்னும் ஊரில் குடியேற்றி, நாயக்கர்கள், கம்பளத்தார், ரெட்டிகளாகியவர்களுக்குச் சமமாக விர்த்திசெய்தான்என்

றும் "அரியநாயகமுதலி பிரஸ்தாபம்" என்னும் நூலில் எழுதப்பட்டிருக்கிறது.

மேற்படி பாண்டியகுலத்தாரை எவ்விதத்திலும் சம்பந்தம் இல்லாமல் துண்டாக்கிவிட்டார்கள். பாண்டியதேசத்திலுள்ள ஆலயங்களில் முன் பாண்டிய குலத்தாராகிய தமிழ்ச்சத்திரியர் பிரவேசித்துவந்த மேல்கோபுர வாசல்களையெல்லாம் அடைத்து, மற்றவர்கள் போகும்படியான வழியில் போக எதிரிகள் கட்டளையிட்டார்கள்.

மேலும் பகைவர் முன்னிலையில் இருப்பதிலும் கண்காணுவிடம் போய்ப் பிழைப்பது நலம் என்று தமிழ்ச்சத்திரியர் எண்ணி பற்பல புறவிடங்களில் போய் வசித்திருந்தார்கள். மற்றவர்கள் "கீழோராயினுந் தாழவுரை" என்னும் மூதுரைப்படி எதிரிகளாகிய சாதிக்காரருக்குத் தணிந்தடங்கி பற்பல தொழிற் செய்து இல்லற தர்மத்தை வழுவாமல் நடத்திக்கொண்டு வந்தார்கள்.

சோழநாட்டையும் வடுகர் கைப்பற்றிக்கொண்டு,சோழகுலநாடார்களை வடுகரும், வெள்ளாளரும் துன்பப்படுத்தினபடியால் அவர்கள் பலநாடுகளுக்குப் போய்க் குடியேறி இழிய தொழில்களில் பிரவேசித்து வயிறுவளர்த்துக்கொண்டுவந்தார்கள்.

முன் சோழனாலும், பாண்டியனாலும் எடுத்துக்கொள்ளப்பட்ட சேரநாட்டு நிலைமையும் இவர்களைப் போலாயிற்று. அவர்கள் கன்னடியரால் துன்பப்பட்டு நிலைகுலைந்துபோனார்கள்.

விசுவநாதநாயக்கன் ஆண்ட 26 வருஷங்களாகத் தமிழ்நாட்டரசர் நிலைமை அலையிலகப்பட்ட துரும்புபோலாயிற்று. அவர்கள் அங்கும் இங்கும் போய் அலைந்துகொண்டிருந்தார்கள்.

விசுவநாதநாயக்கன் மகன் பெரிய கிஷ்ணப்ப நாயக்கன் பட்டமடைந்து, தகப்பனைப்போலவே நாடார்களைத் துன்பப்படுத்திக்கொண்டு வந்தான். இவன் தன்னை அவமானமாய்ப் பேசின கண்டிராசனுக்கு எதிராகத் தன் மைத்துனனாகிய விசயகோபால நாயக்கனை அனுப்பி, கண்டிராசனை செயித்து, விசயகோபால நாயக்கனைக் கண்டிக்கு அரசனாக்கினான். பெரிய கிஷ்ணப்பநாயக்கன் ஆளுங்காலத்தில் அரியநாயகமுதலி மரணமானான். பெரிய கிஷ்ணப்பநாயக்கன் 31 வருஷம் ஆண்டபின் அவன் மகன் பெரியவீரப்ப நாயக்கன் பட்டமடைந்தான். அவன் ஆண்டகாலத்தில் சகல கிராமங்களிலும் வாசம்பண்ணின பலசாதி அதிகாரிகளையும் வரவழைத்து, பாண்டிய குலத்தாரிடம் பந்திபோசனம் செய்யக்கூடாது என்றும், அவர்களுடைய

நன்மை தீமை காலங்களுக்கு புரோகிதர் முதலான யாவரும் போகக்கூடாதென்றும் கட்டுப்பாடு செய்தானென்று பாண்டியகுலப் பெரியோர் சொல்லுகிறது வழக்கமாயிருக்கிறது.

பெரிய வீரப்ப நாயக்கன் ஆண்டகாலம் 27-ௗு. அவன் மகன் விசுவப்ப நாயக்கன் ஆண்டகாலம் 20-ௗு. அவனுக்குப்பின் அவன் தம்பி குமார கிஷ்டப்ப நாயக்கன் ஆண்டகாலம் 17-ௗு. அவன் மகன் முத்துக்கிஷ்ணப்ப நாயக்கன் குழந்தையாயிருந்தபடியால் தம்பி கஸ்தூரிநாயக்கன் ஆண்டகாலம் 7-ௗு. கஸ்தூரி நாயக்கனுக்குப்பின் முன் குழந்தையாயிருந்தானென்று சொல்லப்பட்ட முத்துக்கிஷ்ணப்ப நாயக்கன் ஆண்டகாலம் 30-ௗு. அவன் மகன் முத்து வீரப்ப நாயக்கன் ஆண்டகாலம் 32-ௗு. அவன் மகன் திருமலை நாயக்கன் ஆண்டகாலம் 40-ௗு. அவன் மகன் முத்துநாயக்கன் ஆண்டகாலம் 10-ௗு. அவன் மகன் சொக்கநாத நாயக்கன் ஆண்டகாலம் 16-ௗு. அவன் மகன் ரெங்க கிஷ்டப்ப நாயக்கன் ஆண்டகாலம் 7-ௗு. அவன் மகன் விசயரெங்க சொக்கநாத நாயக்கன் 3-மீ குழந்தையாயிருந்தபடியால், குழந்தையின் பாட்டியாகிய மங்கம்மாள் ஆண்டகாலம் 18-ௗு. அவளுக்குப்பின் முன் குழந்தையாயிருந்தான் என்று சொல்லப்பட்ட விசயரெங்க சொக்கநாத நாயக்கன் ஆண்டகாலம் 19-ௗு. அவனுக்கு பிள்ளையில்லாதபடியால் அவனுடைய சிறிய தகப்பனுகிய பங்காரு திருமலை நாயக்கன் ஆண்டகாலம் 37-ௗு. ஆக கிறிஸ்தாண்டு 1400-ௗு முதல் 1737-ௗு வரையில் வடுக நாயக்கன்மார் ஆண்டகாலம் 337-ௗு.

இதன்பின் துலுக்கர் மதுரைக்கு வந்து சேர்ந்ததினுல் நாயக்கன்மாருடைய துரைத்தனம் அழிந்ததையும், மராட்டியார் சோழநாட்டைக் கட்டிக்கொண்டதையும், பிரான்சுக்காரர் இங்கிலிஷர் ஆகிய இருவரும் சண்டைசெய்ததில் இங்கிலிஷர் பிரான்சுக்காரரை செயித்து தமிழ் நாட்டை எடுத்துக் கொண்டதையும் சொன்னுல் விரியும். கிறிஸ்தாண்டு 1737முதல் 1800-வரையில் 63-ௗுங்களாக தமிழ் நாடு பலபேராலும் பின்னும் வருத்தமடைந்தது. மேற்படி 1800-ௗுத்தில் மதுரையில் இங்கிலிஷ் கொடிபோடப்பட்டது. 1801-ௗு, அதாவது துலுக்கருடைய பசலிௗு 1211-ல் ஆர்டிஸ் எஸ்கொயர் என்பவர் மதுரைக்குக் கலெக்டராக இங்கிலிஷ் துரைத்தனத்தாரால் நியமிக்கப்பட்டார்.

மேலே சொல்லிய பாண்டியகுல நாடார்களின் குலம், கல்வி, ஆண்மை, உபநயனம் முதலான ஆசாரங்களும் எளிய சாதிக்கொப்பாகிவிட்டது. அதினுல் அவர்களுடைய பின் சந்ததியார் தங்கள் குல உற்பத்திக்கிரமம் தீர்க்க முறத்தெரியாதவர்களாய்ப் போய்விட்டார்கள்.

தற்காலத்தில் கல்விச் சாலைகளில் பிறகுலத்து வாலிபர்களுக் கொப்பாகக் கல்வி கற்றுவருகிற தமிழ்ச் சத்திரிய குலத்தவர் பல நூலாராய்ச்சி செய்யும் திறமையுடையவர்களாகி, சமஸ்கிருதம், தமிழ், இங்கிலிஷ் பாஷைகளிலிருக்கின்ற இலக்கிய இலக்கண நூல்களை விஸ்தாரமாக ஆராய்ந்து வருகையில், தங்கள் குலத்தின் பூர்வோத்திர உண்மையைத் தீர்க்க முறக்கண்டு தெளிவுற எடுத்துக் காட்டவேண்டியதாயிற்று.

வடுக நாயக்கமாரும், வெள்ளாளரும் பின் வந்த துலுக்கரையும், மராட்டியரையும் அடுத்து மேலான உத்தியோகங்களில் புகுந்து கிராமங்கள் தோறும் அதிகாரஞ் செய்ததினால், பூர்வநூல்களுக்குக் கொஞ்சமாகிலும் சம்பந்தப்படாத வலங்கை, இடங்கை என்ற இருவகைக் கலகத்தையும் மூட்டினதுமல்லாமல் தமிழ்ச் சேட்டிகளாகிய வணிகரின் மேன்மையான விஷயங்களில் சிலதைத் தடுத்து தங்கள் குலத்துக்குத் தாழ்வான குலமாக மதிக்கும்படி செய்து போட்டார்கள்.

வியாசனால் வடமொழியில் செய்யப்பட்ட லிங்கபுராணமானது குலசேகரபாண்டியனால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. அதில் கலியுகத்தியற்கை சொன்ன அத்தியாயம், 1-வது கவி,

"கடையுகத்தில் தருமநிலை வேர்சாய பொய்மை
[யொடுங் களவுவஞ்ச,
மடுகொலை மற்றிவை முதல்பாவங்க டழைத்திட்
[லாலளிகள் பாட,
மடலவிழுங் கமலத்தார் மறையவர் கழல்வேந்தர்
[வணிகர் தொல்லை,
யொடிவின் மறைநவில் கலர ரொழுகாத நெறியதனி
லொழுகுவாரே."

இக்கவியில், "புண்ணியங்கள் கெட்டு பாவங்கள் பெருத்து அந்தணர், அரசர், வணிகர், இந்த மூன்று குலத்தவர்களும் ஓதும்படியான பழைய வேதாகமங்களை ஓதாமல் இழிய தொழில்களைச் செய்வார்கள்" என்று சொல்லியிருக்கிறது.

மேற்படி கவியில், அவரவர் தொழில் கெட்டு இழிய தொழில்களைச் செய்வார்கள் என்று சொல்லியிருக்கிறதைக் கவனியாமலும், தேசச் சரித்திரங்களை ஆராயாமலும் மத்தியகாலத்தில் பொறாமையால் உண்டாக்கின கட்டுக்கதைகளைப் பார்த்து, அரசகுலம் அழிந்துபோனதாக மனம் போ

ணபடி பிதற்றுகிறார்கள். அவர்கள் வாயில் ஆப்புக் கடாவினாற்போல்மேற்படி கவியில் சொல்லியிருக்கிறது.

சேர, சோழ, பாண்டியகுல நாடார்களுக்கு இருந்த இராசாங்கப்பலம் வடுகரால் ஒழிந்தது. அந்த வடுகருடைய பகையால் இடத்துக்கிடம் உண்டான கட்டுப்பாட்டின் கொடூரத்துக்குப் பயந்து மூலை முடக்குகளில் ஒதுங்கி, தரித்திரத்தின் கொடுமையால் பலவகையான தொழிலுடையவராய் வர்த்தகம், உழவுத்தொழில்களில் பிரவேசித்துப் பிழைக்கவேண்டியதாயிற்று. இதை அறியாத அந்நிய பாஷைக்காரராகிய இங்கிலிஷ் துரைத்தனத்தார் நாடார்களை மன்னர்குலமென்று சொல்ல மயங்குகிறார்கள்.

மேற்படி கலியுகத் தியற்கை சொன்ன அத்தியாயம்,

2-வது கவி,

"பின்னவராடகப் பசும்பொன் மடங்கலாசனத்
[திருப்பபிறங்கு மௌளவாண்,
மன்னவர், வேதியர் வரதம்வனை கழற்கால் வணங்கி
[முறை யேவல்பூண்பா,
ரன்னவர் வேதியரொழுகு நெறியதனி லொழுகுவா
[ரழிவிலாத,
மன்னுமறை யவர்நான்காம் வருணத்தார்நெறியதனில்
[மன்னிவாழ்வார்."

இக்கவியில், நாலாவது வருணத்தார் பொன்னாசனத்தின்மேலிருப்பார்கள். அந்தணரும் அரசரும் அவர்களை வணங்கி ஏவல்தொழில் செய்வார்கள். நாலாவது வருணத்தார் பழைய வேதாகமங்களை ஓதுவார்கள்" என்றுசொல்லியிருக்கிறது.

அரசாட்சி மாறுதலால் மேல்கீழாகவும், கீழ்மேலாகவும் போனதினால் பிராமணகுலத்திற்கு "ஏற்றல்" தொழில் சிறப்பான குலத்தொழிலாயிருக்கிறதினாலும், இந்துதேசப் பூர்வகுல பெரியோர்களால் மதித்து சகல சாதியும் வணங்கத்தக்க குலமாயிருக்கிறதினாலும், எந்த எந்தக்காலத்தில் எந்த எந்த ராஜாங்கம் வருகிறதோ அந்த அந்த ராஜாங்க நோக்கத்துக்குத்தக்கபடி இணங்கி நடந்துகொள்ளுகிறதினால் எந்தக்காலத்திலும் பிராமணகுலத்தவர் மேலாகவேயிருக்கிறார்கள். அரசகுலத்தவராகிய நாடார்களுக்கு அப்படி ஏற்றல் தொழிலுமில்லை, எதிரிகளுக்கு இணங்கிநடக்கும்படியான குணமும் இல்லாதபடியால் சத்துராதிகளால் துன்பப்பட்டு நெடுகிலும் வறுமை அடைகிறார்கள்.

54. **வினு.**—அரசாட்சியை இழந்துபோன தமிழ்ச் சத்திரியர்க்கு அரசன் என்று அர்த்தமுள்ள **நாடான்** என்னும் பட்டப்பெயர் தற்காலத்திலும் ஏற்குமா ?

விடை.-ஐயன் என்னும் பெயர்க்கு குரு என்பது பொருள். பார்ப்பாரில் குருத்துவத்தொழில் செய்யாமல் பற்பல தொழில்களைச் செய்து வருகிறவர்களுக்கும் ஐயன் என்னும் குலப்பட்டப்பெயர் சாதாரணமாய் ஆட்சேபனையின்றி வழங்கிவருகிறது. அந்தப்படி வியாபாரம் செய்யாமல் வேறே பலதொழில் செய்கிறவர்களுக்கும் செட்டி என்று முன் தொழிற்பெயர் வைசியர்க்கு வழங்கிவருகிறது. அந்தப்படியே தமிழ்ச் சத்திரியர் தங்கள் அரசாட்சியை இழந்தாலும் நாடான் என்னும் குலப்பட்டப்பெயர் வழங்கிவரவேண்டியது நியாயமே. அந்தப்படி சாதாரணமாய் ஆட்சேபனையின்றி வழங்கிவருகிறது.

குலப்பட்டப்பெயர்கள் குலப்பிறப்பினுல் உண்டாகி, நிலைபெற்றதேயன்றி அந்த அந்தக் காலத்தொழிலினுல் உண்டாகி நிலைபெற்றதல்ல.

முன் மதுரையை பல ஆயிரம் வருடங்களாக ஆண்டும் பின் அரசிழந்துபோன தமிழ்ச் சத்திரிய குலத்தைச் சேர்ந்த ஒருவனையும், முன் மதுரையை சிலவருடங்களாக ஆண்டும் பின் அரசிழந்துபோன கவரைய குலத்தைச் சேர்ந்த ஒருவனையும், முன் மதுரையைச் சொற்பக்காலமாக ஆண்டும் பின் அரசிழந்துபோன ஒரு பட்டாணியையும் ஒருவர் கூப்பிட்டு, "உங்கள் மந்திரிமார் எங்கே ? கோட்டை எங்கே ? செங்கோல் எங்கே ? சேனுபதி எங்கே ? அத்தியட்சன் எங்கே ? கிராமாதிகாரி எங்கே ? சேவகன் எங்கே ? யுத்தவீரர் எங்கே ? தூதர் எங்கே ? சாமபேத தான தண்டம் எங்கே ? இரதகஜதுரகபதாதி என்னும் சதுரங்க சேனை எங்கே ? சிங்காசனம் எங்கே ? குடை எங்கே ? கவசம் எங்கே ? வில் எங்கே ? நாணெங்கே ? அம்பெங்கே ? அம்புக்கூடு எங்கே ? பரிசை எங்கே ? ஈட்டி எங்கே ? இவையெல்லாம் அரூபமாக மறைந்து நிற்கின்றனவோ என்றுகேட்டால், அப்படிக்கேட்டவர் சபையிலிருந்து கேட்க வாய்பிளந்தவரேயாயின் செந்திநாதர் சொன்னதுபோல் சிட்சை பெறுதிருக்கமாட்டார். அப்படிக் கேட்பவர்க்கு தலையிலே மூளையில்லையே என்று பெரியோர் பரிதாபப்படுவார்கள்.

55. **வினு.**—**குலத்தொழிற்கிரமம்** இலக்கிய இலக்கண நூல்களில் பல இடங்களிலும் குறிப்புக்குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறதோ ? அல்லது அதைப்பற்றிய அட்டவணையும் உண்டோ ?

விடை.-குலத்தொழிற்கிரமம் அநேக இலக்கிய இலக்கண நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. சேந்தன் திவாகரம், 12-வது தொகுதியிலோ அது அட்டவணையாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அட்டவணை வருமாறு,

78, 79, 80, 81-வது சூத்திரங்கள்.

"அந்தணர் அறுதொழில்."

"ஓதலோதுவித்தல், வேட்டல், வேட்பித்தல்
ஈதல் ஏற்றல் என்றிரு மூவகை
ஆதிகாலத் தந்தணர் அறுதொழில்."

"அரசர் அறுதொழில்."

"அரசர் அறுதொழில் ஓதல், வேட்டல்
புரைதீரப் பெரும் பார்ப் புரத்தல், ஈதல்
கரையறு படைக்கலம் கற்றல் விசயம்."

"வணிகர் அறுதொழில்."

"வணிகர் அறுதொழில் ஓதல், வேட்டல்
ஈதல் உழவு பசுக்காவல், வாணிகம்."

"வேளாளர் அறுதொழில்."

வேளாளர் அறுதொழில் உழவு பசுக்காவல்
தெள்ளிதின் வாணிபம் குயிலுவம் காருகவினை
ஒள்ளிய இருபிறப் பாளர்க் கேவல் செயல்."

82-வது சூத்திரம்.

"குயிலுவம் வாத்தியம் கொட்டுதலாகும்."

83-வது சூத்திரம்.

"பருத்திநூல், பட்டுநூல் அமைத் தாடையாக்கலும்
சுமத்தலும், பிறவும் காருகவினைத்தொழில்."

மேலே சொல்லிய சூத்திரங்களின் அர்த்தமாவது:—

அந்தணர்க்கு (1) ஓதல், அதாவது வேதங்கள் ஓதுதல். (2) ஓதுவித்தல், அதாவது சத்திரியர்க்கும் வைசியர்க்கும் வேதங்களைப் படிப்பித்தல் (3) வேட்டல், அதாவது யாகம் செய்தல். (4) வேட்பித்தல், அதாவது சத்திரியரைக்கொண்டும், வைசியரைக்கொண்டும் யாகம் செய்வித்தல். (5) ஈதல், அதாவது கோயிலிலிருந்து சத்திரியர்க்கும், வைசியர்க்கும் பிரசாதம், அவிர்ப்பாகம், விபூதி முதலானவைகளைக் கொடுத்தல். (6) ஏற்றல்,

அதாவது சத்திரியராலும், வைசியராலும் கொடுக்கப்பட்ட எவ்வகைப் பொருளையும் வாங்கிக் கொள்ளல்.

அரசர்க்கு (1) ஓதல், அதாவது வேதங்களைப் படித்தல். (2) வேட்டல், அதாவது யாகம் செய்தல். (3) உலகோம்பல், அதாவது உலகத்தைப் பாதுகாத்தல். (4) ஈதல், அதாவது பார்ப்பாருக்கும் வைசியர்க்கும் தேவையானவைகளைக் கொடுத்தல். (5) படைக்கலம் கற்றல், அதாவது ஆயுதம் எடுத்து வீசும்படி படித்தல், வெட்டும்படி பழகுதல். (6) விசயம், அதாவது சத்துருக்களை வெல்லுதல்.

வைசியர்க்கு (1) ஓதல், அதாவது வேதங்களைப் படித்தல். (2) வேட்டல், அதாவது யாகம் செய்தல். (3) ஈதல், அதாவது கொடுத்தல். (4) ஏருழல், அதாவது பயிரிடல். (5) பசுக்காத்தல், அதாவது மாடுகள், ஆடுகள் முதலானவைகளை வைத்துப் பரிபாலித்தல். (6) பொருளீட்டல், அதாவது கையிலுள்ள முதற்பொருளைக் கொண்டு வியாபாரஞ் செய்து பொருளை விர்த்தியாக்கல்.

வேளாளர்க்கு (1) ஏருழல், அதாவது பயிரிடல். (2) பசுக்காத்தல், அதாவது மாடுகள், ஆடுகள் முதலானவைகளை வைத்துப் பரிபாலித்தல் (3) பொருளீட்டல், அதாவது கையிலுள்ள முதற்பொருளைக் கொண்டு வியாபாரம் செய்து பொருளை விர்த்திபண்ணல். (4) குயிலுவத் தொழில், அதாவது மேளம் முதலான தோல் கருவிகளைக் கொட்டுதலும், நாகசுரம், சங்கு முதலான துளைக் கருவிகளை ஊதுதலும். (5) காருகவினை, அதாவது பருத்திநூல் பட்டுநூல் முதலானவைகளைக் கொண்டு வஸ்திரங்களை நெய்தலும், அவைகளைச் சுமந்துகொண்டு போதலுமான வேலைகளைச் செய்தல். (6) இருபிறப்பாளர்க் கேவல்செயல், அதாவது உபநயனம்(பூணூல்) உடையோராகிய பார்ப்பார், அரசர், வைசியர் ஆகிய மூன்று பேருக்கும் சகல ஏவல் ஊழியமும் செய்தல்.

56. வின.—அந்தணர், அரசர், வணிகர் ஆகிய மூன்று குலத்தவர்க்கும் உரிய பொதுத் தொழில்கள் எவை ?

விடை.—ஓதல், வேட்டல், ஈதல் இம்மூன்று தொழில்களும் அந்தணர், அரசர், வணிகராகிய மூன்று குலத்தவர்க்கும் பொதுத் தொழில்களாம்.

பூர்வகாலத்தில் வேத சாஸ்திரங்களையும் நீதிநூல்களையும் தீர்க்கமுறக் கற்று அறிவில் தேறினவர்கள் முதல் இரண்டு குலத்தவர்களாகிய அந்தணரும் அரசகுலத்தவருமாம்.

முதற் குலத்தவர் புரோகிதரானதினுல் அந்த அறிவு அவர்களுக்கு அவசியம் வேண்டியது.

இரண்டாவது குலத்தவர் அரசனுனதினுல் ஆள் வினைத்திறம் நோக்கி அவர்களும் நூல்களைக் கற்கவேண்டியவர்கள்.

மூன்றுவது குலத்தவர் தங்கள் சுய பிரயோசனம் நோக்கி அவர்களும் நூல்களைக் கற்கவேண்டியவர்கள். ஆயினும், அவர்கள் தன விருத்தியின்பேரில் வாஞ்சையுற்றிருந்த பிரகாரம் அறிவு விருத்தியின்பேரில் அதிக விருப்பமுள்ளவர்களாக இருக்கவில்லை.

57. வினு.—செட்டிகளுக்கும் சூத்திரராகிய வெள்ளாளருக்கும் உரிய **பொதுத் தொழில்கள்** எவை ?

விடை.—செட்டிகளுக்கும் சூத்திரராகிய வெள்ளாளருக்கும் உரிய பொதுவான தொழில்கள் மூன்றும். அவை :—(1) ஏருழல், (2) பசுக்காத்தல். (3) பொருளீட்டல் என்பவைகளே.

மேற்படி மூன்று தொழில்களும் வைசியராகிய செட்டிகளுக்கும், சூத்திரராகிய வெள்ளாளருக்கும் பொதுவான தொழில்களாயிருந்தபோதிலும், இந்த மூன்று தொழில்களில் "ஏருழல், பசுக்காத்தல்" என்னும் இரண்டு தொழில்களும் சூத்திரராகிய வெள்ளாளருக்கு மிகுந்த அவசியமான தொழில்களாம். **பொருளீட்டலாகிய தொழில்** வைசியர்க்கு மிகுந்த அவசியமான தொழிலாம்.

58. வினு.—அந்தணர்க்கே உரிய தொழில்கள் எவை ?

விடை.—அந்தணர்க்கே உரிய தொழில்கள் மூன்றும். அவைகள் :-(1) ஓதுவித்தல், (2) வேட்பித்தல், (3) ஏற்றல் என்பவைகளே.

59. வினு.—அரசர்க்கே உரிய தொழில்கள் எவை ?

விடை.—அரசர்க்கே உரிய தொழில்கள் மூன்றும். அவை:—(1)உலகோம்பல், (2) படைக்கலம் கற்றல். (3) விசயம் செய்தல்.

60. வினு.—வைசியர்க்கே உரிய தொழில்கள் எவை ?

விடை.—வைசியர்க்கே உரிய தொழில்கள் இல்லை. அவர்களுடைய ஆறு தொழில்களில் முதல் மூன்று தொழில்கள் அந்தணர்க்கும், அரசர்க்கும் உண்டு. வைசியருடைய பின் மூன்று தொழில்கள் சூத்திரராகிய வெள்ளாளர்க்கும் உண்டு.

61. வினு.—சூத்திரராகிய வெள்ளாளர்க்கே உரிய தொழில்களெவை?

விடை.—சூத்திரராகிய வெள்ளாளர்க்கே உரிய தொழில்கள் மூன்ரும். அவைகள் :— (1) குயிலுவத்தொழில், (2) காருகவினைத்தொழில், (3) முதல் மூவர்க்கேவல்செய்தல் என்பவைகளே.

62. வினு.—மேலே சொல்லிய நாலு குலத்தவர்களில் ஒவ்வொரு குலத்தவர்க்கும் நாட்டில் சிறப்பென்று விளங்கும் தொழில் எது ?

விடை.—மேற்படி நாலு குலத்தவர்களில் ஒவ்வொரு குலத்தவர்க்கும் நாட்டில் சிறப்பென்று விளங்கிய தொழில் ஆருவது தொழிலாம்.

அது:—

(1) அந்தணர் குலத்தவர்க்கு ஆருவது தொழிலாகிய ஏற்றல் தொழில் சிறந்ததாம். அது அவர்களுக்கு இகழ்ச்சியல்ல, அவர்களுக்குப் புகழ்ச்சியாம். அதினல் அவர்களுடைய சரீரப் பிழைப்பு நடந்தேறும்.

(2) அரச குலத்தவர்க்கு ஆருவது தொழிலாகிய விசயம் அதாவது வெற்றியே சிறந்த தொழிலாம்.

(3) வணிகர் குலத்தவர்க்கு ஆருவது தொழிலாகிய பொருளீட்டலே சிறந்த தொழிலாம்.

(4) சூத்திரராகிய வெள்ளாளர் குலத்தவர்க்கு ஆருவது தொழிலாகிய முதல் மூவர்க்கு ஏவல் செய்தலே சிறந்த தொழிலாம்.

63. வினு. —முன் 41-ம் வினுவுக்குச் சொல்லிய விடையின் கீழ் 31-வது இலக்கத்தின் கீழும், 51-ம் வினுவுக்குச் சொல்லிய விடையின் 8-வது இலக்கத்தின் கீழும் ஏனுதிநாத நாயனுர் என்று சொல்லப்பட்டவருடைய சரித்திரச் சுருக்கம் என்ன ?

விடை.—தமிழ் அரசாட்சி ஒழிந்து வடுக அரசாட்சி தமிழ் நாட்டில் பெலப்பட்டபின் தமிழ்ச் சத்திரியரின் குல மேன்மையைக் கெடுக்கும்படி சூத்திரராகிய வெள்ளாளரும், வடுகரும் பிரயாசப்பட்டு முயற்சி செய்தார்கள் என்று 53-ம் வினுவுக்கு விடை சொல்லியவிடத்தில் விபரித்திருக்கிரேமே. ஏனுதிநாத நாயனுருடைய சரித்திரமானது சான்ருர், சான்றவர், சான்ரேர் ஆகிய தமிழ்ச் சத்திரியருடைய குலமேன்மையைத் துலக்கமாகக் காட்டுகிறதினல் அதை மறைக்கும்படி சூத்திரராகிய வெள்ளாளர் அதிகமாகப் பிரயாசப்பட்டிருக்கிருர்கள். ஆகையால் இப்போது அவருடைய சரித்திரச் சுருக்கத்தை மாத்திரம் சொல்லுவோம்.

ஏனுதிநாத நாயனுர் சோழநாட்டிலுள்ள எயினனூரில் பிறந்தவர், அரசர்க்கு வாளினுல் யுத்தத்தில் சத்துருக்களைச் சங்கரித்துச் செயிக்கும் வித்தையைப் படிப்பித்தவர், அதாவது படை பயிற்றல் தொழிலைச் செய்தவர். அதினுல் அவர்க்குக் கிடைத்த வருமானங்களை எல்லாம் சிவனடியார்க்கே செலவுபண்ணினவர். அவர் இருந்த நகரில் படை பயிற்றலால் சீவனம் பண்ணினவனும், சிவனை வணங்காதவனும், தன் நெற்றியில் விபூதி தரியாதவனுமான அதிசூரன் என்றொருவன் இருந்தான். ஏனுதி நாயனுர் புஜபல பராக்கிரமமுள்ளவராயும், அரசனுடைய சேனுதிபதியாகவும் இருந்தபடியால் அதிசூரன் என்னப்பட்ட அவன் தனக்கு வருமானக் குறைவுண்டாயிருக்கிறதைப்பற்றி யோசித்து நாயனுரைப் பார்த்து, நம்மில் யார் வல்லமையுள்ளவர் என்று அறியும்படி நம் இருவருடைய சேனையும் சண்டைசெய்ய விடுவோமா? என்க, நாயனுர் அதற்கு இணங்கிப் போர்செய்ததில் நாயனுர் செயித்துக்கொண்டதினுல் அதிசூரன் உபாயத்தால் நாயனுரைச் செயிக்க எண்ணி, இனி நாம் இரண்டுபேரும் மாத்திரம் போர் செய்வோமா? என்று நாயனுரைக் கேட்க, நாயனுரும் அதற்கு இணங்க, குறிக்கப்பட்ட இடத்தில் நாயனுர் தனித்து நிற்கிறதைக் கண்ட அதிசூரன் தன் நெற்றியில் விபூதி தரித்துக்கொண்டும், தன்முகத்தை மூடிக்கொண்டும், நாயனுருடைய பக்கத்தில் வர, நாயனுர் எதார்த்தமாய் நின்றிருந்தவரானதால் அதிசூரன் விபூதி தரித்துக்கொண்டிருந்ததை நாயனுர் கண்டு மயங்கிநிற்க, அவரை அதிசூரன் வாளால் வீசினுன். அவர் அவனுலே வெட்டுண்டு மரித்தார். இதுவே ஏனுதி நாயனுருடைய சரித்திரச் சுருக்கம். இச்சரித்திரமானது அறுபத்து மூவர் புராணமாகிய பெரிய புராணத்திலடங்கிய ஏனுதிநாத நாயனுர் புராணத்திலிருக்கிறது.

64. வினு.—ஈழக்குலச்சான்றர் என்று ஏனுதிநாதநாயனுர் சொல்லப்பட்டிருக்கிருரே, அந்த ஈழன் என்பவன் யார்?

விடை.—சான்றுர், சான்றவர், சான்ருேருடைய குலமேன்மையானது ஏனுதிநாதநாயனுருடைய சரித்திரத்தால் விளங்கும். ஆதலால், அந்த ஏனுதிநாதநாயனுர் எந்த மனிதனுடைய வம்சத்தில் உற்பத்தியானவர் என்று சொல்லப்பட்டிருக்கிருரோ அந்தமனிதனைத் தாழ்ந்த குலத்தவன் என்று ரூபித்துவிட்டால் அந்த மனிதனுடைய வம்சத்தவரான ஏனுதிநாதநாயனுரும் தாழ்ந்தகுலமாகிப் போய்விடுவாரென்றும், அவர் தாழ்ந்த குலமேயானுல், அவருடைய குலத்தாராகிய சான்றுர், சான்றவர், அல்லது சான்ருேரும் தாழ்ந்த குலமாய் போய்விடுவார்கள் என்றும் சூத்திரராகிய வெள்ளாளர் தீர்மானித்து அதற்காக அதிகமாய்க் கவலைப்பட்டிருக்கிருர்கள். ஆகையால் நாம் அந்த ஈழனுடைய சரித்திரத்தை ஆராயவேண்டியது அவசியம்.

ஏஞதிநாதநாயஞர் ஈழக்குலச் சான்ருர், ஈழச்குலச் சான்ருேர், அறுபத்துமூவரில் ஒருவர் என்று பூர்வ நூல்களில் சொல்லப்பட்டிருக்கிருர். ஆகையால் ஏஞதிநாதநாயஞர் ஈழன் என்று சொல்லப்பட்டவனுடைய வம்சத்தில் உற்பத்தியானவர். அந்த ஈழனைத் தாழ்ந்த குலமாக்கும்படி ஈழன் என்னும் சிறப்புப்பெயரை ஈழம் என்று மாற்றி, ஈழம் என்னும் பதத்துக்கு "கள்" என்று பொருள் இருக்கிறதிஞல் ஈழக்குலம் என்பது கள் குலம் என்றும், ஏஞதிநாதநாயஞர் கள் குலத்தவர் என்றும் சூத்திரராகிய வெள்ளாளர் ஸ்தாபித்தார்கள்.

ஈழன் எனனும் பேர் ஈழம் என்னும் வார்த்தையிலிருந்து உற்பத்தியானதல்ல. ஈழன் என்பது சூரியனுடைய மகஞன வைவசுவதமனுவின் மக்களில் ஒருவனுக்குப் பேர். அதின் விபரம் 29-ம் விஞவிற்கு விடை கூறியவிடத்துக் காணலாம். அந்த ஈழன் என்பவனுடைய வம்சத்தாரில் ஒருவனுக்கு ஈழன் என்று பேர் இருந்திருக்கலாம். அவன் சோழன் வம்சத்தில் வந்து கலந்திருக்கலாம், அல்லது சோழனுடைய வம்சத்திலேயே ஈழன் என்று பேருள்ள கீர்த்திபெற்ற ஒரு அரசன் இருந்திருக்கலாம். அந்த ஈழன் என்னும் அரசன் இலங்கை நாட்டை ஆண்டபடியால் இலங்கை நாட்டுக்கு ஈழநாடு என்று பேர் உண்டாயிற்று.

ஒருவன் கீர்த்திபெற்ற அரசஞக ஒருநாட்டை ஆண்டிருந்தால் அவன் ஆண்ட அந்த நாடு அந்த அரசன் பேரால் சொல்லப்பட்டதுண்டு.

திருஷ்டாந்தமாக,

சோழன் ஆண்ட நாட்டுக்கு **சோழம், சோழநாடு, சோழமண்டலம்** என்றும்,

பாண்டியன் ஆண்ட நாட்டுக்கு **பாண்டியம், பாண்டியநாடு, பாண்டிமண்டலம்** என்றும்,

தொண்டை என்னும் பாண்டியன் ஆண்டநாட்டுக்குத் **தொண்டை, தொண்டைநாடு, தொண்டைமண்டலம்** என்றும் பேர்கள் உண்டாயிருக்கிறதுபோலவே,

ஈழன் ஆண்ட நாட்டுக்கு **ஈழம், ஈழநாடு, ஈழமண்டலம்** என்றும் பேருண்டாயிற்று.

திருவாதவூரர் புராணம், புத்தரை வாதில் வென்ற சருக்கம் 87-வது கவி, 1-வது அடி.

"ஈழ மன்னனுமஞ்செழுத்து மியம்பி நீறுபுனைந்தபின்."

1-வது செய்யுள், 4-வது அடி.

"ஈழநாடு தன்னை நாட எண்ணியங்கு நண்ணினுன்."

கம்பர் பாடிய ஏரெழுபது, பாயிரம்.

"ஈழமண்டலமுதலென வுலகத் தெண்ணு மண்டலத் தெறி படைவேந்தர்."

மேற்காட்டிய மூன்றுகவிகளில் சோழனும், பாண்டியனும் கீர்த்திபெற்ற அரசராயிருந்தபடியால் அவர்கள் ஆண்ட நாட்டுக்கு அவர்களுடைய பேர் கொடுக்கப்பட்டபடியே ஈழன் கீர்த்திபெற்றவனுக இருந்தபடியால் அவன் ஆண்ட நாட்டுக்கு அவன் பேர் கொடுக்கப்பட்டதென்பது தெளிவாயிருக்கிறது.

மேலும் கீர்த்திபெற்ற அரசன் பேரால் அந்த அரசர் வம்சத்தில் வரும் அரசர்களுக்கும் அந்த மூல புருஷராகிய அரசர் பேரே வருவதுண்டு.

திருஷ்டாந்தமாக,

பெரியபுராணம், திருநாட்டுச்சிறப்பு, 1-வது செய்யுள், 3-வது அடி.

"சூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி."

திருவிளையாடற்புராணம், பாண்டியனது திருஅவதாரப்படலம், 18-வது செய்யுள், 3-வது அடி.

"தென்னவர் பெருமான்றேவி திருமுகக் கருணைபெற்று."

திருவாதவூரர்புராணம், புத்தனை வாதில் வென்ற சருக்கம், 92-வது செய்யுள், 3-வது அடி.

"துய்ய காவிரி நாடனுந் துகடீரும் ஈழர்தம் மன்னனும்."

மேற்காட்டிய மூன்று கவிகளில் முதலாவது ஆண்ட சோழன் கீர்த்தி பெற்றவனுயிருந்தபடியால் அவனுடைய வம்சத்தில் வந்த அரசருக்கு சோழர் என்றும், முதலாவது ஆண்ட பாண்டியன் கீர்த்தி பெற்றவனுயிருந்தபடியால் அவனுடைய வம்சத்தில் வந்த அரசருக்குத் தென்னவர், அதாவது பாண்டியர் என்றும், முதலாவது ஆண்ட ஈழன் கீர்த்திபெற்றவனுக இருந்தபடியால் அவனுடைய வம்சத்தில் வந்த அரசருக்கு ஈழர் என்றும் பேர் வந்திருக்கிறதை அறிந்துகொள்ளலாம்.

அன்றியும், கீர்த்திபெற்ற அரசர் பேரால் அவர்களுடைய வம்சத்தாருக்கும் அந்த மூலபுருஷர் பேரே குலப்பேர் ஆகவும் வருவதுண்டு.

திருஷ்டாந்தமாக, பாரதம் ஆதிபருவம், வாரணுவதச்சருக்கம், 64-வது கவி, 3-வது அடி.

"குருகுலம் தழைக்க வந்த குமரனன்பு கூரவே."

திவாகரம், மக்கட் பெயர்த்தொகுதி, 20-வது சூத்திரம்.

"பரதர், கௌரதர், குருகுலத்தரசர்."

திருத்தொண்டர் புராணசாரம், மங்கையர்க்கரசியார் புராணம், 71-வது செய்யுள், 1-வது அடி.

'மங்கையர்க்குத் தனியரசி வளவர்குலக் கொழுந்து."

திருவிளையாடற்புராணம், மாணிக்கம் விற்ற படலம், 14-வது செய்யுள், 3 வது அடி.

"தென்னவர்குலப் பெருந்தெய்வமாகிய."

கூர்மபுராணம், கண்ணன் அவதரித்த படலம், 223-வது செய்யுள், 3-வது அடி.

"எதுகுல மன்னர் யாருமற் றெழில் காண்பானெய்தி.'

பெரியபுராணம், ஏனதிநாதநாயனுர் புராணம், 2-வது செய்யுள், 4-வது அடி.

"ஈழக்குலச் சான்ற ரேனதி நாதனுர்."

மேலே காட்டிய ஆறு செய்யுட்களில் மூல புருஷராகிய, குரு, வளவன், அதாவது சோழன், தென்னவன், அதாவது பாண்டியன், எது, ஈழன் இவர்களுடைய பேரே குலப்பேராகவும் வந்திருக்கிறதை அறிந்து கொள்ளலாம்.

தறிப்பு.

சூரியனுடைய பல பேர்களாலும் குலம் குறிப்பிடப்பட்டிருக்கிறதை இதனடியில் காட்டுவோம்.

திருஷ்டாந்தமாக,

41-ம் வினுவிற்கு விடை கூறியவிடத்து, (18 வது இலக்கத்தின்கீழ்) 25-வது கவி, 2-வது அடி.

"பொய்த்த சான்றவன் குலமென ஒருகணையெறிய."

நம்பியாண்டார், திருவந்தாதி, இடங்கழிநாயனுர் சரிதம், 65 வது செய்யுள், 2 வது அடி.

கொங்கிற் கனகமணிந்த ஆதித்த குலமுதலோன்."

கூர்மபுராணம், இராவணவதைப்படலம்,
105-வது செய்யுள், 1-வது அடி.

"பரதனைத்தாயோடிகழ்ந்திடு முனிவு தீர்ந்து நம்
பருதியங்குலததி"

அரிச்சந்திரபுராணம், நகர் நீங்கு படலம்,
12-வது செய்யுள், 1-வது அடி.

"உரைபெறு சீரிரவிகுலத்தரசர்க்கு வழிவழியே யுரிமையாய."

சைவபுராணம் சூழ்வினைகாண்டம்,
33-வது செய்யுள், 1-வது அடி.

"பழி வழியொழுகாநீதி பாநுவின்குலத்து வேந்தர்."

கூர்மபுராணம், சூரியன் மரபுரைத்த அத்தியாயம்,
8-வது செய்யுள், கடைசி அடி.

"வெய்யன்குலத்து விளக்கெனப் பெற்றவிடலைவேல்.'

மேலே காட்டிய ஆறு செய்யுட்களில், சூரியனுடைய வம்சத்தாருக்கு சூரிய குலம் என சொல்லியதுமாத்திரமல்ல; சூரியனுடைய பல பேராலும் குலப்பெயர் வருமென்று அறியலாம்.

சான்றவன்குலம்=ஆதித்தன் குலம்=பருதியங்குலம்=இரவிகுலம்=பாநுவின்குலம்=வெய்யவன்குலம்=சூரியகுலம்.

அன்றியும்,

அந்த அந்த வம்சத்து மூல் புருஷருடைய பேர் குலப் பெயராக வந்ததுந் தவிர, அந்த மூலபுருஷருடைய வம்சத்தில் பின்னாலே வந்த மேன்மை பெற்ற புருஷரை அந்த அந்த குலத்துக்கு விளக்கு என்றும் சொல்லியிருக்கிறதுமுண்டு.

திருஷ்டாந்தமாக,

முற்கூறிய ஆறு செய்யுட்களில் கடைசியான செய்யுளில்

"வெய்யவன் குலத்து விளக்கு."

திருஞான சம்பந்த சுவாமிகள் புராணம்,
145-வது செய்யுள், கடைசி அடி.

"கொள்ளிடத் திருநதிக்கரையடைந்தனர் கவுணியகுலதீபர்."

கூர்மபுராணம், கண்ணன் மணம் புரிந்த படலம்,
192-வது செய்யுள், 3-வது அடி.

"எதுகுலத் தொருதீபமாங் கண்ணனெண்ணறு மன்னர்."

நம்பியாண்டார் திருவந்தாதி, 10-வது செய்யுள், கடைசி அடி.

"ஈழக் குலதீப னென்பரிந் நீணிலத்தே."

மேற்காட்டிய நியாயங்களால் ஈழன் கள் குலத்தவனல்லவென்றும், அவன் கீர்த்தியும், மேன்மையுமுள்ள ஒரு அரசன் என்றும் நன்றாய் விளங்கும்.

மேற்படி ஈழன் குலத்தில் உதித்தவர் ஏனாதிநாத நாயனார். ஆதலால் அவர் மேன்மைபெற்றவர்.

இனி,

இலங்கையை ஆண்ட அரசர் சோழ அரச வம்சத்தார் என்றும் ஈழனும் சோழ அரச வம்சத்தான் என்றும் ரூபிப்போம்.

திருவாதவூரர் புராணம், புத்தரைவாதில் வென்ற சருக்கம்,
83, 84-வது செய்யுள்.

"நெஞ்சநொந்து பினீழநாடனிறைந்திடுஞ் சிவஞானநூ
லெஞ்சலின்றிய செல்வர்பாத மிறைஞ்சி நின்றிது கூறினன்."

"சொல்ல வல்லவர் மூகையாயினர் சொல்லிலா வொருமூகையாம்
வல்லியென் புதல்விக்கு மூகைமறைந்து நல்லுரை கூடினல்."

திருவிளையாடற்புராணம், மண்சுமந்தபடலம்,
112-வது செய்யுள்.

"வேறுவே றிறைவன்கீர்த்தி வினவுரையாகப்பாடி
ஈறிலாவன்பர்கேட்க விறைமொழி கொடுத்துமூங்கை
மாறினன் வளவன்கன்னி மடவரல் வளவன் கண்டு
தேறினன் சிவனே எல்லாத் தேவர்க்குந் தேவனென்று."

மேலே சொல்லிய செய்யுட்களில் திருவாதவூரர் புராணத்தில் சொல்லிய ஈழஅரசனை திருவிளையாடற்புராணத்தில் வளவன், அதாவது சோழன் என்று சொல்லியிருக்கிறது. அதினால் ஈழன் ஆனவன் சோழன் வம்சத்தில் உதித்த சோழன் என்று தெளிவாய் விளங்குகிறது. அந்த ஈழன் என்னும் சோழன் ஆனவன் சோழநாட்டை ஆண்ட பெரியசோழ அரசனுக்கு கப்பம் கட்டி, அவனுக்குக் கீழாக இலங்கையை ஆண்ட அரசனாக இருந்தான். ஆகையால் மேலேசொல்லிய கவிகளில் ஈழ அரசனை வளவன் என்று சொல்லியிருக்கிறது.

சோழநாட்டையும், பாண்டிநாட்டையும் வடுக அரசர் பிடித்து ஆண்ட காலத்தில், மதுரையிலாண்ட பெரிய கிஷ்ணப்பநாயக்கன் இலங்கையாகிய கண்டிக்குத் தன் மைத்துனன் ஆகிய விசயகோபால நாயக்கனை அரசனாக்கினான்.

மேற்கூறிய நியாயங்களைத் திரட்டிப் பார்வையிடுவதினால் ஈழன் சோழக்குலத்தைச்சேர்ந்த அரசனுடைய வம்சத்தானாகிய சோழன் என்பது தெளிவாம். அந்த ஈழ அரசனுடைய வம்சத்தில், அதாவது ஈழக்குலத்தில் அக்குலத்துக்குத் தீபம்போன்ற ஏனாதிநாத நாயனார் பிறந்தார்.

அன்றியும்,

பக்தவிலாசமாகிய பக்தமகாத்மியம்,

29-வது அத்தியாயம், ஏனாதிநாதநாயனார் சரித்திரம்,

3-வது சுலோகம்.

"தஸ்மின்னேனாதி நாதாக்கிய ஆஸீத் சாக்ஷிகுலோத்பவ:
நிருபஸ் ஸஸ்த்ர கலாசார்ய சிவ பக்தாங்கிரி ஸக்ததீயீ:

இச்சுலோகத்தில், ஏனாதிநாத நாயனார் சாக்ஷி குலத்தில் உற்பத்தியானவர் என்றும், சோழ அரசருக்கு ஆசிரியராயிருந்து, அஸ்திரவித்தை கற்பித்தவரென்றும், சிவபக்தியில் சிறந்தவர் என்றும் சொல்லியிருக்கிறது.

இதில் சொல்லிய சாக்ஷிகுலம் என்பது சூரியகுலம் எனப்பொருளாம். 39-ம் வினாவுக்கு விடை கூறியவிடத்து சூரியனுக்கு சான்றேன் என்னும் பேர் உண்டு என்று ரூபித்திருக்கிறோம். சோழனுக்குச் சூரியன் என்றுபேர். ஆகையால் சந்திரகுலத்தில் உற்பத்தியான சோழனைச்சேர்ந்த அரசனை சூரியகுலத்தரசர், சாக்ஷிகுலத்தரசர் என்று புராணங்களிலும் சொல்லியிருக்கிறது. சாக்ஷிகுலம் என்பது சான்றன்குலம், சான்றவன்குலம், சான்றேன்குலம். என முன் ரூபித்திருக்கிறோம். ஏனாதிநாத நாயனார்

சாக்ஷி குலத்தவர், சான்றோர் குலத்தவர். ஈழமன்னன், சோழக்குலத்தவன், சூரியகுலத்தவன். ஏனாதிநாதநாயனார் சூரியகுலத்தவர், அதாவது சோழக் குலத்தவர், அதாவது தமிழ்ச் சத்திரியகுலத்தவர்.

65. வினா.—ஏனாதிநாதநாயனாருடைய சரித்திரத்தால், அவருடைய குலத்தவரான சான்றார், சான்றவர், சான்றோராகிய தமிழ்ச் சத்திரியர் பூர்வகாலத்தில் அரசர்க்கே உரிய படைபயிற்றல் தொழிலை, அதாவது போர்த்தொழிலை செய்து வந்தவர்கள் என்பதை ரூபிப்பதெப்படி?

விடை.—ஏனாதிநாதநாயனாருடைய சரித்திரத்தால் அவருடைய குலத்தவரான சான்றார், சான்றவர், சான்றோர் தங்கள் குலத்தொழிலாகிய போர்த்தொழிலைச் செய்து வந்தவர்கள் என்பதை துலக்கிக்காட்டுவோம்.

உமாபதிசிவாச்சாரியார் அருளிச்செய்த

திருத்தொண்டர் புராணசாரம், ஏனாதிநாதநாயனார் புராணம்,

12 வது செய்யுள்.

"ஈழக்குலச்சான்றா ரெயினனூர்வா ழேனாதிநாத
னிறைவ னீற்றை,
தாழத்தொழு மரபார்படைகளாற் றுந்தன்மைபெறுவதி
சூரன் சமரிற்றோற்று,
வாழத்திருநீறு சாத்தக்கண்டு மருண்டார் தெருண்டார்
கைவாள்விடார்நேர்,
வீழக்களிப்பார் போனின்றே யாக்கைவிடுத்து சிவனருள்
மேவினாரே."

இச்செய்யுளில், ஏனாதிநாதநாயனாருடைய குலமும், அவர் வளர்ந்த ஊரும், அவர் மரித்த காரணமும் சொல்லியிருக்கிறது.

மேற்படி புராணம், 3-வது செய்யுள்.

"தொன்மைத் திருநீற்று தொண்டின் வழிபாட்டி
னன்மைக்கணின்ற நலமொன்றுக் குன்றுதார்
மன்னர்க்கு வெற்றி வடிவாட்படை பயிற்றும்
தன்மைத்தொழில் விஞ்சையில் தலைமை சார்ந்துள்ளார்."

இச்செய்யுளில், அரசருக்கு வெற்றியினையுடைய கூர்மையான வாள்ப்படையைப் பயிற்சிசெய்விக்கிற வித்தையோடுகூடிய தொழிலில் முதன்மையடைந்தவர் எனக் கூறியிருக்கிறது.

5-வது செய்யுள்.

"நள்ளார்களும் போற்றுநன்மைத் துறையின்கண்
எள்ளாத செய்கை யியல்பினெழுகுநாட்
டள்ளாததங்கடொழிலுரிமைத்தாயத்தின்
உள்ளானதிசூர னென்பானுளனுனன்."

இச்செய்யுளில், "பகைவர்களும் தம்மை வழிபடுவதற்குரிய சால்பாகிய நன்மைநெறியின்கண் குறைவில்லாத செய்கையோடுகூடிய முறைமையில் எனுதிநாதநாயனுர் நடக்கும் அந்நாளில் தள்ளக்கூடாத தங்கள் குலத்தொழிலுரிமைக்குரிய தாயாதிகளில் உள்ளவனுகிய அதிசூரன் என்ெறுருவனிருந்தான்'' என்று சொல்லியிருக்கிறது.

இதில் எனுதிநாதநாயனுர்க்கும், அவருடைய குலத்தவர்க்கும் வாட்படை பயிற்றும்தொழில் என விளங்க, தள்ளாத தங்கள் தொழிலுரிமைத் தாயத்தின் எனச்சொல்லியிருக்கிறது.

7-வது செய்யுள்.

"தானுள் விருத்திகெடத் தங்கள் குலத்தாயத்தின்
ஆனுத செய்தொழிலாமாசிரியத்தன்மைவள
மேனுளுந் தான்குறைந்து மற்றவர்க்கே மேம்படலால்
எனுதிநாதர்திறத்தேலாவிகல் புரிந்தான்."

இதன்பொருள். "எனுதிநாதநாயனுருடைய சுற்றத்தாருள் ஒருவனுகிய அதிசூரன் செய்துவரும் சீவனேபாயம் கெடும்படி தங்கள் குலத்துக்குரிய பந்துக்களுக்கு குறையாத சாதித்தொழிலாகிய வாட்படை பயிற்றும் ஆசிரியத்தன்மையால் வரும் வருமானமானது நாடோறும் குறைவடைந்து எனுதிநாதநாயனுர்க்கே மேம்பாடால் இந்நாயனுரிடத்து நீதியில்லாத பகை செய்தான்" என்பதாம்.

இதில், எனுதிநாதநாயனுர்க்கும், அவர் மரபினர்க்கும் வாட்படை பயிற்றும் தொழில் குலத்தின் ஆனுதசெய் தொழிலாம் எனக்கூறியிருக்கிறது.

12-வது செய்யுள்.

"புறப்பட்டபோதின் கட்போர்த் தொழில்கள்
விறற்பெருஞ் சீர்க்காளையர்கள் வேறிடத்து நின்ருர்கள்

மறப்படைவாட் சுற்றத்தார் கேட்டோடி வந்து
செறற்கரும்போர் வீரர்க் கிருமருங்கும் சேர்ந்தார்கள்.'

இதின் பொருள். எனாதிநாதநாயனார் போர்க்கோலங்கொண்டு புறப்பட்டபொழுது அவரிடத்தில் வாட்போர்த் தொழிலைக் கற்றுக்கொள்ளும் வல்லமையுள்ள வீரர்களும், வேறு இடங்களில் நின்று பயிற்சி செய்கிறவர்களாகிய வீரத்துவத்தையுடைய வாளைப்பயின்ற அவருடைய உறவினர்களும் அதைக்கேட்டு விரைந்துவந்து ஒருவராலும் செய்தற்கரிய போர்த்தொழில் வல்ல வீரராகிய அந்த எனாதிநாதநாயனார்க்கு இரண்டு பக்கத்திலும் சேர்ந்தார்கள் என்பதாம். இதில் அந்த எனாதிநாத நாயனாருடைய உறவினரும் குலத்தொழிலாகிய வாட்படையை எப்போதும் கையில் வைத்து பழக்கும் தொழிலிரெனத் தோன்ற மறவாட்படைச் சுற்றத்தார் எனக் கூறியிருக்கின்றது.

13-வது செய்யுள்.

"வந்தழைத்த மாற்றான் வயப்புலிப் போத்தன்னார்மு
னந்தமது வாட்பயிற்று நற்றாயங் கொள்ளுங்கால்
இந்தவெளி மேற்கை வகுத்திருவோம் பொருபடையும்
சந்தித்தமர் விளைத்தாற் சாயாதார் கொள்வதென."

இதன் பொருள். "எனாதிநாத நாயனாரிடத்தப் போர்செய்யும் பொருட்டுவந்து அறைகூவிய பகைவனாகிய அதிசூரன் வலியினையுடைய ஆண்புலி போன்ற இந்த எனாதி நாயனாரிடத்துச் சொன்னான், நம் மரபிற்குரிய வாள் வித்தையைக் கற்பிக்கும் நல்ல உரிமையை நாம் இருவரும் ஒருவருக்கொருவர் தனக்கெனச் சிறப்பாகக் கொள்ளுமிடத்து இவ்விடத்திலிருக்கின்ற வெளியில் இருவருடைய போர்த்தொழிலுக்குரிய படை வீரர்களை இருவகுப்பாக வகுத்து எதிர்த்து யுத்தம் செய்தால் தோல்வியடையாதவர்கள் கொள்வதே நலம் என்றான்" என்பதாம்.

இதில், எனாதிநாதநாயனார்க்கும், அவருடைய குலத்தவர்க்கும் படை பயிற்றும் தொழில் சாதித்தொழில் எனத் தோன்ற நந்தமதுவாட்பயிற்று நற்றாயம் எனக் கூறியிருக்கிறது.

மேற்கூறிய செய்யுட்களைத் திரட்டிப் பார்க்கும்போது எனாதிநாத நாயனாரும், அவருடைய குலத்தவரும், அரசருடைய அறுதொழிலிலொருதொழிலாகிய வாள்படை பயிற்றும் தொழிலை உடையவர்கள் என்றும், அந்த வாள் படை பயிற்றும் தொழிலே குலத்தொழில் என்றும் கூறிய

தால் சான்றார், சான்றவர், சான்றோராகிய தமிழ்ச் சத்திரியர் அரசகுலத்தவரென்றும், போர்த்தொழில் செய்தலும், போர்த்தொழில் கற்பித்தலும் அவர்களுடைய குலத்தொழில் எனவும் தெளிவாய் விளங்குகிறது.

66. வினு.—தமிழ்ச் சத்திரியராகிய சான்றார், சான்றவர், சான்றோர்க்கு தனித்த ஒரு குலநூல், அல்லது குலப்புராணம் உண்டோ? பண்டாரங்களின் வஞ்சனை எப்படி?

விடை.—தமிழ்ச் சத்திரியர்க்குத் தனித்த ஒரு குலநூல், அல்லது குலப்புராணம் பூர்வ நூல்களில் இல்லை. பூர்வ தமிழ் நூல்களிலெல்லாம் தமிழ்ப் பிராமணர், தமிழ்ச் சத்திரியர் என்னும் இரண்டு குலத்தவரின் மேன்மைகளையும், அவர்களுடைய பூர்வம் முதலானவைகளையும், மிகுந்த விஸ்தாரமாய்ச் சொல்லியிருக்க, வடுகுவேந்தர் தமிழ் நாட்டை ஆண்டு கொள்ளுவார்களென்றும், ஆகையால் தமிழ்ச் சத்திரியர்க்கு ஒரு குலநூல், அல்லது குலப்புராணம் தேவை என்றும் தமிழ் அரசர் ஏற்கனவே ஒரு குலநூல், அல்லது குலப்புராணம் உண்டுபண்ணி வைத்திருப்பார்களா? அந்தப்படி ஒரு குலநூல், அல்லது குலப்புராணம் உண்டுபண்ணி வைத்திருக்கமாட்டார்கள் என்பது புத்திமான்களுக்குத் தெரியாத விஷயமல்ல. கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையா? தமிழ்ச் சத்திரியர்க்குத் தனித்த ஒரு குலநூல், அல்லது குலப்புராணம் இல்லை.

சூத்திரராகிய வெள்ளாளர்க்குள் பண்டாரம் என்னும் பேரும் குலப்பட்டப் பெயராக அவர்களால் வழங்கப்படுகிறது. உதாரணமாக:—மருதபண்டாரம், கறுப்ப பண்டாரம், செங்கழனிப் பண்டாரம், பிறவுமன்ன.

ஒரு சிற்றூரில் ஏழைகள் ஒரு கோயிலைக்கட்டி, அதில் ஒரு சுவாமியை ஸ்தாபித்து, பிராமணன் ஒருவனை அந்த சுவாமிக்குப் பூசை செய்யும்படி நியமிக்க அவர்கள் சக்தியில்லாதவர்களானதினுல் ஊருக்கு எளியவன் பிள்ளையார் கோயிலாண்டி என்னும் பழமொழிக் கிசைய, அந்த ஊரில் மிகுந்த ஏழையான ஒருவனைக் கூப்பிட்டு, அந்த சுவாமிக்குப் பூசை செய்யும்படி அவனை வருஷச் சம்பளத்தில் நியமிக்கிறார்கள். மேறபடி கோயிலாண்டி கையில் கொஞ்சப்பணம் சேர்த்துக்கொள்ளுகிற காலத்தில் கோயில் பண்டாரம் என்று சொல்லப்படுகிறான். பண்டார ஊழியம் என்பதற்குப் பொது ஊழியம் என்றர்த்தம் (யாழ்ப்பாணம் அகராதி காண்க).

பெரிய ஊர்களில் பலசாதியார் மடங்களைக்கட்டி, அவைகளைப் பாதுகாத்து வருவதற்குப் பண்டாரங்களை ஏற்படுத்துகிறார்கள். அந்தப் பண்டாரங்கள் அந்த மடங்களைப் பாதுகாத்து வருவதற்காக மேற்படி சாதிகளிட

த்தில் வரிவாங்கிப் பிழைத்து, அந்தச் சாதிகள் திருவிழா முதலான காலங்களில் வந்து கூடும்போது அவர்களுக்கு வேண்டிய ஊழியங்களைச் செய்கிறார்கள். பண்டாரங்கள் வாங்கி வருகிற வரிகளால் தனவான்களாகிக் கல்வி கற்றுக்கொண்டு, தங்கள் எசமான்களை அசட்டைபண்ணி, மேற்படி மடங்களை அநேக வருஷங்களாக தாங்களே அனுபவித்து வருகிறதினால் எசமான்களை எதிர்த்து, மடத்துப்பாத்தியம் தங்களுடையது என்கிறார்கள். மடத்தெசமான்கள் கோர்ட்டுகளில் வழக்குத்தொடர்ந்தாலும் மடங்கள் எசமான்களுக்குக் கிடையாமற்போகின்றன. ஆகையால் மடங்கள் பண்டாரங்களைச் சேருகின்றன. இவ்விதத்தால் பண்டாரங்கள் தங்களுக்கு மடாதிபதிகள் என்று நாமம் சூட்டிக்கொண்டு, குருக்கள் என்றும் பேரெடுக்கிறார்கள்.

மேற்படி பண்டாரங்கள் மேன்மையாகும்படிக்கும் தங்களுக்கு மேலான சாதிகளைக் கெடுக்கும்படிக்கும் முயற்சித்து வந்திருக்கிறார்கள். வடுகர் அரசாண்டு பெலன்கொண்ட வெகுகாலத்திற்குப் பின்பு தமிழ்ச்சத்திரிய சாதியைக்குறித்து பல கட்டுக்கதைகளை உண்டுபண்ணி வைத்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது.

தமிழ்ச்சத்திரியனைப்பற்றி அவர்களால் செய்யப்பட்ட குலநூல், அல்லது குலப்புராணத்தை யாராவது ஆராய்ந்தால் அது முழுவதும் நஞ்சாகவே இருக்குமென்றறியலாம். அப்படிப்பட்ட ஒரு நூலை, அல்லது குலப்புராணத்தை, அல்லது தாம்பிரசாதனத்தைக் காட்டுகிறவர்கள் தமிழ்ச்சத்திரியனை எவ்வளவு மரியாதை செய்தபோதிலும், அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டிருக்கிற புலிகள் என்று அறியவேண்டியதுமல்லாமல் நாம் முன் சொன்னதுபோல் அவர்கள் கையிலிருக்கிற சாதனம், அல்லது நூல் விஷம் என்று நம்பி அவைகளைப்பார்வையிடாமலே தள்ளிப்போடவேண்டியது.

மேற்படி கள்ளச்சாதனம், அல்லது கள்ளநூல்களில், மேற்படி பண்டாரங்கள் உயர்ந்தவர்கள் என்று பூர்வ நூல்களுக்கு விரோதமாகப் பேசியிருக்கும். அந்த சாதனம், அல்லது நூல் கள்ளத்தனமானது என்பதற்கு இது முக்கியமான அடையாளமாம். மேலும் சூத்திரராகிய வெள்ளாளர் தமிழ்ச் சத்திரியனைத் தாழ்த்திப்போடும்படிக்கும், வெள்ளாளனை உயர்த்தும்படிக்கும் பிரயாசப்பட்டு வந்தார்கள் என்பதற்கு ஒருதிருஷ்டாந்தம் சொல்வோம்.

குலத்தொழிற் கிரமத்தைக்குறித்து 55-ம் வினவிற்கு விடைகூறியவிடத்து காட்டியபடி பூர்வநூலாகிய திவாகரத்திலும், சூடாமணி நிகண்டு 12 வது தொகுதி, 44-வது சூத்திரத்திலும்_"ஓதல் வேட்டல்" என்னும் இர

ண்டு தொழில்களும் பார்ப்பாருக்கும், அரசருக்கும் வைசியர்க்கும் உரிய தொழில்கள் என்று சொல்லியிருக்கிறது.

அப்படியிருக்க யாழ்ப்பாணத்தில் தமிழ் அகராதி உண்டாக்கும்படி கிறிஸ்தசங்கத்தாரால் உத்தரவுபெற்ற கனகசபாபிள்ளை, சிதம்பரம் பிள்ளை என்பவர்கள் மேலே காட்டிய இரண்டு தொழில்களும் அரசருக்கு இல்லை என்றும், அவைகள் பார்ப்பாருக்கும் வைசியருக்கும் மாத்திரம் உரியது என்றும் மேற்படி அகராதியில் "ஓதல் வேட்டல்" என்னும் வார்த்தைகளின் கீழ்ச் சொல்லியிருக்கிறார்கள். இது நூற் புரட்டாகிய குற்றம். வைசியருக்கு "ஓதலும், வேட்டலும்" உரியது என்று சொன்னகாரணம் என்னவென்றால், பின்னால் வெள்ளாளர் தங்களை வைசியராக்கிக் கொள்ளலாம் என்னும் துர் எண்ணமே. அந்தப்படியே சூத்திரராகிய வெள்ளாளர் தங்களை "பூவைசியர் என்று மேற்படி அகராதியில் சொல்லியிருக்கிறார்கள்.

பின்னும் இவ்விபரத்தை "சூத்திரர் வைசியரின் ஸ்தானத்தை அபகரிக்கச் செய்த வகை எப்படி என்னும் 84-வது வினாவிற்கு விடை கூறிய விடத்தும் காணலாம்.

பூர்வ பாண்டிய அரசர் காலங்களில் வெள்ளாளர் இப்படிப்பட்ட பித்தலாட்டம் செய்ய இடமுண்டோ ? இல்லை, இல்லை.

ஆகவே தமிழ்ச்சத்திரியர்க்கு தனித்த ஓர் குலநூல், அல்லது குலப்புராணம், அல்லது குலசாசனம் இல்லை.

67. வினா.—சூத்திரர் பல கட்டுக்கதைகளை உண்டாக்கியிருக்கிறார்களென்பதற்கு கம்பர் விஷயமாய்ச் சொல்லக்கூடியதென்ன?

விடை.—கம்பர் கல்வியாகிய மேன்மையுடையவரே யல்லாமல் இயலிலே ஈனத்துவம் பொருந்தியவர் என்றும், அவர் இராமாயணத்தை கவியாக இயற்றியபின் சோழ அரசனோடே சபதம் பண்ணிக்கொண்டு திரிகையில், கஞ்சிக்கு இல்லாமல் வேலி என்னும் இராஜாத்தியின் நாட்டுக்குப்போய்க் கூலிவேலையுண்டோ? என்று கேட்க, "உனக்குச் சுவர்கட்டத்தெரியுமா" என்று வேலி அரசிகேட்டு, ஆம், என்று கம்பர் சொன்னதினால், அவள் ஒரு பாழான சுவரைக்காட்டி, "இந்த சுவரைக்கட்டு" என்று சொல்ல, கம்பர் அந்தப்படி சுவர்கட்டி, அரசியிடத்தில் போய்ச்சொல்ல, அவள் வந்து பார்க்கையில் சுவர் விழுந்து கிடந்ததைக் கம்பரும் பார்த்து வெட்கப்பட்டு, அந்தச் சுவரைக் கம்பர் மறுபடியும் கட்டிமுடித்து, நின்று பார்க்கையில் சுவரில் ஏதோ ஒரு அசைவு நேரிட்டதுபோலத் தோன்றினபடியால் அவர் ஒரு பாட்டுச் சொன்னதுபோல சூத்திரர் கட்டின கவியாவது:—

"மட்கொண்ட திண்புயத்தான் மாநகர்விட்டிங்கு வந்தேன்
சொற்கொண்ட பாவின் சுவையறிவா ரிங்கிலையே
விற்கொண்ட பிறைநுதலாள் வேலிதருங் கூலி
நெற்கொண்டு போகுமட்டும் நில்லாய் நெடுஞ்சுவரே"

என்று பாடின உடனே சுவர் உறுதியாய் நின்றது என்றும், அப்பால் வேலி அரசி கம்பனை, "நீர் யார்?" என்று கேட்க, நான் ஒரு கூலிக்காரன் என்று கம்பர் சொல்லிவிட்டு, ஒரு செக்கானிடத்தில் போய் பிண்ணாக்கு க்கேட்க, அவன் மறுத்ததினால், ஒரு வெள்ளாளனிடத்தில் போய்க் கஞ்சி கேட்க, அவன் கஞ்சி கொடுத்தபோது பாடினதாக சூத்திரர் கட்டின கவி யாவது.—

"செட்டிமக்கள் வாசலிடம் செல்லோமே செக்காரப்
பொட்டிமக்கள் வாசலிடம் போகோமே—முட்டி முட்டிப்
பார்ப்பாரகத்தை எட்டிப்பாரோமே எந்நாளும்
காப்பாரே வேளாளர் காண்"

என்று பாடினார், என்றும், அதின் பிறகு கம்பர் சேரன் சமஸ்தானத்தில் போய் தாம் இன்னாரென்று காட்டாமல் ராமாயணப் பிரசங்கம் செய்து, சேரனுடைய தயவைப்பெற்று, சேரனைத் தமக்கு அடைப்பக்காரனாக சோழன் முன்னிலையில் சோழன் மகள் அறியக்காட்டினார் என்றும் "தினவர்த்தமானி" என்னும் பத்திரிகையில் அநுபந்தமாகச் சூத்திரர் சொல்லியிருக்கிறார்கள்.

இதில், கம்பனை இகழ்ந்திருக்கிறது; வெள்ளாளனைப் புகழ்ந்திருக்கிறது. கம்பர் தமிழ்ச்சத்திரிய குலத்தவர், சூத்திரருடைய கஞ்சியை குடிப்பாரா? குடிக்கவேமாட்டார். செக்கார் அசுத்தமானவர்கள் என்றும், அவர்களுடைய பொருளைக்கூட வாங்கிக்கொள்வோர் வேசிகள்தாம் என்றும் நாம் இதின் பின்னால் நாலடியிலிருந்துகாட்டுகிறபடியாகவிருக்க சூத்திரரோ இவர் செக்காரையும் கெஞ்சினார் என்று அவர் பாடினதுபோல் பாடி கதையாக்கியிருக்கிறார்கள். கம்பனைப்பற்றி முன் சொல்லிய யாவும் சூத்திரர் கட்டிய கதையே. கம்பர் ஓர் அரசன், அவர் நாடன். கம்பநாடுடைய வள்ளல், கம்ப நாட்டாள்வார், இவரைக்குறித்து நாம் 45-ம்வினவுக்கு விடைகூறிய இடத்தில் 20-வது இலக்கத்தின் கீழ்ச்சொல்லியிருக்கிறதை இதினோடு ஒத்திட்டு வாசித்தறியலாம்.

68. வின.—பாண்டியர்க்கு உபநய்னமாகிய பூணூல் உண்டென்பதற்கு அத்தாட்சியென்ன?

விடை.—நாம் முன் 20-ம் வினவுக்கு விடை கூறியவிடத்து உபநயனத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறதை கவனித்துக்கொள்ளவேண்டியது.

திருவிளையாடற்புராணம், உக்கிரபாண்டியன்
திரு அவதாரப்படலம், 27-வது கவி.

"நாலாகும் மதியில் * சந்திமிதிப்பது நடத்தியாறும்
பாலாகு மதியிலன்ன மங்கலம் பயிற்றியாண்டின்
மேலாகு மதியிற் கேசவினை முடித்தைந் தாமாண்டின்
நூலாறு தெரிந்து பூணுனூற் கடிமுடித்துப் பின்னர்."

இக்கவியில், உக்கிரபாண்டியனுக்கு ஐந்துவருடமானபின் உபநயனச் சடங்கு செய்ததாக சொல்லியிருக்கிறது.

சாதாரணமாய்ச் சத்திரியனுக்குக் கருப்பமானது முதல் பதினோராவது வயதில் உபநயனச் சடங்கு செய்யவேண்டியது என்றும், இருபத்திரண்டு வயதுக்குமேல் உபநயனம் செய்யக்கூடாதென்றும், பலத்தை விரும்புகிற சத்திரியனுக்கு, அதாவது அரசகுமாரனுக்கு ஆறுவது வயதில் உபநயனச்சடங்கு செய்யவேண்டியது என்றும் மநுநூல் விதியாயிருக்கிறது. மநுநூல் 2-வது அத்தியாயம், 36-வது, 37-வது சுலோகம் காண்க.

தமிழ்ச் சத்திரியர் பூர்வமுதல் தங்கள் குலத்தவர்க்குரிய உபநயனமுதலான ஆசாரங்களைச் சூத்திரராலும், வடுகராலும் இழந்தாலும், தூர்த்துவிடப்பட்ட கிணற்றைத் தூர்வையெடுத்து தண்ணீர் குடிப்பதுபோல் தமிழ்ச் சத்திரியர் உபநயனம் அணிந்துவருகிறார்கள்.

69.—வினா. சான்றார், சான்றவர், சான்றோர் ஆகிய தமிழ்ச் சத்திரியர்க்குள்ளே குலப்பிரிவுகள் உண்டோ?

விடை.—குலப்பிரிவுகள் உண்டு. அவை,

(1) கருக்குப்பட்டையர், (2) நட்டாத்தியார், (3) மேல் நாட்டார், (4) தொண்டை மண்டலத்தார் முதலான பிரிவுகளுண்டு.

(1) கருக்குப்பட்டையர். இது அரசருடைய ஆறுதொழில்களில் முக்கியமான படைபயிற்றல், அதாவது போர்த்தொழிலை உடையவர்கள் என்பதாம்.

(2) நட்டாத்தியார். சோழனுக்கு ஆத்திமாலையுண்டு. (42-வது வினாவுக்கு விடை கூறியவிடத்து 7-வது இலக்கத்தின் கீழ்க் காண்க). இப்போதும், எப்போதும், நட்டாத்திநாடார் என்னும் பிரபு ஆத்திமாலை தரித்துவருகின்றனர். வேறே எந்த சாதிக்கும் ஆத்திமாலை கிடையாது. ஆதலின் அப்பிரபு சோழவம்சத்தவர் என்பதும், சத்திரியர் என்பதும், ஆட்சேபனையின்றி ருசுவாகிறது. நட்டார் என்பது "இனத்தார்," "உறவாடினவர்" என்

* சந்திமிதித்தல்=ஓர்சடங்கு.

று அர்த்தம். ஆந்தியார் என்பது ஆந்திமாலை புனைவோர் என்று அர்த்தம். நட்டார்+ஆத்தியார் என்னும் வார்த்தைகள் "நட்டாராத்தியார்" என்றாகி பின் வழக்கத்தில் அது மருவி 'நட்டாத்தியார்" என வந்தது. ஆத்திமாலை புனையும் சோழக்குலத்தவன் பாண்டியகுல பெண்ணை விவாகஞ்செய்து இனம் பண்ணிக்கொண்டமையால் பெண்ணின் பிதாவாகிய பாண்டியன் மருமகனைத்தன் வீட்டிலிருந்துகொள்ளும்படி கேட்டு, சீதனமாக நாடுகொடுத்தான். நளவெண்பா முகவுரை காண்க.

3. மேல் நாட்டார். இது இடத்தால் வந்த பெயர்.

4. தொண்டைமண்டலத்தார். இதுவும் இடத்தால் வந்த பேர்.

70. வினா.—சான்றார், சான்றவர், சான்றோராகிய தமிழ்ச் சத்திரியர் அறிவில் குறைந்தவர்களல்ல என்பதற்குத் திருஷ்டாந்தமென்ன?

விடை.—36-வது, 37-வது, 38-வது வினவின் விடையை சற்றே கவனிக்கவேண்டியது.

சாதகசிந்தாமணியாகிய பெருநூலைச் செய்தவன் சமஸ்கிருதத்திலும் வல்லவனான தொண்டை நாடாண்ட பாண்டியன். ராமாயணம் இயற்றியவர் கம்ப நாடாண்ட சிற்றரசராகிய கம்பர். திவாகரம் பாடினவன் சமஸ்கிருதத்திலும் வல்லவனான அம்ப நாடாண்ட சேந்தன் பாண்டியன். கூர்ம புராணம், வெற்றிவேற்கை, நைடதம், காசிகாண்டம் முதலானவைகளை இயற்றியவன் அதிவீரராமபாண்டியன். வீரசோழியம் இயற்றியவன் வீரசோழநாடன், லிங்கபுராணம் இயற்றியவன் குலசேகர பாண்டியன். பிரமோத்ரகாண்டம் இயற்றியவன் வரதுங்கபாண்டியன். குறளுக்குரை எழுதியது பரிமேலழகர். (1881ஆ நொவெம்பர்மீ 1உ சத்திய வர்த்தமானிப்பத்திரிகை காண்க.) மற்றும் தமிழ்ச்சத்திரியப் பூர்வ புலவர்களின் வரலாறு சொல்லில் விரியும். உலகத்தில் தமிழ் அரசர் தவிர பிரபலமான நூல்கள் இயற்றிய அரசர்கள் எந்தத்தேசத்திலும் இல்லை.

71. வினா.—சான்றார், சான்றவர், சான்றோர் குலமேன்மையைக் குறித்து கால்வேல் பிஷப் (Bishop Caldwell) கொடுத்த சாட்சி என்ன?

விடை.—"சான்றார் குலத்தவர் பிராமணர்க்குள் மிகுந்த ஒழுக்கமுடையவர்களைப்போலவே பழநறையாகிய மதுபானத்தை மிகுந்த சாக்கிரதையாய் விலக்கி வருகிறார்கள்" என்பதே.

அதிவீரராமபாண்டியன் இயற்றிய காசிகாண்டம், சிவசன்மாவை

யமன் எதிர்கொண்ட அத்தியாயம், 43-வது கவி.

"மருள்கொடுக்கும் நறைவிற்கும் வணிகக் கபடனை
விரிவரத் தசைகளென்பு பொடியாக விரவின்
உரலிலிட்டு யருலக்கை யினிடித் தொழிகலா
நரகிடைப் பதைபதைக்க நனி நண்ணிவிடுவாய்."

இதன் பொருள். "மயக்கத்தைத் தருகின்ற பழநறையாகிய கள்ளை விற்பனை செய்யும் வணிகனாகிய வஞ்சகனைச் சதையும் எலும்பும் நொறுங்கும்படி, உரலிலே போட்டு, பெரும் உலக்கை கொண்டு இடித்து, ஒரு காலத்திலும் ஒழியாத எரிநரகத்தில் நித்தியகாலமும் பதை பதைத்து வேகும்படியாக அந்த நரகத்தில் தள்ளிவிடுங்கள்" என்பதாம்.

மேற்படி கவியாலும், உரையாலும் விளங்குகிறபடி தமிழ்ச் சத்திரியர் மதுபானத்தை எவ்வளவாய் வெறுத்து வந்தார்களென்று அறிகிறோம். அப்படியே தமிழ்ச் சத்திரிய குலத்தார் மதுபானத்தை வெறுத்தே வந்திருக்கிறார்கள் என்பது முற்கூறிய பிஷப் ஆகிய அத்தியட்ச குருவின் சாட்சியாலும் விளங்கும்.

ஆகையால் தமிழ்ச் சத்திரிய குலத்தவர்கள் மேன்மையுள்ள குலத்தவர்கள் என்பது உலகப் பிரசித்தமான காரியமாம்.

72. வினா.—இல்லற ஒழுக்க விஷயமாய் தமிழ்ச் சத்திரியர் நடக்கை என்ன?

விடை.—மநுநூல், முதலாவது அத்தியாயம், 89-வது சுலோக மொழிபெயர்ப்பு.

"சத்திரியனுக்கு பிரசைகளைத் தர்மமாகக் காத்தல், தானங்கொடுத்தல், வேதமோதுதல், பாட்டு, கூத்து, ஸ்த்ரீ முதலான விஷயங்களில் மனம் செல்லாமை இவை நான்கையும் ஏற்படுத்தினர். எச்கியம் செய்தல் முதலான தருமகாரியங்களும் அவனுக்கு உண்டு" என்பதாம்.

மேற்படி சுலோக மொழிபெயர்ப்பில் சத்திரியன் இல்லற ஒழுக்கமுள்ளவனாக இருக்கவேண்டுமென்று போதித்திருக்கிறபடி தமிழ் அரசரும் வேசித்தனத்தை விலக்கவேண்டும் என்று நூல்களில் கண்டிப்பாய் போதித்திருக்கிறார்கள். சான்றார், சான்றவர், சான்றோர் என்னும் தமிழ்ச் சத்திரிய குலத்தவரும் இல்லற ஒழுக்கமுள்ளவர்களாய் நடந்துவருகிறதை யாவரும் அறிந்திருக்கிறார்கள்.

இல்லற ஒழுக்க விஷயமாய் தமிழ்ச்சத்திரியரின் குழந்தைகள் சொல்லிவந்திருக்கிற சுலோகமாவது:—

"அடுக்குக் கோட்டை முருக்கம் பழம்

ஆர் எடுத்தார்? காமன் எடுத்தான்,

காமன் தலையை நாய் கொண்டோடுது." என்பதாம்.

இதன் பொருள். "அடுக்கடுக்காய்க் கட்டப்பட்டிருக்கிற கோட்டைக்குள்ளே வைக்கப்பட்டிருந்த (முருக்கம்பழம்) எலுமிச்சம்பழ நிறம்போன்ற பெண்ணைக் கொண்டுபோனவன் யார்? காமனுல் ஆசையூட்டப்பட்ட ஒருவன் எடுத்தான்; அந்தப்படி பெண்ணைக் கொண்டுபோனவனுடைய தலையை நாய் கொண்டுபோவதுபோல் தலையாரி வெட்டிக்கொண்டு ஓடிப்போகிறுன்" என்பதாம்.

இந்தச் சுலோகத்தைத் தமிழ்ச் சத்திரிய குலப்பிள்ளைகள் தெருக்களில் இப்போதும் எப்போதும் சொல்லிவருகிறுர்கள். இதினுல் தமிழ்ச் சத்திரிய அரசர் வேசித்தனத்தை எவ்வளவாய் வெறுத்துவந்தார்களென்றும், தமிழ்ச் சத்திரியகுலப்பிள்ளைகளுக்குள் அப்படிப்பட்ட சிந்தையே நிலைத்திருக்கும்படி அந்தச் சுலோகத்தை அந்தப் பிள்ளைகள் விளையாட்டுகளில் சொல்லப் பழகியிருந்தார்களென்றும் அறிகிறேும்.

மேற்படி விஷயத்தைக் கவனிப்பதினுல் தமிழ்ச்சத்திரிய குலத்தவர் இல்லற ஒழுக்கமுள்ள குலத்தவர் என்பது தாஞய் விளங்குகிறது.

73. விஞ.—சான்றுர், சான்றவர், சான்றேராகிய தமிழ்ச்சத்திரியரின் சாதாரண குலாசாரம் என்ன?

விடை.—தமிழ்ச்சத்திரியரின் குலாசாரம் என்னவென்றுல்,

(1) * பிரியன் தன்தாரம் இருக்கிறபோது வேறே தாரம் விவாகம் செய்கிற வழக்கம் இல்லை.

(2) பிரியர் வைப்பாட்டிகளை வைத்திருக்கிற வழக்கம் இல்லை.

(3) பிரியனை இழந்த பெண்கள் மறுவிவாகம் செய்கிறதில்லை.

(4) பிரியனை இழந்த பெண்கள் சில வருஷங்களாகத் தங்கள் கூந்தல்களைக் கட்டிக்கொள்ளாமல் அவைகள் குலைந்தே கிடக்க விடுகிறுர்கள்.

(5) பிரியனை இழந்த பெண்கள் வெண்வஸ்திரம் தரிப்பதேயன்றி பல வர்ணப்புடவைகளைத் தரிக்கிறதில்லை.

---

* பிரியன் என்பதற்கு, தலைவன், காவலன், பத்தா, காதலன், A beloved husband என்றர்த்தம். (சதுர அகராதி காண்க.)

(6) பிரியனை இழந்த பெண்கள் மோதிரங்களையாவது மற்ற எந்தவகையான ஆபரணங்களையாவது தரித்துக்கொள்ளுகிறதில்லை.

கம்பராமாயணம், கலன்காண்படலம், 19-வது கவி.

"விலங்கெழிற்றோளினாய் வினையினேனுமிவ்
விலங்கு விற்கரத்தினுமிருக்கவே யவள்
கலன் கழித்தனளிது கற்புமேவிய
பொலன் குழைத் தெரிவையர் புரிந்துளோர்கள் யார் ?"

இக்கவியில், "ஓ சுக்ரீவா, எவற்றையும் முடிக்க வல்லவனாகிய நானிருக்க, என் கரத்தில் கோதண்டமிருக்க, அவள் நிராபரண தாரியாயினள். கற்பு நிறைந்த ஆபரணதாரிகளாகிய மங்கலக் கழுத்தியர்க்குள் யார் நாயகன் உயிரோடிருக்கையில் இவ்விதம் செய்யத்துணிவார்" என்று சொல்லியிருக்கிறது.

ராமருடைய மனைவியாகிய சீதை ராவணனால் கொண்டுபோகப்பட்டபோது தன் ஆபரணங்களைக் கழற்றிப் போட்டதைக் குறித்து ராயர் விசனப்பட்டு, புருஷன் இறந்தபின் ஸ்த்ரீயானவள் தன் ஆபரணங்களைக் கழற்றிப் போடவேண்டியவள் என்று சொன்னது தெளிவாயிருக்கிறது.

அந்தப்படியே தமிழ்ச் சத்திரியகுல ஸ்த்ரீகள் செய்து வருகிறார்கள்.

(7) ஸ்த்ரீகள் பெருந்தாலிகட்டும் முறைப்படி செய்கிற வழக்கம்போல் செய்துவருகிறார்கள், சிறு தாலிகட்டுகிறதில்லை.

(8) ஆடவர் தாசி, வேசிச் சாவகாசம் செய்கிறதில்லை.

(9) ஆடவர் மதுபானம் பண்ணுகிறதில்லை.

இவை முதலானவைகள் தமிழ்ச்சத்திரியர்க்குரிய சாதாரண குலாசாரமாம்.

74. வினா.—சான்றார், சான்றவர், சான்றோராகிய தமிழ்ச் சத்திரியருடைய பூர்வ பிதாக்கள் அரசாட்சிசெய்து வந்தவர்கள் என்பதற்கு அடையாளமாகிய தங்கக்காசு விபரம் என்ன ?

விடை.—அவர்களுடைய பூர்வ பிதாக்கள் அரசு செய்து வந்தவர்கள் என்பதற்கு சான்றார்காசு என்று சத்துருக்களாலும் மித்துருக்களாலும் சொல்லப்படுகிற தங்கக்காசுகள் முக்கிய அடையாளமாம். அக்காசுகளைக்குறித்துக் கொஞ்சம் விபரிப்போம்.

காசுகளைப்போட்டு நாட்டில் வழங்கி வரச்செய்தல் மகுடாதிபதிகளாகிய அரசருக்கே உரியது. பூர்வகாலத்தில் ஒருவன் இந்துதேசத்தில் மிகுந்த திரவியமுள்ளவன் என்று சொன்னால் அவன் அரசனேயல்லாமல் மற்றவனல்ல. ராஜ்யம் முழுவதும் அரசனுடையது. அரசனல்லாத ஒருவன் அவ்வளவு நாடுகளையுடையவனாயிருக்கக் கூடாது.

ஒரு காசு உண்டாயிருந்தால் அந்தக்காசு போட்டவர்கள் அரசர்கள் என்பது தானாக விளங்குகின்றது. தமிழ் நாடுகளில் பூர்வ முதல் உயர்தரமாற்று தங்கக் காசுகள் உண்டுபண்ணப்பட்டு வழங்கி வந்திருக்கின்றன. அந்தக் காசுகளிலெல்லாம் உயர்ந்த மாற்றுக்காசு, சான்றார்காசு, அதாவது சான்றவர்காசு, சான்றோர்காசாம். சான்றாரக் காசு அல்லது சான்றோர் காசு என்பதற்கு தமிழ் நாட்டரசர் காசு என்று பொருளாம். இங்கிலிஷ் அரசாட்சி வருவதற்குமுந்தி நகைகள் செய்வதற்குக் கடைகளில் சான்றாரக்காசு உண்டா? என்று கேட்டு வந்தார்கள். அந்தக் காசுகள் தமிழ் நாட்டில் வழங்கிவந்த காலத்திலேயே கிறிஸ்தாண்டுக்குமுன் 20-ம் வருடத்தில் ரோமர் பாண்டியரோடே வியாபார விஷயமாய் சமாதான உடன்படிக்கை செய்திருந்தபோது ரோம நாணயங்கள் வியாபாரமாக இந்துதேசத்தில் கொண்டுவரப்பட்டன. அவைகளும் ஏறக்குறையச் சான்றாரக்காசுகளுக்கு ஒத்திருந்தன. அவைகள் நகைகளுக்காக அழிக்கப்பட்டன. அவைகளுக்குப் பின் இங்கிலிஷ் பவுண்கள் வியாபார மூகாந்தரமாய் இந்துதேசத்தில் கொண்டுவரப்பட்டவைகள் நகைகளுக்காக உபயோகிக்கப்பட்டன. அவைகளும் மிகுதியில்லாதபடியால் ஒரு பவுண் பத்து ரூபாய் மாத்திரம் விலையுள்ளதாயிருந்ததோ இப்போது பதினேழு ரூபாய் மட்டும், சிலவேளை பதினெட்டு வரைக்கும் விலையேறி இப்போது ரூபாய் பதினைந்திலிருக்கிறது. ஆகையால் * இப்போது பவுணும் கிடைக்கிறது அருமையாகிவிட்டது. இதனை அறியாத சிலர் ரோம நாணயங்களைப் புதையல்களில் கண்டு எடுத்து உபயோகப்படுத்துகையில் பார்த்து, அவைகளைச் சான்றார் காசுகள் என்று நம்பி, பின் அவைகளிலுள்ள எழுத்துக்களினால் அவைகள் சான்றார் காசுக்களல்லவென்றும், ஆகையால் சான்றார் காசுகளே இருந்ததில்லை என்றும் சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்பவன் மூடன்தான். தமிழிலும் இங்கிலிஷியிலும் அகராதி எழுதியிருக்கிறவர்கள் "காசு" என்ற வார்த்தையினடியில் சான்றார் காசு உண்டு என்று எழுதியிருக்கிறார்கள்.

ரோமருடைய காசுக்களையே சான்றாரக்காசுக்கள் என்று சொல்லிவந்தார்கள் என்று பகைவன் ஒருவன் சொல்வானானால் அந்த ரோம காசுகளை பிராமணர்காசு, செட்டிகாசு, வெள்ளாளன்காசு, சேவகன்காசு என்று சொ

* இப்போது இந்தியாவுக்கென்று பவுண் உண்டாக்கியிருக்கிறார்கள்.

ல்லாமல் சான்றூரக்காசு என்று ஒரு சாதியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியதில்லையே, ஆகையால் சான்றூர் காசுகள் இருந்தன என்பது உண்மை என்றும், சான்றூர், சான்றவர், சான்றோராகிய தமிழ்ச் சத்திரியர் அரசாண்டார்கள் என்பது நிச்சயம் என்றும் அறியலாம்.

75. வினு.—சான்றூர், சான்றவர், சான்றோர் ஆகிய தமிழ்ச் சத்திரியர் காளியை விசேஷித்து வணங்கிவருகிருர்களே அதற்குக் காரணம் என்ன ?

விடை —காளி ஆனவள் சிவனுடைய மனைவியாகிய பார்வதியானவள், அல்லது உமையானவள்தான். ஓர் அவதாரகாலத்தில் காளி என்று சொல்லப்பட்டாள் என்பது புராண சித்தாந்தம்.

எண்டோளன்=சிவன். எண்டோளி=காளி.
கங்காளன்=சிவன். கங்காளி=காளி.
பைரவன்=சிவன். பைரவி=காளி.
முக்கண்ணன்=சிவன். முக்கண்ணி=காளி.

தமிழ்ச் சத்திரியர் ஆதியில் இமயமலைக்கும் விந்தியமலைக்கும் இடையிலுள்ள ஆரியநாட்டில் வாசம்பண்ணின காலத்தில் காளியானவள் போராயுதங்களாகிய பதினெட்டாயுதமுடையவளாய் அசுர சம்மாரம் செய்ததினுல் தாருக விநாசனி என்னும் பெயருடையவளாய் சூரிய சந்திரகுலச் சத்திரியரால் வணங்கப்பட்டாள். அநேக தேசங்களிலும் இந்த இந்துதேசத்திலும் ஸ்த்ரீகள் இராசாத்திகளாக இருந்தார்கள் என்பதை யோசிக்கிறபோது இது விளங்கும். இந்துதேசத்தின் ராஜதானியாகிய, தற்காலத்தில் இங்கிலிஷ் கவர்னர் ஜெனரல் வாசம்பண்ணுகிற இடமானது காளிகோயிலையுடையதாக இருந்தபடியால் அந்த நகரத்துக்கு காளி காத்தல் என்று பெயர் இருந்தது. இங்கிலிஷர் அதனை (Calcutta) கல்கத்தா என்று சொன்னுர்கள். தமிழ்ச் சத்திரியர் வடதிசையிலுள்ள அந்த ஆரிய நாட்டிலிருந்து வந்தார்கள் என்பதற்கு அடையாளமாகத் தாங்கள் தமிழ் நாட்டில் கட்டின காளிகோயில்களுக்கெல்லாம் வடக்கே வாசலிட்டார்கள். ஆகையால் காளிக்கு வடக்கு வாசற்காரி என்று பெயருண்டாயிற்று.

அரிச்சந்திரபுராணம், விவாககாண்டம்,

281-வது, 282-வது கவிகள்.

"இன்னதன்மை யாவையும் கண்டு கண்டேய
மின்னுமன்னனுங் கலவியும் புலவியும் விளைத்து
நன்னெடும் பணைகடந்தருஞ் சுரத்திடை நண்ணி
வன்னமா முலை பைரவி கோட்டத்தில் வந்தார்."

"யோகினிக் கணஞ்சூழ்ந்திட கொடுஞ் சுரத்துறையும்
மோகினிப் பெருமாடிரு முன்றிவிற் றொழுது
பாகினிற் சிறந்திரதித்த மொழியொடு பனிமந்
தாகினித்துறை யணைந்ததிற் படிந்தயல கன்றார்."

மேற்படி கவிகளின் பொருள். "இப்படிப்பட்ட வேடிக்கையெல்லாம் பார்த்துப் பார்த்துக் கொண்டுபோய் சந்திரமதியும் அரிச்சந்திரனும் கூடலும் ஊடலும் செய்துகொண்டு, அந்த நல்லதான நெடிய மருதநிலத்தைக் கடந்து சென்று, அப்பால் அரிதான பாலைவனத்துக்குப்போய் சுவர்ன நிறத்தையுடையதாய்ப் பெரிதானகொங்கைகளையுடைய காளி கோயிலுக்குள்ளே இருவரும் வந்தார்கள்." "அநேக யோகினிக்கூட்டங்கள் சூழ அந்தக் கொடுமையான வனத்தினிலே வாசஞ்செய்கின்ற காளிமா தேவியினுடைய திருமுற்றத்திலே நின்று அவளை வணங்கிக்கொண்டு, சர்க்கரைப் பாகிலும் சிறப்புள்ளதாய்த் தித்திக்கின்ற வசனத்தையுடைய சந்திரமதியுடனே குளிர்ந்த கங்காநதி தீரத்துக்கு வந்து அதிலே நீராடிக்கொண்டு, அப்புறம் போனார்கள்" என்பதாம்.

வில்லிப்புத்தூர்ப் பாரதம், விராடபருவம்,

நாடுகரந்துறைச் சருக்கம், 10-வது கவி.

"தத்தமபடையும் கவசமுமனைத்தும் தனித்தனியைவரும் தரித்த
மெய்த்திறலுடைய யாவுமத் தருவின் கோடரத் தொளித்தொரு
விரகால்
வைத்தனராகி யாவரு முணரா வகையரு மறைகளும் பயிற்றி
முத்தலைவடிவேற் காளியை வணங்கி முன்னினார் புரிதொழில்
முற்றும்."

மேற்படி செய்யுட்களில், அரிச்சந்திரனாகிய சூரியகுல அரசன் தன் விவாகம் நிறைவேறினவுடனே தன் மனைவியோடே காளிகோயிலுக்குப் போய் அவளை வணங்கினான் என்றும், சந்திரகுல சத்திரியரான பஞ்ச பாண்டவர் காளியை வணங்கினார்கள் என்றும், மேற்படி நாடுகரந்துறைச் சருக்கம், 9-வது கவியில் அவளைத் தாய் என்றும், உச்சினிபுரத்தில் காளி விக்கிரமாதித்தனுக்கு மிகவும் உதவியாயிருந்தாள் என்றும் சொல்லப்பட்டிருக்கிற காரியங்களினால் காளி சத்திரியர்க்குத் தாய் என்று சொல்லப்பட்டவள் என்றும் அறிகிறோம். அந்த முறைப்படி, சான்றார், சான்றவர், சான்றோர் ஆகிய தமிழ்ச் சத்திரியர்க்கு காளியானவள் தாய் என்றும், தமிழ்ச் சத்திரியர் அவளுடைய பிள்ளைகள் என்றும் சொல்லப்படுகிறது

வழக்கமாயிருக்கிறது. இதுவே தமிழ்ச் சத்திரியர் காளியை வணங்கி வருகிறதற்குக் காரணமாம்.

76. வினா.—சான்றார் என்னும் பதம் சாணார் என்று மரூஉ ஆகமாட்டாது என்பதற்கு நியாயம் என்ன ?

விடை.—சான்றார் என்னும் பதமானது சாணார் என மரூஉ ஆகமாட்டாது.

1858 – வது கிறிஸ்தாண்டில், உவால்ற்றெர் ஜாய்ஸ் எஸ்கொயர் (Walter Joyes Esq.) என்னும் யூரோப்பியர் ஒருவருடைய உதவியைக் கொண்டு, இ. சாமுவேல் பிள்ளை என்பவர் தொல்காப்பியத்தையும் நன்னூலையும் சம்பந்தப்படுத்தும்படி தொல்காப்பிய நன்னூல் என்னும் நூல் ஒன்று செய்திருக்கிறார். அந்நூல் சென்னை, கிறிஸ்துமதக்கியான விளக்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

மேற்படி சாமுவேல் பிள்ளை செய்த தொல்காப்பிய நன்னூல், பதவியல், 5–வது சூத்திரம், "பொருளிடம் காலம் சினைகுணம் தொழிலில் வருபெயர் பொழுதுகொள் வினைப்பகு பதமே" என்பதினடியில், சில உதாரணங்களைச் சொல்லியிருக்கிறார். அவைகளில், "சான்றான், or சாணான்" என்று சொல்லியிருக்கிறார். அதில் அவர் சான்றான் என்று சொல்லியபின், or சாணான் என்று ஒரு இங்கிலிஷ் மொழியை "அல்லது" என்பதற்காகச் சேர்த்துச் சொல்லியிருக்கிறார். தமிழிலேயே சொல்வோமானால் அவர் சொன்னது "சான்றான், அல்லது சாணான்" என்றாகும்.

அவர் சான்றான் என்று சொல்லியபின், அல்லது சாணான் என்று சொல்லவேண்டிய அவசியமில்லை. அப்படியிருக்க, அவசியமில்லாத காரியத்தை அவர் இழுத்துச் சொன்னபடியால், மேற்படிச் சூத்திரத்தின் கீழ்ச் சொல்லிய மற்றச் சாதிகளின்மேல் தமக்குச் சுவையில்லை என்றும், சான்றான் என்பவனை சான்றான் என்னும் குலமேன்மையோடே விடாமல் சாணான் என்று வசைப்பேர் ஒன்றும் சொல்லவேண்டும் என்னும் கருத்துக் கொண்டவராகத் தோன்றுகிறது. சாணான் என்றதினால் அவர் சான்றானைக்குறித்து அவருடைய மனதிலுள்ள பகைமையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

அந்த சாமுவேல்பிள்ளை பெரியபுராணத்திலுள்ள ஏனாதிநாத நாயனாருடைய சரித்திரத்தை வாசித்தவராயிருக்கலாமே. மேற்படி புராணத்தில் அவர் சொல்லிய சான்றான், அல்லது அவர் சொல்லிய சான்றான் என்பதின் பன்மையாகிய சான்றார் என்னும் சுத்தமான பதம் இருக்கிறதேயல்லாமல் சாணான், அல்லது சாணார் என்னும் பதம் அதில் உண்டா ? அதில் இல்லையே. அப்படியிருக்க, அவர் "சான்றான், அல்லது சாணான்" என்று சொல்ல

வேண்டியதில்லையே. அவர் சொன்னது அனுவசியமல்லவா? ஆகையால் அவர் சான்றார் குலத்தவர்மேல் கொண்ட பகையால் அப்படிச் சொல்லியிருக்கிறார்.

இப்போது சான்றார் என்னும் பதமானது சாணர் என்று மரூஉ ஆக மாட்டாதா? என்று விசாரிப்போம்.

தமிழில் பல வார்த்தைகள் மரூஉ ஆக வழங்கப்படுகிறதுபோல் சான்றான் என்பதும் சாணன் என்று மரூஉ ஆக வழங்கும் என்று சாமுவேல் பிள்ளை சொல்லத் துணிவார் போலும்.

அவர் அப்படிச் சொல்லியது சரியானால் ஈன்றான், ஈன்றாள், ஈன்றார் என்பவைகளும் ஈணன், ஈணள், ஈணர் என்று மரூஉ ஆகலாமே. இந்தப்படி சான்றான் முதலான மேற்படி வார்த்தைகள் மரூஉ ஆக இருக்கலாம் என்று சாமுவேல்பிள்ளை ஒப்புவாரா? அந்தப்படி மரூஉ ஆகலாம் என்று சாமுவேல்பிள்ளை சொல்லத் துணிவாரேயானால் ஈணன் என்பது பெறுதவன் என்றும், ஈணள் என்பது பெறுதவள் என்றும், ஈணர் என்பது பெறுதவர் என்றும் பொருளாகுமே. ஒருபதமானது சுத்தமான தமிழ்ப் பதமாயிருக்கிறபோது ஒரு அர்த்தமும், அது மரூஉ ஆகும்போது எதிரான வேறே அர்த்தமும் கொடுக்குமா? மரூஉ ஆகும்போது வேறே அர்த்தம் கொடுக்கும் என்று புத்திமான்கள் சொல்லவேமாட்டார்கள்.

அன்றியும், சாக்ஷி என்னும் சமஸ்கிருதப் பதத்திற்கு சான்று என்பது சுத்தமான தமிழ்ப் பதமாம் (39-ம் விஞவுக்குச் சொல்லிய விடையில் காண்க). சூரியனுக்கு சான்றான், சான்றவன், சான்றோன் என்னும் பேர்கள் வந்த விதத்தை அங்கே விபரித்திருக்கிறோம். சான்றான் என்பது சாமுவேல்பிள்ளை சொல்லியதுபோல் சாணன் என்று மரூஉ ஆகுமானால் சூரியனுக்குரிய மேற்படி பேர்களும் சாணன், சாணவன், சாணோன் என மரூஉ ஆகுமே. அந்தப்படி ஆகும் என்று அவர் ஒப்புவாரா? அவர் ஒருவேளை ஒப்பினும் புத்திமான்கள் ஒப்புவார்களா? ஒப்பவேமாட்டார்கள்.

மேலும் முன் திவாகரத்திலிருந்து எடுத்துக்காட்டிய குலக்கிரம அட்டவணை 11-வது சூத்திரத்தில் சான்றான், சான்றவன், சான்றோன் என ஒருமையிலும், சான்றார், சான்றவர், சான்றோர் எனப் பன்மையிலும் வந்திருக்கிறதை விபரித்துக்காட்டினோம். மேற்படிச் சூத்திரத்திலேயே சான்றோர் என்ற பதத்துடன் ஒரே பொருள் கொண்ட ஆன்றோர் என்பது ஆன்றான், ஆன்றவன், ஆன்றோன் என ஒருமையிலும், ஆன்றார், ஆன்றவர், ஆன்றோர் எனப் பன்மையிலும் வந்ததையும் விபரித்தோம். சான்றான், சான்றோன் என்பவை சாணன், சாணோன் என மரூஉ ஆகுமானால்

ஆன்ருன், ஆன்றவன், ஆன்ரேன் என்பவை ஆணுன், ஆணவன், ஆணேன் எனவும், ஆன்ருர், ஆன்றவர், ஆன்ரேர் என்பவை ஆணுர், ஆணவர் ஆணேர் எனவும் மரூஉ ஆகவேண்டுமே. அந்தப்படி ஆகுமென்று சாமுவேல் பிள்ளை ஒப்பினுலும் புத்திமான்கள் ஒப்பமாட்டார்களே.

முற்கூறிய நியாயங்களைத் திரட்டிப் பார்வையிடுவதினுல் சான்ருன் என்பது சாணுன் என மரூஉ ஆகமாட்டாது என்று தெளிவாய் அறியலாம். அப்படியிருக்க சாணுன் என்னும் பதமானது சாமுவேல் பிள்ளையினுல் உபயோகிக்கப்பட்ட காரணம் யாதெனில், இரண்டுபேர் பகை சாதிக்கும்போதும், அவர்கள் ஒருவருக்கொருவர் எதிர்முகமாயும், மறைவாகவும் பேசிக்கொள்ளும்போதும் வேறே ஜாதியினுடைய பேரைக்கொண்டு வசைப்பேர் சொல்லிக்கொள்வதுண்டு. அந்தப்படி சாணுர் என்று பேர் உள்ள ஒருஜாதியாரிருக்க, அவர்களுடைய ஜாதிப்பேரைக்கொண்டு உயர்ந்த ஜாதியாகிய சான்ரேரான தமிழ்ச் சத்திரியரைத் தூஷித்து வசைப்பேராக சாணுர் என்று விரோதிகளான சூத்திரர் சொன்னுர்களெனத் தோன்றுகிறது.

தமிழ்ச் சத்திரியராகிய சான்ருர், சான்றவர், சான்ரேர் என்னும் உயர்ந்த சாதியார் (41-ம் வினுவிற்கு விடை கூறிய இடத்து 24 ம் இலக்கத்தின்கீழ் சொல்லியது காண்க.) சாமுவேல்பிள்ளை நினைத்தபடி சாணுரல்ல, சாணுர் என்பது தமிழ்ச் சத்திரியரின் குலப்பேர் அல்ல, தமிழ்ச் சத்திரியராகிய சான்ருரை, சான்ரேரை, தமிழ் அரசகுலத்தவரை எவன் சாணுன் என்று சொல்லுவானே அவன் அவர்களை மனதாரத் தூஷிக்கிறவனுவான். சாணுர் என்பது † கவண்டர் அல்லது மூப்பர் என்னும் குலப்பட்டபேர் உள்ள வேறே ஜாதியாராம்.

தமிழ் வைசியர்.

77. வினு.—மூன்ருவது குலத்தவர் யார் ?

விடை.—சேந்தன் திவாகரத்திலிருந்து நாம் முன் எடுத்துக்காட்டிய குலக்கிரம அட்டவணைப்படிக்கும், மற்ற நூல்களிலிருந்து நாம் எடுத்துக் கூறியதும் இனிமேல் கூறுவதுமான ஆதாரங்களின்படிக்கும் வைசியர் மூன்றவது குலத்தவராம்.

78. வினு.—வைசியர்க்குப் பூர்வ நூல்களில் வழங்கப்பட்ட வேறே பேர்கள் எவை ?

விடை.—வைசியர்க்குப் பூர்வ நூல்களில் செட்டிகள், வணிகர் முதலான பேர்கள் உண்டு.

† கவண்டர் அல்லது மூப்பர்=சண்டாளர், கீழ்மக்கள், தமிழ் அகராதிகளிற் காண்க.

79. வினு.—வைசியர், செட்டிகள் என்பவைகளின் மூலமென்ன?

விடை.—வைசியம் என்பதற்கு "வியாபாரம்" என்பது மூலம்; "செட்டி" என்பதற்கு "செட்டு" என்பது மூலம்; "செட்டு"என்பதற்கு "வியாபாரம்" என்றர்த்தம்.

80. வினு.—செட்டிகள், அதாவது வைசியர் தொழில் என்ன?

விடை.—55-ம் வினுவுக்கு நாம் கூறிய விடையில் சொல்லியதுபோல் வைசியர்க்கு ஆறு தொழில்கள் உண்டு. அவைகள், "ஓதல். வேட்டல், ஈதல், எருழல், பசுக்காத்தல், பொருளீட்டல்" என்பவைகளே.

81. வினு.—வைசிய குலத்தைக் குறித்துச் சந்தேகம் உண்டோ?

விடை.—வைசிய குலத்தைக் குறித்துச் சந்தேகமில்லை.

82. வினு.—அந்நிய அரசாட்சியால் தமிழ் வைசியர்க்குத் துன்பம் உண்டோ?

விடை.—தமிழ் வைசியர் எந்த அரசாட்சி விஷயத்திலும் தலையிடாதவர்களானபடியால் வைசியர்க்குத் துன்பமில்லை.

83. வினு.—சூத்திரர் வைசியரின் ஸ்தானத்தை அபகரிக்கச்செய்த வகை எப்படி?

விடை.—வடுக அரசாட்சியின் காலத்தில் சூத்திரராகிய வெள்ளாளர்க்கு மேன்மைபுண்டானபடியாலும், தமிழ் குலத்தவரைக்குறித்து வடுகு அரசாட்சியார் கவலையற்றவர்களானபடியாலும், சூத்திரர் தங்களை வைசியரிலும் மேன்மையாக வடுக அரசாட்சியார் மதிக்கும்படி செய்தார்கள். ஆகையால் தமிழ் அரசாட்சியில் வைசியருக்கிருந்த சில மேன்பாடான காரியங்கள் குறைந்தது.

முன் சொன்னபடி வைசியருடைய தொழில் ஆறு. அவை:-(1)ஓதல், (2)வேட்டல், (3) ஈதல், (4) எருழல், (5) பசுக்காத்தல், (6) பொருளீட்டல் என்பவைகளே. மேற்படி ஆறு தொழில்களில் முதல் மூன்று தொழில்களாகிய (1) ஓதல், (2) வேட்டல், (3) ஈதல் அரசருக்கும், பிராமணர்க்கும் உண்டு. சூத்திரர்க்கு மேற்படி மூன்று தொழில்களுமில்லை. வைசியரின் பிந்தின மூன்று தொழில்களாகிய (4) எருழல், (5) பசுக்காத்தல், (6) பொருளீட்டல் என்பவைகள் சூத்திரர்க்கும் உண்டு.

ஆகையால் சூத்திரர் பின்சொல்லிய மூன்று தொழில்களையும் தனித்தனியே பிரித்து மூன்று குலமாக்கினூர்கள்.

ஏருழலாகிய தொழில் வெள்ளாளராகிய தங்களுக்குரியதென்றும், ஆகையால் தாங்கள் பூவைசியரென்றும், பசுக்காத்தல் இடையர்க்குரிய தென்றும், ஆகையால் இடையர் கோவைசியரென்றும், பொருளீட்டல் என்னும் தொழிலானது வைசியர்க்குரியதென்றும், ஆகையால் வைசியர்க் குத் தனவைசியரென்று பேர் என்றும் சொன்னார்கள். ஆகையால் அந்த சுத்தாங்கமான வைசியர் வெள்ளாளராகிய தங்களைப்பார்க்கிலும், இடைய ரைப்பார்க்கிலும் தாழ்ந்தவர்களென்றும் சொல்லி வைசியரின் ஸ்தானத் தை அபகரிக்க முயற்சித்தார்கள்.

இந்தப்படி வெள்ளாளர் சொல்லும்படியாக சூடாமணி நிகண்டைத் திருத்தி, தங்களுடைய அபிப்பிராயத்தை அதற்குள்ளே திணித்தார்கள்.

வெள்ளாளர் தங்களுடைய ஸ்தானத்தில், அதாவது சூத்திருடைய ஸ்தானத்தில் முன் சொல்லப்பட்ட (1) ஏருழவு, (2) பசுக்காத்தல், (3) பொருளீட்டல் ஆகிய மூன்று தொழில்களின்படி தங்களைப்பிரித்து மூன் று குலமாக்கிக்கொள்ளப் பிரியமானால், வெள்ளாளர் ஆகிய தங்களை பூச் சூத்திரர் என்றும், இடையரை கோச்சூத்திரரென்றும், தனச் சூத்திரர் என்றும் பிரித்துச் சொல்லலாமேயன்றி, வெள்ளாளர் மூன்றாவது பிரதான ஸ்தானமாகிய வைசியருடைய ஸ்தானத்திலே போய் நின்று குலம்பிரித் துப் பேசுதல் மிகவும் பிசகாம். அது சரியானால் அரசருக்கும் பிராமணர்க் கும் வைசியர்க்கும் (1) ஓதல், (2) வேட்டல், (3) ஈதல் ஆகிய மூன்று தொ ழில்களும் பொதுத் தொழில்களாக இருக்கிறதினாலே வைசியர் தங்களை அரசர் என்றும், ஓதல் அரசர் என்றும், வேட்டல் அரசர் என்றும், ஈதல் அரசர் என்றும் குலம் பிரித்துச் சொல்லக்கூடுமோ? கூடாதே. இதை நாம் பின்னும் விரித்துப்பேசினால் சிறுபிள்ளைகளுடைய விளையாட்டுப் போலிருக்கும்; ஆகையால் அதைப்பற்றிப் பேசாமல் நிறுத்திவிடுகிறோம்.

ஆகையால் வெள்ளாளர் வைசியரின் ஸ்தானத்தை அபகரிக்க முயற் சித்தது சரியல்ல, வெள்ளாளர் சூத்திரரே, வெள்ளாளர் வைசியரல்ல.

84. வினா.—வைசியர்க்குரிய எட்டுவகை இயற்குணங்கள் எவை?

விடை.—சேந்தன் திவாகரம், 12-வது தொகுதி,

129-வது சூத்திரம்,

"வணிசர் எண்குண வகைப்பெயர்"

"தனிமையாதல், முனிவிலனாதல்,
இடனறிந் தொழுகல் பொழுதொடு புணர்தல்,

உறுவது தெரிதல் *இறுவதஞ்சாமை,
ஈட்டல், பகுத்தல் என்றிவை எட்டும்
வாட்ட மில்லா வணிகரதியற் குணம்."

மேற்சொல்லிய குணங்களில் ஏருழல், பசுக்காத்தல் என்னும் இரண்டைப்பற்றியும் கொஞ்சமாவது சொல்லவே இல்லை. பொருளீட்டலே அவர்களுக்கு முக்கியமான தொழில். அந்தப்படி பொன், வெள்ளி முதலான உரை, நிறை எல்லாம் இந்தத் தமிழ் நாட்டில் இவர்களாலேயே நடத்தப் படுகிறது.

"செட்டிக்கும் வெள்ளாண்மைக்கும் சென்மப்பகை" என்னும் முதுமொழிக்கிணங்க, வைசியர் வெள்ளாண்மையைப் பகைக்கிறவர்களாகவும் வியாபாரத்தையோ ஆசையாய் நடத்துகிறவர்களாகவுமிருக்கிறார்கள்.

வைசியர்க்குரிய எண்குணங்களைப்போலவே சூத்திரராகிய வெள்ளாளர்க்குப் பத்துவகை இயற்குணமுண்டு. அவைகளை இதன் பின்னல் சொல்லுவோம். அந்த இயற்குணங்களிலேயே மூன்றாவது குலத்தவராகிய வைசியர் வேறு, நாலாவது குலத்தவராகிய வெள்ளாளர் வேறு என்று பட்டப்பகல்போல் விளங்கும்.

85. வி௯.—தமிழ் வைசியரை விசேஷித்துக் காட்டும்படி அவர்களுக்கு எப்போதும் வழங்கப்பட்டுவருகிற பட்டப் பெயர் என்ன?

விடை.—அவர்களை எப்போதும் விசேஷித்துக் காட்டும்படி வழங்கப்பட்டுவருகிற பட்டப்பெயர் **நகரத்துச் செட்டிகள்** என்பதே.

86. வி௯—நகரத்துச் செட்டிகளின் குலப்பிரிவுகள் என்ன?

விடை.—அவர்களுடைய குலப்பிரிவுகள்:- வடமன்செட்டிகள், மஞ்சட்புத்தூர் செட்டிகள், தலையநல்லூர்ச்செட்டிகள், காசுக்காரச்செட்டிகள், வக்காமணிச்செட்டிகள், அல்லது மணிச்செட்டிகள், நடுமண்டலச்செட்டிகள் முதலான பிரிவுகளுண்டு.

87. வி௯.—நகரத்துச் செட்டிகளின் கோத்திரம் என்ன?

விடை—கடவுள் மகாரிஷி கோத்திரம், சாவேரி மகாரிஷி கோத்திரம், வண்ணக மகாரிஷி கோத்திரம், சித்தம் பூர்மகாரிஷி கோத்திரம், மருதாந்த மகாரிஷி கோத்திரம், சிறுவம்பூர் மகாரிஷி கோத்திரம், வேட்டந்தி மகாரிஷி கோத்திரம் முதலான ஆயிரம் கோத்திரத்தாராயிருக்கிறார்கள்.

---

* இறுவதஞ்சாமை என்பதற்கு நட்டத்துக்குப் பயப்படாமை என்றர்த்தம்.

88. வினா.—நகரத்துச் செட்டிகளுக்கு பூணூல் உண்டோ?

விடை.—அவர்களுக்குப் பூணூல் உண்டு.

89. வினா.—நகரத்துச் செட்டிகளில் யாராவது தங்களுக்குப் பிள்ளைப் பட்டம் உண்டென்று சொல்லுகிறார்களா?

விடை.—அவர்கள் பிள்ளைப்பட்டத்தை வெறுக்கிறார்கள்.

90. வினா.—நகரத்துச் செட்டிகள் சூத்திரர்க்கே சிறப்பான துயிலுவம், காருகவினை, முதல் மூவர்க்கேவல் செய்தல் என்னும் தொழில்களைச் செய்கிறார்களா?

விடை.—சூத்திரராகிய வெள்ளாளர்க்கே சிறப்பான துயிலுவம் முதலான மேற்படி தொழில்களை நகரத்துச் செட்டிகள் செய்கிறதேயில்லை.

91. வினா.—திருவாதிரைப் பண்டிகை விஷயமாய் நகரத்துச் செட்டிகளைக்குறித்த சங்கதி என்ன?

விடை.—ஒரு வைசியகுலப் பெண் விஷயமாய் சிவனுக்கும் பார்வதிக்கும் பிணக்கு நேரிட்டதை திருவாதிரைப் பண்டிகையில் ஓர் சடங்கை மேற்படி செட்டிகள் விஷயமாய் கோயில்களில் நடத்தி வருகிறார்கள்.

தமிழ்ச் சூத்திரர் முதலானவர்கள்.

92. வினா.—நாலாவது குலத்தவர் யார்?

விடை.—சேந்தன் திவாகரத்தில் நாம் முன் எடுத்துக்காட்டிய குலக்கிரம அட்டவணைப்படிக்கும், மற்ற நூல்களிலிருந்து நாம் எடுத்துக்காட்டியதும், இனிமேல் எடுத்துக்காட்டுவதுமான ஆதாரங்களின்படிக்கும் சூத்திரர் நாலாவது குலத்தவராம்.

93. வினா.—தமிழ்ச் சூத்திரர்க்குப் பூர்வ நூல்களில் வழங்கப்பட்ட வேறே பேர்களும் உண்டோ?

விடை.—முன் குலக்கிரம அட்டவணை, 33-ம் சூத்திரத்தில் சொல்லியபடி சூத்திரர்க்கு காராளர், வினைஞர், சூத்திரர், பின்னவர், சதுர்த்தர், வளமையர், வேளாளர், மண்மகள்புதல்வர், வார்த்தைத் தொழிலோர் வண்களமர், உழவர், ஏரின்வாழ்னர் என்னும் பேர்களும் உண்டு.

94. வினா.—சூத்திரர் என்னும் பதத்துக்கு மூலம் என்ன?

விடை.—சூத்திரர் என்னும் பதத்துக்கு ஏவல் செய்வோர் என்று பொருளாம்.

திவாகரம், 12-வது தொகுதி, 155-வது சூத்திரம்.

வேளாளர் பத்துவகை இயல்புகள்.

"ஆணைவழி நிற்றல், அழிந்தோரை நிறுத்தல்
கைக்கடனாற்றல், கசிவகைத் துண்மை
ஒக்கல்போற்றல், ஓவா முயற்சி
மன்னிறை தருமல், ஒற்றுமை கோடல்
விருந்தோம்பல், திருந்திய வொழுக்கம்
வேளாண்மை மாந்தர்க் கோரீரைந்தே."

மேற்படி சூத்திரத்தில் "ஆணைவழி நிற்றல்" என்னும் தொழில் முதலாவது நிற்கிறது. "ஆணை" என்பதற்கு "ஏவல்" என்றர்த்தம். "வழி" என்பது ஏழாம் வேற்றுமை உருபு. "ஆணைவழி நிற்றல்" என்பதற்கு குறிக்கப்பட்ட ஏவல் தொழிலைக் கடவாதிருத்தல் என்றர்த்தம். இதினாலும் வெள்ளாளர் சூத்திரர் என விளங்கும்.

95. வினா.—சூத்திரர் உற்பத்தி என்ன ?

விடை.—6-ம் வினாவிற்கு விடை கூறியவிடத்து நாம் முன் சொன்னபடி மனிதரில் பெருங் கூட்டங்கள் உண்டாகி, அக்கூட்டங்களுக்குத் தலைவர்களும் உண்டானபோது, அந்தத் தலைவர்கள் ஒருவரோடொருவர் போர்செய்து, சிறைபிடித்தார்கள். அந்தப்படி சிறைபிடிக்கப்பட்டவர்களை முதல் மூன்று குலத்தவரைப்போல் மேன்மையாக மதியாமல் அந்த மூன்று குலத்தவர்க்கும் வேலைக்காரராக இருக்கும்படி வைத்தார்கள். அப்படி வைக்கப்பட்டவர்களே சூத்திரர். இதே சூத்திரர் உற்பத்தியாம்.

"இந்துதேசச் சரித்திரம்" என்னும் நூல் எழுதியவரும், கவர்ண்மெண்டு சிவில் செர்விஸ் உத்தியோகம் பார்த்தவருமான என்ரி மாரிஸ் எஸ்கொயர் (Henry Morris Esq.)என்பவர் மேற்படி இந்துதேசச் சரித்திரம், 5-ம் பக்கம், 23-ம் வரிமுதல் "The Hindoos were then divided into four castes, the Brahmins, the Kshatryas, the Vaishyas and the Sudras. The first three were called the twice born classes, and had particular privileges allowed them; the last appear to have been the descendants of a conquered and an enslaved people என்று எழுதியிருக்கிறார்.

மேற்படி இங்கிலீஷ் வாக்கியங்களுக்கு மொழிபெயர்ப்பு எப்படியென்றால்;—

அப்பொழுது இந்துக்கள் பிராமணர் என்றும் க்ஷத்திரியரென்றும், வைசியரென்றும், சூத்திரரென்றும் நாலு ஜாதிகளாக வகுக்கப்பட்டார்கள். முதல் மூன்று ஜாதிகள் இருபிறப்பாளரேன்று சொல்லப்பட்டார்கள். அவர்கள் விசேஷித்த சலாக்கியங்களே அடைந்தார்கள். கடைசிச்சாதியாரோ செயிக்கப்பட்டு, அடிமைகளாக்கப்பட்ட ஜனங்களின் வம்சத்தாராக இருந்தார்கள் என்று காணப்படுகிருர்கள்" என்பதாம்.

இதனுல் சூத்திரரின் உற்பத்தியை அறிந்து கொள்ளலாம்.

அன்றியும், தமிழ் நாட்டில் சாதாரண சனங்களால் வழங்கப்படுகிற ஓர் சலோகமாவது,

"கள்ளர் மறவர் கறுத்த அகம்படியர்
மெள்ள மெள்ளவந்து வெள்ளாளர் ஆனுரே"

மேற்படி சுலோகத்தினுல் தென் இந்தியாவின் பூர்வ குடிகள் (Aborigines) ஆகிய கள்ளரும், மறவரும், அகம்படியரும், வெள்ளாளர் என்னும் கூட்டத்தில் சேர்ந்தார்களென்று விளங்குகிறது. இதினுலும் சூத்திரருடைய உற்பத்தியை அறிந்துகொள்ளலாம்.

வேளாளன் என்பது "வேள்" என்றும், "ஆளன்" என்றும் இரண்டு வார்த்தைகள் ஒன்றுசேர்ந்த பகுபதமாம். "வேள்" என்பதற்கு "மண்" என்றும், ஆளன் என்பதற்குக் "காத்தவன்" என்றும் அர்த்தமாம்.

வேளாளன் என்பதற்கு "மண்ணைக்காத்தவன்" என்றர்த்தமாம்.

வெள்ளாளர்க்குக் குறிக்கப்பட்ட ஆறு தொழில்களில், மண்ணைக்காத்தல், அதாவது ஏருழலானது முதல் தொழிலானபடியால் அவர்களுக்கு வேளாளர் என்னும் பேருண்டாயிற்று.

"உழவர்" என்பதற்கு சதுர் அகராதியில் "வேளாளர் The fourth, or Vellala caste" என்று சொல்லியிருக்கிறது. அதற்கு வெள்ளாளர் நாலாவது ஜாதி என்றர்த்தம்.

இதினுல் சூத்திரராகிய வெள்ளாளருடைய உற்பத்தியை அறியலாம்.

96. விஞ.—வெள்ளாளர் சூத்திர குலத்தவர் என்பதற்கு நூல்சாட்சிகள் எவை ?

விடை.—வெள்ளாளர் சூத்திர குலத்தவரே என்பதற்கு (1) முன் குல க்கிரம அட்டவணையில் குறித்தபடி திவாகரம், மக்கட்பெயர்த் தொகுதி, 33-வது சூத்திரம்.

"வினைஞர், **சூத்திரர்**, பின்னவர், **சதுர்த்தர்**,
வளமையர், **வேளாளர்** மண்மகள் புதல்வர்
வார்த்தைத் தொழிலோர் வண்களமர் **உழவர்**
ஏர்த்த வரின் வாழ்நர் **காராளர்**"

(2) முன் 11-வது வினுவிற்கு விடைகூறியபடி, பாகவதம், மைத்தி ரேயர் விதுரற்குத் தத்துவம் உரைத்த அத்தியாயம், 20 வது கவி.

"மூன்னுறு முகத்தில் மூந்நூலர் வந்தனர்
மன்னவர் வாகுவில் வந்து மன்னினுர்
பொன்னுறு வணிகர்பூந் தொடையிற் போந்தனர்
பின்னவர் தாளினில் பின்னர்த் தோன்றினுர்."

(3) முன் 11-வது வினுவிற்கு விடை கூறியவிடத்து வந்ததுபோல் சாதிநூல் மனுவுற்பத்தி.

"அன்னவூர்தி முகத்தினில் அந்தணர்
துன்னுதோளில் சுடர்முடி மன்னவர்
நன்னயம்பெறும் ஊருவில் **நாய்கர்**, தாள்
தன்னில் **சூத்திரர்** தாமுதித்தாரரோ.'

(4) முன் 11-வது வினுவிற்குரிய விடையிலுள்ளபடி கூர்மபுராணம், வருணுசிரதன்ம முரைத்த அத்தியாயம் 1 வது, 2 வது அடிகள்.

"வேதியர் முகத்தில் வேந்தர் விறல் கெழுத்துணைத்
[தோள்வெற்பில்
தீதறு **வணிகர்** செம்பொற்குறங்கினில் **சதுர்த்தர்**செய்ய."

(5) முன் 34-வது வினுவிற்கு விடையில் கூறியபடி காசிகாண்டம், சிவசன்மாவை யமன் எதிர்கொண்ட அத்தியாயம், 2 வது, 3 வது அடிகள்.

படியில்வாழ் **வணிகர்** முன்னம் வெருவாது பழிகூர்ந்
தடிகணீட்டிய **சதுர்த்தனை** யதோ முகமெனும்."

(6) முன் 411-வது விஞவிற்கு விடையிற் கூறியபடி கம்பராமாயணம், உயுத்தகாண்டம், திருவபிஷேகப்படலம், 35-வது கவி, 1-வது அடி.

"அந்தணர் **வணிகர் வேளாண்மரபினர்** ராலி நாட்டு.'

(7) 411-வது விஞவிற்கு விடையிற் கூறியபடி பஞ்சபட்சி சாஸ்திரம், 7 ம் அதி, 3 வது கவி, முதல் 3 அடிகள்.

வல்லூறு பார்ப்பான் வளராந்தை தான் **வணிகன்**
செல்லாரும் காகம் செகத்தரசன்—நல்லாய் கேள்
கோழியாம் **வேளாளன்** கூறுமயில் **சண்டாளன்.'**

4 வது கவி, 2 வது, 3 வது அடிகள்.

"துன்னுமொழிக்காகம் துலே **வணிகன்**—மன்னும்
உலகத்தோன் கோழியே ஓதுங்கால் மஞ்ஞை.'

(8) தொல்காப்பியம், மரபியல், 78, 81-வது சூத்திரங்கள்.

"**வைசியன்** பெறுமே வாணிக வாழ்க்கை."
"**வேளாண்மாந்தர்**க்குழுதூணல்ல
தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி.'

(9) மனையடி சாஸ்திரம், 19 ம் பக்கம், 55 ம் கவி.

"முழக்கோல் மரங்கள்,"

"மூங்கினிற் செய்த கோல்கள் முதுமறை வேதியர்க்காம்
தீங்கிலா ஆச்சாவின்கோல் திறைகொளும் அரசர்க்காகும்
பாங்குற தேக்குவின்கோல் பகர்ந்திடும் **வணிகர்**க்காகும்
வேங்கையிற் செய்தகோல்கள் **வேளாளர்க்** குரியதாமே."

மேற்படி நூல், 30-ம்பக்கம், 96-ம் கவி.

"மாமரம் தேவர்க்காகும் மறையவர் வேம்பதாகும்
கோமகன் தேக்கதாகும் குணமுள்ள இலுப்பை **செட்டி**
பூமகன் வேங்கையாகும் பெருசாதி நான்கினுக்கும்
தாமமாம் வல்லிமேவும் தருமயன் சாற்றும்வாறே."

(10) இலக்கண விளக்கம், பாட்டியல்,
166, 167-வது சூத்திரங்கள்.

"வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை
வேளான் மாந்தர்க் குழுதூணல்ல
தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி."

(11) பழனி ஸ்தல புராணம், 17-வது வசுமந்தன் சருக்கம்,

1-வது கவி.

"அங்காரம் வளர்ப்போர் முதலிய மூவர்க்கருளேவல்
வெங்கலி தீரப்புவிதரு வேளாண்டொழில் மிக்கோன்
சங்கரிபாகன் சிறு பிறை வேணித்தலை வாழ்வின்
மங்கைத்தொல் குலவன் மண்மகள்புதல்வன் வசுமந்தன்."

24-வது கவி.

"அறுதொழிலாற்றுவேன் அன்றி மற்றொரு
சிறுதொழி லாற்றிடேன் தீமையாற்கதி
பெறுதொழில் நீத்தொரு கன்னல் பின்னவர்
உறுதொழில் கோட்டினுன் உருற்றலுற்றனன்."

(12) ஏரெழுபது, 8-ம்பாடல்.

"தொழுங்குலத்தில் பிறந்தாலென் சுடர்முடி மன்னவராகி
எழுங்குலத்தில் பிறந்தாலென் இவர்க்குப்பின் வணிகரெனும்
செழுங்குலத்தில் பிறந்தாலென் சிறப்புடைய ராணுலென்
உழுங்குலத்தில் பிறந்தாரே உலகுய்யப் பிறந்தாரே."

10-ம் பாடல்.

"வேதியர்த முயர்குலமும் விறல்வேந்தர் பெருங்குலமும்
நீதிவளம் படைத்துடைய நிதிவணிகர் தங்குலமும்
சாதிவளம் படைத்துடைய தாயனைய காராளர்
கோதில் குலந்தனக்கு நிகருண்டாகிற் கூறீரே."

22-ம் பாடல்.

"மட்டிருக்கும் திருமாது மகிழ்ந்திருக்கும் புவிமாது
முட்டிருக்கும் சயமாது முன்னிருப்பார் முதுநிலத்து
விட்டிருக்கும் கலிதொலைத்து **வேளாளர்** தடக்கையினிற்
கொட்டிருக்க ஒரு நாளும் குறையிருக்கமாட்டாதே."

24-ம் பாடல்.

"அடுத்திறக்கிப் பெருங்கூடை யளவுபடவே எருவை
எடுத்திறக்கித் தலைமேலே கொண்டவர் தாமிடையிடையே
கொடுத்திறக்கி நிலமகளை கும்பிட்டு வணங்காரேற்
படுத்திறக்கித் திரிவார்தம் பழிமறுக்கமாட்டாரே."

25-ம் பாடல்.

"வெறுப்பதெல்லாம் பொய்யினையே **வேளாளர்** மெய்யாக
ஒறுப்பதெல்லாம் கலியினையே உள்ளத்தால் வெள்ளத்தால்
செறுப்பதெல்லாம் புல்லினையே செய்யின் வளமறிந்தறிந்து
மறிப்பதெல்லாம் சேற்றினையேவளம்படுதற் பொருட்டாயே"

31-ம் பாடல்.

"மாணிக்க முதலாய மணியழுத்தித் தொழில் சமைத்த
ஆணிப்பொன் முடிவேந்த ரணிமுடியு முடியாமோ
பேணிப்பைங் கோலமுடி **பெருக்காளர்** சுமவாரேற்
சேணுக்குத் திசைப்புறத்துஞ் செங்கோன்மை செல்லாதே."

(13) கல்லாடகம், வெண்பா.

"அந்தணர்க்கு நாலாறும் அரசர்க் கிருபதாம்
இந்தவனி **வாணிகருக்** கெண்ணிரண்டாம்—முந்துவிரல்
வேளாளர்க்கீராறும் வெள்ளோலை வேயனைத்
தோழா யறி நீ தொகுத்து."

(14) திவாகரம், 12-வது தொகுதி, 208-வது சூத்திரம்.

"**பார்ப்பார் அரசர் வணிகர் வேளாளரொன்**
நாற்குலத்தவரூஉம் தங்குல நடையின்

உயர்ந்த ஆணினும் இழிந்த பெண்ணினும்
பிறந்த கூட்டத்தவர் அநுலோமர்."

மேற்சொல்லியபடி சேந்தன் திவாகரத்தில் வெள்ளாளர் முதல் மூன்று குலத்தவரைச் சேர்ந்தவர்களல்ல; வெள்ளாளர் நாலாவது குலமாகிய சூத்திர குலத்தவரென்றும்,

பாகவதத்தில் அந்தணர், மன்னவர், வணிகராகிய முன்னவர் குலத்தில் வெள்ளாளர் சேர்ந்தவர்களல்ல, வெள்ளாளர் பின்னவர் குலமென்றும்

சாதிநூலில் அந்தணர் மன்னவர் நாய்கர்முதல் மூன்று குலத்தவர்; நாலாவது குலத்தவரோ சூத்திரர் என்றும்,

கூர்மபுராணத்தில், வேதியர், வேந்தர், வணிகர் முதல் மூன்று குலத்தவர்; சதுர்த்தரோ நாலாவது குலத்தவர் என்றும்,

காசிகாண்டத்தில் வணிகர் மூன்றுவது குலம், சதுர்த்தனுகிய சூத்திரன் நாலாவது குலம் என்றும்,

கம்பராமாயணத்தில், வணிகர் மூன்றுவது குலம் வேளாண்மாபினர் நாலாவது குலம் என்றும்,

பஞ்ச பட்சி சாஸ்திரத்தில் வணிகன் மூன்றுவது குலம் உலகத்தோனுகிய வெள்ளாளன் நாலாவது குலம், இழிகுலத்தோனுகிய சண்டாளன் ஐந்தாம் குலமென்றும் தொல்காப்பியத்தில், வைசியர் மூன்றும் குலம், வேளான் மாந்தர் நாலாம் குலமென்றும், மனையடி சாஸ்திரத்தில், வணிகனுகிய செட்டி மூன்றும் குலம், வெள்ளாளனுகிய பூமகன் நாலாவது குலம் என்றும்,

இலக்கண விளக்கத்தில், வைசியன் மூன்றுவது குவம், வேளாண் மாந்தர் நாலாம் குலம் என்றும்,

பழனிஸ்தலப்புராணத்தில், முதல் மூவருக்கும் ஏவல்செய்பவன், வேளாண் தொழில் செய்கிறவன், மண்மகள் புதல்வன், பின்னவன், ஆகிய நாலு வகையாகச் சொல்லப்பட்டவன் வேளாளன் என்றும்,

ஏரெழுபதில் வைசியன் மூன்றும் குலம், வெள்ளாளனே உழுங்குலத்தவன், காராளன், எரு அள்ளி கூடைகளில் சுமக்கவேண்டியவன், சேற்றை வளப்படுத்த வேண்டியவன், பெருக்காளன், நெல்பயிர் முடி சுமக்க வேண்டியவன் என்றும்,

"திவாகரத்தில், பார்ப்பார், அரசர், வணிகர், வேளாளர் என்ற நாலு குலமும், அதில் வெள்ளாளர் சூத்திரர் என்றும்"

"கல்லாடகத்தில், கணமுறைக்கையில் வணிகனுக்கு பதினாறு விரலும், வெள்ளாளனுக்கு பன்னிரண்டும் விடவேண்டியது என்றும்" சொல்லியிருக்கிறது.

மேற்படி நூல்களின் சாட்சிப்பிரகாரம் வெள்ளாளர் சூத்திரர் என்று அறியலாம்.

97. வினா —சூத்திரராகிய வேள்ளாளரின் தொழில்கள் எவை ?

விடை.—சூத்திரராகிய வெள்ளாளரின் தொழில்களைப்பற்றி முன் 11-ம் வினாவுக்குக்கூறிய விடையிலும், 55-ம் வினாவுக்குக்கூறிய விடையிலும் சொல்லியிருக்கிறோம். அவைகள் ஆறு, அதாவது (1) ஏருழல், (2) பசுக்காத்தல், (3) பொருளீட்டல், (4)குயிலுவம், (5) காருவினை (6) முதல் மூவர்க்கும் ஏவல் செய்தல் என்பவைகளே.

மநுநூல், 1-வது அத்தியாயம்,

91-வது சுலோகம்,

"சூத்திரனுக்கு முதலீ மூன்று வர்ணத்தாருக்கும் பொறுமையின்றி பணிசெய்வதை முக்கியமான தர்மமாய் ஏற்படுத்தினார்" என்பதே.

சூத்திரராகிய வெள்ளாளருடைய தொழில்களைக்குறித்து முன் விபரித்திருக்கிறபடியினால் இவ்விடத்தில் சொல்லாமல் விடுகிறோம்,

98. வினா.—வேள்ளாளரின் குலப்பட்டபேர்கள் எவை ?

விடை.—பிள்ளை என்பது வெள்ளாளரின் குலப்பட்டப் பேராம். வைசியர் பிள்ளைப்பட்டத்தை வெறுக்கிறார்கள்.

முன் திவாகரம், மக்கட்பேர்த்தொகுதி, 33-ம் சூத்திரத்தில், வெள்ளாளர்க்கு மண்மகள் புதல்வர் என்றும், மனையடிசாஸ்திரத்தில் பூமகன் என்றும், பழனிஸ்தலப்புராணத்தில், மண்மகள் புதல்வன் என்றும் சொல்லியிருக்கிறபடி வெள்ளாளன் பூமிக்குப்பிள்ளையானபடியால் அவனுக்கு பிள்ளைபட்டமுண்டாகக் காரணமாயிற்று.

சேலம், கோயம்புத்தூர், மதுரைச் சில்லாவின் வடமேல்பாகம் ஆகிய இடங்களில் வெள்ளாளர் மிகுதிரளாக இருக்கிறார்கள். அவர்களுக்குக் கவுண்டர் என்பது குலப்பட்டப்பெயர்.

முன் 45-ம் வினுவுக்கு விடை கூறியவிடத்தில், 14-ம் இலக்கத்தின் கீழும், 53-ம் வினுவுக்குக் கூறிய விடையிலும் சொல்லியபடி, தில்லைநாயக பாண்டியன் ஆண்ட தொண்டைநாடு என்னும் இடத்திலிருந்து மதுரைக்கு வந்த அரியநாயகம் என்பவனுடைய வம்சத்தாருக்கு அரியநாயகம் என்றபேருடன் "முதலி" என்னும் பேரும் சொல்லப்பட்டபடியே முதலி என்பதும் குலப்பட்டப் பெயராக வழங்கப்படுகிறது. "முதலி" என்னும் பேருக்கு நூலாதாரமில்லை.

சிலர் தஞ்சாவூர் ஜில்லாவைச்சேர்ந்த காரைக்கால் என்னும் ஊரிலிருந்து பாண்டிய நாட்டுக்குள்ளே பிரவேசித்தார்கள். அவர்கள் தங்களைக் காரைக்கால் வெள்ளாளர் என்றார்கள். ஆகையால் காரைக்கால் வெள்ளாளர் என்பதும் ஓர் பிரிவாயிற்று அவர்களுக்குப்பிள்ளை என்பது குலப்பட்டப் பெயர்.

பாண்டியநாட்டிலிருந்து சில வெள்ளாளர் "கவண்டர்" என்ற குலப்பட்டப்பெயருடைய கொங்குநாட்டில் போய் வாசம்பண்ணினபோது கொங்கு வெள்ளாளர் அவர்களை பாண்டியநாட்டு வெள்ளாளர் என்றார்கள். ஆகையால் பாண்டிய வெள்ளாளர் என்பதும் ஓர் பிரிவாயிற்று. அவர்களுக்குப் பிள்ளை என்பது குலப்பட்டப்பெயர்.

சோழநாட்டிலிருந்து சில வெள்ளாளர் கொங்குநாட்டில் போய் வாசம் பண்ணினர்கள். கொங்க வெள்ளாளர் அவர்களை சோழநாட்டு வெள்ளாளர் என்றார்கள். ஆகையால் சோழிய வெள்ளாளர் என்பதும் ஓர் பிரிவாயிற்று.

கொங்கநாவிதர், கொங்கவண்ணார், சோழியப்பறையர், சொங்கப்பறையர், தெற்கத்துப்பறையர், சோழியப்பிராமணர் முதலான பேர்கள் இடத்தால் வந்த பேர்களானதுபோல வெள்ளாளர்க்குள்ளும் உண்டு.

99. வினு.—சைவர் என்பது என்ன? அது ஒரு குலத்தவர்க்குப் பெயரா?

விடை.—சைவர் என்பது ஒரு குலத்தவர்க்குப் பெயரல்ல. சைவர் என்பது ஒரு மதத்தை, அல்லது சமயத்தை அனுசரித்தவர்களுக்குப் பெயர்.

"சைவசமயவிளக்க வினுவிடை" என்னும் புஸ்தகத்தைத் திறந்து ஒருவர் வாசிக்க ஆரம்பிப்பாரானல் 1-வது வினு "சைவம் என்பதென்ன?" என்பதையே அவர் முதலாவது வாசிப்பார். அதற்கு அங்கேதானே "விடை சிவசம்பந்தமே சைவம்" என்றும் அவர் வாசிப்பார்.

மேற்படி புஸ்தகத்தில் சொல்லிய விஞவிஞலும், அதற்குக்கூறிய விடையிஞலும் சைவம் என்பது சிவசம்பந்தம் என்பது தெளிவாயிருக்கிறது.

வைஷ்ணவம் + ஆள், அதாவது வைஷ்ணவாள், அதாவது விஷ்ணுவையுடையவன், விஷ்ணுவின் சம்பந்தமானவன் எனவும், மகமதியாள் என்பது, மகமது + ஆள், அதாவது மகமதுவையுடையவன், மகமது சம்பந்தமானவன் எனவும், கிறிஸ்தவாள், அதாவது கிறிஸ்துவையுடையவன், அல்லது கிறிஸ்த சம்பந்தமானவன், கிறிஸ்துவின் மேன்மையையுடையவன் எனவும் பொருளாம்.

அந்தப்படியே சைவம் + ஆள், அதாவது சைவாள், பன்மையில் சைவர், அதாவது சிவனையுடையவர், அல்லது சிவசம்பந்தமுடையவர், சிவமேன்மையையுடையவர் எனவும் பொருளாம்.

பெஸ்கி, அதாவது வீரமாமுனிவர் சதுர அகராதி Classical Tamil and English Dictionary) யில் சைவம் என்பதற்கு சிவசமயம், The Saiva religion என்று அர்த்தம் சொல்லியிருக்கிறது. சைவர் என்பதற்கு சிவ சமயத்தோர், The Saivites, followers of Siva என்று அர்த்தம் சொல்லியிருக்கிறது.

சைவாள், வைஷ்ணவாள், கிறிஸ்தவாள், சமணுள், மகமதியாள் என்னும் பதங்கள் குலத்தைக்குறியாமல் மார்க்கத்தையே குறிக்கும்.

சாதாரண வழக்கத்தில் அவன் சைவப்பிராமணஞ? வைஷ்ணவப் பிராமணஞ? என்று விசாரிக்கிறேம். அதிஞல் ஒருவனின் மதத்தை, அதாவது மார்க்கத்தை விசாரிக்கிறேமேயல்லாமல், குலத்தையறிய விரும்புகிறதில்லை.

இங்கிலீஷ் கவர்ண்மெண்டார் குடிமதிப்பெடுத்தபோது, மேற்படி குடிமதிப்பில் ஒருவனுடைய மார்க்கம் தெரியும்படி நீ சைவஞ? வைஷ்ணவஞ? என்று கேட்டுப் பதிவு செய்தார்கள், அது சரியே.

அப்படியிருக்க, குறளில் மாமிசம், அதாவது புலால் சாப்பிடக்கூடாதென்று சொல்லியிருக்கிறதென்றும், அந்தப்படி மாமிசம் சாப்பிடாமலிருக்கிறவர்களுக்கு சைவர் என்று பேர் எனவும் சிலர் சொல்லுகிறபடியால் அதைப்பற்றிக் கொஞ்சம் விசாரிப்போம்.

குறள் ஆனது அறப்பால், பொருட்பால், காமப்பால் என முப்பாலில் அடங்கும்.

அறப்பாலானது இல்லறவியல், துறவறவியல் என இரண்டு பங்குள்ளது. அவைகளில் இல்லறவியலானது 5-ம் அதிகாரமுதல் 24-ம் அதிகாரம்வரையில் அடங்கும். துறவறவியலானது விரதம், ஞானம் என இரண்டு பிரிவுள்ளது. அவைகளில் விரதமானது 25-ம் அதிகாரமுதல் 33-ம் அதிகாரம் வரைக்கும் அடங்கும். அவை முறையே, அருளுடைமை, புலால்மறுத்தல், தவம், கூடாவொழுக்கம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னுசெய்யாமை, கோல்லாமை என்பவையாம்.

மேற்சொல்லியவைகளில் புலால் மறுத்தல், மாமிசம் தின்னலை மறுத்தலையும், கொல்லாமை, அதாவது புல், மரமுதலான ஓரறிவுயிர்களையும், சிப்பி, சங்கு முதலான ஈரறிவுயிர்களையும், கறையான் முதலான மூவறிவுயிர்களையும் வண்டு முதலான நாலறிவுயிர்களையும் மிருகம் முதலான ஐயறிவுயிர்களையும் கொல்லாமையுமாம்.

துறவி புல்லையும் கொல்ல விரும்பமாட்டான்; சூத்திரன் புல்லைக்கொலாவிட்டால், அல்லது புழுக்களைக்கொல்லாவிட்டால் எப்படிப்பயிரிடுவான்? ஆதலால் புலால் மறுத்தல், கொல்லாமை என்னும் இரண்டும் துறவிக்கே சம்பந்தப்பட்டதென்று அதிகார முறையாலும் அறியலாம்.

அன்றியும் 28-ம் அதிகாரத்தில், "கூடாவொழுக்கம், அதாவது தாம் விட்ட காம இன்பத்தை மறுபடியும் விரும்பாமை" என்று அதிகாரத்தின் துவக்கத்தில் சொல்லியதால் அந்த அதிகாரம் இல்லறக்காரனுக்குச் சம்பந்தப்படக்கூடாதென்றும், துறவிக்கே சம்பந்தப்பட்டதென்றும், ஆகையால் புத்திமான்கள் திருவள்ளுவரின் கருத்தை அதிகார முறையால் அறிந்து அர்த்தம்பண்ணவேண்டும் என்றும் அறியவேண்டும்.

மநுநூல், 5-வது அத்தியாயம்,

37-வது சுலோக மொழி பெயர்ப்பு.

"ஒரு பிராமணன் மாம்சம் புசிக்கவேண்டுமென்று தன்னைக் கேட்டுக்கொள்ளும்போதும், விதிப்படி சிரார்த்தத்தில் வரிக்கப்பட்டபோதும், வேறே ஆகாரமில்லாமல் மாம்சம் புசிக்காவிட்டால் உயிர் போகும்படி நேரிட்ட சமயத்திலும் மந்திரத்தினால் கொல்லப்பட்ட மிருகாதிகளின் மாம்சத்தைப்புசிக்கலாம்".

28-வது சுலோக மொழி பெயர்ப்பு.

"ஏனென்றால் பிரமன் இவ்வுலகமுழுதும் சீவனுக்காதாரமாக உண்டுபண்ணினார். ஆகையால் நெல் முதலான தாபரமும், மிருக முதலான சங்கமும் சீவனுக்காதாரமாகவே இருக்கின்றன"

29-வது சுலோக மொழி பெயர்ப்பு.

"எப்படியென்றால் மான் முதலான சரங்களுக்குப் புல் முதலான அசரங்களும் புலி முதலான கோரைப்பல்லுள்ளவைகளுக்கு மான முதலான கோரைப்பல்லில்லாதவைகளும் யானிடர் முதலான கையுள்ளவர்களுக்கு மீன் முதலான கையில்லாதவைகளும், சிங்கம் முதலான வீரியமுள்ளவைகளுக்கு யானை முதலான பயமுள்ளவைகளும் ஆகாரமாயிருக்கின்றன.

மேற்படி சுலோகங்களினால் மனுஷர் மாமிசம் புசிக்கலாம் என்பது தெரிகிறதல்லவா? ஆகையால் சைவர் என்பது ஒரு குலப்பெயரல்ல, சிவ சம்பந்தமுடைய சகல குலத்தவர்க்கும் பொதுவான பெயராம்.

மாமிசம் சாப்பிடவேண்டாமென்று ஒரு நூலாசிரியன் எழுதும்போது அந்நூலாசிரியன் பூர்வகாலத்தில் சத்திரியராகிய அரசர் எழுதிய நூல்களுக்கு ஒத்து எழுதியிருக்கிறானா? என்று கவனிக்கவேண்டும். சமணரும், சாதிக் கலப்பில் பிறந்தவர்களும் குலாசாரத்தையும், மாமிசம் புசிப்பதையும் விலக்கிப்போடும்படி பூர்வ ஒழுங்குக்கு விரோதமாகப் பிற்காலத்தில் நூல் எழுதியிருந்தால் அது சரியல்லவென்றறியவேண்டும்.

100. வினு.—பண்டாரங்கள் யார்?

விடை.—பண்டாரங்கள் சூத்திர குலத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களைக்குறித்து முன் 66-ம் வினுவுக்குக் கூறிய விடையில் விபரித்திருக்கிறோம். ஆகையால் அவர்களைப்பற்றி இங்கே பேசாமல் விடுகிறோம்.

101. வினு.—சூத்திரராகிய வெள்ளாளர் முதலானவர்கள் கல்வி கற்றுக்கொண்டால் அதினால் அவர்கள் உயர்ந்த குலமாவார்களா?

விடை.—சூத்திரர் கல்வி கற்றுக்கொண்டால் அதினால் அவர்கள் உயர்ந்த குலமாகமாட்டார்கள்.

ஆதிகாலத்திலே குலாசாரத்தைக் கவனித்துவரவேண்டியது அரசருடைய கடமை என்று 10-ம் வினுவிற்கு விடை கூறியவிடத்து விபரித்தோம். கல்வியினால் குலம் மாறலாம் என்று பூர்வ ஏற்பாடிருந்தால் அப்போதே இந்து தேசத்திலிருந்து குலாசாரங்கள் எடுபட்டிருக்குமே, ஆனால் அப்படி இல்லை.

அதிவீரராம பாண்டியன் இயற்றிய வெற்றி வேற்கை,

"வேதியர்க்கழகு வேதமும் ஒழுக்கமும்
மன்னவர்க்கழகு செங்கோல் முறைமை
வைசியர்க்கழகு வளர் பொருளீட்டல்
உழவர்க்கழகிங் குழுதூண் விரும்பல்."

"நாற்பால் குலத்து மேற்பா லொருவன்
கற்றிலனயிற் கீழிருப்பவனே."

மேற்படி சூத்திரங்களில், வேதியராகிய பிராமணர், மன்னவராகிய அரசர், வைசியர், உழவராகிய வெள்ளாளர் என்னும் நாலு குலத்தவர்க்கும் அவசியமான தொழில்களைச் சொன்னபின் உயர்ந்த சாதிகளாகிய வேதியர், மன்னவர், வைசியர் ஆகிய மூவரும் கல்வி கற்கவேண்டும் என்றும், அவர்கள் கல்வி கற்காவிட்டால் அவர்கள் கீழிருப்பவராகிய சூத்திரர்க்கொப்ப மதிக்கப்படுவார்களென்றும் சொல்லியிருக்கிறது.

சூத்திரன் ஒருவன் கல்வி கற்றுக்கொண்டால் அவன் உயர்ந்த குலத்திலிருக்கும்படியாக மதிக்கப்படுவான் என்று சொல்லவே இல்லை.

குறிப்பு.—முதல் மூன்று குலத்தவர்களில் ஒருவன் கல்வி கற்றவனுக இராவிட்டால் மதிப்புக்குக் குறைவுடையவனுக இருந்தாலும் தன் குலத்திலிருந்து தள்ளப்பட்டுப்போகமாட்டான். பிறகுலத்தில் கலந்ததினுல் பிறந்தால் மாத்திரம் தள்ளப்பட்டுப்போவான் (15-ம் வினவுக்குக் கூறிய விடையை இதினேடு சேர்த்து வாசித்தறியவேண்டும்).

தாழ்ந்த குலத்தவர் கல்வி கற்கும் விஷயத்தில் உயர்ந்த குலத்தவராகலாம், அதாவது சான்றோரென மதிக்கப்படலாம் என்பது சூத்திரருடைய நோக்கம். அந்தப்படி கல்வியினுல் மேன்மையாக விளங்கிய பறையர் குலத்தவரான திருவள்ளுவர்க்கு மதுரைத் தமிழ்ச் சங்கப்புலவரிடம் சமமான ஆசனம் கிடைக்கும்படி சங்கப்புலவர்களும் பாண்டியர்களும் சம்மதித்தார்களா?

மதுரைச்சில்லா விருத்தாந்தம், 150-ம் பக்கம்,

14-ம் வரிமுதல்,

"(சென்னபட்டணத்திலுள்ள) மைலாப்பூரிலே இருந்த திருவள்ளுவனென்கிற ஒரு வள்ளுவப் பறையன் அந்த சங்கப்புலவர்கள் வீற்றிருந்த சங்கப்பலகையில் தானும் வீற்றிருந்து, அந்த வித்வசிரோமணிகளின் கல்விக் கர்வத்தை அடக்க விரும்பி குறள் என்னும் நூலைச் செய்து, மகா சங்கத்தாரிடம் சென்று, அந்தக் குறள் நூலை அரங்கேற்றியபோது திருவள்ளுவனுக்கு இடங்கோடாமல் மேற்படி நூலுக்கு மாத்திரம் இடங்கொடுத்தார்கள்" என்று சொல்லியிருக்கிறது.

ஆகையால் சூத்திரர் கல்வியினுல் மேன்மக்களிடத்தில் சமமரியாதை கிடைக்குமென்று எண்ணிக்கொள்வது அந்தப் பூர்வகாலத்து ஏற்பாட்டுக்கு ஒத்ததல்ல.

ஒரு சாதாரணமான மனுஷன் தன்னைப்போலான மற்றொருவனைப் பார்த்து "நீ மகாராசனுயிரு" என்று சொன்னுல், அப்படிச் சொல்லப்பட்ட மனுஷன் தனக்குச் சொன்ன மனுஷனுலே மகாராசனுவானு? ஆகமாட்டானே. ஆனுல் பெரிய காடாளும் அரசன் மற்றொருவனைப்பார்த்து "நீ மகாராசனுக இரு" என்று சொன்னுல், அப்படிச் சொன்ன அரசன் தன் நாடுகளில் ஒரு நாட்டை அந்த மனிதனுக்குக் கொடுப்பதினுலே அவனை மகாராசனுக்கலாம். அதுபோல் கல்விப் பாத்தியமில்லாத ஒருவன் கல்வி கற்றுக்கொண்டு அதினுல் பிறரை வாழ்த்தி, நீங்கள் சான்ருேராக இருங்கள் என்ருல் அந்தப்படி வாழ்த்தப்பட்டவர்கள் சான்ருேராவார்களா? சான்ருேராகமாட்டார்கள்.

பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன், சண்டாளன் இவ்வைந்துபேரையும் நிறுத்தி, அவர்களிடத்திலே அதிகாரமுள்ள ஒருவன் "குலாசாரமிருக்கிறது நல்லதா? குலாசாரத்தைக் குலைத்துவிடுகிறது நல்லதா?" என்று கேட்டால், பிராமணன் முதலான நாலுபேர்களும் வாயைத் திறந்து என்னசொல்லுவார்கள்? குலாசாரம் வேண்டாம் என்பார்களா? சண்டாளனே உடனே சந்தோஷத்தோடே ஆரவாரித்து, குலாசாரமே வேண்டாம், அதைக் குலைத்துப் போடுங்கள் என்பானல்லவா? அதுபோலவே சூத்திரர் பூர்வநூலுக்கு விரோதமாக தங்களுடைய இஷ்டப்படி கல்வியினுல் உயர்ந்த குலமாகலாம் என்பார்கள். ஆனுலும் கல்வியினுல் சூத்திரர் உயர்ந்த குலமாகவேமாட்டார்கள்.

102. வினு.—தவசிப்பிள்ளைகள் என்பவர்கள் யார்?

விடை.—தவசிப்பிள்ளை என்பது தவசி எனவும், பிள்ளை எனவும் இரண்டு வார்த்தைகள் ஒன்றுசேர்ந்த பகுபதமாம். தவசி என்பதற்கு குரு என்றும், பிள்ளை என்பதற்கு வேலைக்காரன் என்றும் அர்த்தமாம். ஆகையால் தவசிப்பிள்ளை என்பதற்கு குருவின் வேலைக்காரன் என்று அர்த்தமாம் (யாழ்ப்பாணம் அகராதி காண்க).

103. வினு.—மநுநூலில் முதல் மூன்று குலத்தவர்க்கும் சூத்திரர்க்குமுள்ள தாரதம்மியத்தைக் குறித்துச் சொல்லியிருக்கிறதென்ன?

விடை.—மநுநூல், 10-வது அத்தியாயம், 4-வது சுலோக மொழிபெயர்ப்பு.

"நாலு வர்ணத்தார்க்குள் பிராமணன், சத்திரியன், வைசியன், இம்மூவரும் இரண்டுவிதமாகப் பிறப்பதினுல் துவிசாதிகள் என்று சொல்லப்படுகிருர்கள். சூத்திரனே பூணூல் இல்லாததினுல் ஒரே சாதியாய் இருக்கிருன்" எனச் சொல்லியிருக்கிறது.

இதினுல் முதல் மூன்று குலத்தவர்க்கும் சூத்திரர்க்குமுள்ள தாரதம்மியம் தெளிவாகத் தோன்றுகிறது.

குறிப்பு.—சகல சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் சூத்திரராகிய வெள்ளாளருக்கு உபநயனமாகிய பூணுநூல் இல்லை, பூணூலுக்கு அவர்கள் பாத்தியஸ்தரல்ல என்று சொல்லியிருக்கிறபடியே வெள்ளாளர் இப்போதும் எப்போதும் பூணூல் தரித்துக்கொள்ளாமலிருக்கிறது சரியே.

104. வினு—"வெள்ளாளரில் அநேகர் குருக்களாயிருக்கிருர்கள்" என்று வெள்ளாளர் இயல்பு நூலாசிரியர் மேற்படி நூல் 11-ம், 12-ம் பக்கங்களில் சொல்லுகிருரே, அது சரியா ?

விடை.—வெள்ளாளர் குருக்களாயிருக்கவே கூடாது. வெள்ளாளருடைய ஆறு தொழில்களில் குருக்களாயிருத்தலும் ஒரு தொழிலல்ல.

மநுநூல், 10-வது அத்தியாயம், 96 வது சுலோக மொழிபெயர்ப்பு.

"தாழ்ந்த சாதியான் பொருளாசையால் தனக்குமேலான ஜாதியினுடைய தொழிலைச் செய்தால் அப்படிப்பட்ட சூத்திரனுடைய பொருள் முழுமையும் அரசன் கிரகித்துக்கொண்டு, அவனையும் ஊரைவிட்டு ஓட்டுக" என்பதாம்.

மேற்படி சூத்திரத்தில் சூத்திரர் தங்களுக்கு அடாத குருத்தொழிலைச் செய்யக்கூடாதெனச் சொல்லியிருக்கிறது.

அப்படியிருக்க, வெள்ளாளர் இயல்புநூலாசிரியர் வெள்ளாளர் குருக்களாயிருக்கிருர்கள் என்று சாட்சி சொல்லியது வெள்ளாளரைத் தண்டிக்கச்சொல்லுகிறதுபோலிருக்கும். வெள்ளாளர் குருக்களாயிருக்கவேகூடாது.

105. வினு.—தாசிகளைக்குறித்து என்ன சொல்லலாம் ?

விடை.—இந்தத் தமிழ்நாட்டில் பிரதானமான ஆயிரத்தெட்டு சிவாலயங்களும், நூற்றெட்டு விஷ்ணு ஆலயங்களும் உண்டு. அவைகளில் தாசிகள் இல்லாத ஆலயங்கள் இல்லை. சகல குலத்தவர்களும், பலபாஷைகளைப் பேசுகிற அந்நியரும் அவர்களோடே கூடுகிறதினுலே உற்பத்தியான ஆண்கள் தங்களுக்குப் பிள்ளைப்பட்டம், முதலிப்பட்டம், பண்டாரப்பட்டம் சூட்டிக்கொண்டு திரிவதினுலும் சூத்திரக்கூட்டத்தோடே சேர்கிறதினுலும் சூத்திரருடைய தொகை அதிகம் எனத் தோன்றுகிறது. "மதுரைஜில்லா வைபவசூசனை" நூலாசிரியர் தாம் நாம் முன்சொன்ன காரியத்தை உணராதபடியால், மதுரை ஜில்லாவில் சூத்திரர் தொகை மிகவும் அதிகம் என்று ஆச்சரியத்தோடே சொல்லுகிருர்.

தற்காலத்தில் அந்தஸ்துள்ள சர்க்கார் உத்தியோகஸ்கர் தாசிகளை வைத்திருக்கிறதினலே தாசிகளின் பிள்ளைகள் அவர்களுடைய தயவைப் பெற்று, கவர்ண்மெண்டு உத்தியோகங்களிலே மிகுதியாக அமர்ந்திருக்கிருர்கள்.

106. விஞ.—வெள்ளாளனை பூவைசியர் என்று கிறிஸ்தவர்கள் அச்சிட்டுப் பிரபலப்படுத்தி வருகிற "சாதி" என்னும் துண்டுப் புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறதே அதற்கு மூகாந்தரம் என்ன ?

விடை.—மேற்படி "சாதி" என்னும் நூலை அச்சியற்றியபொழுது வெள்ளாளர் வேலைசெய்தபடியால் அவர்கள் அந்தப்படி அச்சிற் சேர்த்துவிட்டார்கள் என்று தோன்றுகிறது. யூரோப்பியரான கிறிஸ்தவர்கள் தமிழ் நூல்களை அறியாதவர்களானபடியால் அந்தப்படி அச்சிட்டிருக்கிறார்கள். காலஞ் செல்லச்செல்ல யூரோப்பியராகிய தங்களை வெள்ளாளர் வஞ்சகத்தை இலேசாய் அறிவார்கள். அப்போது மேற்படி புஸ்தகத்தைத் திருத்தி அச்சிடுவார்கள்.

107. விஞ.—அநுலோமர், பிரதிலோமர், அந்தராளர், விரர்த்தியர் என்பவர்கள் யார் ?

விடை.—திவாகரம், 12-வது தொகுதி, 208-வது சூத்திரம்.

"பார்ப்பார் அரசர் வணிகர் வேளாளரென்
நாற்குலத்தவரூஉம் தங்குல நடையின்
உயர்ந்த ஆணினும் இழிந்த பெண்ணினும்
பிறந்த கூட்டத்தவர் அநுலோமர்."

மேற்சொல்லிய சூத்திரத்தில், பார்ப்பார், அரசர், வணிகர், வெள்ளாளர் என்னும் நாலு குலங்களிலுள்ள ஆடவன் தன் சாதியிலும் தாழ்ந்த சாதியிலுள்ள ஸ்திரீயினிடத்தில் குழந்தைகளையுடையனுய் இருப்பானேயானுல், அந்தக் குழந்தைகளுக்கு அநுலோமச்சாதிப்பிள்ளைகள் என்று பேர்.

பிராமணனுக்கும் சத்திரிய ஸ்த்ரீக்கும் ஒரு பெண்குழந்தை அல்லது ஆண்குழந்தை பிறந்தால் அந்தப் பெண்குழந்தை, அல்லது ஆண்குழந்தையானது பிராமணச்சாதி என்ருவது, சத்திரியச்சாதி என்ருவது சொல்லப்படாமல் அநுலோமச்சாதி என்று சொல்லப்படும்.

சத்திரியனுக்கும், வைசிய ஸ்த்ரீக்கும் ஒரு பெண்குழந்தை அல்லது ஆண்குழந்தை பிறந்தால் அது சத்திரியச்சாதி என்ருவது வைசியச்சாதி என்ருவது சொல்லப்படாமல் அநுலோமச்சாதி என்று சொல்லப்படும்.

வைசியனுக்கும் வெள்ளாள ஸ்திரீக்கும் ஒரு பெண்குழந்தை அல்லது ஆண்குழந்தை பிறந்தால், அந்தக்குழந்தை வைசியச்சாதி என்ருவது வெள்ளாளச்சாதி என்ருவது சொல்லப்படாமல் அநுலோமச்சாதியென்று சொல்லப்படும்.

209-வது சூத்திரம்.

"இழிந்த ஆணிலும் உயர்ந்த பெண்ணிலும்
பிறந்த கூட்டத்தவர் பிரதிலோமர்."

இதன்பொருள். பார்ப்பார், அரசர், வணிகர், வெள்ளாளர் என்னும் நாலு குலங்களிலுள்ள ஆடவன் தன் ஜாதியிலும் மேலான ஜாதியிலுள்ள ஸ்திரீயிடத்தில் குழந்தைகளையுடையவனுய் இருப்பானுனல் அந்தக் குழந்தைகளுக்கு பிரதிலோமச்சாதி என்று பேர்.

எப்படியென்ருல் சத்திரியன் ஒருவன் ஒரு பிராமண ஸ்திரீயை வைத்துக்கொண்டிருந்து அவளால் பிள்ளைகள் பிறந்தால் அந்தப்பிள்ளைகள் சத்திரிய ஆடவனுக்கும், உயர்ந்த ஜாதியாகிய பிராமண ஸ்திரீக்கும் பிறந்த பிள்ளைகளானபடியால் அந்தப்பிள்ளைகளுக்கு பிரதிலோமச்சாதி என்று பேர்.

வைசியன் ஒருவன் தன்னிலும் உயர்ந்த ஜாதிகளாகிய பிராமண குலத்திலாவது, சத்திரியகுலத்திலாவது ஒரு ஸ்திரீயை வைத்திருந்து அவளிடத்தில் பிள்ளைகள் பிறந்தால் அந்தப்பிள்ளைகளுக்குப் பிரதிலோமச்சாதி என்று பேர்.

வெள்ளாளன் தன்னிலும் உயர்ந்த ஜாதிகளாகிய பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகிய ஜாதிகளிலுள்ள ஒரு ஸ்திரீயை வைத்திருந்து, அந்த ஸ்த்ரீயிடத்தில் பிறந்த பிள்ளைகளுக்குப் பிரதிலோமச்சாதி என்று பெயர்.

210-வது சூத்திரம்,

"அந்தராளர் வகைப்பெயர்."

"அநுலோம குலத்தாணிலும் அவ்வழி
பிரதிலோமகுலப் பெண்ணினுமாகி
யடுத்த கூட்டத்தவர் அந்தராளர்."

இதின் பொருள். அநுலோமச்சாதியிலுள்ள ஆடவனும், பிரதிலோம ஜாதியிலுள்ள ஸ்திரீயும் ஒன்றுகூடி அவர்களால் பிள்ளைகள்உண்டாகுமானுல் அந்தப்பிள்ளைகளுக்கு அந்தராளச்சாதி என்று பெயர்.

211-வது சூத்திரம்.

"விராத்தியர் வகைப்பெயர்".

பிரதிலோம குலத்தாணினும் பின்னி
னநுலோம குலப்பெண்ணினுமாகி
வியந்தோர் கூட்டத்துப்பிறந்தோர் விராத்தியர்."

இதன் பொருள். பிரதிலோம குலத்திலுள்ள ஆடவன் அநுலோமகுலத்திலுள்ள ஸ்திரீயைக்கூடி, அவர்களால் பிள்ளைகள் உண்டாகுமானுல் அந்தப்பிள்ளைகளுக்கு விராத்தியஜாதி என்று பேர்.

சூடாமணி நிகண்டு, மக்கட்பெயர்த்தொகுதி,

60–வது சூத்திரம், 2–வது அடி.

"பின்னே வேற்றேற்குப் பெற்ற பிள்ளை குண்டகனே என்ப".

இதின் பொருள். ஒரு ஸ்திரீ தன் கணவன் உயிரோடிருக்கும்போது தன் குலத்தொரு சோரபுருஷனேச்சேர்ந்து மகனேப்பெறுவாளானுல் அந்தப்பிள்ளைக்கு குண்டகன் என்று பெயர். அவனும் அவனுடைய சந்ததியும் நீசச்சாதியாராகிருர்கள்.

108. வினு.—முன் 77-வது வினுவுக்குக் கூறிய விடையில் சொல்லிய மூன்ருவது குலத்தவரான வைசியராகிய செட்டிகளேத் தவிர சங்கர ஜாதிகளாகிய அநுலோமர், பிரதிலோமர், அந்தராளர், விராத்தியர் என்ற ஜாதிகளிலும் செட்டி என்னும் பட்டப்பெயர் உடையவர்களும் உண்டோ?

விடை.—ஒவ்வோர் வஸ்துவை மாத்திரம் விற்பனே செய்கிறவர்களுக்கும் செட்டிகள், வாணியர், வாணிபர், நாய்கர், வணிகர், வாணிகர், வர்த்தகர், வியாபாரிகள், விலேஞர் என்னும் பெயர்களுமுண்டு.

திருவாதவூரர்புராணம், குதிரையிட்ட சருக்கம், 2-வது கவி.

தேசிலாநரி வந்துவந்து திரண்டு வெம்பரியானபின்
ஞசிலா விமையோர் கடாமுமமைந்த சேவகராகினர்
மாசிலாமணி மன்றராகிய **வாசிவாணிபர்** போலவே
யேசிலா வுருமாறினர் மறையிவுளியின்புற மேவினர்."

இதன் பொருள். சிவன் மாணிக்கவாசகருக்காக நரிகளைக் குதிரைகளாக்கினர் என்றும், வானவர்கள் வாசிவாணிபராகிய குதிரை வர்த்தகளானர்கள் என்றும், சிவன் உருமாறி வேதக்குதிரையின்மேலேறிக்கொண்டார் என்றும் சொல்லியதாம்.

மேற்சொல்லியதில் குதிரைகளை வாங்கி விற்பனை செய்கிறவர்களுக்கு "வாசி வாணிபர்" என்று பெயர் வந்திருக்கிறது. ஆனதால் வாசி வாணிபர்களே வாசிச் செட்டிகளாம்.

ஆகையால் வாசி வாணிபரை, வாசி வாணியர், வாசி நாய்கர், வாசி வணிகர், வாசி வாணிகர், வாசி வர்த்தகர், வாசி வியாபாரிகள், வாசி விலைஞர் என்று சொல்லலாம்.

அந்தப்படியே,

(1) கள்விலைஞர், கள் வணிகர், கள் செட்டிகள், கள் வாணியர், கள் வாணிபர், கள் நாய்கர், கள் வாணிகர் முதலானவர்கள் உண்டு.

(2)மீன் விலைஞர், செம்படவர், சவளக்காரர் முதலானவர்கள் உண்டு.

(3) எண்ணெய் வாணியர், செக்கார் முதலானவர்கள் உண்டு.

நாலடியார், பொது மகளிர், 4-வது கவி.

"ஆணமினெஞ்சத்தணி நீலக்கண்ணார்க்குக்
காணமில்லாதார் கடுவனையார்—காணவே
செக்கூர்ந்து கொண்டாரும் செய்த பொருளுடையார்
அக்காரம் அன்னரவர்க்கு."

இதன் பொருள். "அன்பில்லாத மனதையும், அழகிய நீலோற்பலம் போலும் கண்களையுடைய வேசையர்க்கு பொருள் இல்லாதவர்கள் விஷத்துக் கொப்பானவர்கள், யாவருங் காண செக்கைச் செலுத்திக்கொண்டவர் தேடிய பொருளுடையவர்கள் அவ்வேசையர்க்குச் சர்க்கரைக் கொப்பானவர்கள் என்பதாம்.

மேற்படி செய்யுளிலும், தாற்பரிய உரையிலும் எண்ணெய் வாணியரை அசுத்தர் என்று சொல்லியிருக்கிறது.

(4) உப்புவாணியர், உப்புவிலைஞர், உப்புச்செட்டிகள் முதலானவர்களும் உண்டு.

(5) இலைவாணியர், இலை விலைஞர், இலைச்செட்டிகள் முதலானவர்களும் உண்டு.

(6) குதிரைவாணியர், குதிரை விலைஞர், குதிரைச்செட்டிகள், குதிரை வாணிபர் முதலானவர்களும் உண்டு.

(7) ஆட்டுவாணியர், ஆட்டுவிலைஞர், ஆட்டுச்செட்டிகள் முதலானவர்களும் உண்டு.

(8) தோல்வாணியர், தோல்விலைஞர், தோல்வணிகர், தோல்செட்டிகள் முதலானவர்களும் உண்டு.

109. வினா.—கள்விலைஞர் என்பவர்கள் யார்?

விடை.—முன் 71-வது வினாவுக்குக் கூறிய விடையில் காசிகாண்டத்திலிருந்து ஒரு கவி எடுத்துக்காட்டியிருக்கிறோம். அதில்,

1-வது அடி.

“மருள் கொடுக்கும் நறைவிற்கும் வணிகக்கபடன்”.

என்று சொல்லியிருக்கிறது.

அன்றியும்,

அருணகிரிபுராணம், வலம்புரிச்சருக்கம், 109-வது கவி.

“சூத்திரன் வசியர் கன்னி தோள்மணம் புணர்ந்தபோது
வாய்த்தனாயன் மேய்ப்பன் வனத்தினானினங்கடன்னை
பார்த்திபர் கன்னிதோளிற் படிதலு மவனப்போது
வாய்த்தவன் கள்ளு விற்கும் வணிகனூர்ப்புறத்து வாழ்வான்”.

மேற்படி சூத்திரங்களில் பழநறையாகிய கள் விற்கும் வணிகன் என்றும், அவன் ஊருக்குப் புறம்பே குடியிருக்கவேண்டியவன் என்றும், சொல்லியிருக்கிறது.

திவாகரம் மக்கட்பெயர்த்தொகுதி, 50-வது சூத்திரம்.

“கள்விலைஞர் பெயர்”.

"பழையர் துவசர் படுவர் கள்விலேஞர்".

மேற்படி சூத்திரத்தில் கள்வாணியர்க்கு "கள்விலேஞர்" என்றுசொல்லியிருக்கிறது.

சூடாமணி நிகண்டு மக்கட்பெயர்த்தொகுதி, 36-வது கவி.

"தொக்க கள் விற்போர் நாமம் * சௌண்டிகர் துவசரோடு
தக்கதோர் பிழியர் மற்றும் படுவரும் சாற்றுமன்றே."

மேற்படி கவியில்,

கள் விற்போர் என்றும், அவர்களுக்குப் பிழியர், சௌண்டிகர் என்னும் பெயர்களும் உண்டு என்றும் சொல்லியிருக்கிறது.

பழையர் என்பது பழையதாகிய புளிப்பேறின கள்ளை விற்போர்.

துவசர் என்பது கொடிக்கட்டி (புளிப்பேறின) கள்ளை விற்போர்.

படுவர் என்பது புளிப்பேறின கள் விற்போர்.

பிழியர் என்பது புளிப்பேறின கள் விற்போர்.

சௌண்டிகர் என்பது (காரமான) புளிப்புள்ள கள் விற்போர்.

தற்காலத்தில் தஞ்சாவூரிலும், காவேரிப்பக்கத்திலும் பறையரும், பள்ளிகளும், திரிசிரபுரத்தில் வெள்ளாளரும், பாகனேக்கிராமத்திலும் அதனையடுத்த கிராமங்களிலும் பள்ளியர், அல்லது பள்ளர்களும், புதுவையிலும், கூடலூர் மஞ்சக்குப்பத்திலும் பறையரும், பள்ளிகளும், சென்னபட்டணத்திலும் அதனை அடுத்த கிராமங்களிலும் முக்கியமாய்ப் படுவூரிலும் பம்பலூரிலும், ஸ்ரீ பெரும்புத்தூரிலும் பொன்னேரிக் கிராமத்தைச்சேர்ந்த கொக்குமேடு என்னும் ஊரிலும் கவரைகள், மூத்திரிகள், இடையர்கள், துலுக்கர்கள், குறவர்கள் முதலான ஜாதிகளும் கள்ளேரி சீவனம்பண்ணுகிறார்கள். முற்கூறிய இடங்களில் விசேஷமாய் படுவர் என்னும் குலத்தவர்கள் தங்கள் குலத்தவர்க்குரிய கள்ளேறி விற்பனைசெய்து வருகிறார்கள். அவர்களுக்கு நாளது பரியந்தம் படுவர் என்னும் பெயர் குலப்பெயராகவும் வழங்கிவருகின்றது. அவர்களே சௌண்டிகர் குலத்தவர்களாம்.

அரசாட்சி மாறுதலால் பிராமணர் தோல் வார்க்கச்சை கட்டி போலீசில் கான்ஸ்ட்டேபிள்களாக இருந்து சீவனம்பண்ணுகிறார்கள், பிணங்களை அறுக்கிற வேலையுள்ள அப்பாதிக்கரி வேலையிலும், ஈனசாதிகளையும் தொட்டு வைசூரி குத்துதலாகிய வாக்சினேஷன் வேலையிலும் பிரவேசித்து

* "சௌண்டி" என்பதற்கு "திப்பிலி" என்றர்த்தம். "கம்" என்பதற்கு "நீர்" என்றர்த்தம்; "சௌண்டிகம்" என்பதற்கு திப்பிலிக்காரமுள்ள நீர், அதாவது "கள்" என்றர்த்தம்.

சீவனம்பண்ணிவருகிறார்கள். அதுபோலவே மேன்மக்கள் தாழ்ந்த தொழிலைச் செய்தாலும் அதினால் அவர்களுடைய குலம் கெட்டுப்போவதில்லை.

110. வின.—மீன்விலைஞர் யார் ?

விடை.—திவாகரம், மக்கட்பேர்த்தொகுதி,

135-வது சூத்திரம்.

"நெய்தல் நிலமாக்கள் பேர்."

"பரதர், நுளையர், கடலர், வலையர்,
சயவர், திமிலர், நெய்த நிலமாக்கள்."

136-வது சூத்திரம்.

"நுளைச்சியர், பரத்தியர் நுளைகடற்பிணாக்கள்."

சூடாமணி நிகண்டு, மக்கட்பேர்த்தொகுதி,

73-வது சூத்திரம்.

"பரதவர் நுளையரோடு பஃறியர் திமிலர் சாலர்
கருதியகடலர் கோலக் கழியரே நெய்தல் மாக்கள்
விரவிய பரத்திமேவு நுளைச்சியே அளத்தி நீண்டு
பெருகிய கடற்பிணாவே நெய்தலின் பெண்ணின்நாமம்."

மநுநூல், 10-வது அத்தியாயம்,

12-வது, 34-வது சுலோக மொழிபெயர்ப்பு.

"சங்கரசாதியான நிஷாதனுக்கு (சங்கரசாதியான) [முன் அயோகவ ஸ்த்ரீயிடத்தில் பிறந்த மார்க்கவனைப் பிறப்பிக்கி அவனுக்கு ஓடம் ஓட்டுகிறதொழில், ஆரியவர்த்தவாசிகள் அவனைச் செம்படவன் என்று சொல்லுகிறார்கள்."

மேற்படி சுலோகங்களிலும், சூத்திரங்களிலும், கவிகளிலும் மார்க்கவனாகிய செம்படவனுச்குத் தகப்பனான நிஷாதனுக்கு மீன் பிடிக்கிற தொழிலாகையால் செம்படவனுக்கு மீன் பிடிக்கிறதும், ஓடம் ஓட்டுகிறதும் தொழில் எனவும், பரதர், கடலர், நுளையர் முதலான பெயர்களும் அவர்களுடைய பெண்களுக்குப் பரத்தியர் முதலான பெயர்களும் உண்டு எனவும் சொல்லியிருக்கிறது.

நாலடியார், கவி,

1-வது 2-வது அடிகள்.

"தோணி இயக்குவான் தொல்லை வருணத்து
காணிகர் கடைப்பட்டான்."

மேற்சொல்லிய நாலடி கவியில், தோணி ஓட்டுகிற ஜாதியானது ஜாதிகளில் கடைசிச்சாதியைச் சேர்ந்தது என்று சொல்லியிருக்கிறது.

பாரதவசனம்,

78-ம் பக்கத்தில்,

"ஓடம் ஓட்டுகிறவர்களுக்குத் தலைவனான தாசன் என்பவன் தன்குலம் பரதர்குலம் என்றும், தான் இழிசாதியான் என்றும், ஆகையால் சந்திரகுல அரசன் தன் மகளைக்குறித்து தன்னிடத்தில் பேசுகிறது நியாயமல்ல என்று சொன்னான்." என்று சொல்லியிருக்கிறது.

பெரியபுராணம், அதிபத்தநாயனார்

புராணவசனம்.

"அதிபத்தநாயனார் தம்குலத்தவர்க்குரிய மீன்பிடி தொழிலால் தமக்கு வந்த வருமானத்தை எல்லாம் சிவனடியார்களுக்கே செலவுசெய்தார்" என்று சொல்லியிருக்கிறது.

ஆகையால் பரவராகிய பரதர், செம்படவர், சவளக்காரர் பூர்வ நூல்களின்படி சங்கரசாதிகளைச் சேர்ந்தவர்கள். அதினால் முன்சொல்லியபடி மீன் செட்டிகள், மீன் வாணியர், மீன்வாணிபர், மீன் நாய்கர், மீன் வணிகர், மீன் வாணிகர், மீன் விலைஞர் முதலான பேர்களுமுண்டு.

ஏரி, குளங்களில் மீன் பிடித்து விற்பனைத்தொழில் செய்கிறவர்கள் பள்ளிகள், பள்ளர்கள் என்று பேர் பெறுவர். இவர்கள் மீன் விற்பனைத் தொழிலால் "நாய்கர்" என்றும், கீழ்மக்களானதாலும், அவ்விபரம் பிறர்க்குத் தெரியும்படியாகவும் *"கவண்டர்" என்றும் குலப்பட்டப் பெயர்களால் சொல்லப்படுகிறார்கள்.

"பள்ளிகள்," "பள்ளர்கள்" என்னும் ஒருவகைப் பெயருக்கு உற்பத்திமூலம் எவ்வாறெனில்,

ஊரில் சின்ன ஊருக்கு சிற்றூர் என்றும், பள்ளி என்றும் பெயர் வந்திருக்கிற பிரகாரம் மனுஷரில் தாழ்ந்த சின்னக்குலத்தவர்க்கும் "பள்ளி

* கவண்டர் என்பதற்கு கீழ்மக்கள் அல்லது சண்டாளர் என்று அர்த்தம். (யாழ்ப்பாணம் அகராதி சதுர அகராதி காண்க.)

குலம்'' எனப்பெயர் வந்திருக்கிறது. நிலத்தில் தாழ்ந்த நிலத்துக்கு பள்ள நிலம் எனப்பெயர் வந்திருக்கிறபிரகாரம் குலத்தில் தாழ்ந்த குலத்தவர்க்கும் பள்ளகுலம் எனப் பேர் வந்திருக்கிறது. ஆகவே சின்னகுலம் என்பதற்கும், தாழ்ந்தகுலம் என்பதற்கும் பொருள் ஒன்றானமையால் பள்ளியர் குலம், பள்ளர்குலம் என்பது ஒருபொருள்கொண்டு ஒருவகைக்குலத்தவர்க்கே பூர்வமுதல் நாளது பரியந்தம் வந்துவழங்குகின்றதுமன்றி குடும்ப குலம் என்றும், தீயகுலம் என்றும், நளகுலம் என்றும் வழங்குகின்றது. இதன் உண்மையை தமிழ்நாட்டின் பல இடங்களில் நிலைபெற்றிருக்கும் வழக்கத்தாலும், அறிந்துகொள்ளலாம்.

மேலும் பள்ளிகளுக்கு கீழ்மக்கள் எனப் பொருட்பட ''கவண்டர்'' என்பது குலப்பட்டப்பெயராகப் பூர்வமுதல் நாளது பரியந்தம் வந்திருக்கிறதற்குத் திருஷ்டாந்தமாக மேற்படி இடங்களில் விராத்திய சாதியாராகவும், பாகிய சாதியாராகவுமிருக்கிறார்கள். சாதிநூல், திவாகரம், பிங்கலந்தை, இரேவண சூத்திரம், ஸ்மிருதி, சைவபுராணம், அருணகிரிபுராணம், சூதசங்கிதை முதலான நூல்களிலும் அறியலாம். (சான்றோர் குலப்பூர்வோத்திரம் 72-ம், 73-ம் பக்கங்களிலும், சண்டபாநு 79, 80, 81 பக்கங்களிலும் காண்க.)

111. வினா.—பாலைநிலமாக்கள் யார் ?

விடை.—திவாகரம், மக்கட்பெயர்த்தொகுதி,

128-வது சூத்திரம்.

''மறவர், எயினர் பாலைநிலமாக்கள்.''

129-வது சூத்திரம்,

''பாலைநிலப்பெண்கள் பெயர்''.

''மறத்தியர் எயிற்றியர் வன்கட் பிணாக்கள்
அனைத்தும் அந்நிலத்தரிவையர் பெயரே.''

131-வது சூத்திரம்.

''கொலைஞர், எயினர், வனசரர், சவரர்,
சிலவர், கானவர், மாகுலவர், கிராதர்,
புளினர், மறவர், வேடர் என்றாங்
கனையவர் பொதுப் பெயராதல் வேண்டும்.''

மேற்சொல்லிய 131-வது சூத்திரமானது பாலைநிலமாக்களுக்கும் அந்நிலத்தலைவர்களுக்குமுரிய பொதுப்பெயர்களைக் காட்டியது.

110-வது சூத்திரம்.

"பகைஞர் பெயர்."

"தரியவர் **தெவ்வர்** மேவலர் செறுநர்."

சூடாமணி நிகண்டு, மக்கட்பெயர்த் தொகுதி,

68-வது கவி.

"கோளூறு **மறவரோடும்** எயினரே குறித்தபாலை
யாளர் புள்ளுவரிருக்க ரனைத்துமா மவரோடாடும் [பேர்
வாள் விழி யெயிற்றி வன்கட்பிணாவொடு **மறத்தி** பெண்
மீளியே காளையென்ப விடலையும் தலைவனுமம்'.

58-வது கவி, நடுவுறப்பு.

"மருவலர் **தெவ்வர்** மாணார் மாற்றவர் மன்னாரொன்னார்."

விவேகசிந்தாமணி 12-வது கவி.

"ஆலகால விஷத்தையும் நம்பலாம்,
ஆற்றையும் பெருங்காற்றையும் நம்பலாம்,
கோலமாமத யானையும் நம்பலாம்,
கொல்லும் வேங்கைப் புலியையும் நம்பலாம்,
காலனார் விடு தூதனை நம்பலாம்,
கள்ளர் வேடர் மறவரை நம்பலாம்,
சேலைகட்டிய மாதரை நம்பினல்
தெருவினின்று தியங்கித் தவிப்பரே".

பாலை நிலம் என்பது நீரும், நிழலுமில்லாத இடம், மனித சஞ்சாரமில்லாத இடம். பாலைவனமானது முக்கிய பட்சம் திருடர் சஞ்சரிக்கிற இடம். அங்கே வாசம்பண்ணுகிறவர்களுடைய பெண்களுக்கு மறத்தியர், வன்கட் பிணைக்கள் முதலான பேர்களுண்டு.

கள்ளர், மறவர், அகம்படியர்களின் உற்பத்தியைக்குறித்து முன் 95-ம் வினவுக்கு விடை கூறியவிடத்துச் சொல்லியிருக்கிறோம்

பூர்வநூல்களிருந்து ஆதாரங்களை எடுத்துக்காட்டி நியாயத்தோரணையாய் நூலெழுதிய சாமியேல் சற்குண நாடாரவர்களை நியாயமின்றி தூஷித்து செந்திநாதர் எழுதிய புஸ்தகத்தில் “மறவர்க்குத் தேவர் என்னும் பட்டப்பெயர் வந்த காரணம் என்ன ?” என்று மேற்படி செந்திநாதர் புத்தகம், 14-ம் பக்கம், 15-ம் வரிமுதல் செந்திநாதர் கேட்டதற்கு சான்றோராகிய தமிழ்ச்சத்திரியகுலப் பிரதிநிதி எ. ஞானமுத்து நாடார் பதில் எழுதிய புத்தகம், 12-ம் பக்கம், 21-ம் வரிமுதல் நியாயங்காட்டிப் பேசியதில் மறவர்க்குத்தேவர் என்னும் பட்டப்பேர் வந்ததற்கு முகாந்தரம் காட்டுகிறார். அதை நாம் இவ்விடம் எடுத்துக்கூறுகிறோம்.

கள்ளர், மறவர் என்னும் ஜாதியார் தமிழ்தேசத்திலுள்ள எந்தச்சாதிக்கும் பகைவராகவே இருக்கிறார்கள். வழிநடக்கையில் மறவர், கள்ளரல்லாத வேறே ஜாதி ஆடவருடைய துணையைப்பற்றிப்போனால் சந்தோஷமாய் வழிநடந்து போகலாம். கள்ளர், மறவர் என்னும் ஜாதி ஆடவருடைய துணைபற்றிப்போனால் வழிபோன அந்த அந்நியன் கள்ளர், மறவராகிய அந்தப் புலிகளுக்கு இரையாவான். முற்கூறிய நூல்களிலிருந்து மறவர்க்குச் சொல்லப்பட்ட பெயர்களை விரித்துப்பார்த்தால் கொலைசெய்வோர் என்னும் பொருளே அவைகளிலிருக்கப் பார்க்கலாம்.

மறத்திகளாகிய ஸ்திரீகளோடு அந்நியஜாதிகளிலுள்ள ஸ்திரீகள் துணைபற்றி வழிநடந்தால் முன் மேற்படி குல ஆடவரைப்பற்றிச் சொல்லியபடி வழிபோன அந்த அந்நியகுல ஸ்திரீகள் மோசம்போவதற்குத் தடையில்லை. மறத்திகளுக்கு வன்கட்பிணை என்னும் பேர் நூல்களில் சொல்லியிருக்கிறதே அந்த வார்த்தைக்குக் கோடுமைக்காரி என்றே அர்த்தம்.

நாம் விவேகசிந்தாமணியிலிருந்து எடுத்துச்சொல்லியதில் கள்ளர், வேடர், மறவரை நம்பக்கூடாது என்று வந்திருக்கிறதையும் இதனோடே ஒத்திட்டுக் கவனித்தறியவேண்டும்.

தேவ் என்னும் பதத்துக்கு பகை என்றர்த்தம். தெவ் என்னும் பதமானது உலக வழக்கத்தில் தேவ் என்றாகி அதினோடே அன் என்னும் ஆண்பால் விகுதி சேர தேவன் என்றாயிற்று. அதற்குப் பகைவன் என்பது பொருளாம்.

"தெவ்" என்பது சுத்தமான தமிழ்ப்பதம்.

சமஸ்கிருதத்திற்கும் தமிழுக்கும் பொதுவான ஒரு பதமுண்டு. அது தே என்பதாம். இங்கிலீஷ் பாஷையில் (God) காட் என்பது அதற்குச் சரியானபதம். அதற்கு கடவுள் எனபது பொருள். அந்த தே என்பதோடே "அன்" என்னும் ஆண்பால் விகுதியை சேர்த்தாலும் "கடவுள்" என்னும் பொருளையே கொடுக்கும். சரியானபடி சொன்னால் "அன்" என்னும் விகுதியை "தே" என்பதோடே சேர்க்கவேண்டியதில்லை. 'தே சொன்னார்" என்றால் "கடவுள் சொன்னார்"என்று பொருளாம்.

ஆகையால் கள்ளர், மறவர் குலத்துக்குரிய"தேவ்" "என்பது வேறு. கடவுள் என்னும் பொருளுள்ள "தே" என்பது வேறு.

பூர்வ தமிழ் நூல்களில் கள்ளர், மறவர் குலத்தவர்க்கு தேவர் என்று சொல்லப்படாமல் தெவ்வர் என்றே சொல்லப்பட்டிருக்கிறது. சிவகசிந்தாமணியில் கள்ளர் மறவர்க்குத் தெவ்வர் என்றே சொல்லப்பட்டிருக்கிறது.

112. வின.—சங்கர சாதிகளில் சிலர் பூணூல் தரித்து வருகிறார்களே அதற்குக் காரணம் என்ன ?

விடை.—துவிசாதிகளுக்கு. அதாவது பார்ப்பார், அரசர், வைசியர் என்பவர்களுக்கு முன் நாம் 107-ம்வினவுக்கு விடை கூறியவிடத்தில் சொல்லியபடி அநுலோமராய்ப் பிறந்த ஆண்களுக்குப் பூணூல் உண்டு. பிரதி

லோமர் பூணூல் அணிந்திருக்கமாட்டார்கள், அதாவது உயர்ந்த ஜாதி தகப்பனுக்கும், தாழ்ந்த ஜாதி தாய்க்கும் பிறந்த சங்கரசாதிப்பிள்ளைகள் பூணூல் தரித்திருப்பார்கள். தாழ்ந்த ஜாதி தகப்பனுக்கும் உயர்ந்த ஜாதித் தாய்க்கும் பிறந்த பிள்ளைகள் பூணூல் தரித்திருக்கமாட்டார்கள். பூணூல் தரித்துக்கொண்டபடியினாலே யாதோர் மேன்மையான சலாக்கியமும் அவர்களுக்கு இல்லை. சங்கராஜாதிகளாக இருந்து பூணூல் தரித்திருக்கிறவர்களுக்கு "சாதிகெட்ட துவிஜா" என்று பெயர்.

குறிப்பு.

1901ஞு பெப்ருவரி மாதத்தில் இந்துதேச முழுவதும் குடிமதிப்பாகிய சென்சஸ் கணக்கெடுக்கும்படி இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்தார்கள். அந்தக் காலத்தில் மதுரை ஜில்லாவிலும் திருநெல்வேலி ஜில்லாவிலுமுள்ள தமிழ்ச் சத்திரிய குலத்தவரான நாடார்மார்கள் தங்கள் குலத்தை தமிழ்ச் சத்திரியகுலமென தாக்கல் செய்யவேண்டும் என்று மதுரை ஜில்லாக் கலெக்டர் அவர்களுக்கும், திருநெல்வேலி ஜில்லாக் கலெக்ட்டரவர்களுக்கும் விண்ணப்பம் அனுப்பிக்கேட்டுக்கொண்டார்கள்.

மதுரை ஜில்லா, பழனித்தாலூகா கஸ்டா பழனியிலிருக்கிற தமிழ்ச் சத்திரிய குலத்தவரான நாடார்மார்களும் மதுரை ஜில்லாக்கலெக்ட்டரவர்களுக்குத் தங்கள் குலத்தைத் தமிழ்ச் சத்திரிய குலம் என்று சென்சஸ் கணக்கில் தாக்கல் செய்யவேண்டுமென விண்ணப்பம் அனுப்பினார்கள். மேற்படி விண்ணப்பம் மேற்படி கலெக்ட்டர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, மேற்படி நாடார்மார்களையும் அவர்களுடைய குலத்தார் அனைவரையும் "சான்றோர் குலத்தவர்" என்று சென்சஸ் கணக்குகளில் தாக்கல் செய்யும்படி பழனித் தாலூகா தாசில்தார் அவர்களுக்கு உத்தரவு அனுப்பப்பட்டது. தாசில்தார் அவர்களால் மேற்படி உத்தரவு முனிசிபல் வைஸ்செயர்மான் அவர்களாகிய (S Gousmiah Sahib) எஸ். கௌஸ்மியா சாயிப் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. மேற்படி வைஸ்செயர்மானவர்களால் 1901ஞு பெப்ருவரிமீ 17-தேதியில், சென்சஸ் சூப்பெர்வைசெர் ஆகிய ஆபீசர்கள் யாவருக்கும் உத்தரவு அனுப்பப்பட்டது. மேற்படி ஆபீசர்கள் யாவரும் நாடார்மார்களை "சான்றோர் குலத்தவர்" என்று சென்சஸ் கணக்குகளில் தாக்கல் செய்தார்கள்.

மேற்படி உத்தரவில் சொல்லப்பட்ட "சான்றோர் குலத்தவர்" என்பதற்கு தமிழ்ச் "சத்திரிய குலத்தவர்" என்பதே பொருளாகும்.

தமிழ்ச் சத்திரிய குல விளக்க

வினா விடை

முற்றிற்று.

Errata.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.	பக்கம்.	வரி.	பிழை	திருத்தம்.
1	27	என்பதற்கு ...	என்பதற்கு	26	2	மேன்மையுடையான்	மேன்மையான்
3	9	வர்க்ளுக்கு ...	வர்களுக்கு		10	கடம்பை ...	கடமை
4	10	பெயரையும் ...	பெயரை	27	2	பாண்டிபயன் ...	பாண்டியன்
	17	Casts ...	Castes		30	கன்னா ...	கன்னி
7	9	அண்ணன் ...	அண்ணல்	28	20	பழிகடார்ந் ...	பழிகூர்ந்
	12	கெளரதர் ...	கெளரவர்	29	9	என்றும் ...	என்னும்
8	14	தன்னட்பர ...	தன்னட்பா	30	6	நேர் ...	ஓர்
9	26	வருத்த ...	வகுத்த		12	மனம் ...	மணம்
10	5	விதுரர்க்கு ...	விதுரற்கு		20	எங்கே ...	எங்கே
	22	முறைத்த ...	முரைத்த		29	என்றும் ...	என்று
	26	குங்கினில் ...	குறங்கினில்	32	32	புவி ...	புலி
17	19	என்னுப் ...	என்னும்		33	தார்க்க ...	தாக்க
19	25	புரு ...	பூரு	33	17	கின்றன ...	கின்ற
20	2	கெளரதர் ...	கெளரவர்	33	25	சென்றருகின்றார் ...	சென்றருகினின்றார்
21	28	துருவசுவர் ...	துருவசுவா	34	4	மேலமுகர் ...	மேலழகர்
23	7	தன்பார ...	தனபார		19	பதினேட்டு ...	பதினெட்டு
25	7	ஆலமத்தை ...	ஆலயத்தை		20	பமுமொழி ...	பழமொழி

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.	பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
36	21	பாதகர் ...	பாரகர்	53	7	பெயகுக்கு ...	பெயருக்கு
37	4	செல்லவே ...	சொல்லவே	54	3	விசுப்பி ...	விசும்பி
	7	மிகவம் ...	மிகவும்		8	களங்கச் ...	களங்கத்தைச்
	26	காயினும் ...	காலனும்		29	துள்ளதூஉ ...	துள்ளதூஉ
38	11	தாற்பரிய ...	தாற்பரிய	58	2	வேரோ ...	வேறே
	16	தரமவரை ...	தாமவரை	60	1	குரு ...	குழு
	18	குறைக்கும ...	குறைக்குந்		26	கொர்ப ...	கொர்ட்ப
39	1	கிள்ளர்க்து ...	கிள்ளாக்து	62	20	நிலை ...	நிணை
	2	இல்லே ...	இலே	63	7	சத்திய ...	கத்திரிய
	9	அரகருக்கு ...	அரசருக்கு	73	20	திருநீராகிய ...	திருநீறுகிய
	10	தீர்மாணித்த ...	தீர்மாணிக்கும்		24	என்பதாகும் ...	என்பதாம்
	33	குருகார் ...	குறுகார்	81	5	விரிந்த ...	விரித்த
41	15	சான்ரோர் ...	சான்றோன்		21	மாறிலா ...	மாறிலார்
	24	என்றும் ...	என்னும்	82	23	கதரினுதித்த ...	கதிரினுதித்த
42	20	மேண்கைப ...	மேன்மை	86	32	காடா ...	நாடா
44	11	சத்திய ...	சத்திரிய	88	14	பேடுகிற ...	பேசுகிற
46	15	கிரிடம் ...	கிரீடம்		27	புலுவர் ...	பூலுவர்
	30	நூற்ராட்சி ...	நூற்சாட்சி	89	12	55-ம்	12-ம்
48	17	அந்தர் ...	அந்தணர்		13	சுலோகத்தை ...	கவியை
49	23	நூலாய்ந்தரி ...	நூலாய்ந்தறி	92	10	என்றும் ...	என்னும்
50	2	ஒழுங்கால் ...	ஓதுங்கால்	97	6	கோட்டாடு ...	கோட்பாடு
51	23	சான்றரு ...	சான்றேரு	106	3	அரசனுன ...	அரசரான

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.	பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
111	5	கௌரதர் ...	கௌரவர்		25	பெருசாதி ...	பொருசாதி
113	27	மாறிஞன் ...	மாறிஞள்	141	4	வேளான் ...	வேளாண்
115	26	நலமொன்றுக் ...	நலமொன்றும்		16	உருற்ற ...	உஞற்ற
116	15	தாஞள் ...	தாஞள்	143	19	வேளான் ...	வேளாண்
116	29		* கற்கும்	145	14	பெயருடைய ...	பெயருடையவர் களுள்ள
120	14	84	83				
131	11	சான்றுன் ...	ஈன்றுன்	147	5	முறையே ...	முறையே
137	4	கசிவகை ...	கசிவக	150	4	காடாளும் ...	நாடாளும்
140	1	411-வது	41-வது	151	8	ஆலாசிரியர் ...	நூலாசிரியர்
	4	411-வது	41-வது	152	12	வஞ்சகத்தை ...	வஞ்சித்ததை

*இவ்வடையாள வார்த்தை சேர்க்கப்பட்டதைக் குறிக்கிறது.

பிழை திருத்தம்

முற்றிற்று.